முறைத் தமிழ் இலக்கணமும்
கட்டுரை விளக்கமும்
முதற் புத்தகம்

A GUIDE TO PRACTICAL GRAMMAR

FORM IV

1934

அ. கி. பரந்தாமனார்



மதுரைத்தமிழ்ச்சங்கம் * THE MADURA TAMILSANGAM *

நடைமுறைத்
தமிழ் இலக்கணமும்
கட்டுரை விளக்கமும்

முதற் புத்தகம்

(IV FORM)

ஆசிரியர்:

அ. கி. பரந்தாமனார்,

தலைமைத் தமிழாசிரியர், திருப்பவுற் கலாசாலை,

வேப்பேரி, சென்னை.

CHRISTIAN LITERATURE SOCIETY FOR INDIA

(U. S. C. L.)

MADRAS BANGALORE SECUNDERABAD COLOMBO

1943

பதிப்புரிமை]

[விலை ரு. 1

வெளியீட்டுக்குறிப்பு

'நடைமுறைத் தமிழிலக்கணமும் கட்டுரை விளக்கமும்' என்னும் இந்நூல், நான்காம் பார மாணவர்களுக்கு ஏற்ற முறையில் அரசாங்க இலக்கண பாடத்திட்டத்தை ஒட்டி எழுதப்பட்டுள்ளது. இவ்வரிசையின் முதற் புத்தகம் இது. ஐந்தாம் பாரத்திற்கும் ஆறும் பாரத்திற்கும் சேர்ந்தாற்போல் விரிந்த வகையில் இரண்டாம் புத்தகம் வெளிவரும்.

மாணவர்களே படித்து அறிந்துகொள்ளக்கூடிய எளிய நடையிலும் விளக்கமான முறையிலும் இந்நூல் அமைந்துள்ளது. பயன்படும் இலக்கண விதிகளை எளிதாக எடுத்துக் காட்டுவதே இந்நூலின் நோக்கம். அனுமானமுறை வேண்டிய இடங்களிலெல்லாம் கையாளப்பட்டிருக்கிறது. படிப்பவை நன்கு உள்ளத்தில் படிவதற்காகப் பல பயிற்சிகள் இலக்கணப்பகுதியிலும் கட்டுரைப்பகுதியிலும் கொடுக்கப்பட்டுள்ளன. பயனுள்ள இப்பயிற்சிகளை ஆசிரியர்கள் விடாமல் நடத்தினால் மாணவர்கள் பெரிதும் நன்மையடைவார்கள்.

ஆங்கிலக் குறியீடுகளுள் பெரும்பாலன Dr. G. U. போப் எழுதிய நூலிலிருந்து எடுக்கப்பட்டவை. இவ்வாங்கிலக் குறியீடுகள், ஆங்கில இலக்கண அறிவுடன் ஒப்பிட்டுப் படிக்கப் பயன்படும்.

மொழிப் பயிற்சிமுறை நன்கு பயின்றவரும் தமிழாசிரியத்துறையில் நீண்ட பழக்கம் வாய்ந்தவரும் ஆகிய இந்நூலாசிரியர், மாணவர்கள் செய்யும் பிழைகளையும் அவர்களுடைய இடர்ப்பாடுகளையும் கூர்ந்து அறிந்து அவர்களுக்குப் பயன்படும் முறையில் இந்நூலை எளிதாகவும் இனிமையாகவும் உண்மையாகவே முயன்று எழுதியுள்ளார். எனவே, மாணவர்களுக்கு இந்நூல் பேருதவிபுரியும் என்று நம்புகிறோம்.

இங்ஙனம்,
பதிப்பாசிரியர்.

PUBLISHERS' NOTE

This Book on the Study of Tamil Grammar and Composition is primarily intended to serve as a Practical Guide for High School pupils and as a self-instructor for others as well. The author, an experienced and trained Tamil Pandit, had in the course of his long experience observed the many common errors in spelling and *santhi* committed by students in their classes and in examination papers, and has endeavoured in this book, by means of progressive lessons and revision exercises, to meet the difficulties of the average student.

The special features of this book need particular mention. The Inductive Method has been adopted wherever possible and lessons have been arranged consistent with the Government Syllabus. A study of phonetics and a few figures of speech have been chosen and treated with a view to forming in the minds of the Tamil student a love for Tamil literature. Two types of Tamil verse composition, namely, VENBA and ASIRIYAPPA have been selected and dealt with in an elementary form to bring out their special features so as to help the student to adhere to their metrical form while quoting them from memory.

A real attempt has been made in this book to make the study of Tamil Grammar interesting as well as instructive.

THE PUBLISHERS

பொருளடக்கம்

பாகம் I

இலக்கணம்

I

பக்கம்

(1) இலக்கண வரலாறு (History of Tamil grammar) ... 1
(2) இலக்கணம் கற்பது ஏன்? (Why should we study Tamil grammar ?) 3

II

எழுத்தியல் (Orthography)—
எழுத்து (Tamil Alphabet) 8
முதலெழுத்து (Primary letters) 9
சார்பெழுத்து (Secondary letters) 9
உயிரெழுத்து (Vowels) 9
குறில் (Short vowels) 10
நெடில் (Long vowels) 10
வினா எழுத்து (Interrogative letters) 10
மெய்யெழுத்து (Consonants) 11
வல்லினம் (Hard consonants) 11
மெல்லினம் (Soft consonants) 11
இடையினம் (Medial consonants) 12
உயிர்மெய்யெழுத்து (Vowel consonants) 12
ஆய்த எழுத்து (The Guttural) 13
உச்சரிக்கும் முறை 13
பிறக்கும் இடங்கள் 14
ந, ன, ண 14
ர, ற 14
ல, ள, ழ 15
குற்றியல் உகரம் (Shortened உ) 15
முற்றியல் உகரம் (Full-sound உ) 17
குற்றியல் இகரம் (Shortened இ) 18
போலி (Interchange) 19
மொழிமுதற் போலி (Initial Interchange) 20

பக்கம்
இடைப்போலி (Medial Interchange) 20
கடைப்போலி (Final Interchange)... 20

III

சொல்லியல் (Etymology)—
பகாப்பதம், பகுபதம் (Indivisible and Divisible words) 22
இருவகைப் பாகுபாடு (Two different classification of words) 22
(1) 1. பெயர்ச்சொல் (Noun) 22
2. வினைச்சொல் (Verb)... 23
3. இடைச்சொல் (Dependent words and Particles) 23
4. உரிச்சொல் (Words peculiar to Poetry) ... 23
(2) 1. இயற்சொல் (Easy and pure Tamil words) 23
2. திரிசொல் (Literary Tamil words) 23
3. திசைச்சொல் (Foreign or loan words) ... 24
சில உருது சொற்கள் (Some Urdu words) ... 24
சில போர்த்துக்கேசியச் சொற்கள் (Some Portuguese words) 25
சில தெலுங்குச் சொற்கள் (Some Telugu words) 25
சில ஆங்கிலச் சொற்கள் (Some English words) 25
4. வடசொல் (Sanskrit words)... 25
பெயர்ச்சொல் (Noun) 28
இடுகுறிப்பெயர் (Arbitrary noun) 28
காரணப்பெயர் (Appellative noun) 28
பலவகைப் பெயர்கள் (Classes of nouns) 29
பொருட்பெயர் (Nouns of things) 29
இடப்பெயர் (Nouns of places) 29
காலப்பெயர் (Nouns of days, years, etc.)... ... 29
சினைப்பெயர் (Nouns of parts of a whole) ... 29
பண்புப்பெயர் (Abstract nouns or Names of qualities) 29

பக்கம்
தொழிற்பெயர் (Verbal nouns or nouns of action) 30
1. கடைநிலை பெற்ற தொழிற்பெயர் 30
2. முதனிலைத் தொழிற்பெயர் 31
3. முதனிலை திரிந்த தொழிற்பெயர் 31
4. முதனிலை திரிந்து கடைநிலையேற்ற தொழிற்பெயர் 32
5. காலம் காட்டும் தொழிற்பெயர் 32
6. எதிர்மறைத் தொழிற்பெயர் 32
வினையாலணையும் பெயர் (Nouns denoting the agent of the action or Participial nouns) 33
வினையாலணையும் பெயருக்கும் தொழிற்பெயருக்கும் உள்ள வேற்றுமை 34
ஆகுபெயர் (Transferred noun) 36
கிளைப்பெயர் (Nouns denoting relatives) 36
சாதிப்பெயர் (Nouns denoting castes) 36
அளவுப்பெயர் (Nouns of measures) 36
மூவிடப்பெயர்கள் (3 kinds of personal nouns) ... 37
1. தன்மைப்பெயர் (First Person) 37
2. முன்னிலைப்பெயர் (Second Person) 37
3. படர்க்கைபெயர் (Third Person) 37
பொதுப்பெயர்கள் (Common reflexive pronouns) ... 37
திணை (Class) 39
1. உயர்திணை (Rational class) 39
2. அஃறிணை (Irrational class) 39
பால் (Gender) 40
1. ஆண்பால் (Masculine gender) 42
2. பெண்பால் (Feminine gender) 42
3. பலர்பால் (Masculine plural or feminine plural or both combined) 44
4. ஒன்றன்பால் 44
5. பலவின்பால் 44
பால்பகா அஃறிணை (Common irrational nouns) ... 45
எண் (Number)... 45

பக்கம்

இடம் (Person) 46
தன்மை (First person) 46
முன்னிலை (Second person) 46
படர்க்கை (Third person) 46
இடம் விரவி வருதல் 47
வேற்றுமை (Case) 48
வேற்றுமை (Case); உருபு (Casal endings or casal signs) 49
முதல் வேற்றுமை (Nominative case) 50
இரண்டாம் வேற்றுமை (Accusative case) 50
மூன்றும் வேற்றுமை (Instrumental case) 50
நான்காம் வேற்றுமை (Dative case)... 51
ஐந்தாம் வேற்றுமை (Ablative case) 51
ஆறும் வேற்றுமை (Possessive case) 51
ஏழாம் வேற்றுமை (Locative case)... 52
எட்டாம் வேற்றுமை (Vocative case) 52
உருபுமயக்கம் (Interchange of cases) 53
உருபு ஏற்கும்போது திரியும் பெயர்கள் (Change of pronouns when taking casal signs) 53
வினைச்சொல் (Verb) 55
வினைமுற்று 55
வினையெச்சம் 55
பெயரெச்சம் 55
வினைமுற்றின் வகை (Kinds of finite verb) 56
பகுபத உறுப்பு (Analysis of words) 57
பகுதி (Root) 57
விகுதி (Termination) 57
1. தன்மை வினைமுற்று விகுதிகள் 58
2. முன்னிலை வினைமுற்று விகுதிகள்... 58
3. படர்க்கை வினைமுற்று விகுதிகள் 59
4. ஏவல் வினைமுற்று விகுதிகள் 60
5. வியங்கோள் வினைமுற்று விகுதிகள் 60

பக்கம்

இடைநிலை (Middle particles) 61
காலம் (Tense) 61
சாரியை (Euphonic particles) 62
சந்தி (Combination) 63
பகுபத உறுப்புப் பிரித்தல்... 63
தன்வினையும் (Verb denoting direct action) பிறவினையும் (Causative verb) 64
தன்வினை பிறவினையாகும் விதங்கள் 65
செய்வினையும் (Active verb) செயப்பாட்டுவினையும் (Passive verb) 66
பெயரெச்சம் (Dependent verb qualifying noun) ... 68
வினையெச்சம் (Dependent verb modifying verb) ... 69
செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம் (A form of dependent verb) 70
உடன்பாடும் எதிர்மறையும் (Positive & Negative) ... 70
உடன்பாட்டு வினைமுற்றும் எதிர்மறை வினைமுற்றும் ... 71
உடன்பாட்டுப் பெயரெச்சமும் எதிர்மறைப் பெயரெச்சமும் ... 72
ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் (Negative dependent relative verb without ending) 72
உடன்பாட்டு வினையெச்சமும் எதிர்மறை வினையெச்சமும் ... 73
ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம் 74
இடைச்சொல் (Dependent words & particles) 75
உரிச்சொல் (Words peculiar to poetry) ... 75

IV

புணர் இயல் (Combination of letters)... 77
1. இயல்பு புணர்ச்சி (Natural combination) ... 78
2. விகாரப் புணர்ச்சி (Change of letters) 79
தோன்றல் 79
கெடுதல் 82
திரிதல் 84

V

அணி இயல் (Figures of speech) 89
உவமை (Comparison) 89

பக்கம்

உருவக அணி (Figurative language) 91
தற்குறிப்பு ஏற்ற அணி 91

VI

செய்யுள் இயல் 93
செய்யுள் வடிவம் மட்டும் (Forms of two kinds of Tamil verse only) 93
1. வெண்பா 93
குறள் வெண்பா 93
நேரிசை வெண்பா 93
இன்னிசை வெண்பா 93
2. ஆசிரியப்பா 94
நிலைமண்டில ஆசிரியப்பா 94
நேரிசை ஆசிரியப்பா 95
3. ஆசிரிய விருத்தம் 95

இலக்கணப் பயிற்சிகள்

VII

நன்னூல் சூத்திரங்கள் 97

பாகம் II

கட்டுரை விளக்கம்

I

1. வாக்கியம் (The Sentence) 101
2. வாக்கிய அமைப்பில் அறியவேண்டியவை (Construction of sentence) 104
3. பிழையான வாக்கியங்களும் திருத்தங்களும் (Common errors and their corrections) 111
4. வாக்கிய மாற்றம் (Combination and Transformation of sentences) 114
5. எழுத்துப் பிழைகள் நீக்கும் வழிகள் (How to avoid spelling mistakes) 119
6. பிழையான சொற்களும் திருத்தங்களும் (Wrong words and their corrections) 124
7. எதிர்மொழிகள் (Antonyms) 125
8. சந்தி (Rules about Combination) 127

பக்கம்

9. சரியான சந்தித்தொடர்கள் (Words of correct santhi). 134
10. நிறுத்தற் குறிகள் (Punctuations) 138
11. சில உவமைகள் (Some similes) 143
12. சில பழமொழிகள் (Some proverbs) 148
13. பத்தியமைப்பு (Paragraph construction) 150
14. எழுதும்பொழுது கவனிக்கவேண்டியவை (What to observe when writing essays) 152
15. பிழையாகச் சொற்களைப் பிரித்தல் (Wrong splitting of words) 153

II

1. கட்டுரை எழுதும் முறை (Some hints to write an essay) 154
2. மாதிரிக் கட்டுரை (Model essays) 163
3. கடிதம் எழுதல் (Letter-writing) 173
4. மாதிரிக் கடிதங்கள் (Model letters) 176
5. சொல்லாடல் (Dialogue) 180
6. மாதிரிச் சொல்லாடல் (Model dialogues) 181
7. கதை எழுதல் (How to write stories) 186
8. மாதிரிச் சிறு கதை (Model story) 187
9. செய்யுட் கதை எழுதல் (Story poems) 190

III

1. செய்யுளுக்கு உரை எழுதல் (Hints on explaining meaning for poetry) 199
2. விடைத்தாள் எழுதும் விதம் (How to answer question papers in the examination) 200
3. அகராதி பார்த்தல் (Hints to refer Tamil dictionaries) 204
கட்டுரைப் பயிற்சிகள்

நடைமுறைத்
தமிழ் இலக்கணம்

முதற் பாகம்

(PART I)

நடைமுறைத் தமிழ் இலக்கணம்

I

(1) இலக்கண வரலாறு
(History of Tamil grammar)

அமிழ்தினும் இனிய தமிழ்மொழி குறைந்தது 5000 ஆண்டு பழமையானது என்பதற்கு எள்ளளவும் ஐயம் இல்லை. இம்மொழியில் ஐரோப்பியர்களும் வியக்கத்தக்க இலக்கியங்களும் இலக்கணங்களும் இருக்கின்றன. திருக்குறள், கம்ப ராமாயணம் போன்றவை இலக்கியங்கள். இவ்வாறு இருக்கவேண்டும் என்று விதிகளை எடுத்துக் காட்டுவது இலக்கணம். தொல்காப்பியம், நன்னூல் போன்றவை தமிழில் உள்ள உயர்ந்த இலக்கணங்கள்.

இஃது இலக்கண நூலாகையால் நாம் இலக்கண வரலாற்றைமட்டும் சிறிது பார்ப்போம். இந்திய நாட்டில் மனப்பாடம் செய்வதற்கு வசதியாயிருத்தற்கும் சுருக்கமாயிருப்பதற்கும் சூத்திரம் என்னும் நூற்பா பண்டைக்காலத்தில் இலக்கண நூல்களில் கையாளப் பட்டது. சூத்திரத்தைச் செய்யுள் என்று சொல்வது பிழையானது; ஏனென்றால் சூத்திரம் வேறு, செய்யுள் வேறு. பண்டைத்தமிழ் இலக்கணங்கள் எல்லாம் நூற்பாவிலேயே இருக்கின்றன.

தமிழ்மொழியில் முதல்முதல் தோன்றியது அகத்தியம் என்றும், அகத்தியர் செய்த நூலாகையால் அந்நூல் அகத்தியம் எனப் பெயர்பெற்றது என்றும் கூறுவர். இந்த அகத்தியம் அழிந்துவிட்டது. இப்போது அகத்தியம் என்னும் பெயரால் ஒரு நூல் சில ஆண்டுகளுக்கு முன் வெளிவந்தது. அந்நூலைப் பலர் பழைய அகத்தியமாக ஒப்புக்கொள்வதில்லை.

அகத்தியர் மாணாக்கராகிய தொல்காப்பியர் என்பவர் தம் பெயரால் ஓர் இலக்கண நூல் செய்தார். அதற்குத் தொல்காப்பியம் என்பது பெயர். தொல்காப்பியரால்

செய்யப்பட்டது தொல்காப்பியம். அதன் காலம் கி. மு. 4-ம் நூற்றாண்டு என்று திருவாளர் பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள் கூறியுள்ளார்கள். தொல்காப்பியம் தமிழில் உள்ள பழைய இலக்கணம் என்பது யாரும் மறுக்கமுடியாத உண்மை.

தொல்காப்பியத்திற்குப் பிறகு பல நூற்றாண்டுகளுக்குப்பின் தோன்றியது நன்னூல் என்னும் இலக்கணம். நன்னூல் தோன்றிய காலம் கி. பி. 12-ம் நூற்றாண்டு. இதை இயற்றியவர் பவணந்தி முனிவர். இவர் சமணர். இவர் பல இலக்கணங்களை நன்றாகப் படித்துப் படித்துப் பலருக்கும் பல்முறை பாடஞ் சொல்லிக்கொடுத்த பின்பு தள்ளவேண்டியன தள்ளிக்கொள்ளவேண்டியன கொண்டு பழையன கழித்துப் புதியன சேர்த்துச் சுருக்கமாக இந்த நன்னூல் என்னும் இலக்கணத்தைச் செய்தார்.

பின்பு சில இலக்கணங்கள் வெளிவந்தன. கி. பி. 18-ம் நூற்றாண்டில் வீரமா முனிவர் என்னும் பெயரை வைத்துக்கொண்ட பெஸ்கி என்னும் ஐரோப்பியரும் கூடத் தமிழ் கற்றுத் தொன்னூல் என்னும் இலக்கணம் எழுதினார். பல இலக்கண நூல்கள் வெளிவந்தும், பிற்காலத்தில் நன்னூலையே தமிழர்கள் மிகவும் போற்றிக் கற்றுவந்தார்கள். இப்போது தொல்காப்பியமும் படிக்கப்படுகிறது.

தொல்காப்பியமும் நன்னூலும் சூத்திரத்தில் இருப்பதாலும், அவைகளுக்கு உள்ள உரைகள் எளிதில் விளங்கக் கூடியனவாக இல்லாமையாலும், ஐரோப்பிய முறைக் கல்வி நம் நாட்டில் தொடங்கிய காலத்தில் வசன நூல்களில் சிலர் தமிழ் இலக்கணம் எழுதத் தொடங்கினர். அப்படிப்பட்ட நல்ல தொண்டு செய்தவர்களுள் தலைசிறந்தவர்கள் Rev. G. U. போப் என்னும் ஐரோப்பியத் தமிழ்ப் பண்டிதரும் விசாகப்பெருமாள் அய்யர் என்னும் தமிழாசிரியரும் ஆவார்கள். இந்நாளில் பல இலக்கணங்கள் உரைநடையில் இருக்கின்றன. அவைகள் பெரும்பாலும் நன்னூல் என்னும் இலக்கணத்தைத் தழுவி எழுதப்பட்டவைகளே. நன்னூல் சூத்திரங்களுள் மிகவும்

முக்கியமானவைகளை நீங்கள் உங்கள் இலக்கண நூல்களில் காணலாம். சூத்திரத்தின்கீழ் 'ந. சூ.' என்னும் குறிப்பை நீங்கள் பார்த்திருக்கலாம். ந. சூ. என்றால் நன்னூல் சூத்திரம் என்றறிக.

மாணவர்களே, நீங்கள் உரைநடையில் உள்ள இலக்கணங்களைப் பயின்றபின் நன்னூலையாவது படித்தல் வேண்டும். நன்னூலைக் கற்க முயல்வீராக.

(2) இலக்கணம் கற்பது ஏன்?
(Why should we study Tamil grammar?)

மாணவர்களுள் சிலர், "இலக்கணம் ஏன் கற்கவேண்டும்? ஆங்கில ஆசிரியர் சிலர், ஆங்கில இலக்கணம் இன்றி ஆங்கிலம் கற்கலாம் என்கின்றனரே. அப்படியிருக்கத் தமிழ் மாணவர்கள் தமிழிலக்கணம் கற்காமல் தமிழ் எழுதுவது முடியாதா? பேசுவது முடியாதா? செய்யுள்களுக்குப் பொருள் சொல்வது முடியாதா? தமிழனுக்குத் தமிழ் இலக்கணம் வேண்டுமோ?" என்று அடிக்கடி கேட்பதுண்டு. தமிழ் அறியாத ஆங்கிலம் கற்ற ஆங்கிலப் பண்டிதர்களும் அவ்வாறு நினைப்பதுமுண்டு, சொல்வதுமுண்டு. இலக்கணமில்லாமல் ஒருவன் எந்த மொழியையும் நன்றாய் உணர்ந்து கற்பது முடியவே முடியாது. இது முக்காலும் உண்மை. இலக்கணமின்றி எம்மொழியைக் கற்றாலும் கற்கலாம்; நம்மொழியை ஓரளவு இலக்கண அறிவு இல்லாமல் ஒருவன் கற்றுத் தெளிவாக உணர்வது முடியாத செயல். செய்யுள் மொழியாகிய தமிழ்மொழியை இலக்கண அறிவு ஓரளவு இன்றி நன்கு உணர்ந்துகொள்வது முடியுமா? சந்தி பிரிக்கவாவது தெரியவேண்டுவதில்லையா? சந்தி பிரிக்கத் தமிழ் மாணவன் ஓரளவு இலக்கணம் கற்கவேண்டுவது மிக மிக இன்றியமையாதது. நன்னூலைக் கரைத்துக் குடிக்கவேண்டியதில்லை; தொல்காப்பியத்தை உருப்போடவேண்டியதில்லை. வேண்டிய விதிகளை நினைவில் வைத்துக்கொள்வது போதுமானது. சில விதிகளைப் பாராமல் படித்துவைத்தால்

மிகவும் நல்லது. இதைச் செய்யக்கூடாதா? தமிழிலக்கணம் வேம்பா, விளக்கெண்ணெயா? தமிழ் இலக்கணம் படிக்கப்படிக்க இனிக்குமே? படித்துப் பாருங்கள்! ஏன் அஞ்சுகிறீர்கள்? நஞ்சா அது? அஞ்சவேண்டியதே இல்லை, இல்லை.

ஏன் இலக்கணம் படித்தல்வேண்டும்? இலக்கணம், இலக்கியத்திற்குத் திறவுகோல், முதன்மையான திறவு கோல். தமிழிலக்கியப் பூஞ்சோலையில் நுழைந்து இனிய பாமலர்களைக் காணவேண்டுமானால் பூஞ்சோலையின் வாயிலைத் திறந்துதானே உள்ளே புகல்வேண்டும்? தமிழிலக்கியக் கோயிலினுள் நுழைந்து தமிழணங்கைத் தரிசிக்க வேண்டுமென்றால் கோயில்வாயில் திறக்கப்படவேண்டியதில்லையா? செந்தமிழ் மணிகள் உள்ள இலக்கியக் கருவூலத்தைத் (Treasury) திறக்க விரும்பினால் இலக்கணத் திறவுகோல் இல்லாமல் அது முடியுமா? இலக்கியம் என்பது யாது? சிறந்த கருத்துக்கள் சிறந்த நடையில் எழுதப்பட்டிருக்கும் நூலே இலக்கியம். அந்த இலக்கியத்தை அறிய இலக்கணம் வேண்டுவதில்லையா? தமிழிலக்கியத்தை உணரத் தமிழிலக்கணம் இன்றியமையாதது என்று சொல்லவும் வேண்டுமோ?

இலக்கண அறிவு ஓர் அளவு இல்லாவிட்டால் பொருளே விளங்காது. அலைகடல் என்னும் தொடருக்கும் அலைக்கடல் என்னும் தொடருக்கும் வேற்றுமை உண்டு. அலைகடல் என்பதற்கு அலைகின்ற கடல் என்பது பொருள். அலைக்கடல் என்பதற்கு அலையை உடைய கடல் என்பது பொருள். இதைப்போலப் பல உண்டு. இலக்கண அறிவு இருந்தால்தானே இந்நுட்பங்களை உணர்வதுமுடியும்?

இலக்கண அறிவு இருந்தால் நாம் பிழையின்றி எழுதவும்கூடும். பிறர் நம்முடைய வாக்கியத்திற்கு வேறு பொருள் கொடுப்பதுமுடியாது. முன்னூறு அனுப்பினேன் என்பதை முந்நூறு அனுப்பினேன் என்றால் என்ன ஆகும்? முன் + நூறு = முன்னூறு. முன்னே நூறு அனுப்பினேன் என்பது பொருள். முந்நூறு = மூன்று + நூறு.

மூன்று நூறு அனுப்பினேன் என்றால் இலக்கணம் அறியாதவன், பிழையை உணரமுடியாமையால் நஷ்டமடையக்கூடுமன்றோ? நஷ்டமடையாமல் இருப்பதற்கு இலக்கணம் வேண்டும். இதனாலன்றோ வில்லியம் காபெட் என்ற ஆங்கில அறிஞர் "இலக்கணம் என்பது நாள்தோறும் பயன்படுவதற்கு உள்ள அறிவியல் நூல்" என்றார்.

பொதுவாக இலக்கணம், அறிவைக் கூர்மைப்படுத்தும். தமிழிலக்கணமோ கற்பார் அறிவை மிகமிகக் கூரியதாக்கும். தமிழிலக்கணத்திலுள்ள நுட்பங்கள் கூர்மையாக்குவதற்கே உள்ளன. ஏகார ஓகார உம்மைகளை அறிவதற்குப் பயிலும் பயிற்சியே ஒருவன் அறிவைக் கூர்மையாக்குவதற்குப் போதுமானது.

பண்டைத்தமிழர்கள் உயர்ந்த அறிவு படைத்தவர்கள். அவர்களுடைய இலக்கணத்தில் அவர்களுடைய கூரிய மதியையும் பரந்த நோக்கையும் அகன்ற அறிவையும் காணலாம். இவ்வளவு விஞ்ஞான முறையில் இலக்கணங்களைப் படைத்த தமிழர்கள் ஏன் விஞ்ஞான அறிவைப் பெருக்கவில்லை என்பது நமக்குத் தோன்றும். பண்டைத்தமிழர்களுடைய கூரிய பேறறிவைக் காண்பதற்குத் தமிழிலக்கணம் வேண்டும்.

மொழிபெயர்ப்புக்கும் இலக்கணம் வேண்டும். சரியானபடி தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழிபெயர்க்கவும் தமிழிலக்கணம் அவசியம்.

சுருங்கக்கூறினால், சிறந்த தமிழ்க் கல்விக்குத் தமிழ் இலக்கணம் ஓரளவு பயன்படுமுறையில் கற்கவேண்டியது இன்றியமையாதது என்பது நன்கு விளங்கும். எனவே, தமிழ் மாணவர்களே, தமிழ் இலக்கணத்தை, வேப்பங்காயாகக் கற்பனைசெய்து தப்பாக எண்ணிக்கொள்ளாமல் அதை நன்கு கற்று நல்லறிவு பெறுவீர்களாக. தமிழிலக்கணத்தைச் சரியானபடி சொன்னால் எளிதாகக் கற்றுக் கொள்ளலாம்; அஞ்சி அலறவேண்டியதே இல்லை. யாருக்காவது அந்த அச்சம் இருக்குமானால் இன்றே, இப்பொழுதே அதை ஒழித்துவிடுங்கள். தமிழிலக்கணம் கற்க முந்துங்கள், முந்துங்கள்!

(3) தமிழ் எழுத்து

உயிர்-மெய்

	அ	ஆ	இ	ஈ	உ	ஊ
க்	க	கா	கி	கீ	கு	கூ
ங்	ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ
ச்	ச	சா	சி	சீ	சு	சூ
ஞ்	ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ
ட்	ட	டா	டி	டீ	டு	டூ
ண்	ண	ணா	ணி	ணீ	ணு	ணூ
த்	த	தா	தி	தீ	து	தூ
ந்	ந	நா	நி	நீ	நு	நூ
ப்	ப	பா	பி	பீ	பு	பூ
ம்	ம	மா	மி	மீ	மு	மூ
ய்	ய	யா	யி	யீ	யு	யூ
ர்	ர	ரா	ரி	ரீ	ரு	ரூ
ல்	ல	லா	லி	லீ	லு	லூ
வ்	வ	வா	வி	வீ	வு	வூ
ழ்	ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ
ள்	ள	ளா	ளி	ளீ	ளு	ளூ
ற்	ற	றா	றி	றீ	று	றூ
ன்	ன	னா	னி	னீ	னு	னூ

(Tamil alphabet)

யெழுத்துக்கள்-216

எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ
கெ	கே	கை	கொ	கோ	கௌ
ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ
செ	சே	சை	சொ	சோ	சௌ
ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ
டெ	டே	டை	டொ	டோ	டௌ
ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ
தெ	தே	தை	தொ	தோ	தௌ
நெ	நே	நை	நொ	நோ	நௌ
பெ	பே	பை	பொ	போ	பௌ
மெ	மே	மை	மொ	மோ	மௌ
யெ	யே	யை	யொ	யோ	யௌ
ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ
லெ	லே	லை	லொ	லோ	லௌ
வெ	வே	வை	வொ	வோ	வௌ
ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ
ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ
றெ	றே	றை	றொ	றோ	றௌ
னெ	னே	னை	னொ	னோ	னௌ

ஃ ஆய்தம்.

II

எழுத்தியல்

(Orthography)

எழுத்து (Tamil Alphabet)

1. மனிதன் எப்படி எப்பொழுது பேசக் கற்றுக் கொண்டான் என்பது இன்னும் கண்டறியமுடியாத மறைபொருளாய் இருக்கிறது. மனிதன் படிப்படியாய்ப் பேசக் கற்றுக்கொண்டான். நாகரிகம் வளர வளர அவன் தன் கருத்துக்களைப் பிறருக்குத் தெரிவிக்க வேண்டிய அவ்சியம் ஏற்பட்டதால் மொழியைக் கண்டு பிடித்தான். கருத்தை வெளியிடுவதற்கு வழியாய் இருப்பது மொழி. நாகரிகம் வளர்ந்து தன் அனுபவத்தை எழுதிவைக்கவேண்டிய நிலைமை ஏற்பட்ட போது அவன் எழுத்தைக் கண்டுபிடித்தான். தமிழ் மொழியில் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே எழுத்து உண்டாயிற்று. அந்த எழுத்து இப்பொழுதுள்ள எழுத்தினும் வேறாக இருந்தது. இப்பொழுதுள்ள தமிழ் எழுத்தோ தொல்காப்பியர் காலத்தே ஏற்பட்டது.

மொழி சொற்களால் ஆனது. சொற்கள் எழுத்தால் ஆனவை. ஆகையால் எழுத்து சொல்லுக்கு அடிப்படையானது.

எழுத்து என்பது யாது? மொழி உண்டாவதற்குக் காரணமான ஒலிக்கூட்டமே எழுத்து. இவ்வெழுத்து ஒலிவடிவாகவும் வரிவடிவாகவும் இருக்கும். ஒலி—ஓசை. வரி—கோடு. எழுத்து என்று பெயர் வந்தது ஏன்? எழுதப்படுவதால் எழுத்து என்று பெயர் வந்தது.

தமிழ் எழுத்துக்கள் முதலெழுத்து, சார்பு எழுத்து என இருவகைப்படும்.

மொழிமுதற் காரணம்ஆம் அணுத் திரள்ஒலி
எழுத்(து); அது முதல்சார்(பு) எனஇரு வகைத்தே.

முதலெழுத்து (Primary letters)

2. முதன்மையான எழுத்துக்களே முதலெழுத்துக்கள். இவ்வெழுத்துக்கள் இல்லாமல் மற்றச் சார்பு எழுத்துக்கள் உண்டாகா. இதனால் இவ்வெழுத்துக்கள் முதலெழுத்துக்கள் எனப்பட்டன. பன்னிரண்டு உயிரெழுத்தும் பதினெட்டு மெய்யெழுத்தும் முதலெழுத்துக்கள்.

உயிரெழுத்துக்கள் (Vowels)—அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ.

மெய்யெழுத்துக்கள் (Consonants)—க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம் ய் ர் ல் வ் ழ் ள் ற் ன்.

உயிரும் உடம்புமாம் முப்பதும் முதலே.—ந. சூ.

[உயிர்—உயிரெழுத்து; உடம்பு—மெய்யெழுத்து; 12 உயிரும் 18 மெய்யும் = 30].

சார்பெழுத்து (Secondary letters)

3. முதலெழுத்தைச் சார்ந்து வருவது சார்பெழுத்து. அது நான்கு வகைப்படும். அவை,

1. உயிர்மெய்யெழுத்து
2. ஆய்த எழுத்து
3. குற்றியல் இகரம்
4. குற்றியல் உகரம்

என்பன. குற்றியல் இகரத்திற்கும் குற்றியல் உகரத்திற்கும் தனிப்பட்ட எழுத்துக்கள் இல்லை.

பயிற்சி 1

1. முதலெழுத்துக்கள் என்பவை எவை?
2. சார்பெழுத்துக்கள் எவை? சார்பெழுத்து என்பது ஏன்?
3. அ முதல் ஔ வரைக்கும் எழுதிக் காட்டுக.
4. ஃ—இந்த எழுத்து உயிரொழுத்தோடு சேர்ந்ததா, வேறானதா?

உயிரெழுத்து (Vowels)

4. உயிரெழுத்துக்கள்—அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ.

குறில் (Short vowels)

5. எப்படி உயிர் உடம்பை நடத்துவிக்குமோ அப்படி இவ்வெழுத்துக்கள் மெய்யெழுத்துக்களை நடத்துவிக்கின்றன. உயிர்போல இருப்பதால் இவைகள் உயிரெழுத்துக்கள் எனப்பட்டன.

உயிரெழுத்துக்கள் குறில், நெடில் என இருவகைப்படும்.

அ, இ, உ, எ, ஒ—இவைகளை உச்சரித்துப் பார்க்க. இவை குறுகி ஒலிக்கின்றன. குறுகி ஒலிப்பது குறில். எனவே, இவைகளைக் குறில் என்பர்.

நெடில் (Long vowels)

6. ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ—இவைகளை ஒலித்துப் பாருங்கள். இவைகள் நீண்டு ஒலிக்கின்றன. நீண்டு ஒலிப்பது நெடில். அதனால், இவைகளை நெடில் என்பர்.

வினா எழுத்து (Interrogative letters)

7. எவன்? ஏது? அவனா செய்தான்? முருகனோ கொடுத்தான்? நீயே கொடுத்தாய்?—இவற்றிலுள்ள தடித்த எழுத்துக்களை நோக்குங்கள். அந்த எழுத்துக்கள் எதற்காக இருக்கின்றன? அவை வினாவுதற்கு அஃதாவது கேள்வி கேட்பதற்கு இருக்கின்றன. கேள்வி கேட்பதற்குரிய எழுத்து வினா எழுத்து. எனவே, இந்த ஐந்து எழுத்துக்களையும் (எ, ஏ, ஆ, ஓ, யா) வினா எழுத்துக்கள் என்கிறோம்.

எவன் யாது	இங்கே வினாவெழுத்துக்கள் முதலில் இருக்கின்றன.
வந்தானா வந்தானோ	இங்கே ஈற்றில் வந்திருக்கின்றன.
ஏது நீயே செய்தாய்	'ஏ' முதலிலும் ஈற்றிலும் வந்திருக்கின்றது.

எனவே, எ, யா முதலிலும் ஆ, ஓ ஈற்றிலும் ஏ இருவழியிலும் வரும் என்றறிக.

எ யா முதலும் ஆ ஓ ஈற்றும்
ஏ இருவழியும் வினாவாகும்மே.—ந. சூ.

பயிற்சி 2

1. உயிரெழுத்து என்பது ஏன்?

2. உயிரெழுத்துக்களுள் குறில் எத்தனை, நெடில் எத்தனை?

3. குறில், நெடில் என்று பெயரிட்டது ஏன்?

4. வினு எழுத்துக்கள் எத்தனை? எங்தெந்த வினு எழுத்துக்கள் முதலிலும் எந்தெந்த வினு எழுத்துக்கள் ஈற்றிலும் எந்த வினு எழுத்து இருவழியும் வரும்?

5. ஐ, ஜ—இந்த இரண்டு எழுத்துக்களை உச்சரிக்க. இந்த இரண்டு எழுத்துக்களை வைத்து இரண்டு இரண்டு சொற்கள் எழுதுக. இரண்டு எழுத்துக்களுக்கும் உள்ள வேற்றுமையைப் பார்க்க.

6. ஐ, ஔ — இவை நெடிலா, குறிலா? காரணங்கள் கூறுக.

7. ஊது, உளவை—இவைகளை எழுதிப் பார்க்க.

8. ஔவை—இதைச் சொல்லிப் பார்க்க. ஔ, என்னும் எழுத்தின் உருவத்தை நன்ருய் நினைவில் வைக்க.

மெய்யெழுத்து (Consonants)

8. க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் — இவைகளை ஒலிப்பது முடியுமா? முடியாது. உயிரில்லாமல் உடம்பு அஃதாவது மெய் நடக்குமா? நடக்காது. இவை மெய்போலிருப்பதால் இவைகளை மெய்யெழுத்து என்று கூறுகிறேம். மெய்யெழுத்துக்கு ஒற்று என்றும் புள்ளி என்றும் பெயர்கள் உண்டு.

வல்லினம் (Hard consonants)

9. க், ச், ட், த், ப், ற்—இவற்றை உச்சரித்துப் பாருங்கள். வன்மையான ஒலியை உடைய எழுத்துக்கள் இவை. அதனுல், இந்த ஆறு எழுத்துக்களும் வல்லினமாம். வன்மையாக ஒலிக்கும் எழுத்து வல்லினம் என்க.

வல்லினம் க, ச, ட, த, ப, ற என ஆறே.—ந. சூ.

மெல்லினம் (Soft consonants)

10. ங், ஞ், ண், ந், ம், ன் — இவற்றை உச்சரியுங்கள். இவை மென்மையாகவே ஒலிக்கும். மென்மையாக ஒலிப்பது மெல்லினம். எனவே, இவை ஆறும் மெல்லினம் எனப்படும்.

மெல்லினம் ங, ஞ, ண, ந, ம, ன என ஆறே.—ந. சூ.

இடையெழுத்து (Medial consonants)

11. ய், ர், ல், வ், ழ், ள் — இவற்றை உச்சரித்துப் பாருங்கள். இவைகளை வல்லினத்துக்கும் மெல்லினத்துக்கும் இடைத்தரமான ஒலியோடு உச்சரிப்போம். இடைத்தரமாக ஒலிப்பது இடையினம். ஆகையால், இந்த ஆறு மெய்யெழுத்துக்களையும் இடையினம் என்கிறோம்.

இடையினம் ய, ர, ல, வ, ழ, ள என ஆறே. — ந. சூ.

பயிற்சி 3

1. மெய்யெழுத்து என்பது ஏன்?

2. மெய்யெழுத்துக்கு உள்ள வேறு பெயர்கள் யாவை?

3. வல்லின, மெல்லின, இடையின மெய் எழுத்துக்களைக் கூறுக.

4. வல்லினம், மெல்லினம், இடையினம் என்று கூறுவது ஏன்?

உயிர்மெய்யெழுத்து (Vowel consonants)

12. க — இஃது ஓர் எழுத்து அன்று. இஃது ஈர் ஒலியை உடையது. க் + அ = க. வரிவடிவில் எழுத்து ஒன்றே. ஒலியில் இஃது ஈரொலி உடையதே. உயிரும் மெய்யும் கூடிப்பிறக்கும் எழுத்தாக இருப்பதால் இதை உயிர்மெய் என்று கூறுகிறோம்.

மெய் — 18. உயிர் — 12. ஒவ்வொரு மெய்யின்மேலும் பன்னீருயிரும் ஏறிவருவதனால், $(18 \times 12 = 216)$ இருநூற்றுப்பதினாறு உயிர்மெய்யெழுத்துக்கள் உண்டாகின்றன. உயிர்மெய் எனப் பெயர் பெறினும் இவற்றை ஒலிக்கும்போது மெய்யொலியை முன்னும் உயிரொலியைப் பின்னும் ஒலித்தல்வேண்டும். உயிர்மெய்யெழுத்துக்களை இந்நூலின் முன்னுள்ள நெடுங்கணக்கில் காண்க.

பயிற்சி 4

1. உயிர்மெய்யெழுத்து என்பது ஏன்?

2. எத்தனை உயிர்மெய்யெழுத்துக்கள் தமிழ் நெடுங்கணக்கில் உண்டு?

3. உயிர்மெய்யை ஒலிப்பது எவ்வாறு?

4. ல, ள, ழ; ர, ற; ந, ன, ண—இவைகளைப் பிழையின்றி உச்சரிக்க.

5. நா, ஞு, ணு; ரா, ரு; றொ, றொ; நை, ணை, ணை; ஞெ, ணெ; ஞே, ணே; ல, ள, ழ; லை, ளை, ழை—இங்குள்ள ஒவ்வோர் எழுத்துக்கும் ஒவ்வொரு சொல் எழுதுக.

ஆய்த எழுத்து (The Guttural)

13. ஃ—ஏன் ஆய்தம் என்று இது வழங்கப்படுகிறது? கேடகத்தில் மூன்று புள்ளி இருக்கும். கேடகமும் (shield) ஓர் ஆயுதந்தானே. எனவே, கேடகத்திலுள்ள மூன்று புள்ளிகளைப்போலவே இந்த எழுத்து இருத்தலால் இதை ஆய்தம் என்பர். இந்த எழுத்திற்கு முப்பாற்புள்ளி, தனிநிலை என்னும் பெயர்களும் உண்டு.

அஃது, எஃது—இச்சொற்களைக் கவனித்துப் பாருங்கள். ஆய்த எழுத்திற்கு முன்னும் பின்னும் என்ன எழுத்துக்கள் இருக்கின்றன? எப்பொழுதும் ஆய்த எழுத்துத் தனியே வராது. எப்பொழுதும் அது குறிலுக்கு முன்னும் வல்லின உயிர்மெய்க்குப் பின்னுமே வரும். இப்படி இது சார்ந்து வருவதால் இதைச் சார்பெழுத்து என்றனர்.

குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே.—ந. சூ.

பயிற்சி 5

1. ஆய்தம் என்னும் பெயர் வந்தது ஏன்?
2. ஆய்தம் தனித்து வருமா? எப்படி வரும்?
3. ஆய்த எழுத்தை எழுதுக.
4. ஆய்த எழுத்தைச் சரியாக உச்சரிக்க.

உச்சரிக்கும் முறை

14. தமிழ் எழுத்துக்களின் உச்சரிப்பு மிகவும் சிறந்தது; யாவரும் போற்றற்கு உரியது; பெரும்பாலும் மாறுபாடு அடையாதது. தாங்கள் இழிவாக எண்ணப்படாமல் இருக்கவேண்டுமென்றால், தங்கள் குடும்பத்திற்

குப் பெருமை தர விரும்பினால், மாணவர்கள் தமிழ் எழுத்துக்களை உச்சரிப்பதில் மிகவும் கருத்தைச் செலுத்தி நன்கு பழகவேண்டியது இன்றியமையாதது. உச்சரிப்புப் பிழையானால் பிறர் எள்ளி நகைப்பர் என்பதை மாணவர்கள் மறத்தல்கூடாது. அதற்கு என்ன செய்தல் வேண்டும்? தமிழ் எழுத்துக்கள் பிறக்கும் இடங்களைக் கண்ணாடியில் பார்த்துப் பார்த்து உரக்க உச்சரித்துப் படித்துப் பழகல்வேண்டும். இதற்கு எழுத்துக்கள் பிறக்கும் இடங்களை அறிவது இன்றியமையாதது.

பிறக்கும் இடங்கள்

15. உயிரெழுத்துக் கழுத்தில் பிறக்கும்.
இடையின மெய் கழுத்தில் பிறக்கும்.
வல்லின மெய் மார்பில் பிறக்கும்.
மெல்லின மெய் மூக்கில் பிறக்கும்.

எல்லா எழுத்துக்களின் பிறப்பிடங்களை அறிய வேண்டியதில்லை. பிழைபடுவதற்கு உரிய சில எழுத்துக்களின் பிறப்பிடங்களே கீழே தரப்பட்டுள்ளன:—

ந, ன, ண



16. நாவின் நுனி அண்ணத்தின் நுனியைத் தொட ந் பிறக்கும். மேல்வாயை நா நுனி பரந்து தொட்டால் ன பிறக்கும். மேல்வாய் நடு இடத்தை நா நுனி மிகவும் பொருந்த ண பிறக்கும்.

ர, ற



17. மேல்வாயை நா நுனி தடவ 'ர' பிறக்கும். மேல்வாயை நா நுனி நன்றாகத் தடவ 'ற' பிறக்கும்.

ல, ள, ழ

18. *மேல்வாய்ப் பல்லின் அடியை நாவின் ஓரம் தடித்துப் பொருந்துதலால் 'ல' பிறக்கும். மேல்வாயை நாவின் ஓரம் தடித்துத் தடவுவதால் 'ள' பிறக்கும். மேல்வாயை நா நுனி மடித்துத் தடவ 'ழ' பிறக்கும்.*



குற்றியல் உகரம் (Shortened உ)

1. *நகு —நாகு.*
2. *கசு —கச்சு.*
3. *விடு —விண்டு.*
4. *அது —அஃது.*
5. *தபு —தப்பு.*
6. *வறு —வயிறு.*

19. *மேலுள்ளவைகளை இரண்டு இரண்டாக உச்சரித்துப் பார்த்து எச்சொற்களில் உள்ள உகரம் ஒலியில் நிறைந்திருக்கிறது அஃதாவது முற்றிலும் உகர ஒலி உடையதாய் இருக்கிறது என்றும், எச்சொற்களில் இருக்கும் உகரம் ஒலியில் குறைந்திருக்கிறது என்றும் கண்டுபிடியுங்கள். குறைந்த ஒலி உகரம் அஃதாவது குற்றியல் உகரம் இருக்கிற சொற்களின் இறுதியில் கு, சு, டு, து, பு, று இருப்பதைக் காணலாம். கடைசி எழுத்துக்கு முந்திய எழுத்து அஃதாவது ஈற்றுக்கு அயலெழுத்து நெட்டெழுத்தாகவாவது வல்லின மெய்யாகவாவது, மெல்லின மெய்யாகவாவது இடையின மெய்யாகவாவது ஆய்தமாகவாவது உயிர்மெய்யெழுத்தாகவாவது இருக்கும். கடைசியெழுத்துக்கு முந்திய எழுத்தை அஃதாவது ஈற்றுக்கு*

அயல் எழுத்தைக்கொண்டு நாம் இன்ன வகை குற்றிய லுகரம் என்கிறோம்.

நாடு, ஆறு	—நெடில் தொடர்க்குற்றியலுகரம்.	
வைத்து, நட்டு	—வன்தொடர்க்	,,
கண்டு, அன்பு	—மென்தொடர்க்	,,
செய்து, மார்பு	—இடைத்தொடர்க்	,,
கஃசு, எஃகு	—ஆய்தத்தொடர்க்	,,
அழகு, தெரியாது	—உயிர்த்தொடர்க்	,,

• குறிப்பு: நெடில் தொடர்க்குற்றியலுகரம் என்னும் தொடர், சந்தியில் நெடிற்றொடர்க்குற்றியலுகரம் என மாறும்.

நெடிற்றொடர்க்குற்றியலுகரம் எப்பொழுதும் இரண்டே எழுத்தில் வரும்; இரண்டுக்கு மேற்பட்ட எழுத்தில் வராது. முதலெழுத்து நெட்டெழுத்தாகவும் இரண்டாவது எழுத்து கு, சு, டு, து, பு, று என்பவைகளுள் ஒன்றாகவும் இருக்கும். உ—ம். பாகு, மாசு, பாடு, ஏது, பாபு, ஆறு.

வன்தொடர்க்குற்றியலுகரம் இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துக்களை உடைய சொற்களின் கடைசியில் வரும். கண்டுபிடிப்பது எப்படி? ஈற்றெழுத்து, கு, சு, டு, து, பு, று என்பவைகளுள் ஒன்றாகவும், ஈற்றுக்கு அயலெழுத்து வல்லினமெய்களுள் ஒன்றாகவும் இருந்தால் வன்தொடர்க் குற்றியலுகரம் என்க. உ—ம். மக்கு, நச்சு, எட்டு, பத்து. உப்பு, கற்று.

மென்தொடர்க்குற்றியலுகரத்துக்கு ஈற்றெழுத்து கு, சு, டு, து, பு, று என்பவைகளுள் ஒன்றாகவும், ஈற்றுக்கு அயலெழுத்து மெல்லினமெய்களுள் ஒன்றாகவும் இருக்கும். உ—ம். சங்கு, நஞ்சு, வண்டு, வந்து, அம்பு, கன்று.

இடைத்தொடர்க்குற்றியலுகரத்தில் ஈற்றெழுத்து கு, சு, டு, து, பு, று என்பவைகளுள் ஒன்றாகவும், ஈற்றுக்கு அயலெழுத்து இடையின மெய்களுள் ஒன்றாகவும் இருக்கும். உ—ம். நெய்து, மார்பு, மல்கு, வீழ்து, தெள்கு.

ஆய்தத்தொடர்க்குற்றியலுகரத்தில் ஈற்றெழுத்து கு, சு, டு, து, பு, று என்பவைகளுள் ஒன்றாகவும், ஈற்றுக்கு

அயலெழுத்து ஆய்தமாகவும் இருக்கும். உ—ம். அஃது, கஃசு (பலம்).

உயிர்த்தொடர்க் குற்றியலுகரத்தில் ஈற்றெழுத்து கு, சு, டு, து, பு, று என்னும் எழுத்துக்களுள் ஒன்றாகவும் ஈற்றுக்கு அயலெழுத்து உயிர்மெய்யெழுத்துக்களுள் ஒன்றாகவும் இருக்கும். அழகு—ழ என்பது உயிர்மெய். இந்த உயிர்மெய்யில் மெய்யெழுத்தை நீக்கி உயிரை மாத்திரம் நோக்கி உயிர்த்தொடர்க்குற்றியலுகரம் என்க. உயிர்த்தொடர்க்குற்றியலுகரத்தில் ஈற்றுக்கு அயல் எழுத்து உயிர்மெய்யாகவே இருக்கும் என்பதைஉணர்க. உ—ம். விறகு, அரசு, குருடு, இறம்பூது, மாபு, பயறு.

20. தனி நெடிலாவது வல்லின மெய்யாவது மெல்லின மெய்யாவது இடையின மெய்யாவது ஆய்தமாவது உயிரெழுத்தாவது தொடர்ந்துவரும் சொல்லினது இறுதியில் கு, சு, டு, து, பு, று என்னும் எழுத்துக்களுள் ஒன்று இருக்குமானால் அதில் இருக்கும் உகரம் குறுகி ஒலிக்கும். அப்படிக் குறுகி ஒலிக்கும் உகரம் குற்றியலுகரமாகும்.

குற்றியலுகரம் தமிழறிவுக்கு மிகவும் இன்றியமையாதது. இது தெரியாமற்போனால் சில இடங்களில் சந்தி பிரிப்பது முடியாது.

> நெடிலோ(டு) ஆய்தம் உயிர், வலி, மெலி, இடை
> தொடர்மொழி இறுதி வன்மையூர் உகரம்
> அஃகும்; பிறமேல் தொடரவும் பெறுமே.

முற்றியல் உகரம் (Full-sound உ)

21. குற்றியலுகரமல்லாத உகரம் முற்றியலுகரமாகும்.

1. உ, சு—தனியாக உள்ள உயிரெழுத்து உகரமும் தனியாக உள்ள உயிர்மெய்யெழுத்தில் உள்ள உகரமும் முற்றியல் உகரம் எனப்படும்.

2. நகு, பசு, படு, எது, தபு, மறு, கணு—இரண்டு குறிலாக வருகின்ற சொல்லின் ஈற்றில் இருக்கும் கு, சு, டு, து, பு, று, ணு போன்ற எழுத்துக்களில் உள்ள உகரம் முற்றியலுகரமாகும்.

3. வரவு, தும்மு, வேணு, வாயு—சொற்களின் ஈற்றெழுத்து மெல்லின மெய்யின்மேல் ஏறிவந்த உகரமாகவும் இடையின மெய்யில் சேர்ந்துவந்த உகரமாகவும் இருந்தாலும் அந்த உகரம் முற்றியலுகரமே. ஙு, ஞு, ணு, நு, மு, னு, யு, ரு, லு, வு, ழு, ளு ஆகிய இந்த எழுத்துக்களுள் ஒன்று சொல்லின் இறுதியில் இருந்தால் இதில் இருக்கும் உகாமும் முற்றியல் உகரம் என்க.

முற்றியலுகரத்துக்கு வகை கூறுவதில்லை.

பயிற்சி 6

1. குற்றியலுகரம் என்பதற்குப் பொருள் யாது?

2. வல்லின மெல்லின இடையின மெய்யெழுத்துக்களைக் கூறுக.

3. குற்றியலுகரத்தைக் கண்டுபிடிப்பது எப்படி?

4. குற்றியலுகர வகைகள் யாவை? ஒவ்வொன்றிற்கும் ஒவ்வோர் உதாரணம் தருக.

5. பத்து, பண்டு, ஓடாமல், நேற்று, வருந்தி, இடையீடு, நடு, கயிறு, ஓது, சால்பு, வீழ்வு, வீழ்து, செய்யாது, எஃகு—இங்குள்ள குற்றியலுகரச் சொற்களைக் கண்டுபிடித்து இன்ன குற்றியலுகரம் என்று கூறுக.

6. நெடிற்றொடர், வன்தொடர், மென்தொடர், இடைத்தொடர், ஆய்தத்தொடர், உயிர்த்தொடர்க் குற்றியல் உகரங்கள் எப்படி வரும் என்று உதாரணத்துடன் விளக்குக.

7. முற்றியலுகரத்தைக் கண்டுபிடிப்பது எப்படி?

8. குற்றியலுகரம், முற்றியலுகரம்—இவைகளைப்பற்றி ஏன் தெரிந்துகொள்ளல்வேண்டும்?

9. முற்றியலுகரத்துக்கு வகை உண்டா?

10. நெடிற்றொடர்க்குற்றியலுகரம் ஒன்றும் முற்றியலுகரம் ஒன்றும் எழுதுக.

குற்றியல் இகரம் (Shortened இ)

22. வேறியாது, கேண்மியா—தடித்த எழுத்துக்களில் இருக்கும் இகரத்தை ஒலித்தால் குறைந்தே ஒலிக்கும். குறைந்து ஒலிக்கும் இகரம் குற்றியல் இகரம் எனப்படும். குற்றியல் இகரம் புணர்மொழியிலும் தனி மொழியிலும் வரும்.

வேறு + யாது—நிலைமொழியின் கடைசியில் அஃதாவது முதல் நிற்கும் சொல்லின் இறுதியில் இருப்பது குற்றியலுகரம். வருமொழி அஃதாவது பக்கத்தில் வரும் சொல் 'யா' என்னும் எழுத்தில் தொடங்குகிறது. வருமொழி முதலெழுத்தாகிய 'யா' என்னும் எழுத்தை நோக்கி 'று' என்னும் எழுத்தில் உள்ள உகரம் இகரமாக மாறுகிறது. இது புணர்மொழிக் குற்றியலிகரம். கேண்மியா—இங்கே 'மியா' என்பது பொருளில்லாமல் அசையாக வரும் சொல். இந்த மியா என்னும் அசைச்சொல்லில் இருக்கும் மி என்பதில் உள்ள இகரமும் குற்றியலிகரமாகும்.

குற்றியலிகரம் தெரிவது, செய்யுளில் குற்றியலிகரம் வரும்போது பிரித்துப் பொருளறிவதற்குப் பயன்படும்.

யகரம் வரக்குறள் 'உ'த்திரி இகரமும்
அசைச்சொல் மியாவின் இகரமும் குறிய.—ந. சூ.

பயிற்சி 7

1. குற்றியலுகரத்திற்குப்பின் குற்றியலிகரத்தைச் சொல்ல வேண்டுவது ஏன்?

2. இருவகைக் குற்றியலிகரம் கூறுக.

3. குற்றியலிகரம் என்றால் என்ன?

4. நாடியாது, காடியாண்டு—இவற்றில் உள்ள குற்றியலிகரங்களைக் கண்டுபிடிக்க.

5. குற்றியலிகரத்தின் பயன் யாது?

போலி (Interchange)

23. நாயிற்றுக்கிழமை என்றாலும் ஞாயிற்றுக்கிழமை என்றாலும் பொருள் மாறுபடுவதில்லை. அரயன் என்றாலும் அரையன் என்றாலும் பொருள் வேறுபடுவதில்லை. மதில் என்பதை மதிள் என்றாலும் பொருள் திரிந்து விடாது.

ஒரு சொல்லில் இயல்பாய் இருக்கும் எழுத்து நீங்க மற்றோர் எழுத்து வந்து நின்றாலும் பொருள் மாறுபடாது இருப்பது போலி எனப்படும்.

போலி மூவகைப்படும். இடம்பற்றியே இவ்வாறு கூறுவதாகும்.

மொழிமுதற் போலி (Initial Interchange)

நயம்—ஞயம் —நகரத்துக்கு ஞ போலியாக வந்தது.
மயல்—மையல்—அ ,, ஐ ,, ,,

இடைப்போலி (Medial Interchange)

அரசு—அரைசு—இடையில் அகரத்துக்கு ஐ போலியாக வந்தது.

வைத்தான்—வைச்சான்—த் என்னும் எழுத்திற்கு ச் போலியாக வந்தது.

நீந்தினான் —நீஞ்சினான் —ந் என்னும் எழுத்திற்கு ஞ் போலியாக வந்தது.

கடைப்போலி (Final Interchange)

முகம் —முகன் —ம் என்னும் எழுத்திற்கு—ன் போலி.
மரம் —மரன் —ம் ,, ,, —ன். ,,
செதில் —செதிள் —ல் ,, ,, —ள். ,,
சாம்பல்—சாம்பர்—ல் ,, ,, —ர். ,,
குடல் —குடர் —ல் ,, ,, —ர். ,,
வண்டு —வண்டர்—குற்றியலுகரத்திற்கு அர் போலி.

24. போலி படிப்பதன் பயன் யாது? இருவகையாக எழுதினாலும் பிழையில்லை என்று அறிந்துகொள்வதும் இந்தச் சொல் இவ்வாறும் வரும் என்று தெரிந்துகொள்வதும் வேண்டும் என்பதை உணர்வதற்கே போலியைப் படித்தல்வேண்டும். போலி வேறு, போளி வேறு என்பதையும் அறிக. போளி என்பது தின்னும் பண்டம்.

பயிற்சி 8

1. போலி என்பது யாது? போளி என்பது யாது?

2. எத்தனை வகைப் போலிகள் உண்டு? ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் எழுதுக.

3. ஞண்டு, நண்டு—இவற்றுள் எது போலி, எது இயல்பானது?

4. மகர னகரப் போலிக்கும் குற்றியலுகரத்துக்கு அர் போலியாக வருவதற்கும் ஒவ்வோர் உதாரணம் கண்டுபிடித்து எழுதுக.

திருப்பல் பயிற்சி (Revision Exercise) 9

1. இலக்கணம் கற்பதனால் வரும் பயன்கள் யாவை?

2. ன, ண, ர, ற, ல, ள—இந்த எழுத்துக்களை நெடுங்கணக்கு வரிசையில் உள்ளபடி பார்த்து எழுதுக.

3. பல பல; பள பள; வழ வழ; வெல்லம், வெள்ளம்; குலம், குளம்; மூலை, மூளை; வேலை, வேளை; கல், கள்; வல், வள்; வாழைப் பழம், தாழம்பூ; எரி, எறி; மாரி, மாறி.—இவைகளைப் பலமுறை உச்சரியுங்கள்.

4. வல்லின மெல்லின இடையின மெய்கள் எவை?

5. தமிழ் எழுத்துக்கள் மொத்தம் எத்தனை?

6. குற்றியலுகர முற்றியலுகரங்களைக் கண்டுபிடிப்பது எப்படி?

7. செய்யாதிருந்தான், கண்டோடினான், அங்கங்கு, வரவேற்பு செலவாயிற்று—இவைகளைப் பிரித்தெழுதிக் குற்றியலுகரச் சொற்களைக் கண்டுபிடித்து அவை இன்னின்ன வகை என்று குறிப்பிடுக. முற்றியலுகரச் சொற்களையும் கண்டுபிடிக்க.

8. குற்றியலிகரம் என்றால் என்ன? உதாரணம் தருக.

9. போலி என்பதை விளக்குக.

10. போலி வகைகளை விளக்கி உதாரணங்கள் தருக.

11. போலியின் பயன் யாது?

12. வேஷம் என்பது வேடம் என்றாகிறது. வடமொழி ஷகரத்துக்கு டகரம் வந்தது. இதைப் போலி என்று கூறலாமா? கூடாது. ஏன்?

13. நலம், கொம்பு ஐயர்—இவை எவ்வாறு போலியாக மாறலாம்?

14. வந்தது + யாது, நாடு + யாது—இவை எவ்வாறு சந்தியில் மாறும்? ஏன்?

III

சொல்லியல்

(Etymology)

25. ஆ—ஓரெழுத்தால் ஆகிய சொல்.

ஓடினான்—பல எழுத்துக்களால் ஆகிய சொல்.

எழுத்துத் தனித்து நின்றாயினும் தொடர்ந்து நின்றாயினும் பொருள் தருமாயின் சொல் எனப்படும்.

பகாப்பதம், பகுபதம் (Indivisible & Divisible words)

26. பாடு, கண்—இவைகளைப் பிரிப்பது முடியாது; பிரித்தால் பொருள் வராது. ஆகையால், இவற்றைப் பிரிக்கமுடியாத சொல் அல்லது பகுக்கமுடியாத பதம் என்கிறோம். பதம்—சொல்.

27. பாடுகிறான், கண்ணன்—இவைகளைப் பிரித்துவிடலாம். பாடு + கிறு + ஆன்; கண் + ண் + அன். பிரிக்கக் கூடிய சொல் பகுபதம் எனப்படும்.

பதங்கள் அஃதாவது சொற்கள், பகுபதம் என்றும் பகாப்பதம் என்றும் இருவகைப்படும்.

இருவகைப் பாகுபாடு (Two different classification of words)

28. பகுபதங்கள் பகாப்பதங்களாகிய சொற்களை இலக்கணத்திற்குப் பயன்படும் வகையில் பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என்று பிரிக்கலாம். இலக்கியத்திற்குப் பயன்படும் வகையில் இவற்றை இயற்சொல், திரிசொல், வடசொல், திசைச்சொல் என்று பிரிக்கலாம். தொல்காப்பியர் இரண்டாவது வகைச் சொற்களைச் செய்யுளீட்டச் சொல் என்று கூறுகிறார்.

1. பெயர்ச்சொல் (Noun)

29. பூனை, கண்ணகி—இவை பொருளின் பெயரைக் குறிக்கின்றன. பொருளின் பெயரை உணர்த்துஞ்சொல் பெயர்ச்சொல் எனப்படும்.

2. வினைச்சொல் (Verb)

30. ஓடுகிறது, பாடுகிறாள்—இவை பொருளின் வினையைக் காட்டுகின்றன. பொருளின் வினையை உணர்த்துவது வினைச்சொல் எனப்படும்.

3. இடைச்சொல் (Dependent words & Particles)

31. தம்பிதான் போனான்.

இவ்வளவில் செல்லுங்கொல், இவ்வளவிற் காணுங் கொல்.

கோவலனும் கண்ணகியும் மதுரைக்குப் போனார்கள்.

தாம், கொல், உம், கு என்னும் இந்த இடைச்சொற்கள் தனித்து நிற்காமல் பெயரோடும் வினையோடும் சேர்ந்து நிற்கின்றன. பெரும்பாலும் பெயர் வினைகளை இடமாகக் கொண்டுவரும் சொல் இடைச்சொல் எனப்படும். இடை—இடம்.

4. உரிச்சொல் (Words peculiar to Poetry)

32. சால உண்டான்.

நனி தின்றான்.

கழி கண்ணோட்டம்.

மேலுள்ள தடித்த எழுத்திலிருக்கும் சொற்கள் பெரும்பாலும் செய்யுளிலேயே வரும். பெரும்பாலும் செய்யுளுக்கே உரிய சொல் உரிச்சொல் எனப்படும்.

இந்த நான்கு வகைச் சொற்களும் இலக்கண வகையைச் சேர்ந்தவை.

1. இயற்சொல் (Easy and pure Tamil words)

33. போனான்; கிளி—இவை இயல்பாய் இருக்கின்றன. இயல்பாய் இருக்கும் சொல் இயற்சொல்லாகும்.

2. திரிசொல் (Literary Tamil words)

34. படர்ந்தான் (சென்றான்), கிள்ளை (கிளி)—இவை செய்யுளில் பயன்படுத்துவதற்காகத் திரிந்துவந்தன. திரிந்துவந்துள்ள அஃதாவது கடினமாயுள்ள சொல் திரிசொல்லாகும்.

3. திசைச்சொல் (Foreign or loan words)

35. நாகரிகம் வளர வளர அயல்நாட்டு மக்கள் நம் தமிழ்நாட்டில் வந்து குடியேறினார்கள். சில நாட்டினர் தமிழ்நாட்டில் வாணிபம் செய்வதற்குப் பொருள்களைக் கொண்டுவந்து விற்றனர். அப்பொருள்களோடு அவர்கள் நாட்டில் அவைகளுக்கு வைத்த பெயர்களும் தமிழில் புகுந்தன. அயல்நாட்டினர் தமிழ்நாட்டை ஆளத் தொடங்கிய காலத்தில் அவர்களுடைய சொற்களும் தமிழில் புகுந்தன. இப்படிப் பல பல அயல்நாட்டுச் சொற்கள் தமிழில் நுழைந்தன. நம் முன்னோர்கள், அச் சொற்கள் தமிழில் புக இடங்கொடுத்து அப்படி வரும் சொற்களுக்குத் திசைச்சொல் என்று பெயரும் வைத்தார்கள். வேறு திசையிலிருந்து தமிழில் வந்து வழங்கும் சொல் திசைச்சொல்லாகும். வடமொழி, திசைச்சொல்லாயினும் முன்னோர்கள் அதைத் திசைச்சொல்லில் சேர்க்காமல் விட்டார்கள்; ஏனென்றால் முற்காலத்தில் அம்மொழி இந்திய நாடுமுழுதும் கற்றோரிடத்தில் பொது மொழியாக இருந்தது. தமிழில் உருது மொழியிலிருந்து 411 சொற்களும், போர்த்துகேசியத்திலிருந்து 6 சொற்களும், தெலுங்கிலிருந்து 11 சொற்களும், ஆங்கிலத்திலிருந்து 486 க்கு மேற்பட்ட சொற்களும் குடியேறியிருப்பதாகப் பவானந்தம் பிள்ளையவர்கள் தமது அகராதியின் பின் பாகத்தில் குறிப்பிட்டுள்ளார்கள்.

சில உருது சொற்கள் (Some Urdu words)

36. அல்வா, உஷார், கச்சேரி, கம்மி (குறைவு), கஜூர், காலி, கிஸ்தி, கிச்சடி, குடுத்தா, கைதி, சிப்பாய், சொக்கா, ஜமீன்தார், ஜப்தி, ஜவாப், ஜதை, ஜாஸ்தி, ஜிலேபி, ஜில்லா, ஜோர், ஸலாம், ஸர்க்கார், டப்பி, டக்கர், டாணு, தபால், தம்பிடி (one pie), தயார், தாலூகா, தாசில்தார், பங்களா, புகார், மனு, மாமூல், மாகாணம், மாஜி, மிட்டாய், முண்டாஸ், மேஸ்திரி, மேஜை, ரஜா, வக்கீல், ஷோக், பாக்கி, லேவாதேவி.

சில போர்த்துகேசியச் சொற்கள் (Some Portuguese words)

37. *அலமாரி, கிராம்பு, சாவி, ஜென்னல், பறங்கிக்காய், பாதிரி (மிஷனரி).*

சில தெலுங்குச் சொற்கள் (Some Telugu words)

38. *வேடிக்கை, வாடிக்கை, கோரிக்கை, எச்சரிக்கை, வாடகை.*

சில ஆங்கிலச் சொற்கள் (Some English words)

39. *புனல்* (funnel), *கம்பெனி, கவர்னர், மாஜிஸ்ட்ரேட், கலெக்டர், ஆபீஸ், இன்ஸ்பெக்டர், மோட்டார், பஸ், மார்க்* (mark), *ஓட்* (vote), *நோட்புக், இம்பொஸிஷன், லீவ், சைக்கில், டிராம், எலக்டிரிஸிடி, ஹார்மோனியம், பியானோ, டெலிபோன், போஸ்ட் ஆபீஸ், மெஜாரிட்டி, மைனாரிட்டி, ப்யூன், கார்டு, கவர், லேட், பேப்பர், பிளாட்டிங் பேப்பர், பென்ஸில், பேனா, ரப்பர், டயர், டியூப், பௌண்டன் பென், ஸ்பெஷல், டஜன், சாக்* (chalk), *எஞ்சின், மெஷின், ஸ்டேஷன், ஜங்ஷன், ஸிவில், கிரிமினல், அட்மிஷன், பெஞ்ச், டாக்டர், ரிப்போர், கான்ஸ்டேபில், ப்ரோகிராம், குரோஸ், கிராமபோன், ரேடியோ, மட்கார்ட், சிம்னி, பம்ப், கியாட்லாக், மீட்டர், காண்ட்ராக்ட், சப்ளை, மார்க்கட், ஸர்ஜன், பிளாட்பாரம்.*

40. *தமிழ்நாட்டைச் சேர்ந்த சில பகுதிகளைக் கொடுந்தமிழ் நாடு என்று கருதி அந்நாட்டுச் சொற்களையும் திசைச்சொற்கள் என்றார்கள் பழைய இலக்கணப் புலவர்கள். இக்காலத்தினர் அதை ஒப்புக்கொள்வதில்லை.*

4. வடசொல் (Sanskrit words)

41. *வடசொல்—சம்ஸ்கிருத மொழியின் சொல்.* சம்ஸ்கிருத மொழியின் சொல் தமிழில் வந்து வழங்குவது வடசொல் எனப்படும்.

வடசொல்	தமிழ்ச்சொல்
ஸர்ப்பம்	—பாம்பு
பாஷை	—மொழி
வேஷ்டி	—துணி
சந்தோஷம்	—மகிழ்ச்சி
சக்தி	—ஆற்றல்
கலியாணம் / விவாகம்	—திருமணம்
பஞ்சகௌவியம்	—ஆன் ஐந்து
சாதம்	—சோறு
ஜலம்	—நீர்
கஷ்டம்	—தொல்லை
நஷ்டம்	—இழவு (கேடு)

குறிப்பு: நாம் தமிழில் எழுதும்போது கூடியமட்டும் திசைச் சொல், வடசொல் ஆகிய இவைகளை நீக்கியே எழுதப் பழகுதல் வேண்டும். அப்பொழுதுதான் தமிழின் இனிமை நிற்கும்; இல்லாவிடின் தமிழினிமை மறையும். இன்றியமையாத இடங்களில் பொருள் விளங்குவதற்குத் திசைச்சொற்களைச் சேர்த்து எழுதலாம்.

42. வடசொற்களைத் தமிழில் எழுதும்போது தமிழினிமைக்கு ஏற்றவாறு சில வடவெழுத்துக்களுக்கு மாறுகத் தமிழெழுத்துச்சேர்த்து எழுதுவது வழக்கம்.

ஜ—இது மொழிக்கு முதலில் 'ச' ஆகவும், மொழிக்கு இடையில் 'ச' அல்லது 'ய' ஆகவும் மாறும்.

மொழிமுதல்	மொழியிடை
ஜயம்—சயம்	விஜயன் —விசயன்
ஜலம்—சலம்	அம்புஜம்—அம்புயம்

ஷ—இது மொழிக்கு முதலில் 'ச' ஆகவும், மொழிக்கு இடையில் 'ட' ஆகவும் மாறும்.

மொழிமுதல்	மொழியிடை
ஷண்முகம்—சண்முகம்	வேஷம்—வேடம்
ஷஷ்டி —சஷ்டி	நஷ்டம்—நட்டம்

க்ஷ — இது மொழிக்கு முதலில் 'க' ஆகவும் 'ச' ஆகவும், மொழிக்கு இடையில் 'க்க' ஆகவும் 'ச்ச' ஆகவும் 'ட்ச' ஆகவும் மாறும்.

மொழிமுதல்	மொழியிடை
க்ஷீரம் — கீரம்	தக்ஷிணம் — தக்கிணம்
க்ஷேமம் — சேமம்	பிக்ஷை — பிச்சை
	பரீக்ஷை — பரீட்சை

ஸ — இது மொழிக்கு முதலில் 'ச' ஆகவும் 'அ' ஆகவும், மொழிக்கு இடையில் 'ச' ஆகவும் 'த' ஆகவும் மாறும்.

மொழிமுதல்	மொழியிடை
ஸங்கதி — சங்கதி	தாஸன் — தாசன்
ஸமயம் — சமயம்	மாஸம் — மாதம்
அமயம்	

ஹ — இது மொழி முதலில் தன்மேல் நின்ற உயிரெழுத்தாகவும் மொழியிடையில் 'க' ஆகவும் மாறும்.

மொழிமுதல்	மொழியிடை
ஹரன் — அரன்	தேஹம் — தேகம்
ஹோமம் — ஓமம்	மஹிமை — மகிமை

வடமொழியில் 'ய' முதலில் வந்தால் அது தமிழில் 'எ' ஆக மாறும்.

யமன் — எமன்
யந்திரம் — எந்திரம்

பயிற்சி 10

1. சொல் என்பது யாது?

2. ஓரெழுத்தால் சொல்லாவதும் உண்டா? இருந்தால் உதாரணம் தருக.

3. பகுபதம், பகாப்பதம் — இவைகளை உதாரணங்களுடன் விளக்குக.

4. பகுபதங்கள் பகாப்பதங்களாகிய சொற்களை இருவகையில் பிரிக்கலாம். அவ்விரு வகைகள் எவை?

5. இடைச்சொல் என்றால் என்ன?

6. உரிச்சொல் என்பது யாது?

7. திசைச்சொல் என்பது ஏன்? இத்திசைச் சொல்லால் தமிழ் மொழிக்குப் பயன் யாது?

8. மோட்டார், விருக்ஷம், குடுத்தா, சாவி, வாடகை, திறவுகோல், வருஷம், மாதம்—இவைகளிலிருந்து எது வடசொல், எது திசைச் சொல், எது தமிழ்ச்சொல் என்று எடுத்துக் காட்டுக.

9. வருஷம், மாதம், தேதி, ஜலம், சாதம், கலியாணம், வேஷ்டி, பாவைஷ, சீதோஷ்ணம், ஆசீர்வாதம், இலக்கம், ஆராதனை, அசுத்தம், அக்கினி, அவகாசம், அவயவம், இலட்சணம், இராகம், உதாரணம், ஜயம், சிநேகம், ஜவனம், சூரியன், சந்திரன், பாரம், பரீட்சை, மோட்சம், யாத்திரை, விருத்தி, வேதம்—இந்த வடசொற்களுக்கு நேரான தமிழ்ச்சொற்கள் கூறுக.

10. கீழ்வரும் வடசொற்களைத் தமிழ்மொழிக்கு ஏற்றவாறு எழுதுக:—

லக்ஷ்மணன், லக்ஷ்மி, விஷயம், தேசம், ஜமதக்கினி, ஜானகி, ஜனங்கள், சாக்ஷி, முஷ்டியுத்தம், ஹிமயமலை.

பெயர்ச்சொல் (Noun)

43. பொருள்களை உணர்த்தி வேற்றுமை உருபுகளை ஏற்க நிற்பது பெயர்ச்சொல்.

பெயர், இடுகுறியாகவாவது காரணமுடையதாக வாவது இருக்கும்.

இடுகுறிப்பெயர் (Arbitrary noun)

44. காரணம் இல்லாத பெயர் இடுகுறிப்பெயர். காரணம் இல்லாமல் முன்னோர் இட்ட பெயரே இடுகுறிப் பெயர்.

மண், பனை — இவைகளுக்குக் காரணம் சொல்வது முடியாது. ஆகையால், இவை இடுகுறிப்பெயர்கள்.

காரணப்பெயர் (Appellative noun)

45. காரணம் குறித்துவரும் பெயர் காரணப்பெயர். காரணப்பெயருக்கு ஏதாவது பொருள் இருக்கும்.

கடவுள் — காரணப்பெயர். எப்படி? மனம் வாக்குக் காயங்களைக் கடந்தவர் கடவுள்.

ஆழி — (கடல்) ஆழமாய் இருப்பது.
குறிச்சி — குறிஞ்சி (மலை) நிலத்தில் இருக்கும் ஊர்.
காரணம் காட்டுவதால் இவைகள் காரணப்பெயர்கள்.

பலவகைப் பெயர்கள் (Classes of nouns)

46. இடுகுறியாகவோ காரணமாகவோ வரும் பெயர்களை, குறிக்கும் பொருள் கருதியும் பிறப்பு நோக்கியும் சொற்கள் பயன்படுந்தன்மையை எண்ணியும் பலவாறாகப் பிரிப்பதுண்டு.

குறிக்கும் பொருள் பற்றியவை:
பொருட்பெயர் (Nouns of things)

47. நாய், கண்ணன், வள்ளி — இவை பொருட்பெயர்கள். இவை அஃறிணையாகவும் உயர்திணையாகவும் இருக்கும். பொருளைக் குறிப்பது பொருட்பெயர்.

இடப்பெயர் (Nouns of places)

48. வீடு, பள்ளிக்கூடம், மதுரை — இவை இடப்பெயர்கள். இவை இடங்களைக் குறிக்கின்றன. இடத்தைக் குறிப்பது இடப்பெயர்.

காலப்பெயர் (Nouns of days, years, etc.)

49. திங்கட்கிழமை, ஆடி, பகல் — இவை காலப்பெயர்கள். காலத்தைக் காட்டுவது காலப்பெயர்.

சினைப்பெயர் (Nouns of parts of a whole)

50. கை, தலை, இலை, கிளை — இவை சினைப்பெயர்கள். சினை — உறுப்பு. கிளையும் மரத்துக்கு உறுப்பு. சினையைக் காட்டுவது சினைப்பெயர்.

பண்புப்பெயர் (Abstract noun or Names of qualities)

51. அன்பு, இனிமை, கருமை — இவை பண்புப்பெயர்கள். பண்புப்பெயரைக் குணப்பெயர் என்றும் கூறுவதுண்டு. பண்புப்பெயர் என்பது நிறம், வடிவம், குணம் முதலியவற்றைக் குறிக்கும். பண்பை அல்லது குணத்தைக் காட்டுவது பண்புப்பெயராகும்.

பயிற்சி 11

1. பெயர்ச்சொல் என்றால் என்ன?

2. இடுகுறிப்பெயர் என்பது என்? இரண்டு உதாரணங்கள் தருக.

3. காரணப்பெயரை உதாரணத்துடன் விளக்குக.

4. துணி, உடுப்பு, பறவை, காகம், மரம், புலி, இளையவன், சுற்றத்தார், சென்னை, இலை, கருணை, துன்பம், வீடு, ஆறு, பெருமை, ஆவணி—இவைகளிலிருந்து இடுகுறிப்பெயர், காரணப்பெயர், பண்புப்பெயர், சினைப்பெயர், பொருட்பெயர், காலப்பெயர் ஒவ்வொன்று எடுத்துக் காட்டுக.

5. பண்புப்பெயர் என்றால் என்ன? இதற்குள்ள வேறு பெயர் யாது?

6. பின்வரும் சொற்களிலிருந்து பண்புப்பெயர்களை மாத்திரம் காட்டுக:—

நல்லவன், அன்பு, பாம்பு, கீரி, உண்மை, வீரம், புலி, கொடுமை, தைரியம், பொறுமை, பெருமை, சிறுமை, அறிவு, வேற்றுமை.

தொழிற்பெயர் (Verbal noun or noun of action)

52. வருதல், செய்கை, ஓட்டம்—இவை தொழிலை மாத்திரம் காட்டுகின்றன. அதனால், இவை தொழிற் பெயர்கள். தொழிலைக் காட்டுவது தொழிற் பெயராகும்.

தொழிற்பெயர்

1. கடைநிலை பெற்ற தொழிற்பெயர்
2. முதனிலைத் தொழிற்பெயர்
3. முதனிலை திரிந்த தொழிற்பெயர்
4. முதனிலை திரிந்து கடைநிலையேற்ற தொழிற் பெயர்
5. காலம் காட்டுந் தொழிற்பெயர்
6. எதிர்மறைத் தொழிற்பெயர்

என ஆறு வகைப்படும்.

53. 1. கடைநிலை பெற்ற தொழிற்பெயர்

பதங்கள், பகுபதம், பகாப்பதம் எனப்படும் என்று பார்த்தோம். பகுபதங்களை முதனிலை கடைநிலையாகப் பிரிக்கலாம். கீழ்வரும் பதங்களைப் பாருங்கள்.

	முதனிலை	கடைநிலை
செய்கை	செய்	கை
ஆடல்	ஆடு	அல்
ஓட்டம்	ஓடு	அம்
படித்தல்	படி	தல்
கொலை	கொல்	ஐ
பார்வை	பார்	வை
மறதி	மற	தி
நடிப்பு	நடி	பு
போக்கு	போ	கு
உணர்ச்சி	உணர்	சி

இப்பதங்கள் தொழிற்பெயர்ப் பதங்கள். தொழிலைக் காட்டுவது தொழிற்பெயராகும். இத்தொழிற்பெயர்கள் முதல்நிலையும் கடைநிலையும் பெற்றுவந்தன. முதல்நிலை— சொல்லின் முதலில் நிலைத்திருக்கும் பகுதி. முதல்+நிலை =முதனிலை. முதனிலைக்குப் பகுதி என்றும் பெயருண்டு. சொல்லின் கடையில் நிற்பது கடைநிலை. கடைநிலைக்கு விகுதி என்றும் பெயருண்டு.

54. 2. முதனிலைத் தொழிற்பெயர்

ஓர் அடி அடித்தான்.
ஒரு குட்டுக் குட்டினள்.
கழுதை ஓர் உதை கொடுத்தது.

மேல் உள்ள அடி, குட்டு, உதை என்பவை முழுத் தொழிற்பெயர்கள் அல்ல. அடி என்பது அடித்தல் என்னும் தொழிற்பெயரின் முதனிலை. குட்டு என்பது குட்டுதல் என்பதின் முதனிலை. உதை என்பது உதைத்தல் என்பதின் முதனிலை. சிலவேளைகளில் முதனிலை மாத்திரம் தொழிற்பெயராக வரும். இப்படி முதனிலை மாத்திரம் தொழிற்பெயராக வருவதை முதனிலைத் தொழிற்பெயர் என்கிறோம்.

55. 3. முதனிலை திரிந்த தொழிற்பெயர்

அவன் மாட்டிற்குச் சூடு போட்டான்.
அதற்கும் இதற்கும் வேறுபாடு இல்லை.
நீ கூறிய மேற்கோள் எது?

சூடு, வேறுபாடு, மேற்கோள் — இவைகள் முதனிலைகள் திரிந்துவந்த (அஃதாவது மாறி வந்த) தொழிற்பெயர்கள். சுடு என்னும் முதனிலை சூடு என்றும், வேறுபடு என்னும் முதனிலை வேறுபாடு என்றும், மேற்கொள் என்னும் முதனிலை மேற்கோள் என்றும் திரிந்தன. முதனிலை திரிந்துவரும் தொழிற்பெயரே முதனிலைத் தொழிற்பெயராகும்.

56. 4. முதனிலை திரிந்து கடைநிலையேற்ற தொழிற்பெயர்: கடன் கோடல் தீயது. கோடல் என்பது முதனிலை திரிந்து கடைநிலை ஏற்றது. எப்படி? கொள் என்னும் முதனிலை, கோள் எனத் திரிந்து திரும்பவும் தல் என்னும் கடைநிலை ஏற்றுக் கோடல் என்றாயிற்று. கொள் — கோள் — கோள் + தல் = கோடல்.

57. 5. காலம் காட்டுந் தொழிற்பெயர்

நீ நாளை வருவது உண்மையா?
நீ இன்று வீட்டிற்கு வருகிறது நல்லது.
நீ நேற்று வந்தது எனக்குத் தெரியாது.

வருவது என்னும் தொழிற்பெயர் எதிர்காலத்தையும், வருகிறது என்பது நிகழ்காலத்தையும், வந்தது என்பது இறந்த காலத்தையும் காட்டுகின்றன. சில வேளைகளில் தொழிற்பெயர் காலங்காட்டுவதுண்டு.

58. 6. எதிர்மறைத் தொழிற்பெயர்

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.—(குறள்)

இக்குறட்பாவில் உள்ள பொய்யாமை, செய்யாமை என்பவை எதிர்மறைத் தொழிற்பெயர்கள். எப்படி? இவை எதிர்மறையான பொருளைக் கொடுக்கும் தொழிற்பெயர்களாக இருக்கின்றன. எதிர்மறையில் வரும் தொழிற்பெயர் எதிர்மறைத் தொழிற்பெயராகும்.

பயிற்சி 12

[குறிப்பு: இக்கேள்விகளுக்கு விடைகளை எழுதுதல் வேண்டும்.]

1. தொழிற்பெயர் என்பது ஏன்?
2. ஆறுவகைத் தொழிற்பெயர்களைக் கூறுக.

3. முதனிலை என்றால் என்ன? முதனிலைக்கு வேறு பெயர் யாது? முதனிலை—இதைச் சந்தி பிரித்து எழுதுக.

4. கடைநிலை என்பது ஏன்? கடைநிலைக்கு வேறு பெயர் யாது?

5. தொழிற்பெயர் ஒன்று கூறி அதிலுள்ள முதனிலை கடைநிலைகளை எடுத்துக் காட்டுக.

6. பின்வரும் தொழிற்பெயர்களிலிருந்து முதனிலை கடைநிலைகளை எடுத்துக் காட்டுக:—

செய்தல், ஓட்டம், போக்கு, தேர்ச்சி, பொறுமை, கல்வி, பார்வை, வரவு, செலவு, ஆடல்.

7. கை, அல், அம், தல், ஐ, வை, தி, பு, கு, சி—இக்கடைநிலைகளை வைத்துத் தொழிற்பெயர்கள் எழுதுக.

8. முதனிலைத் தொழிற்பெயர் என்றால் என்ன? இரண்டு உதாரணங்கள் தருக.

9. வழிபாடு, முறையீடு—இவை எப்படி முதனிலை திரிந்த தொழிற்பெயராகும்? இரண்டு முதனிலை திரிந்த தொழிற்பெயர்கள் எழுதுக.

10. காலங்காட்டுந் தொழிற்பெயர், எதிர்மறைத் தொழிற்பெயர்—இவைகளுக்கு இரண்டு இரண்டு உதாரணங்கள் தருக.

11. முதனிலை திரிந்து கடைநிலை ஏற்கும் தொழிற்பெயர் என்றால் என்ன?

12. தொழிற்பெயர் வினைப்பகுதியிலிருந்து உண்டாகிறதா, பெயர்ப் பகுதியிலிருந்து உண்டாகிறதா? விளக்குக.

வினையாலணையும் பெயர் (Noun denoting the agent of the action (or) Participial Noun)

59. 1. படிப்பவன் பரீட்சையில் தேறுவான்.
2. படிக்கிறவள் பரீட்சையில் தேறுவாள்.
3. படித்தவர் பரீட்சையில் தேறினர்.
4. நீ பாடியது ஒரு பாட்டு.
5. நீ பாடியவை தமிழ்ப்பாட்டுக்களே.

1, 2, 3 ல் இருக்கும் படிப்பவன், படிக்கிறவள், படித்தவர் என்பவை வினையாலணையும் பெயர்கள். இவை உயர்திணை வினையாலணையும் பெயர்கள்.

4, 5ல் இருக்கும் பாடியது, பாடியவை என்பவை வினையாலணையும் பெயர்கள். ஆனால், இவை அஃறிணை வினையாலணையும் பெயர்கள்.

வினையோடு சேர்ந்துவரும் பெயர் வினையாலணையும் பெயர். வினையாலணையும் பெயர் உயர்திணையாகவேனும் அஃறிணையாகவேனும் இருக்கும்.

கீழ்வரும் வாக்கியங்களைக் கவனித்துப் படியுங்கள்:

1. தம்பி வந்தான். வந்தானைக் கண்டான்.
2. குதிரை விழுந்தது. விழுந்ததை அவிழ்த்துவிட்டான்.

தம்பி வந்தான். வந்தான் என்பது வினைமுற்று. வந்தானை என்பது வினையாலணையும் பெயர். குதிரை விழுந்தது. விழுந்தது என்பது வினைமுற்று. விழுந்ததை அவிழ்த்துவிட்டான். விழுந்ததை என்பது வினையாலணையும் பெயர்.

வினைமுற்று, பெயர்ச்சொல்லாக மாறி வேற்றுமை உருபை ஏற்கக்கூடியது வினையாலணையும் பெயர்.

வினையாலணையும் பெயருக்கும் தொழிற்பெயருக்கும் உள்ள வேற்றுமை

60. வினையாலணையும் பெயருக்கும் தொழிற்பெயருக்கும் வேற்றுமை உண்டு.

கீழ்வரும் வாக்கியங்களைப் பாருங்கள்:

1. காலையில் படிக்கிறவனுக்குப் பாடம் நன்றாக மனத்தில் படியும்.

2. காலையில் படித்தல் நல்லது.

படிக்கிறவன்—வினையாலணையும் பெயர். இது காலங் காட்டும்; வினைசெய்கிற பொருளையும் காட்டும்.

படித்தல்—தொழிற்பெயர். இது பெரும்பாலும் காலங்காட்டாது; செய்கிற தொழிலை மாத்திரம் காட்டும்.

கீழ்வரும் வாக்கியங்களைப் படியுங்கள்:

1. இறைவனே, உன்னையே வணங்கி நிற்பேனை (நின்ற என்னை) ஆட்கொண்டருள்க.

2. இறைவனே, ஐம்பூதமாகி நின்றாயை (நின்ற உன்னை) எப்படி உணர்வேன்?

3. மனத்துள் நிற்பானை (நிற்பவனை) மடமையால் வெளியில் தேடுகிறேன்.

இடம் முன்னிலை, தன்மை, படர்க்கை என மூன்று உண்டு. தன்னைப்பற்றிக் குறிப்பது தன்மை. முன்னே இருப்பவனைக் குறிப்பது முன்னிலை. பின்னால் இருப்பவனைக் குறிப்பது படர்க்கை.

வினையாலணையும்பெயர் தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூன்றிடங்களிலும் வரும். நிற்பேனை — தன்மை வினையாலணையும் பெயர். நிற்பாயை — முன்னிலை வினையாலணையும் பெயர். நிற்பானை — படர்க்கை வினையாலணையும் பெயர்.

பயிற்சி 13

[குறிப்பு: இக்கேள்விகளுக்கும் விடைகளை எழுதுதல்வேண்டும்.]

1. வினையாலணையும் பெயர் என்றால் என்ன?

2. கீழ்வருபவைகளிலிருந்து தொழிற்பெயரையும் வினையாலணையும் பெயரையும் எடுத்தெழுதுக:—

பெறுதல், பெறுகிறவன், ஓட்டம், ஓடினவள், நிற்றல், நிற்பவர்.

3. தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேற்றுமைகள் யாவை?

4. தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் இருக்கும் ஒற்றுமை யாது?

5. வினையாலணையும் பெயர்கள் பத்து எழுதுக. ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய இவற்றிற்கு உதாரணங்கள் இரண்டு இரண்டு இருத்தல்வேண்டும்.

6. கீழ்வரும் வாக்கியங்களிலிருந்து தன்மை முன்னிலை படர்க்கை வினையாலணையும் பெயர்களை எடுத்தெழுதுக:

(1) ஓடியது கீழே விழுந்தது. (2) நீ கீழே விழுந்தவை எடு. (3) நேற்று வந்தவன் எங்கே போனான்? (4) வந்தேனை

நீ யார் என்று கேட்கவில்லையே! (5) வானாகி மண்ணாகி நின்றாயை என்னென்று வாழ்த்துவேன்? (6) நடந்தேனுக்குத் துன்பம் தெரியும் (7) எனக்கு மனம் இரங்கினாயை என் சொல்லி வாழ்த்துவேன்? (8) என் பெற்றோரை நான் என்றும் மறவேன்.

ஆகுபெயர் (Transferred Noun)

61. 1. தம்பி, இன்று நான்கு அணா கொடுத்து உன் தலையை வெட்டிக் கொண்டுவா.

2. முருகன் ஒரு குடம் குடித்தான்.

3. என் வீடு பட்டினி.

தலை என்பது இங்கே தலைமயிரைக் குறிக்கிறது. குடம் என்பது குடத்திலுள்ள நீரைக் குறிக்கிறது. வீடு என்பது வீட்டிலுள்ளவர்களைக் குறிக்கிறது. இப்படி ஒன்றின் பெயர் அதன் தொடர்புடைய மற்றொன்றுக்கு ஆகிவருமானால் ஆகுபெயர் எனப்படும். சொற்கள் பயன்படும் தன்மையைக்கருதி ஆகுபெயர் உண்டாகும்.

கிளைப்பெயர் (Nouns denoting relatives)

62. தாய், அண்ணன், மாமி—கிளைப்பெயர். உறவைக் காட்டும் பெயர் கிளைப்பெயர்.

சாதிப்பெயர் (Nouns denoting castes)

63. இடையன், வேளாளன், குறவன்—சாதிப்பெயர். சாதியைக் குறிக்கும் பெயர் சாதிப்பெயர்.

அளவுப்பெயர் (Nouns of measures)

64. ஒன்று, மணங்கு, ஆழாக்கு, அடி — அளவுப்பெயர். அளவைக் காட்டுவது அளவுப்பெயர். அளவுப்பெயர் எண்ணல் அளவுப்பெயர் என்றும், எடுத்தலளவுப்பெயர் என்றும், முகத்தலளவுப்பெயர் என்றும், நீட்டல் அளவுப்பெயர் என்றும் நான்கு வகைப்படும்.

ஒன்று, நூறு — எண்ணலளவுப்பெயர்.
வீசை, மணங்கு—எடுத்தலளவுப்பெயர்.
ஆழாக்கு, மரக்கால்— முகத்தலளவுப்பெயர்.
அடி, கஜம்— நீட்டலளவுப்பெயர்.

மூவிடப்பெயர்கள் (3 kinds of Personal nouns)

65. இடப்பெயர்கள் மூவகைப்படும். அவை தன்மை, முன்னிலை, படர்க்கை என்பன. ஒவ்வொன்றுக்கும் ஒருமை பன்மை உண்டு.

தன்னைக் குறிக்கும் பெயர் தன்மைப்பெயர்.

முன்னால் நிற்பவனைக் குறிக்கும் பெயர் முன்னிலைப்பெயர்.

தன்னையும் அல்லாமல் தன் முன் இருப்பவனையும் அல்லாமல் வேறு இடம் போய்க் குறிக்கும் பெயர் படர்க்கைப் பெயர். (*படர்தல் = போதல்*)

1. தன்மைப்பெயர் (First Person)

ஒருமை	பன்மை
நான், யான்	*நாங்கள், யாங்கள்*

2. முன்னிலைப்பெயர் (Second Person)

ஒருமை	பன்மை
நீ	*நீர், நீங்கள்*

3. படர்க்கை (Third Person)

ஒருமை	பன்மை
அவன்	*அவர்*, *அவர்கள்* } *உயர்திணை.*
அவள்	
அது	*அவை — அஃறிணை.*

66. பொதுப்பெயர்கள் (Common Reflexive Pronouns)

1. *நீதான் செய்தாய்.*
நான்தான் செய்தேன்.
அவன்தான் செய்தான்.
அவள்தான் பாடினள்.
அதுதான் விழுந்தது.

2. *நீர்தாம் செய்தீர்.*
நாம்தாம் செய்தோம்.
அவர்தாம் செய்தார்.
அவர்கள்தாம் பாடினார்கள்.
அவைகள்தாம் விழுந்தன.

3. *நாங்கள் எல்லாம் படித்திருந்தோம்.*
நீங்கள் எல்லாம் விளையாடினீர்கள்.
அவர்கள் எல்லாம் உண்கிறார்கள்.
அவைகள் எல்லாம் நிற்கின்றன.

தான், தாம், எல்லாம்—இவை பொதுப்பெயர்கள். தான், தாம், எல்லாம் என்பன இருதிணைக்கும், மூவிடங்களுக்கும் வருவதால் இவை பொதுப்பெயர்கள் எனப்படும்.

தான்—இஃது ஒருமைக்கு மட்டும் வரும்.
தாம்—இது பன்மைக்கு மட்டும் வரும்.

எல்லாம்—இது தன்மைப் பன்மையிலும் முன்னிலைப் பன்மையிலும் படர்க்கைப் பன்மையிலும் வரும்.

குறிப்பு: நீர்தான், நீங்கள்தான், அவர்தான், அவைதான் என்று எழுதுவது தவறு. நீர்தாம், நீங்கள்தாம், அவர்தாம், அவர்கள்தாம், அவைதாம் என்று எழுதுதல்வேண்டும். இப்படி எழுதுவது நன்றாய் இல்லை என்றால் நீங்களே, நாங்களே, அவர்களே, அவைகளே என்று எழுதலாம்.

1. தன்மை: யான், நான், யாம், நாம்; முன்னிலை:
எல்லீர், நீயிர், நீவிர், நீர், நீ;
அல்லன படர்க்கை; எல்லாம் எனல் பொது.

2. தான், யான் நான் நீ ஒருமை; பன்மை
யாம், நாம், எலாம், எலீர், நீயீர், நீர், நீவிர்.—ந. சூ.

பயிற்சி 14

1. ஆகுபெயர் என்றால் என்ன? ஓர் உதாரணம் தருக.

2. கீழ்வரும் வாக்கியங்களில் எந்த வாக்கியத்தில் இருப்பது ஆகுபெயர் என்று கூறுக:—

(1) ஊர் ஒன்று கூடிற்று. ஊர் பெரியது.

(2) பள்ளிக்கூடம் வென்றது. இஃது என் பள்ளிக்கூடம்.

(3) திருவள்ளுவர் எழுதியது திருக்குறள். நான் திருவள்ளுவரைப் படித்தேன்.

(4) பத்துப் பலம் தின்பேன். வீசைக்கு நாற்பது பலம்.

3. கீழ் வருபவைகளிலிருந்து கிளைப்பெயர், சாதிப்பெயர், அளவுப்பெயர், தன்மைப்பெயர், முன்னிலைப்பெயர், படர்க்கைப்பெயர் எடுத்துக் கூறுக:—

தம்பி, நாடார், தமக்கை, மூன்று, முதலியார், நாழி, பர்லாங்கு, உழக்கு, நீங்கள், நாம், அவன், அவர்.

4. தான், தாம், எல்லாம்—இவை என்ன பெயர்கள்? இவைகளை அமைத்து இரண்டு இரண்டு வாக்கியங்கள் கூறுக.

5. தன்மைப்பெயர்கள் எவை? முன்னிலைப்பெயர்கள் எவை? படர்க்கைப் பெயர்கள் எவை?

6. அவைகள்தான், இவைதான், எதுதாம், நீஎல்லாம்—இவைகளைத் திருத்துக.

திணை (Class)

67. முருகன், வள்ளிக்குக் கிளி வாங்கினான்.

முருகன், வள்ளி, கிளி—இப்பெயர்கள் திணை, பால், எண், இடம் வேற்றுமை ஆகிய இவற்றைக் காட்டும். ஆகையால், இவற்றையும் தெரிந்துகொள்ளவேண்டியது தானே.

திணை என்பது குலம். உலகத்தில் மக்களும் தேவர்களும் உயர்வாக எண்ணப்படுகிறார்கள். அதனால், மக்கள், தேவர் உயர்திணை எனப்படுவர். நரகலோகத்திலிருக்கும் நரகர்களும் உயர்திணையைச் சேர்ந்தவர்களே. உயிருள்ள கிளி, நாய் என்பனவும் உயிரற்ற கல் முதலியனவும் உயர்திணை அல்லாத திணையாகக் கருதப்படுகின்றன. அவைகளை அஃறிணை என்பர். (அல் + திணை = அஃறிணை.)

திணை, உயர்திணை (Rational class) எனவும், அஃறிணை (Irrational class) எனவும் இருவகைப்படும் என்க.

உ—ம். முருகன், வள்ளி—உயர்திணை.
நாய், மலை—அஃறிணை.

மக்கள் தேவர் நரகர் உயர்திணை
மற்(று) உயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை.— ந. சூ.

68. அஃறிணையாகவும் உயர்திணையாகவும் கொள்ளத் தக்கவை

1. குழந்தை அழுகிறான்.
   குழந்தை அழுகிறது.

2. கடவுள் இருக்கிறார்.
   கடவுள் இருக்கிறது.

குறிப்பு: உயிர், உடம்பு—இவை அஃறிணையைச் சேர்ந்தவை. உடம்போடு உயிரிருந்தால் இரண்டும் சேர்ந்த ஒன்றை உயர்திணை என்போம். உயிரையும் உடம்பையும் தனித்தனியே அஃறிணை என்றே கூறுவோம்.

குழந்தையையும் கடவுளையும் உயர்திணையாகவும் அஃறிணையாகவும் சொல்வது வழக்கம்.

பால் (Gender)

69. பால் என்பது பகுப்பு. பால் ஐந்து வகைப்படும், அவை ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்பவை. முதல் மூன்றும் உயர்திணைக்கும், பின் இரண்டும் அஃறிணைக்கும் உரியவை.

தோழன், புதல்வன், மகன், அவன்—ஆண்பால் தோழி, புதல்வி, மகள், அவள்—பெண்பால் தோழியர், புதல்வியர், மக்கள், அவர்—பலர்பால்	உயர் திணை
மாடு, கிளி, விண்மீன், அது—ஒன்றன்பால் மாடுகள், கிளிகள், விண்மீன்கள், அவை—பலவின்பால்	அஃறிணை

70. ஆண்களில் பலர்பாலும், பெண்களில் பலர்பாலும், ஆண்பெண் கலந்த பலர்பாலும் உண்டு.

உ–ம். 1. புதல்வர்—ஆண் பலர்பால்
2. புதல்வியர்—பெண் பலர்பால்
3. மக்கள், பிள்ளைகள், மாந்தர், பலர், அநேகர், ஜனங்கள் } பொதுப் பலர்பால

மேல் உள்ள மூன்றும் பிரிவிலுள்ள மாந்தர், ஜனங்கள் என்னும் சொற்கள் எப்போதும் பன்மையிலேயே வரும்.

குறிப்பு: அஃறிணையில் ஒருமை ஒன்றன்பால் என்றும், பன்மையாய் உள்ளவை பலவின்பால் என்றும் அறிக.

ஒருவர் என்னும் இருதிணைப் பொதுப்பெயர்

71. கீழ்வரும் வாக்கியங்களைக் கவனியுங்கள்:

1. என் நண்பன் வீட்டுப் பெண்களுள் ஒருவர் வேலை செய்கிறார்.
2. என் வீட்டு ஆண்களுள் ஒருவர் வேலையில்லாமல் இருக்கிறார்.

இவ்விரு வாக்கியங்களிலும் வரும் ஒருவர் என்னும் எண்ணுப்பெயர் ஆணுக்கும் பெண்ணுக்கும் வருகிறது. இஃது உயர்திணைப்பெயர். ஒருவர் என்னும் பெயர் ஒருமைப்பொருளைக் கொடுத்தாலும் பலர்பால் வினை முற்றையே கொள்ளும்.

மரியாதைப் பன்மை

72. பின்வரும் வாக்கியங்களைக் கவனித்துப் படியுங்கள்:

1. என் தகப்பனார் வறுமையிலும் உண்மையாக இருக்கிறார். அவர் எனக்காகப் பாடுபடுகிறார். அவர் தம்மைக் கவனிக்காமல் என்னையே கவனிக்கிறார்.
2. நான் என் தாயார் சொற்படி நடக்கிறேன்.
3. ஔவையார் அதியமானுக்காகத் தொண்டைமானிடம் தூது சென்றார்.

தகப்பனார், அவர்—இவை ஆண்பாற் பெயர்கள். ஆனால், மரியாதைக்காகத் தகப்பனார், அவர் என்கிறோம். பால் பிழையானாலும் இப்படி எழுதுவது ஒப்புக்கொள்ளப்படுகிறது. அதனால், இவ்வாறு வருவதைப் பால்வழு அமைதி என்பர். தகப்பன், அவன் என்று சொல்லவேண்டியதைத் தகப்பனார், அவர் என்று மரியாதையாகக் கூறுகிறோம். தகப்பனார், அவர்— இவைகளுக்கு வினைமுற்றும் பன்மையில் இருத்தல்வேண்டும். எனவே, "தகப்பனார் இருக்கிறார். அவர் பாடுபடுகிறார்" என்று எழுதுகிறோம்.

தாயார்—இது பார்ப்பதற்குப் பலர்பாலாயிருந்தாலும் பொருளில் பெண்பாலே. தாய் என்று வரவேண்டியதை மரியாதைக்காகத் தாயார் என்கிறோம். பலர் பாலில் கூறியதால் வினைமுற்றும் பலர்பாலில் இருத்தல் வேண்டும்.

ஔவையார் எழுதினார் — ஔவையார் ஆணா, பெண்ணா? ஔவை பெண். ஔவை எழுதினாள் என்று

சொல்வது மரியாதையாய் இருக்குமா? இருக்காது. ஆகையால், பெண்பாலைப் பலர்பாலில் கூறுகிறோம். அதனால் பலர்பால் வினைமுற்றும் கொடுத்து எழுதுகிறோம்.

இங்கே கவனிக்கவேண்டியது ஒன்று உண்டு.

என் தகப்பனார் தம் தம்பியிடம் பேசினார். அவர் தம் நண்பர்களிடம் அன்பாயிருக்கிறார். என் தாயார் தம் தாய் வீடு சென்றார். ஔவையார் தம் வாழ்நாளை இனிதாகக் கழித்தார்—இவ்வாக்கியங்களில், தம் என்பதற்குப் பதிலாகத் தன் என்று எழுதுவது பிழையானது; தம் என்றே எழுதுதல்வேண்டும்.

ஆண்பால் (Masculine gender)

73. ஆண்பாலைக் குறித்தற்குப் பெரும்பாலும் அன், ஆன், மான், ன் விகுதிகளாக வரும்.

உ—ம். நல்லவன்—அன் விகுதி
நாட்டான்—ஆன் ,,
கோமான்—மான் ,,
பிறன்—ன் ,,

குறிப்பு: ஆண்பாலில் ஆள் விகுதி மிக அருகிவரும். பெருமாள் என்னும் சொல் பொதுவாக விஷ்ணுவையும் திருப்புகழில் சிறப்பாக முருகனையும் குறிக்கும் என்று அறிக.

பெண்பால் (Feminine gender)

74. பெண்பால் பெரும்பாலும் அள், ஆள், ள், இ என்பவற்றைக்கொண்டு முடியும்.

உ—ம். நல்லவள்—அள்
அடியாள்—ஆள்
பிறள்—ள்
குள்ளி—இ

குறிப்பு: இ விகுதி சிலவேளைகளில் ஆண்பாலைக் காட்டுவதும் உண்டு. உ—ம். இராமன் பெரிய வில்லி.

75. கீழ்வரும் ஆண்பாற் சொற்களையும் பெண்பாற் சொற்களையும் கவனித்துப் படியுங்கள்:

ஆண்பால்	பெண்பால்	ஆண்பால்	பெண்பால்
சொன்னவன்	சொன்னவள்	தோழன்	தோழி
தலைவன்	தலைவி	பாட்டன்	பாட்டி
கள்வன்	கள்வி	உமணன்	உமட்டி
ஒருவன்	ஒருத்தி	குருடன்	குருடி
சங்கரன்	சங்கரி	இடையன்	இடைச்சி
பேரன்	பேர்த்தி	பார்ப்பான்	பார்ப்பாத்தி
பார்ப்பனன்	பார்ப்பனி	மறவன்	மறத்தி
பாணன்	பாடினி	வேலைக்காரன்	வேலைக்காரி
குறவன்	குறத்தி	பாக்கியவான்	பாக்கியவதி
குணவான்	குணவதி	தமையன்	தமக்கை
பண்டிதன்	பண்டிதை	பெருமான்	பெருமாட்டி
சீமான்	சீமாட்டி	நம்பி	நங்கை
மாமன்	மாமி	அண்ணன்	அக்கை, அண்ணி
திருவாளன்	திருவாட்டி		
அப்பன்	அம்மை	தம்பி	தங்கை
தந்தை	தாய்	மாணக்கன்	மாணக்கி
நடிகன்	நடிகை	ஆடூஉ	மகடூஉ
மகன்	மகள்	குமாரன்	குமாரி
அரசன்	அரசி	சிறுவன்	சிறுமி
தேவன்	தேவி	சிறுக்கன்	சிறுக்கி

சக்கரவர்த்தி	சக்கரவர்த்தினி
உபாத்தியாயன்	உபாத்தியாயனி
திருநிறைச்செல்வன்	திருநிறைச்செல்வி

குறிப்பு: நோயாளி, குணசாலி, பாவி என்னும் சொற்கள் ஆண்பால், பெண்பால் இரண்டிற்கும் பொதுவாக வரும்.

உ—ம். 1. அவன் நோயாளி. அவள் நோயாளி.
2. தம்பி குணசாலி. தங்கை குணசாலி.
3. அவன் பாவி. அவள் பாவி.

76. பலர்பால் (Masculine plural or Feminine plural or both combined)

பலர்பாலுக்கு அர், ஆர், இர், மார், கள் விகுதிகள் வரும்.

உ—ம். நங்கையர்—அர்
தேசத்தார்—ஆர்
மகளிர்—இர்
தாய்மார்—மார்
கோக்கள்—கள்
(அரசர்கள்).

குறிப்பு: உயர்திணையில் பலர்பாலுக்கு அர், மார் விகுதிகள் வரும்போது அவைகளோடு கள் விகுதி வருதலும் உண்டு.

உ—ம். அவர்கள், அரசர்கள், தம்பிமார்கள், செட்டிமார்கள். அவர், அரசர் என்றால் மரியாதைப் பன்மையாய் இருப்பதாக எண்ணுவோம். இவைகளோடு கள் விகுதி சேர்த்தால் ஐயமின்றிப் பன்மையை உணரலாம். பெயர்களில் கள் விகுதி சேர்க்கும்போது அப்பெயர்களின் வினைமுற்றுக்களிலும் கள் விகுதி சேர்ப்பது நன்று.

உ—ம். அவர்கள் போனார்கள். அரசர்கள் வந்தார்கள்.

அஃறிணை

ஒன்றன்பாற் பெயர்

77. சில அஃறிணை ஒன்றன்பாற் பெயர் 'து' விகுதி பெற்று வரும்.

உ—ம். பிறிது, அது, எது, சிறியது, நல்லது.

பலவின்பால் பெயர்

78. அஃறிணைப் பலவின்பாற் பெயர்களுக்கு அ, வை, கள் விகுதிகளாக வரும்.

உ—ம். பிற, நல்லன—அ
அவை நல்லவை—வை
குதிரைகள், மரங்கள்—கள்

பால்பகா அஃறிணை (Common irrational noun)

79. பலவின்பால் விகுதி சேர்த்தெழுதச் செய்யுளில் சிலவேளைகளில் இடம் இராது. தமிழ்மொழி செய்யுள் மொழியாகையால் அப்படி எழுதுவதும் நன்றாய் இராது. அதனால், பலவின்பால் ஒன்றன்பால் என்னும் வேற்றுமை இல்லாமல் எழுதுவது பண்டை வழக்கம். ஆனால், முன்னும் பின்னும் இருக்கும் சொற்களைக்கொண்டு ஒன்றன்பால், பலவின்பால் என்று கூறிவிடலாம். ஒன்றன்பால் என்றும் பலவின்பால் என்றும் பகுக்கமுடியாதபடி வரும் அஃறிணையே பால்பகா அஃறிணை எனப்படும்.

உ-ம். ஒரு தேங்காய். நூறு தேங்காய்.
மரம் விழுந்தது. மரம் விழுந்தன.

'நல்லான் மலர்ப்பாதம் என் சிந்தையுள் நின்றனவே.'
—தேவாரம்.

ஒரு தேங்காய்—இதில் ஒரு என்பதைக்கொண்டு தேங்காய் ஒன்றன்பால் என்கிறோம். நூறு தேங்காய்—இதில் நூறு என்பதால் தேங்காய் பலவின்பால் என்கிறோம். மரம் விழுந்தது என்பதால் மரம் ஒருமை என்றும், விழுந்தன என்பதால் மரம் பன்மை என்றும், நின்றனவே என்பதால் பாதங்கள் என்றும் அறிகிறோம். பொருள்கூறும்போது முன்னும் பின்னும் உள்ள சொற்களைப் பார்த்தே கூறல்வேண்டும்.

உரைநடையில் இப்படி எழுதலாமா என்னும் கேள்வி எழலாம். நூறு தேங்காய் என்பது பிழையாகாது. நூறு தேங்காய்கள் என்று உரைநடையில் எழுதுவது நல்லது. ஆனால், 1000 ரூபா வாங்கினேன் என்று எழுதுவதே தமிழ்வழக்கு.

பால்பகா அஃறிணைப் பெயர்கள் பாற்பொதுமைய—ந. சூ.

எண் (Number)

80. எண் என்பது அளவு. அஃது ஒருமை (singular), பன்மை (plural) என இருவகைப்படும். ஒருமை—ஒன்றாய் இருக்கும் தன்மை. பன்மை—பலவாய் இருக்குந்தன்மை

ஆண்பால், பெண்பால் என்றால் உயர்திணை ஒருமை என்று சொல்லிவிடலாம். ஒன்றன்பால் என்றால் அஃறிணை ஒருமை என்று கூறிவிடலாம். பலர்பால் எனும் போது உயர்திணைப்பன்மை எனலாம். பலவின்பால் எனும்போது அஃறிணைப்பன்மை என்று சொல்லலாம். இப்படியிருக்க, ஒருமை, பன்மை இலக்கணத்தில் ஏன் வேண்டும்? தன்மையிலும் முன்னிலையிலும் ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்று சொல்வது முடியாது. ஒருமை, பன்மை என்றுதான் சொல்லமுடியும். இந்த இடங்களில் பயன்படுவதற்கே எண் தமிழில் இருக்கிறது என்க.

உ-ம். நான், நீ, அது, மரம், கிளி, புதல்வன், புதல்வி—ஒருமை.

நாங்கள், நீங்கள், அவை, மரங்கள், கிளிகள், புதல்வர், புதல்வியர்—பன்மை.

இடம் (Person)

81. பேசுவோர் இடத்தைக் குறிப்பது இடம். தன்னைக் குறிப்பது தன்மை இடம். முன் இருப்பவனைக் குறிப்பது முன்னிலை இடம். படர்ந்து சென்றுள்ளவனைக் குறிப்பது படர்க்கை இடம்.

1. தன்மை (First Person)

யான், நான்—ஒருமை
யாம், யாங்கள், நாம், நாங்கள்—பன்மை

2. முன்னிலை (Second Person)

நீ—ஒருமை
நீர், நீயிர், நீவிர் நீங்கள்—பன்மை

3. படர்க்கை (Third Person)

தோழன், அவன், கண்ணன்—ஆண்பால்
தோழி, அவள், சீதை—பெண்பால்
தோழிமார், அவர்கள், பெண்கள்—பலர்பால்
நாய், அது, மரம்—ஒன்றன்பால்
நாய்கள், அவை, மரங்கள்—பலவின்பால்.

82. இடம் விரவி வருதல்.

கீழ்வரும் வாக்கியங்களைப் படியுங்கள்:

1. நானும் நீயும் வந்தோம்.
2. நானும் அவனும் செய்தோம்.
3. நானும் நீயும் அவனும் செய்தோம்.
4. நாமும் நீங்களும் அவர்களும் செய்தோம்.
5. நீயும் அவனும் வந்தீர்கள்.
6. நீங்களும் அவர்களும் வந்தீர்கள்.
7. நீயும் நானும் செய்தோம்.
8. நீங்களும் நாங்களும் செய்தோம்.

தன்மை, முன்னிலை; தன்மை, படர்க்கை; முன்னிலை, படர்க்கை; முன்னிலை, தன்மை ஆகியவை ஒன்றோடொன்று கலந்து வரும். இப்படி இடம் விரவிவரும் பொழுது வினைமுற்று எப்படியிருத்தல்வேண்டும் என்னும் ஐயம் எழும். அதற்காக மேல்வந்துள்ள வாக்கியங்களிலிருக்கும் வினைமுற்றுக்களைக் கூர்ந்து நோக்குங்கள்.

1. தன்மையும் முன்னிலையும்—தன்மைப் பன்மை வினைமுற்றுக்கொள்ளும்.
2. தன்மையும் படர்க்கையும்—தன்மைப் பன்மை வினைமுற்றுக்கொள்ளும்.
3. தன்மையும் முன்னிலையும் படர்க்கையும்—தன்மைப் பன்மை வினைமுற்றுக்கொள்ளும்.
4. தன்மைப் பன்மையும் முன்னிலைப் பன்மையும் படர்க்கைப் பன்மையும்—தன்மைப் பன்மை வினைமுற்றுக்கொள்ளும்.
5. முன்னிலை ஒருமையும் படர்க்கை உயர்திணை ஒருமையும்—முன்னிலைப் பன்மை வினைமுற்றுக் கொள்ளும்.
6. உயர்திணைப் பன்மையும் பலர்பாலும்—முன்னிலைப் பன்மை வினைமுற்றுக்கொள்ளும்.
7. முன்னிலை ஒருமையும் தன்மை ஒருமையும்—தன்மைப் பன்மை வினைமுற்றுக்கொள்ளும்.

8. முன்னிலைப் பன்மையும் தன்மைப் பன்மையும்—
தன்மைப் பன்மை வினைமுற்றுக்கொள்ளும்.

பயிற்சி 15

1. திணை என்றால் என்ன? திணை வகை எத்தனை? ஒவ்வொரு திணைக்கும் ஒவ்வொரு உதாரணம் தருக.

2. அஃறிணை—இதைப் பிரித்துப் பொருள் கூறுக. அஃறிணை என்பது ஏன்?

3. உயிர், உடம்பு—இவை எத்திணைகள்? இவைகளை அமைத்து வாக்கியங்கள் கூறுக.

4. குழந்தை, கடவுள்—இச்சொற்களை அமைத்து வாக்கியங்கள் கூறுக.

5. ஐவகைப் பால்கள் எவை? உதாரணங்கள் தருக.

6. உயர்திணைக்கு உரிய பால்கள் எவை? அஃறிணைக்கு உரிய பால்கள் எவை?

7. மாந்தர், மக்கள்—இவை என்ன பாலைச் சேர்ந்தவை?

8. பெண்பாற்பெயர் கூறுக:—தலைவன், நம்பி, சிறுவன், துஷ்டன், உபாத்தியாயன், பார்ப்பான்.

9. ஆண்பாற்பெயர் கூறுக:—மனைவி, புதல்வி, அக்கை, அத்தை, தங்கை, பிறள்.

10. பலர்பாற்பெயர் கூறுக:—தம்பி, அரசன், மகள், பெண், சிறுவன், வேலைக்காரி.

11. பலவின்பாற் பெயர் சொல்க:—அது, இது, எது, சிறியது, மாடு, ஒன்று.

12. பின்வரும் வாக்கியங்களைக் காரணங் காட்டித் திருத்துக:—
(1) நாய்கள் ஓடிற்று. (2) வண்டிகள் இருக்கிறது. (3) ஔவை யார் பாடினுள். (4) அவர் தன் வீட்டுக்குப் போனார்.

13. பால்பகா அஃறிணை என்றால் என்ன?

14. ஒருமை பன்மை ஏன் வேண்டும்?

வேற்றுமை (Case)

83. 1. சீவகன் சிந்தாமணியின் கதாநாயகன்.
2. சீவகனைக் கந்துக்கடன் வளர்த்தான்.
3. சீவகனால் நன்மை ஏற்படும் என்றார் ஆசிரியர் அச்சணந்தி.

4. சீவகனுக்கு அவர் பல கல்விகளைக் கற்பித்தார்.
5. சீவகனில் இளையவன் கந்துக்கடன் மகன்.
6. சீவகனுடைய நண்பர்கள் அவனுக்கு உயிர் போன்றவர்கள்.
7. சீவகனிடம் விடாமுயற்சியும் போர்த்திறமையும் இருந்தன.
8. சீவகனே, நீ வாழி என்று விஜயமாதேவி வாழ்த்தினாள்.

இவ்வாக்கியங்களுள் சீவகன் என்னும் பெயர் பொருளில் வேற்றுமை அடைந்தது. பெயர்ச்சொல்லின் பொருளை வேற்றுமைப்படுத்துவது வேற்றுமை எனப்படும். அவ்வேற்றுமை எட்டு வகைப்படும்.

வேற்றுமை (Case); உருபு (Casal endings or casal signs.)

1. முதல் வேற்றுமை (Nominative Case)—உருபு இல்லை.

2. இரண்டாம் வேற்றுமை (Accusative Case)—ஐ.

3. மூன்றும் வேற்றுமை (Instrumental Case)—ஆல், ஒடு, ஓடு, உடன், கொண்டு.

4. நான்காம் வேற்றுமை (Dative Case)—கு, பொருட்டு, நிமித்தம்.

5. ஐந்தாம் வேற்றுமை (Ablative Case)—இல், இன், இருந்து, நின்று.

6. ஆறும் வேற்றுமை (Possessive Case)—அது உடைய.

7. ஏழாம் வேற்றுமை (Locative Case)—இல், இடம், முன், பின், கண் முதலியன.

8. எட்டாம் வேற்றுமை அல்லது விளிவேற்றுமை (Vocative case or Nominative case of address)—தனியாக உருபு இல்லை.

குறிப்பு: உருபு என்பது வேற்றுமையைக் காட்டுதற்கு அடையாளமாக உள்ளது.

84. முதல் வேற்றுமை—முதல் வேற்றுமைக்கு உருபு இல்லை. முதல் வேற்றுமையை எழுவாய் வேற்றுமை என்றும் கூறுவர். முதல் வேற்றுமையாகிய எழுவாய் மாறுபடாமல் இருக்கும். எழுவாய், வினையையும் பெயரையும் வினாவையும் பயனிலையாகக்கொண்டு முடியும்.

உ-ம். முருகன், மணிமேகலை, நாய்—முதல்வேற்றுமை.
முருகன் போனான்—வினைச்சொல் பயனிலையாக வந்தது.
மணிமேகலை மாதவியின் மகள்—பெயர்ச்சொல் பயனிலையாக வந்தது.
நாய் ஏது?—வினாச்சொல் பயனிலையாக வந்தது.

எழுவாய் உருபு திரிபில் பெயரே
வினை, பெயர், வினாக்கோளல் அதன் பயனிலையே.—ந. சூ.

85. இரண்டாம் வேற்றுமை—இதன் உருபு ஐ. இவ் வேற்றுமை ஆக்கல், அழித்தல், அடைதல் முதலான பொருளில் வரும். (பொருள் என்பது என்ன அர்த்தத்தில் வேற்றுமை வருகிறது என்பதைக் காட்டும்.)

உ-ம். வேலைக்காரி சோற்றை ஆக்கினாள்.—ஆக்கல்.
கந்தன் வீட்டை இடித்தான்.—அழித்தல்.
நண்பன் தன் வீட்டை அடைந்தான்.—அடைதல்.

86. மூன்றாம் வேற்றுமை—ஆல், ஒடு, ஓடு, உடன், கொண்டு என்பவை இதன் உருபுகள். இதற்குக் கருவி, கருத்தா, உடன்நிகழ்ச்சி என்னும் பொருள்கள் உண்டு. கருவி அஃறிணையில் வரும். கருத்தா உயர்திணையில் இருக்கும். உடன்நிகழ்ச்சி என்பது ஒரே காலத்தில் நிகழ்வது.

உ-ம். அவன் கத்தியால் மரத்தை வெட்டினான்.—கருவி.
கம்பரால் இனிய இராமாயணம் பாடப்பட்டது.—கருத்தா.

தந்தையுடன் மகன் வந்தான்.—உடனிகழ்ச்சி.

87. நான்காம் வேற்றுமை—கு, பொருட்டு, நிமித்தம் என்னும் உருபுகள் இந்நான்காம் வேற்றுமைக்கு உரியவை. கொடை, பகை, நட்பு, முறை, எல்லை முதலியவை இதன் பொருள்கள்.

உ—ம். மோதிலால் நேரு தம் மகனை நாட்டிற்கு அளித்தார்.—கொடை.
சீவகனுக்குப் பகைவன் கட்டியங்காரன்.—பகை.
இராமனுக்கு நண்பன் குகன் —நட்பு.
மாதவிக்கு மகள் மணிமேகலை.—முறை.

88. ஐந்தாம் வேற்றுமை—இதன் உருபுகள், இன், இல், இருந்து, நின்று என்பவை. இவ்வேற்றுமை எல்லை, ஏது, ஒப்பு, நீக்கல் முதலிய பொருள்களில் வரும்.

உ—ம். 1. தமிழ்நாட்டின் வடக்கு திருப்பதி.—எல்லை.
2. செல்வத்தில் சிறந்தது அமெரிக்க ஐக்கிய நாடு.—ஏது (காரணம்).
3. இராமனில் பரதன் நல்லவன்.—ஒப்பு.
4. இப்போது தமிழ்நாட்டிலிருந்து ஒற்றுமை நீங்கியிருக்கிறது.—நீக்கல்.

89. ஆறும் வேற்றுமை—அது, உடைய, அ என்பவை ஆறும் வேற்றுமையின் உருபுகள். உடைமை என்பது இதன் பொருள்.

உ—ம். முருகனது வேல்—அது.
பாம்பறியும் பாம்பின கால்.
என கைகள். } அ.

ஒருமைக்கு அது என்னும் உருபும், பன்மைக்கு அ என்னும் உருபும், ஒருமைக்கும் பன்மைக்கும் பொதுவாக உடைய என்னும் உருபும் வரும்.

உ—ம். முருகனது வேல்—ஒருமை.
என கைகள்—பன்மை.
முருகனுடைய தலை
முருகனுடைய கைகள் } ஒருமை பன்மைகளுக்குப் பொது.

90. ஏழாம் வேற்றுமை—இதற்கு இடவேற்றுமை என்றும் பெயருண்டு. இதற்குப் பொருள் இடப்பொருள்.

இதன் உருபுகள் கீழ்வருவன:

கண், கால், கடை, இடை, தலை, வாய், திசை, வயின்,
முன், சார், வலம், இடம், மேல், கீழ், புடை, முதல்,
பின், பாடு, அளை, தேம், உழை, வழி, உழி, உளி,
உள், அகம், புறம், இல், இடப்பொருள் உருபே.—ந. சூ.

உ-ம். இந்திய நாட்டில் உற்பத்தி செய்யும் பொருள்களை வாங்குங்கள். நாட்டில்—இல் ஏழாம் வேற்றுமை உருபு. பொருள்—இடப்பொருள்.

91. எட்டாம் வேற்றுமை—இதை விளிவேற்றுமை என்றும் சொல்வதுண்டு. முதல் வேற்றுமை, எட்டாம் வேற்றுமையாகவும் மாறிவரும். முதல் வேற்றுமையின் மாறுதலே எட்டாம் வேற்றுமையின் உருபு என்பர்.

முதல் வேற்றுமை	எட்டாம் வேற்றுமை
நண்பர்கள்	நண்பர்களே—மிகுதல்
தந்தை	தந்தாய்—ஈறு திரிதல்
மாணவர்கள்	மாணவர்காள்—ஈற்றயல் திரிதல்
அரசன்	அரச—ஈறு குன்றல்
தம்பி	தம்பி—இயல்பு

விளி, அண்மை விளி என்றும், சேய்மை விளி என்றும் இருவகைப்படும். அண்மை விளி—அருகில் உள்ள பொருளை அழைப்பது. சேய்மை விளி—தூரத்தில் உள்ள பொருளைக் கூப்பிடுவது.

உ-ம். தம்பி, நண்ப—அண்மை விளி.
தம்பீ, நண்பா—சேய்மை விளி.

குறிப்பு: அண்மை விளி சில வேளைகளில் இயல்பாயும், சில வேளைகளில் கடைசியெழுத்தை விடுத்தும் வரும். ஆனால், சேய்மை விளி எப்பொழுதும் மாறியே வரும்.

உருபுமயக்கம் (Interchange of cases)

92. 'எனக்கு அடித்தான், ஸார்' என்று தமிழ் தெரியாத நண்பர் சொல்வதைக் கேட்டிருப்பீர்கள். அவர், என்னை அடித்தான் என்று சொல்லவேண்டியதை அப்படிச் சொல்கிறார். அவர் இரண்டாம் வேற்றுமை உருபுக்குப்பதிலாக நான்காம் வேற்றுமை உருபைச் சேர்த்துச் சொல்கிறார். இந்த விதமாகச் சில வேளைகளில் செய்யுள்களில் ஓர் உருபுக்குப்பதிலாக வேறொரு உருபு மயங்கி வருவதுண்டு. உருபு மயங்கிவருவது உருபு மயக்கம்.

உ—ம். காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தில் மாணப் பெரிது.—(குறள்)

இக்குறளில் காலத்தில் என்று இருக்கவேண்டியதற்குப்பதிலாகக் காலத்தினால் என்று இருக்கிறது. இல் என்னும் ஏழாம் வேற்றுமை உருபுதான் இருக்கவேண்டும்; ஏனென்றால் அஃது இடப்பொருள். ஆனால், இங்கே மூன்றும் வேற்றுமை உருபு மயங்கி வந்திருக்கிறது. இதைத்தான் உருபுமயக்கம் என்கிறோம்.

யாதன் உருபிற் கூறிற் றாயினும்
பொருள் செல் மருங்கின் வேற்றுமை சாரும்.—ந. சூ.

உருபு ஏற்கும்பொழுது திரியும் பெயர்கள் (Change of pronouns when taking casal signs)

93. வேற்றுமை உருபுகளை ஏற்கும்பொழுது யான் என்பது என் எனவும், நான் என்பது என் எனவும், யாம் என்பது எம் எனவும், நாம் என்பது நம் எனவும், நீ என்பது நின், உன் எனவும், நீர் என்பது நும், உம் எனவும், நீங்கள் என்பது உங்கள் எனவும், தான் என்பது தன் எனவும், தாம் என்பது தம் எனவும் திரிந்துவரும்.

தன்மை
{ யான், நான் } —(என்) என்னை, என்னால், எனக்கு, என்னிலிருந்து, என்னுடைய, என்னிடத்தில்.
{ யாம் —(எம்) எம்மை, எம்மால், எமக்கு.
நாம் —(நம்) நம்மை, நம்மால், நமக்கு. }

முன்னிலை
- நீ —(நின்) நின்னை, நின்னால், நினக்கு.
- (உன்) உன்னை, உன்னால், உனக்கு.
- நீர்—(நும்) நும்மை, நும்மால், நுமக்கு.
- நீங்கள்—(உங்கள்) உங்களை, உங்களால், உங்களுக்கு.
- (உ—ம்.) உம்மை, உம்மால், உமக்கு.

படர்க்கை
- தான்—(தன்) தன்னை, தன்னால், தனக்கு.
- தாம்—(தம்) தம்மை, தம்மால், தமக்கு.

குறிப்பு: யான் என்பது என் என்றாகி வேற்றுமை ஏற்கிறது என்று அறிக. யான் + ஐ — என் + ஐ = என்னை. இப்படியே மற்றவைகளும் வரும்.

பயிற்சி 16

1. வேற்றுமை என்பது ஏன்? எத்தனை வேற்றுமைகள் உண்டு?
2. முதல் வேற்றுமைக்கு வேறு பெயர் யாது? முதல் வேற்றுமைக்கு உருபு உண்டா?
3. எட்டாம் வேற்றுமைக்கு வேறு பெயர் யாது? இவ்வேற்றுமைக்கு உருபு உண்டா?
4. இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரைக்கும் உள்ள உருபுகளைக் கூறுக.
5. உருபு என்றால் என்ன?
6. வேற்றுமைப் பொருள் என்றால் என்ன?
7. இரண்டாம் வேற்றுமைக்கு உள்ள பொருள்களைக் கூறுக.
8. மூன்றாம் வேற்றுமையின் பொருள்கள் யாவை?
9. கருத்தாப் பொருளுக்கும் கருவிப் பொருளுக்கும் வேற்றுமை யாது?
10. நான்காம் வேற்றுமைப் பொருள்கள் யாவை?
11. ஐந்தாம் வேற்றுமை என்ன என்ன பொருள்களில் வரும்?
12. ஆறாம் வேற்றுமை எப்பொருளில் வரும்?
13. ஏழாம் வேற்றுமைப் பொருள் யாது? ஏழாம் வேற்றுமை 'இல்' உருபிற்கும் ஐந்தாம் வேற்றுமை 'இல்' உருபிற்கும் வேற்றுமை யாது?
14. விளிவேற்றுமை எத்தனை வகைப்படும்? விளக்குக.
15. உருபுமயக்கம் என்றால் என்ன?
16. நீங்கள், நாம், நீ, தாம்—இவைகள் வேற்றுமை உருபுகளை ஏற்கும்பொழுது எவ்வாறு மாறி வரும்?

2. வினைச்சொல் (Verb)

94. வினைச்சொல் என்பது ஒரு பொருளின் தொழிலைக் குறித்துக் காலத்தைக் காட்டி வேற்றுமை கொள்ளாதிருப்பது. வினைச்சொல் ஏதாவது ஒரு காலத்தைக் கட்டாயம் காட்டும். அதனால், வினைச்சொல்லைக் காலக்கிளவி என்பதும் உண்டு. ஜெர்மன் மொழியிலுங்கூட வினைச்சொல்லுக்குக் காலக்கிளவி என்னும் பொருளில் (Time-word) பெயர் வழங்குகிறதாம்.

95. வினைச்சொற்கள் முற்று, எச்சம் என இரு வகைப்படும்.

வினைமுற்று

96. எழுதினான்—இது வினைச்சொல். இதில் பொருள் முடிந்து அஃதாவது முற்றியிருக்கிறது. அதனால், எழுதினான் என்பது வினைமுற்று. முற்று வினையாவது பொருள் முடிந்து நிற்கும் வினைச்சொல்லாகும்.

வினையெச்சம்

97. எழுதி வந்தான்—இதில் எழுதி என்பது வினைச்சொல். ஆனால், எழுதி என்னும் சொல்லில் பொருள் முடியாமல் எச்சமாக (குறைவாக) இருக்கிறது. இது தானாக முடியாமல் வேறொரு வினையைத் தழுவிநிற்கிறது. இங்கே உள்ள எழுதி என்னும் வினைச்சொல் வந்தான் என்னும் சொல்லைத் தழுவி நிற்கிறது. அதனால், எழுதி என்னும் சொல் வினையெச்சம் எனப்படும். குறைந்த வினைச்சொல், வினையைத் தழுவினால் வினையெச்சமாகும்.

பெயரெச்சம்

98. எழுதிய பையன்—இதில் உள்ள எழுதிய என்னும் சொல்லும் குறைந்த வினைச்சொல்லாகவே இருக்கிறது. ஆனால், இச்சொல் வினையைத் தழுவாமல் பெயரோடு சேர்கிறது. எனவே, எழுதிய என்பது பெயரெச்சம். குறைந்த வினைச்சொல் பெயரோடு சேர்ந்தால் பெயரெச்சம் எனப்படும்.

குறிப்பு: வினைச்சொல், வினைமுற்று என்றும், எச்சம் என்றும் இருவகைப்படும். எச்சம், பெயரெச்சம் என்றும் வினையெச்சம் என்றும் இருவகைப்படும்.

வினைமுற்றின் வகை (Kinds of finite verb)

99. வினைமுற்றானது தன்மை வினைமுற்று, முன்னிலை வினைமுற்று, படர்க்கை வினைமுற்று, ஏவல் வினைமுற்று, வியங்கோள் வினைமுற்று என ஐந்து வகைப்படும்.

1. வருவேன், வருகிறேன், வந்தேன் — தன்மை வினைமுற்று.
2. வருவாய், வருகிறாய், வந்தாய் — முன்னிலை வினைமுற்று.
3. வருவான், வருகிறான், வந்தான் — படர்க்கை வினைமுற்று.
4. வா, போ, எழுது — ஏவல் வினைமுற்று.
5. வருக, வாழிய, வாழியர், ஒழிக — வியங்கோள் வினைமுற்று.

குறிப்பு: தன்மை வினைமுற்றும், முன்னிலை வினைமுற்றும், ஏவல் வினைமுற்றும் ஒருமை பன்மைகளைக் காட்டுமே அன்றித் திணை, பால் காட்டுவதில்லை. ஏன்? நான், நீ என்னும் பெயர்கள் உயர்திணையாகவும் அஃறிணையாகவும் இருக்கலாம். கதைகளில் அஃறிணையும் பேசுவதுபோல் எழுதுவது வழக்கம்.

படர்க்கை வினைமுற்று திணை, பால், எண்களைக் காட்டும்.

ஏவல் வினைமுற்றே கட்டளையிடும்; முன்னிலையில் மாத்திரம் வரும். இதற்கு ஒருமை பன்மை உண்டு.

வியங்கோள் வினைமுற்று, வாழ்த்துப்பொருளிலும் கட்டளையிடும் பொருளிலும் சபித்தல் பொருளிலும் வரும்.



பகுபத உறுப்பு (Analysis of words)

100. வினைச்சொல்லைப் பகுத்தால்பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி என்னும் உறுப்புக்களைக் காணலாம்.

சொல்	பகுதி	சந்தி	இடைநிலை	சாரியை	விகுதி
நடக்கின்றனன்	— நட	க்	கின்று	அன்	அன்

பகுதி (Root)

101. பகுதி என்பது சொல்லின் முதலில் உள்ளது. பிரகிருதி என்னும் வடமொழி பகுதி என வந்தது என்பர். பிரகிருதியாய் அஃதாவது இயல்பாய் இருப்பது பகுதி. பகுதி சொல்லின் முதலில் இருக்கும். வினைச் சொல்லில் பகுதி ஒரு பொருள் செய்யும் தொழிலைக் காட்டும். வினைச்சொற் பகுதி எப்பொழுதும் கட்டளையிடுவதுபோல் இருக்கும். பகுதிக்குத் தமிழ்ப்பெயர் முதனிலை என்பது. (முதல் + நிலை = முதனிலை)

செய்கிறான் — செய் — பகுதி
ஓடினாள் — ஓடு — ,,
கண்டாள் — காண் — ,,
வந்தார் — வா — ,,

விகுதி (Termination)

102. விகுதி என்பது ஒரு சொல்லின் ஈற்றில் நிற்பது. விகுதி என்னும் வடசொல்லுக்கு வேற்றுமை என்பது பொருளாம். விகுதியும் வித்தியாசத்தைத்தான் காட்டுகிறது. விகிர்தி என்னும் வடசொல் விகுதி என மருவிற்று. விகுதியினாற்றான் திணை, பால், எண் ஆகிய இவற்றில் உள்ள வேற்றுமையைக் கண்டுபிடிக்கிறோம். வித்தியாசத்தைக் காட்டுவது விகுதி. விகுதி என்பது திணை, பால், எண், இடம் ஆகிய இவைகளைக் காட்டும். விகுதிக்குத் தமிழ்ப்பெயர் கடைநிலை என்பது. (கடைநிலை — ஈற்றில் நிற்பது).

கீழ்வரும் விகுதிகளைக் கவனமாய்ப் படியுங்கள்:

1. தன்மை வினைமுற்று விகுதிகள்

103. தன்மை ஒருமை விகுதிகள்—அல், அன், என், ஏன்.

உ—ம். (யான்) செய்வல்—அல்

குடிசெய்வல் யான் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்.—குறள்

குடிசெய்வல்—குடும்பத்தை உயர்த்துவேன்

(யான்) செய்வன் —அன்
(யான்) செய்வென்—என்
(யான்) செய்வேன்—ஏன்

தன்மைப்பன்மை விகுதிகள்—அம், ஆம், எம், ஏம், ஓம்.

உ—ம். (நாம்) கூறுவம் —அம்
(நாம்) கூறுவாம் —ஆம்
(நாம்) கூறுவெம் —எம்
(நாம்) கூறுவேம் —ஏம்
(நாம்) கூறுவோம்—ஓம்

2. முன்னிலை வினைமுற்று விகுதிகள்

104. முன்னிலை ஒருமை விகுதிகள்—ஐ, ஆய், இ.

உ—ம். (நீ) பாடினை —ஐ
(நீ) பாடினாய்—ஆய்
(நீ) பாடுதி —இ

முன்னிலைப்பன்மை விகுதிகள்—இர், ஈர், ஈர் + கள்.

உ—ம். (நீவிர்) காண்பிர் —இர்
(நீர்) காண்பீர் —ஈர்
(நீங்கள்) காண்பீர்கள்—ஈர் + கள்

குறிப்பு: முன்னிலைப்பன்மையில் ஈர் விகுதி வரும்பொழுது சில வேளைகளில் கள் விகுதியும் சேர்ந்து வரும்.

3. படர்க்கை வினைமுற்று விகுதிகள்

105. ஆண்பால் விகுதிகள்—அன், ஆன்.

உ—ம். (அவன்) எழுதுவன் —அன்
(அவன்) எழுதுவான்—ஆன்

பெண்பால் விகுதிகள்—அள், ஆள்.

உ—ம். (அவள்) பேசினள்—அள்
(அவள்) பேசினாள்—ஆள்

பலர்பால் விகுதிகள்—அர், ஆர், ஆர் + கள், ப.

உ—ம். (அவர்) உண்பர் —அர்
(அவர்) உண்பார் —ஆர்
(அவர்கள்) உண்பார்கள் —ஆர் + கள்
(அவர்) கூறுப, என்ப —ப

ஒன்றன்பால் விகுதிகள்—து, று.

உ—ம். (அது) ஓடியது—து
(அது) ஓடிற்று—று

பலவின்பால் விகுதிகள்— அ—உடன்பாட்டு விகுதி.
ஆ—எதிர்மறை விகுதி.

உ—ம். (அவை) நடந்தன—அ (உடன்பாடு)
(அவை) நடவா —ஆ (எதிர்மறை)

குறிப்பு:

கீழ்வரும் வாக்கியங்களைப் பாருங்கள்:

(1) கோழி கூவிற்று.
மாடு வந்தது.
செய்தி கிடைத்தது.
} ஒன்றன்பால் வினைமுற்று

(2) மாடுகள் வந்தன.
ஆடும் மாடும் மேய்கின்றன.
செய்திகள் கிடைத்தன.
} பலவின்பால் வினைமுற்று (உடன்பாடு)

(3) மாடுகள் வரா.
வண்டிகள் ஓடா.
ஆடும் மாடும் மேயா.
செய்திகள் கிடையா.
} பலவின்பால் வினைமுற்று (எதிர்மறை)

4. ஏவல் வினைமுற்று விகுதிகள்

106. ஏவல் ஒருமை வினைமுற்று விகுதி—ஆய்

உ—ம். (நீ) கேளாய்
(நீ) பாராய் } ஆய்

குறிப்பு: பெரும்பாலும் ஏவல் ஒருமை வினைமுற்றில் ஆய் விகுதி கெட்டே வரும். உ—ம். நட, பார்.

ஏவல் பன்மை வினைமுற்று விகுதிகள்—மின், உம், ஈர்.

உ—ம். (நீர்) பார்மின்—மின்
(நீர்) பாரும் —உம்
(நீர்) கேளீர் —ஈர்

5. வியங்கோள் வினைமுற்று விகுதிகள்

107. வியங்கோள் வினைமுற்று விகுதிகள்—க, ய, இயர்.

உ—ம். வாழ்க —க
வாழிய —ய
பாடியர்—இயர்

ஏவலுக்கும் வியங்கோளுக்கும் வேறுபாடு

குறிப்பு: ஏவல் வினையும் வியங்கோள் வினையும் எப்பொழுதும் எதிர் காலத்திலேயே வரும். ஏவல் வினைக்கு ஒருமை பன்மை உண்டு. வியங்கோள் வினைக்கு ஒருமை பன்மை இல்லை. வியங்கோள் மூன்றிடத்தும் ஐம்பாலிலும் வரும்.

உ—ம். நீ வாழ்க, நான் வாழ்க, அவள் வாழ்க,
காந்தி வாழ்க, சரோஜனி வாழ்க, தமிழர் வாழ்க,
நாடு வாழ்க, நாடுகள் வாழ்க.

முன்னிலைக்கும் ஏவலுக்கும் வேறுபாடு

முன்னிலை வினைமுற்று	ஏவல் வினைமுற்று
1. நிகழ்ந்ததைக் கூறும்	1. கட்டளையிடும்
உ—ம். வந்தாய், வருகிறாய், வருவாய்	உ—ம். (நீ) வா. (நீர்) போமின்.
2. மூன்று காலத்திலும் வரும்.	2. எதிர்காலத்தில் மட்டும் வரும்.

இடைநிலை (Middle Particles)

108. பகுதி (முதனிலை) ஒரு தொழிலைக் காட்டுகிறது. விகுதி (கடைநிலை) திணை, பால் முதலிய வேறுபாட்டைக் காட்டுகிறது. இடைநிலை என்பது சொல்லுக்கு இடையில் (நடுவில்) நிற்பது. இடையில் நிற்பது இடைநிலை. இந்த இடைநிலை, பெயர் இடைநிலை, வினை இடைநிலை என இருவகைப்படும். பெயர் இடைநிலை காலம் காட்டாது. வினை இடைநிலை காலம் காட்டும்.

சொற்கள்	பகுதி	இடைநிலை	கடைநிலை
வலைஞர்	வலை	ஞ் (பெயர் இடைநிலை)	அர்
செய்தான்	செய்	த் (வினை இடைநிலை)	ஆன்

காலம் (Tense)

109. இடைநிலையை அறிவதற்குமுன் காலம் அறிதல் வேண்டும்; ஏனென்றால் பெரும்பாலும் காலம் காட்டுவது இடைநிலையே.

காலம் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என மூவகைப்படும். இறந்தகாலம் என்பது முன்னமே கடந்துவிட்டதைக் குறிப்பது. நிகழ்காலம் என்பது இப்போது நடந்துவருவதைக் குறிப்பது. எதிர்காலம் என்பது இனி வருவதைக் குறிப்பது.

110. இறந்த கால இடைநிலைகள் (Signs of Past Tense)—த், ட், ற், இன், ன், ய்.

செய்தான்	—செய்	+ த்	+ ஆன்	— த்	இடைநிலை
கண்டாள்	—காண்	+ ட்	+ ஆள்	— ட்	,,
கற்றான்	—கல்	+ ற்	+ ஆன்	— ற்	,,
ஓடின	—ஓடு	+ இன்	+ அ	— இன்	,,
போனது	—போ	+ ன்	+ அ + து	— ன்	,,
போயது	—போ	+ ய்	+ அ + து	— ய்	,,

111. நிகழ்கால இடைநிலைகள் (Signs of Present Tense)—கிறு, கின்று, ஆநின்று.

செய்கிறான்	—*செய்* + *கிறு*	+ *ஆன்*	— *கிறு*	*இடைநிலை*
செய்கின்றார்	—*செய்* + *கின்று*	+ *ஆர்*	— *கின்று*	,,
செய்யாநின்றார்	—*செய்* + *ஆநின்று*	+ *ஆர்*	— *ஆநின்று*	,,

112. எதிர்கால இடைநிலை (Signs of Future Tense) —ப், வ், க்.

நடப்பேன்	— *நட* + *ப்* + *ஏன்*	— *ப்*	*இடைநிலை*
செய்வேன்	— *செய்* + *வ்* + *ஏன்*	— *வ்*	,,
கூறுகேன்	— *கூறு* + *க்* + *ஏன்*	— *க்*	,,

இறந்தகால இடைநிலை

தடறஒற்(று) 'இன்'னே ஐம்பால் மூவிடத்(து)
இறந்த காலம் தரும்தொழில் இடைநிலை.

நிகழ்கால இடைநிலை

ஆநின்று, கின்று கிறுமூ விடத்தின்
ஐம்பால் நிகழ்பொழு(து) அறைவினை இடைநிலை.

எதிர்கால இடைநிலை

பவ்வ மூவிடத்(து) ஐம்பால் எதிர்பொழு(து)
இசைவினை இடைநிலையாம்; இவை சில இல.—ந. சூ.

சாரியை (Euphonic Particles)

113. சாரியை என்பது சார்ந்து இயைந்து நிற்பது. இது காதுக்கு இனிமைக்காக வருவது.

அன், இன், ன், அ, கு, அற்று, அத்து முதலியவை பொதுச்சாரியையாகவும், அ, காம், காரம், கான் என்பவை எழுத்துக்களுக்குச் சாரியையாகவும் வரும்.

பொதுச்சாரியை

114. *செய்தனன்*—*செய்* + த் + அன் + *அன்*—*அன்* *சாரியை*

வண்டின்கால்	—வண்டு + இன்	—இன்	,,
கோன்	—கோ + ன்	—ன்	,,
செய்குவாய்	—*செய்* + கு + வ் + ஆய்	—கு	,,
பலவற்றை	—*பல* + அற்று + ஐ	—*அற்று*	,,
மரத்தை	—*மரம்* + அத்து + ஐ	—*அத்து*	,,

எழுத்துச்சாரியை

115. க, ச, ட, த, ப, ற என ஆறே —அ சாரியை
அகரம், மகரம், னகரம் —கரம் ,,
ஊகாரம், ஐகாரம், ஔகாரம் —காரம் ,,
ஐகான், ஔகான் —கான் ,,

குறிப்பு: மெய்யெழுத்துக்களுக்கு 'அ' என்னும் சாரியையும், குற்றெழுத்துக்களுக்குக் 'கரம்' என்னும் சாரியையும், நெட்டெழுத்துக்களுக்குக் 'காரம்' என்னும் சாரியையும், ஐ, ஔ என்பவைகளுக்குக் 'கான்' என்னும் சாரியையும் வரும் என்க.

சந்தி (Combination)

116. சந்தி என்பது பகுதியையும் இடைநிலையையும் சேர்க்கும் எழுத்தாகும்.

பார்த்தான்—பார் + த் + த் + ஆன்—பார் என்னும் பகுதியின் பக்கத்தில் உள்ளதாகிய 'த்' என்பது சந்தி.

117. பகுபத உறுப்புப் பிரித்தல்

சொல்	பகுதி	சந்தி விகாரம்	சந்தி	இடைநிலை	சாரியை	விகுதி
பார்த்தனன்	பார்	—	த்	த்	அன்	அன்
நடந்தனர்	நட	ந்	—	த்	அன்	அர்

குறிப்பு: சந்தி என்பது பகுதிக்கும் விகுதிக்கும் நடுவில் வரும். சில வேளைகளில் சந்தி விகாரப்பட்டும் வரும். சந்தி விகாரப்பட்டு வருவதைச் சந்தி விகாரம் என்பர். நடந்தனர் என்னும் சொல்லில் 'த்' என்னும் சந்தி 'ந்' ஆக விகாரப்பட்டு வந்தது. 'ந்' என்பது சந்தி விகாரம். இடைநிலைக்கும் விகுதிக்கும் நடுவில் சாரியை வரும்.

பகுதி விகுதி இடைநிலை சாரியை
சந்தி விகாரம் ஆறினும் ஏற்பவை
முன்னிப் புணர்ப்ப முடியுமெப் பதங்களும்.—ந. சூ.

பயிற்சி 17

1. வினைச்சொல் என்றால் என்ன?

2. வந்தான், வந்து — இவற்றில் எது வினைமுற்று? வினைமுற்றின் இலக்கணம் யாது?

3. ஐவகை வினைமுற்றுக்கள் யாவை? ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு உதாரணம் தருக.

4. ஏவல் வினைமுற்றுக்கும் வியங்கோள் வினைமுற்றுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

5. ஏவல் வினைமுற்றுக்கும் முன்னிலை வினைமுற்றுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

6. வினைப்பகுதியைக் கண்டுபிடிப்பது எப்படி? ஓர் உதாரணம் தருக.

7. விகுதிகள் என்ன என்ன காட்டும்?

8. (1) தன்மை ஒருமை வினைமுற்று விகுதிகள் எவை? தன்மைப் பன்மை வினைமுற்று விகுதிகள் யாவை?

(2) முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகள் எவை? முன்னிலைப்பன்மை வினைமுற்று விகுதிகள் எவை?

(3) ஆண்பால் வினைமுற்று விகுதிகள் எவை? பெண்பால் வினைமுற்று விகுதிகள் எவை? பலர்பால் வினைமுற்று விகுதிகள் எவை?

(4) ஒன்றன்பால் வினைமுற்று விகுதிகளையும் பலவின்பால் வினைமுற்று விகுதிகளையும் கூறுக.

9. செய்திகள் கிடையாது. வண்டிகள் ஓடுகிறது — இவ்வாக்கியங்களைக் காரணம் காட்டித் திருத்துக.

10. இருவகை இடைநிலைகள் எவை? பெயரிடைநிலைக்கும் வினையிடை நிலைக்கும் வேறுபாடு யாது?

11. மூன்றுகால இடைநிலைகளையும் கூறுக.

12. சாரியை என்றால் என்ன? ஐந்து சாரியைகள் கூறுக.

13. சந்தியின் வேலை என்ன? உதாரணம் தருக.

14. பகுபத உறுப்புக்கள் எவை? பார்த்தனன் — இதற்குப் பகுபத இலக்கணம் கூறுக.

தன்வினையும் (Verb denoting direct action) பிறவினையும் (Causative verb)

118. வினைச்சொல் தன்வினையாகவும் பிறவினையாகவும், செய்வினையாகவும் செயப்பாட்டுவினையாகவும் வரும்.

தன்வினை தானே செய்யும் வினை. பிறபொருளால் செய்யும் வினை பிறவினை.

தன்வினை பிறவினையாகும் விதங்கள்

I. கீழ்வரும் வாக்கியங்களைக் கவனியுங்கள்:

119. 1. கண்ணன் நிலத்தை உழுதான்.
கண்ணன் நிலத்தை உழுவித்தான்.

2. தச்சன் பெட்டியைச் செய்தான்.
முருகன் தச்சனைக்கொண்டு பெட்டியைச் செய்வித்தான்.

உழுதான்—இதன் பகுதி உழு. உழுவித்தான்—இதன் பகுதி உழுவி. செய்தான்—இதன் பகுதி செய். செய்வித்தான்—இதன் பகுதி செய்வி. தன்வினைப் பகுதியோடு வி என்னும் விகுதியாவது பி என்னும் விகுதியாவது சேர்ந்தால் பிறவினையாகும்.

கீழ்வரும் வாக்கியங்களைப் படியுங்கள்:

1. அவன் போனான்	—போ	கு
அவன் நண்பனைப் போக்கினான்	—போக்கு	
2. அவன் பாய்ந்தான்	—பாய்	சு
அவன் நீரைப் பாய்ச்சினான்	—பாய்ச்சு	
3. அவன் உருண்டான்	—உருள்	டு
அவன் உருட்டினான்	—உருட்டு	
4. அவன் தாழ்ந்தான்	—தாழ்	து
அவன் பிறரைத் தாழ்த்தினான்	—தாழ்த்து	
5. அவன் எழுந்தான்	—எழு	பு
அவன் தம்பியை எழுப்பினான்	—எழுப்பு	
6. அவன் அகன்றான்	—அகல்	று
அவன் அழுக்கை அகற்றினான்	—அகற்று	

தன்வினைப் பகுதியோடு வி, பி, கு, சு, டு, து, பு, று என்னும் விகுதிகளைச் சேர்த்தால் பிறவினையாகும்.

II. கீழ்வரும் வாக்கியங்களைக் கவனியுங்கள்:

120. 1. கண்ணன் நல்வழியில் திரும்புகிறான்—திரும்பு
கண்ணன் முருகனை நல்வழியில் திருப்புகிறான்—திருப்பு

2. மகன் தகப்பனுக்கு அடங்குகிறான்—அடங்கு
தகப்பன் மகனை அடக்குகிறான் —அடக்கு

தன்வினைப்பகுதியிலுள்ள மெல்லொற்று வல்லொற்றுனால் பிறவினையாகும்.

III. கீழ்வரும் வாக்கியங்களைக் கவனியுங்கள்:

121. 1. தம்பி தொழிலில் பழகுகிறான்—பழகு
தந்தை தம்பியைத் தொழிலில் பழக்குகிறார்—பழக்கு

2. சோறு ஆறுகிறது—ஆறு
அவள் சோற்றை ஆற்றுகிறாள்—ஆற்று

தன்வினைப்பகுதி இரட்டித்தால் பிறவினையாகும்.

தன்வினை பிறவினையாகும் விதங்கள்

122. 1. தன்வினைப்பகுதியோடு வி, பி, கு, சு, டு, து, பு, று சேர்த்தல். சிலர் டு, று என்னும் விகுதிகளை விட்டு விடுவர்.

2. தன்வினைப்பகுதியிலிருக்கும் மெல்லொற்று வல்லொற்றுதல்.

3. தன்வினைப்பகுதி இரட்டித்தல்.

செய்வினையும் (Active verb)
செயப்பாட்டுவினையும் (Passive verb)

123. செய்த பொருளுக்கு முதன்மை வரும் வினை செய்வினை எனப்படும். செய்யப்பட்ட பொருளுக்கு முதன்மை வரும் வினை செயப்பாட்டுவினை எனப்படும்.

செய்வினையோடு 'படு' அல்லது 'உண்' சேர்ந்தால் செயப்பாட்டு வினையாகும்.

கீழ்வரும் வாக்கியங்களைக் கவனியுங்கள்:

1. மகனே, வேந்தனால் நீ கட்டப்பட்டாய்.
2. மகனே, வேந்தனால் நீ கட்டுண்டாய்.
3. சூரபத்மன் முருகனால் கொல்லப்பட்டான்.
4. உதய குமரன் கந்தர்வனால் வெட்டுண்டான்.
5. செய்யக்கூடாத செயல்கள் செய்யப்படா.

செய்வினை, செயப்பாட்டுவினையாகும்பொழுது இரண்டாம் வேற்றுமையிலிருப்பது, முதல் வேற்றுமையிலும் முதல் வேற்றுமையிலிருப்பது மூன்றும் வேற்றுமையிலும் வரும்.

உ—ம். முருகன் சூரனைக் கொன்றான்.—செய்வினை.

சூரன், முருகனால் கொல்லப்பட்டான்.—செயப்பாட்டு வினை.

குறிப்பு: கட்டுரையில் செயப்பாட்டு வினையை அதிகமாகப் பயன் படுத்தினால் தமிழினிமை கெடும் என்பதை அறிக. இடம் அறிந்து எழுதுக.

உலக வழக்கில் வினையெச்சங்களோடு செய்தான், வைத்தான் என்பவற்றைச் சேர்த்துப் பிறவினைப் பொருளில் சொல்வதுண்டு.

உ—ம். தகப்பனார் தம் பெண்களை எல்லாம் படிக்க வைத்தார்.

அண்ணன், தம்பியைப் படிக்கச் செய்தான்.

பயிற்சி 18

1. தன்வினை, பிறவினை —உதாரணங்களுடன் விளக்குக.

2. தன்வினை, பிறவினையாகும் விதங்கள் யாவை?

3. செய்வினை, செயப்பாட்டுவினை — இவற்றின் பொருள் யாது?

4. செய்வினை, செயப்பாட்டுவினையாதற்கு யாது செய்தல்வேண்டும்?

5. செய்வினை, செயப்பாட்டுவினையாகும்பொழுது ஏற்படும் மாறுதல்கள் எவை?

6. கீழ்வரும் வாக்கியங்களில் இருக்கும் செய்வினையைச் செயப்பாட்டு வினையாகவும், செயப்பாட்டு வினையைச் செய்வினையாகவும் மாற்றுக:

(1) தெருவில் நடப்பவர்கள் நடைமேடைகளில் போதல் வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(2) இங்கு மலஜலம் கழிப்பவர்கள் தண்டிக்கப்படுவார்கள்.

(3) நான் எதைச் சொன்னாலும் நீ அதைக் கேளாய்.

(4) இராமன் வாலியைக் கொன்றான்.

(5) காகம் சித்திரை வைகாசி மாதங்களில் முட்டையிடும்.

(6) நாம் கல்லையும் மண்ணையும் காய்ச்சிக் குடிக்கலாமா?

1. பெயரெச்சம் (Dependent verb qualifying noun)

124. கீழ்வரும் உதாரணங்களைக் கவனியுங்கள்:

1. படித்த பெண்	1. ஆடின மயில்
2. படிக்கிற பெண்	2. ஆடுகிற மயில்
3. படிக்கும் பெண்	3. ஆடும் மயில்

படித்த, படிக்கிற, படிக்கும், ஆடின, ஆடுகிற, ஆடும்—இவை தனித்து நிற்குமா? தனித்து நில்லா. இவை பெயர்ச்சொல்லா, வினைச்சொல்லா? வினைச்சொல். இவை பொருளில் குறைந்த அஃதாவது எச்சமாக உள்ளன. இவை பெயர்களோடு போய்ச் சேர்கின்றன. எனவே, இவை பெயரெச்சங்கள் எனப்படும்.

எச்சமான வினைச்சொல் பெயரைத் தழுவி நின்றால் பெயரெச்சம் என்க. பெயரெச்சம், திணை பால் எண் இடங்களைக் காட்டாது. அது பெயரையே தழுவி நிற்கும்.

பெயரெச்ச வகை

125. பெயரெச்சத்தில் இறந்தகாலப் பெயரெச்சம், நிகழ்காலப் பெயரெச்சம், எதிர்காலப் பெயரெச்சம் என மூவகை உண்டு.

உ-ம். படித்த பெண், ஆடின மயில்—இறந்தகாலப் பெயரெச்சம்
படிக்கிற பெண், ஆடுகிற மயில்—நிகழ்காலப் பெயரெச்சம்
படிக்கும் பெண், ஆடும் மயில்—எதிர்காலப் பெயரெச்சம்

126. இறந்தகாலப் பெயரெச்சத்திற்கும் நிகழ்காலப் பெயரெச்சத்திற்கும் அ விகுதியாகவும், எதிர்காலப் பெயரெச்சத்திற்கு உம் விகுதியாகவும் வரும்.

உ-ம். ஆடின — ஆடு + இன் + அ — இறந்தகாலம்
ஆடுகிற — ஆடு + கிறு + அ — நிகழ்காலம்
ஆடும் — ஆடு + உம் — எதிர்காலம்

2. வினையெச்சம் (Dependent verb modifying verb)

127. (1) கண்ணன் கண்டு—
(2) கண்ணன் கண்டு பேசினான்.

கண்டு என்பது பொருள் முடியாமல் நிற்கிறது. பொருள் குறைந்து நிற்பது எச்சம் எனப்படும். அதனால், கண்டு என்பது எச்சம். இந்தக் கண்டு என்னும் எச்சம் வினையோடு போய்ச் சேர்கிறது. ஆகையால், இது வினையெச்சமாகும்.

குறைந்த வினைச்சொல் வினையைத் தழுவி நிற்குமானால் வினையெச்சம் எனப்படும். வினையெச்சமும் திணை பால் எண் இடங்களைக் காட்டுவதில்லை.

வினையெச்ச வகை

128. வினையெச்சத்திலும் இறந்தகால வினையெச்சம், நிகழ்கால வினையெச்சம், எதிர்கால வினையெச்சம் என மூவகை உண்டு.

இறந்தகால வினையெச்சம் உ, இ, ய் என்பவற்றை விகுதிகளாகப் பெற்றுவரும்.

உ-ம். செய்து போனான்—செய் + த் + உ—உ விகுதி.
ஆடி ஓடினான்—ஆடு + இ—இ விகுதி.
போய் நின்றான்—போ + ய்—ய் விகுதி.

நிகழ்கால வினையெச்சம் அ என்னும் விகுதி பெற்றும் கு என்னும் சாரியை பெற்றும் பெறாதும் வரும்.

உ-ம். செய்யச் செய்கிறான்—செய் + அ—அ விகுதி.
ஆட வருகிறான்—ஆடு + அ—அ விகுதி.
படிக்க வேண்டுகிறான்—படி + க் + கு + அ—இங்கு அ விகுதியும் கு—சாரியையும் வந்தன.

எதிர்கால வினையெச்சம் இன், ஆல், வான், பான் என்னும் விகுதிகளில் ஒன்றைப் பெறும்.

உ-ம். செய்யின் தருவேன்—இன் எதிர்கால வினையெச்ச விகுதி
வந்தால் கொடுப்பேன்—ஆல் ,, ,,
கோல்வான் புகுவேன்—வான் ,, ,,
உண்பான் போவேன்—பான் ,, ,,

செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம் (A form of dependent verb)

129. செய்யுளில் செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம் வரும். இது செய்து என்னும் பொருளில் நிற்கும்.

உ-ம். 1. பெய்யாக் கொடுக்கும்—பெய்யா என்பது பெய்யும் என்னும் பொருளில் வந்தது.

2. கட்டுரை யதனைக் கேளாக் கண்ணெரி கதுவ நோக்கி—இங்கே கேளா என்பது கேட்டு என்னும் பொருளில் வந்தது.

3. புரண்டு வீழாப், பெருநிலத்தில் கிடந்தழும் மற்றொரு மக(வு) எங்ஙனம் சகிப்பாள் பெரிதும் பாவம்!—இங்கே வீழா என்பது வீழ்ந்து என்னும் பொருளில் வந்தது.

பயிற்சி 19

1. பெயரெச்சம் என்பது பெயர்ச்சொல்லா, வினைச்சொல்லா? எச்சம் என்னும் சொல்லுக்குப் பொருள் யாது? பெயரெச்சம் என்பது ஏன்? ஓர் உதாரணம் தருக.

2. வினையெச்சத்தின் இலக்கணம் யாது?

3. பெயரெச்சத்திற்கும் வினையெச்சத்திற்கும் உள்ள வேறுபாடு யாது? உதாரணங்கள் தருக.

4. மூன்று காலப்பெயரெச்சங்களையும் மூன்று கால வினையெச்சங்களையும் உதாரணங்களுடன் கூறுக.

5. பெயரெச்ச விகுதிகள் எவை? வினையெச்ச விகுதிகள் எவை?

6. செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம் என்றால் என்ன? இதற்கு ஓர் உதாரணம் தருக.

7. சொல்வான், உண்பான், செய்தால், செய்யின்—இவ்வினையெச்சங்களை வைத்து வாக்கியங்கள் கூறுக.

8. நடந்த பையன்—நடந்த—இதற்குப் பகுபத இலக்கணம் கூறுக.

உடன்பாடும் எதிர்மறையும் (Positive & Negative)

130. வினைச்சொல்லில் உடன்பாட்டு வினை, எதிர்மறை வினை என இருவகை உண்டு. உடன்படும் அஃதாவது ஒப்புக்கொள்ளும் வினை உடன்பாட்டு வினை. எதிர் மறுக்கும் வினை எதிர்மறை வினை.

உடன்பாட்டு வினை தொழிலின் நிகழ்ச்சியை உணர்த்தும். எதிர்மறை வினை, தொழில் நிகழாமையும் எதிர் மறுத்தலையும் உணர்த்தும்.

131. வினையில் உடன்பாட்டு வினைமுற்று, எதிர்மறை வினைமுற்று என்றும், உடன்பாட்டுப் பெயரெச்சம், எதிர்மறைப் பெயரெச்சம் என்றும், உடன்பாட்டு வினையெச்சம் எதிர்மறை வினையெச்சம் என்றும் வகைகள் உண்டு.

உடன்பாட்டு வினைமுற்றும் எதிர்மறை வினைமுற்றும்

132. இங்கு உடன்பாட்டு வினைமுற்றையும் எதிர்மறை வினைமுற்றையும் பார்ப்போம்.

	உடன்பாட்டு வினைமுற்று (Positive verb)	எதிர்மறை வினைமுற்று (Negative verb)
தன்மை ஒருமை	உண்பேன்	உண்ணேன்
	உண்கின்றேன்	உண்கின்றிலேன்
	உண்டேன்	உண்டிலேன்
தன்மைப் பன்மை	உண்போம்	உண்கிலோம், உண்போமிலம்
	உண்கின்றோம்	உண்கின்றிலோம்
	உண்டோம்	உண்டிலோம்
முன்னிலை ஒருமை	உண்டாய்	உண்ணாய்
	உண்கின்றாய்	உண்கின்றாயிலை
	உண்டாய்	உண்டாயிலை
	உடன்பாடு	எதிர்மறை
முன்னிலைப் பன்மை	உண்பீர்	உண்பீரிலீர்
	உண்கின்றீர்	உண்கின்றிலீர்
	உண்டீர்	உண்டீரிலிர்
படர்க்கை	உண்டான்	உண்டிலன்
	உண்கிறாள்	உண்கின்றிலள்
	உண்பார்	உண்ணார்
	உண்டது	உண்டிலது
	உண்டன	உண்டில

உடன்பாட்டுப் பெயரெச்சமும் எதிர்மறைப் பெயரெச்சமும்

உடன்பாட்டுப் பெயரெச்சம்

133. ஒரு பொருளின் வினைநிகழ்ச்சியை உண்டு என ஒப்புக்கொள்ளும் அஃதாவது உடன்படும் பெயரெச்சம் உடன்பாட்டுப் பெயரெச்சம்.

உ—ம். கண்ட பையன்—கண்ட—உடன்பாட்டுப் பெயரெச்சம்

காண்கிற பையன்—காண்கிற— ,, ,,

காணும் பையன்—காணும் — ,, ,,

குறிப்பு: உடன்பாட்டுப் பெயரெச்சத்திற்கு அ விகுதி என்றறிக.

உ—ம். காண்கிற—காண் + கிறு + அ

எதிர்மறைப் பெயரெச்சம்

134. ஒரு பொருளின் வினைநிகழ்ச்சியை எதிர்மறுக்கும் பெயரெச்சம் எதிர்மறைப் பெயரெச்சம்.

உ—ம். காணாத பையன்—காணாத—எதிர்மறைப் பெயரெச்சம்.

ஓடாத வண்டி—ஓடாத— ,, ,,

நில்லாத செல்வம்—நில்லாத— ,, ,,

குறிப்பு: காணாத—காண் + ஆ + த் + அ—காண்—பகுதி; ஆ எதிர்மறையைக் காட்டும் விகுதி; த் என்பது எதிர்மறை விகுதிக்குப் பற்றுக்கோடாக வரும் எழுத்து; அ—பெயரெச்ச விகுதி.

இரண்டுக்கும் வேறுபாடு

135. கீழ்வருவனவற்றில் வேற்றுமை காண்க:

உடன்பாட்டுப் பெயரெச்சம்		எதிர்மறைப் பெயரெச்சம்
உ—ம். பார்த்த (கோயில்)	—	பாராத (கோயில்)
ஓடும் (வண்டி)	—	ஓடாத (வண்டி)
நிற்கும் (பொருள்)	—	நில்லாத (பொருள்)

ஈறுகெட்ட எதிர்மறைப்பெயரெச்சம் (Negative dependent relative verb without ending)

136. ஓடாத (குதிரை)—இங்கு வந்துள்ள ஓடாத என்பது பெயரெச்சம். இதில் எந்த எழுத்தும் கெடாம

விருக்கிறது. ஓடாக்குதிரை—இங்கு வந்துள்ள ஓடா என்னும் பெயரெச்சத்தில் ஈற்றெழுத்து மறைந்துவிட்டது அஃதாவது கெட்டுவிட்டது. ஆகையால், ஓடா என்பது ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் எனப்படும்.

கடைசி எழுத்து மறைந்து எதிர்மறைப்பொருளில் வரும் பெயரெச்சம் ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

உ—ம். அறியாக்குழந்தை—அறியா—ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

137. இரண்டுக்கும் வேறுபாடு

ஈறுகெடாத எதிர்மறைப் பெயரெச்சம்	ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
கெடாத (பொருள்)	கெடாப் (பொருள்)
உணராத (சிறுவன்)	உணராச் (சிறுவன்)

உடன்பாட்டு வினையெச்சமும் எதிர்மறை வினையெச்சமும்

உடன்பாட்டு வினையெச்சம்

138. உடன்பாட்டில் வரும் வினையெச்சம் உடன்பாட்டு வினையெச்சமாகும்.

உ—ம். கண்டு பேசினான்—கண்டு—உடன்பாட்டு வினையெச்சம்.

எதிர்மறை வினையெச்சம்

139. எதிர்மறுப்பில் வரும் வினையெச்சம் எதிர்மறை வினையெச்சமாகும். எதிர்மறை வினையெச்சம் ஆ என்னும் எதிர்மறை இடைநிலையையும் து, மல், மே என்னும் விகுதிகளையும் பெற்றும் வரும்.

உ—ம். காணாது (சென்றான்)—காணாது என்பது எதிர்மறை வினையெச்சம்—து என்பது விகுதி.

உண்ணாமல் (சென்றான்) — உண்ணாமல் எதிர்மறை வினையெச்சம்—மல் என்பது விகுதி.

உண்ணாமே (சென்றான்)—உண்ணாமே எதிர்மறை வினையெச்சம்—மே என்பது விகுதி.

குறிப்பு: உண்ணாது—உண் + ஆ + து; உண் + ஆ + மல்; உண் + ஆ + மே—இவைகளில் வந்திருக்கும் ஆ எதிர்மறை இடைநிலை.

140. கீழ்வருவனவற்றில் வேற்றுமை காண்க:

உடன்பாட்டு வினையெச்சம்	எதிர்மறை வினையெச்சம்
கண்டு (போனார்)	காணாமல் (போனார்)
தெரிந்து (பேசினான்)	தெரியாது (பேசினான்)
ஆடி (ஓடினாள்)	ஆடாமே (ஓடினாள்)
போய் (வாங்கினான்)	போகாமல் (வாங்கினான்)

ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம்

141. ஈற்றெழுத்து மறைந்து அஃதாவது கெட்டுவரும் வினையெச்சம் ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சமாகும். இது செய்யுளில் வரும்.

உ—ம். 1. அறிவினுள் எல்லாம் தலைஎன்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல்.—(குறள்)

செய்யாவிடல்—செய்யா என்பது ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம்.

இங்கே செய்யாது என்னும் வினையெச்சம் து கெட்டுச் செய்யா என்று நிற்பதை அறிக.

2. இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்.—(குறள்)

முட்டாச்செயின்—முட்டா என்பது ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம். முட்டாமல் என்பது ஈறுகெட்டு முட்டா என நிற்கிறது.

பயிற்சி 20

1. உடன்பாடு என்றால் என்ன? எதிர்மறை என்றால் என்ன?

2. கீழ்வருபவைகளில் எதிர்மறைக்கு உடன்பாடும், உடன்பாட்டிற்கு எதிர்மறையும் கூறுக:—

நடக்கின்றேன், செய்தோம், பாடினாய், எழுதினாய், செய்தில, ஓடாது, காணாத, பாடுகிற, நில்லாத, உண்ணாது.

3. எதிர்மறை வினையெச்சத்திற்கு வரும் விகுதிகள் எவை?

4. வந்து தேடினான், வராமல் தேடினான்—இங்கு உள்ளவற்றில் எது உடன்பாட்டு வினையெச்சம் என்றும் எது எதிர்மறை வினையெச்சம் என்றும் கூறுக.

5. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஒன்றும் ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம் ஒன்றும் கூறுக.

6. ஈறுகெட்ட என்றால் பொருள் யாது?

3. இடைச்சொல் (Dependent words & particles)

142. இடைச்சொல் என்பது பெயர் வினைகளைப்போல் தனித்து வராமல் அப்பெயர் வினைகளை இடமாகக் கொண்டு வருவது.

வேற்றுமை உருபுகளும், விகுதிகளும், இடைநிலைகளும், சாரியைகளும், உவமை உருபுகளும், சுட்டுப் பெயர்களும், வினா எழுத்துக்களும், ஏ, ஓ, உம், மற்று, கொல், தான், வாளா, சும்மா, ஐயோ, சீ, அம்ம முதலியனவும் இடைச்சொற்களாகும்.

வேற்றுமை உருபுகள்—ஐ, ஆல், கு, அது, உடைய, இல் முதலியன.

விகுதிகள்—அன், அள், அர், து, று, அ முதலியன.
இடைநிலைகள்—த், ட், ற், ப், வ், க் முதலியன.
சாரியை—அன், இன், அற்று, அத்து, அ முதலியன.
உவமை உருபுகள்—போல, ஒப்ப முதலியன.
சுட்டுப்பெயர்கள்—அ, இ, உ.
வினாப்பெயர்கள்—எ, ஏ, யா, ஆ, ஓ.

4. உரிச்சொல் (Words peculiar to poetry)

143. பெரும்பாலும் செய்யுளுக்கே உரிய சொல்லாக வருவது உரிச்சொல் எனப்படும். இது பெயர் வினைகளுக்கு உரிமையாய் வரும்.

உ-ம். சால உண்டான்—சால—உரிச்சொல்
நனி பேதை —நனி—உரிச்சொல்

பயிற்சி 21

1. இடைச்சொல் என்றால் என்ன?

2. உரிச்சொல் என்றால் என்ன?

3. கீழ்வருபவைகளில் உள்ள இடைச்சொற்களையும் உரிச்சொற்களையும் எடுத்துக் காட்டுக:—

முருகனுல், கூர்வேல், இக்கழுதை, வந்தானு, வண்டின் கால், பசுவின் கன்று, யார்கொல், மதிபோல் முகம், நனி தின்ருன்.

4. இடைச்சொல்லுக்கும் உரிச்சொல்லுக்கும் உள்ள வேறுபாடு யாது?

பயிற்சி 22

திருப்பல் பயிற்சி

1. சொற்களின் இருவகைப் பாகுபாடுகள் யாவை? ஒவ்வொரு பாகுபாட்டிலும் உள்ள நால்வகைச் சொற்களைக் கூறுக.

2. திசைச் சொல்லுக்கு ஒவ்வொருவரும் ஒவ்வோர் உதாரணம் தருக.

3. வடசொற்களைத் தமிழில் எழுதும்பொழுது ஜ, ஷ, க்ஷ, ஸ, ஹ ஆகிய இவை எவ்வெவ்வாறு மாறிவரும்?

4. பண்புப்பெயர் என்ருல் என்ன? ஒவ்வொருவரும் ஒவ்வோர் உதாரணம் தருக.

5. தொழிற்பெயர், வினையாலணையும் பெயர்—இவற்றிற்கு உள்ள வேற்றுமைகளும் ஒற்றுமையும் யாவை? தொழிற்பெயருக்கு ஓர் உதாரணம் தருக. வினையாலணையும் பெயருக்கும் ஓர் உதாரணம் தருக.

6. ஆகுபெயர் என்பதை உதாரணத்துடன் விளக்குக.

7. இடம், திணை, பால், மரியாதைப்பன்மை, பால் பகா அஃறிணைப்பெயர், உருபுமயக்கம், வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம், செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம், தன்வினை, பிறவினை, செய்வினை, செயப்பாட்டுவினை, இடைச்சொல், உரிச்சொல்—இவைகளை ஒவ்வொன்ருக உதாரணத்துடன் விளக்குக.

8. வருக, வா, வந்தான்—ஒவ்வொன்றையும் என்ன என்ன வினைமுற்று என்று கூறுக.

9. மாடுகள் மேய்கிறது—இவ்வாக்கியம் பிழையானது. ஏன்?

10. பேசுகின்ருன், பார்த்தனர், செய்வோம்—பகுபத இலக்கணம் கூறுக.

11. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் என்ருல் என்ன? உதாரணம் தருக.

12. உண்டாள், நடந்தான்—தன்வினையைப் பிறவினையாக்குக.

IV. புணர் இயல் (Combination of letters)

புணர்ச்சியிலக்கணம் படிப்பதன் பயன்

144. *தமிழ்மொழி செய்யுள்மொழி. தமிழிலக்கணம், செய்யுளுக்கே பெரும்பாலும் விதிகளைக் கூறும். செய்யுள்களைப் பிரித்துப் பொருள் கூறுவதற்குப் புணர்ச்சி இலக்கணம் இன்றியமையாதது. புணர்ச்சி இலக்கணம் தெரிந்தாற்றான் சந்தி பிரித்தலும் சந்தி சேர்த்தெழுதலும் கூடும். ஆகையினால், தமிழ் கற்கும் மாணவர்கள் சில சந்திகளை நன்கு பயிலுதல்வேண்டும்.*

145. புணர்ச்சி என்பது நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் ஒன்றுபடச் சேர்வது.

நிலைமொழியாவது முதலில் நிற்கும் மொழி; வருமொழியாவது நிலைமொழியின் பக்கத்தில் வந்து அதனுடன் சேரும் மொழி.

உ—ம். 1. இலக்கணம் + படி. — இலக்கணம் — நிலைமொழி
படி — வருமொழி
2. புணர்ச்சி + இலக்கணம் — புணர்ச்சி — நிலைமொழி
இலக்கணம் — வருமொழி

146. *நிலைமொழியின் ஈறு, உயிர் ஈறு, மெய் ஈறு என இருவகைப்படும்.*

உ—ம். இலக்கணம் — ம் — மெய் ஈறு
புணர்ச்சி — இ — உயிர் ஈறு

மெய் ஈறு அறிவது எளிது. நிலைமொழியின் கடைசியில் மெய்யெழுத்து இருந்தால் மெய் ஈறு எனலாம். உயிர் ஈறு என்று கூறுவதற்கு உயிர்மெய்யெழுத்திலுள்ள மெய்யெழுத்தை நீக்கி உயிர் எழுத்தைமட்டும் பார்த்தல் வேண்டும். புணர்ச்சி—ச் + இ—'ச்' என்னும் மெய்யை நீக்கி இ என்னும் உயிரை நோக்கி உயிர் ஈறு என்க.

147. *வருமொழியின் முதல், உயிர்முதல் என்றும் மெய்ம்முதல் என்றும் இரண்டு வகைப்படும்.*

படி — ப — மெய்ம்முதல்
இலக்கணம் — இ — உயிர்முதல்

வருமொழி முதலில் உயிர்மெய் இருந்தால் உயிர்மெய்யில் இருக்கும் உயிரை விட்டுவிட்டு மெய்யெழுத்தை எடுத்துக்கொண்டு மெய்ம்முதல் என்க. வருமொழி உயிர் எழுத்தில் தொடங்கியிருந்தால் உயிர் முதல் என்க. புணர்ச்சிக்காக இவ்வாறு கூறுதல்வேண்டும்.

148. நிலைமொழி ஈறு இரண்டாகவும் வருமொழி முதல் இரண்டாகவும் இருத்தலால் அவை ஒன்றோடொன்று சேர்தல் நான்கு வகையாகும்.

அவை வருமாறு:

உயிர் ஈறும் உயிர்முதலும் சேர்தல்.
உயிர் ஈறும் மெய்ம்முதலும் சேர்தல்.
மெய் ஈறும் மெய்ம்முதலும் சேர்தல்.
மெய் ஈறும் உயிர்முதலும் சேர்தல்.

ஆணி + இல்லை — உயிர் ஈறும் உயிர்முதலும் புணர்தல்.
ஆணி + சிறியது — உயிர் ஈறும் மெய்ம்முதலும் ,,
இலக்கணம் + படி — மெய் ஈறும் மெய்ம்முதலும்,,
இலக்கணம் + எங்கே — மெய் ஈறும் உயிர்முதலும் புணர்தல்.

149. நிலைமொழியும் வருமொழியும் புணரும்பொழுது இயல்பாகவும் விகாரமாகவும் புணரும். இயல்பாய் அஃதாவது எந்த மாறுபாடும் அடையாமல் புணர்வது இயல்பு புணர்ச்சி எனப்படும். விகாரப்புணர்ச்சி என்பது நிலைமொழியும் வருமொழியும் புணரும்பொழுது மாறுபட்டு வருவது.

1. இயல்பு புணர்ச்சி (Natural combination)

150. (1) இயல்பு புணர்ச்சியாவது நிலைமொழியும் வருமொழியும் சேரும்பொழுது எந்த விகாரமும் அடையாமல் இயல்பாய் இருப்பது.

உ–ம். கண்டு + பேசினான் — கண்டு பேசினான்.
என்று + சொன்னான் — என்று சொன்னான்.
வந்து + போனான் — வந்து போனான்.
செய்து + கொடுத்தான் — செய்து கொடுத்தான்.

151. (2) நிலைமொழியீற்றிலுள்ள மெய்யோடு வருமொழி முதலில் இருக்கும் உயிர் வந்து கூடி உயிர்மெய்யாவதும் இயல்பு புணர்ச்சி என்றுதான் கருதப்படும்.

உ—ம். தெருவில் + ஓடினான்—தெருவிலோடினான்.
பழம் + இல்லை —பழமில்லை.

உடல்மேல் உயிர் வர்(து) ஒன்றுவ(து) இயல்பே.—ந. சூ.

2. விகாரப்புணர்ச்சி (Change of letters)

152. விகாரப்புணர்ச்சி, தோன்றல், திரிதல், கெடுதல் என மூவகைப்படும்.

உ—ம். வாழை + பழம் = வாழைப்பழம்—தோன்றல் (ப் வந்தது).
பல் + பொடி = பற்பொடி —திரிதல் (ல்-ற் ஆக மாறியது).
மரம் + நாய் = மரநாய்—கெடுதல் (ம் மறைந்தது).

புணர்ச்சியில் பல உண்டு. அவற்றுள் சில இன்றியமையாதவைகளை மட்டும் இங்குப் படிப்போம்.

1. தோன்றல்

உடம்படுமெய்

உயிரும் உயிரும் புணர்தல் (Vowel before Vowel)

153. உடம்படுமெய் என்பதற்கு நிலைமொழி ஈற்றையும் வருமொழி முதலையும் ஒன்றுபடுத்தும் அல்லது உடன்படுத்தும் மெய் என்று பொருள் கூறுவர். சிலர், 'வருமொழிக்கு உடம்பாக அடுத்து வரும் மெய் உடம்படுமெய்' என்றும் கூறுவர். செய்யுள்களில் சொற்களைப் பிரிப்பதற்கும், எழுதும்பொழுது சில முக்கியமான இடங்களில் சேர்த்தெழுதுவதற்கும் இவ்வுடம்படுமெய் பயன்படும்.

யகர உடம்படுமெய்

நிலைமொழியீற்றில் இ, ஈ, ஐ இருந்து வருமொழி முதலில், உயிரெழுத்து வந்தால் ய் என்னும் உடம்படு

மெய் தோன்றும். ய் என்னும் உடம்படுமெய்யுடன் அ என்னும் சாரியைச் சேர்த்து யகர உடம்படுமெய் என்பர்.

உ-ம். வெளி + ஊர் = வெளியூர் (வெளி + ய் + ஊர்).
ஈ + அடித்தான் = ஈயடித்தான்.
தலை + அணை = தலையணை.

வகர உடம்படுமெய்

நிலைமொழியீற்றில் அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ என்னும் உயிரெழுத்துக்கள் இருந்து வருமொழி முதலில் உயிரெழுத்து வந்தால் வ் என்னும் உடம்படுமெய் தோன்றும். வ் என்னும் உடம்படுமெய்யுடன் அ என்னும் சாரியை சேர்த்து வகரவுடம்படுமெய் என்பர்.

உ-ம். வந்த + உடன் = வந்தவுடன் (வந்த + வ் + உடன்).
மா + இலை = மாவிலை.
திரு + ஆரூர் = திருவாரூர்.
பூ + எழுத்து = பூவெழுத்து.
கோ + ஏறு கழுதை = கோவேறுகழுதை.
ஔ + இல்லை = ஔவில்லை.

குறிப்பு: எ சொல்லுக்கு ஈற்றில் வராது. ஒ சொல்லுக்கு ஈற்றில் வந்தாலும் பயன்படுவதில்லை. அப்படியே ஔ சொல்லுக்கு ஈற்றில் வந்தாலும் அது அதிகமாகப் பயன்படுவதில்லை.

ஏ முன் யகர உடம்படுமெய்யும் வகர உடம்படுமெய்யும்

நிலைமொழியீற்றில் ஏ இருந்து வருமொழி முதலில் உயிரெழுத்து வந்தால் யகரவுடம்படுமெய்யாவது வகரவுடம்படுமெய்யாவது தோன்றும். நிலைமொழியீற்று ஏகாரம் இடைச்சொல்லாயிருந்தால் யகரவுடம்படுமெய்யும், பெயர்ச்சொல்லாய் இருந்தால் வகரவுடம்படுமெய்யும் வரும்.

உ-ம். தே + ஆரம் = தேவாரம் (தே—பெயர்ச்சொல்).
கறியே + இல்லை = கறியேயில்லை (கறியே—ஏ—இடைச்சொல்).

உடம்படுமெய்

இ ஈ ஐ	ய்	அ ஆ உ ஊ ஓ ஔ	வ்	ஏ	ய் வ்

இ, ஈ, ஐ வழி யவ்வும், ஏனை
உயிர்வழி வவ்வும், ஏ முன் இவ்விருமையும்
உயிர்வரின் உடம்படுமெய் என்றாகும்.—ந. சூ.

குறிப்பு: உடம்படு மெய்ச்சந்தி, தோன்றல் விகாரத்தில் அடங்கும். நிலைமொழியீற்றிலும் வருமொழி முதலிலும் உயிரெழுத்துக்கள் இருந்தாற்றான் உடம்படுமெய் வரும். உடம்படுமெய்யை உரைநடையில் இன்றியமையாத இடங்களில் மட்டும் பயன்படுத்தல் நலம்.

2. தனிக்குறிலை அடுத்துவரும் மெய் இரட்டித்தல்

154. நிலைமொழியில் தனிக் குற்றெழுத்துக்குப் பக்கத்தில் மெய்யெழுத்து இருந்து வருமொழி முதலில் உயிரெழுத்து வந்தால் நிலைமொழியீற்று மெய் இரட்டும்.

கண் + இல்லை = கண்ணில்லை (கண் + ண் + இல்லை)

தனிக்குறில் முன்ஒற்(று) உயிர்வரின் இரட்டும்.—ந. சூ.

3. வ் இரட்டித்தல்

155. அ, இ, உ என்னும் சுட்டெழுத்துக்களுக்கு முன்னும் எ என்னும் வினா எழுத்துக்கு முன்னும் வ் என்னும் மெய் தோன்றி இரட்டிக்கும். இதை உடம்படுமெய் என்று சொல்வது கூடாது.

உ-ம். அ + இலை = அவ்விலை
இ + இடம் = இவ்விடம்
எ + எழுத்து = எவ்வெழுத்து

4. வ் தோன்றுதல்

156. சுட்டெழுத்துக்களுக்கு முன்னும் எகர வினவிற்கு முன்னும் ய என்னும் வரிசையில் சொல் தொடங்கினும் வ் என்னும் மெய்யே தோன்றும்.

உ—ம். அ + யானை = அவ்யானை
இ + யானை = இவ்யானை
எ + யானை = எவ்யானை

5. வந்த எழுத்தே வருதல்

சுட்டெழுத்துக்களுக்கு முன்னும் எகர வினவிற்கு முன்னும் வல்லின மெல்லின இடையின உயிர்மெய் எழுத்துக்களில் சொல் தொடங்கினல், வருமொழி முதலில் வரும் எழுத்துக்கு ஏற்ற மெய்யெழுத்தே சந்தியில் வரும்.

157. உ—ம்.

அ + கொம்பு = அக்கொம்பு இ + செடி = இச்செடி எ + திண்ணை = எத்திண்ணை	}	வல்லினம்
அ + ஞாயிறு = அஞ்ஞாயிறு இ + நூல் = இந்நூல் எ + மொழி = எம்மொழி	}	மெல்லினம்
அ + வீடு = அவ்வீடு இ + வேதம் = இவ்வேதம் எ + வாள் = எவ்வாள்	}	இடையினம்

கெடுதல்

(1) குற்றியலுகர முற்றியலுகரப்புணர்ச்சி
குற்றியலுகரப்புணர்ச்சி

158. நிலைமொழியீற்றில் குற்றியலுகரம் இருந்து வருமொழி முதலில் உயிரெழுத்து வந்தால் நிலைமொழிக் குற்றியலுகரத்திலுள்ள உகரம் மறைந்துவிட, நிலைமொழியீற்று மெய்யும் வருமொழியீற்று உயிரும் சேர்ந்துவிடும்.

உ—ம். வேறு + இல்லை = வேறில்லை
விட்டு + ஓடு = விட்டோடு
எழுந்து + இரு = எழுந்திரு
செய்து + எழு = செய்தெழு

தொடாது + எடு = தொடாதெடு
அஃது + உண்டு = அஃதுண்டு
கயிறு + அறுந்தது = கயிறறுந்தது

(2) முற்றியலுகரப்புணர்ச்சி

159. சில இடங்களில் நிலைமொழியீற்றில் முற்றியலுகரம் இருந்து வருமொழி முதலில் உயிரெழுத்து வந்தால் குற்றியலுகரத்தைப்போலவே முற்றியலுகரமும் கெடும். அதன்பின் நிலைமொழியீற்று மெய்யும் வருமொழி முதலும் சேர்ந்துவிடும். சில இடங்களிற்றான் இம்முறை கையாளப்படும்.

உ—ம். செலவு + ஆயிற்று = செலவாயிற்று

(3) குற்றியலுகரமும் முற்றியலுகரமும் குற்றியலிகரமாதல்

160. நிலைமொழியில் குற்றியலுகரமோ முற்றியலுகரமோ இருந்து வருமொழி முதல் யகரத்தில் தொடங்கினால் குற்றியலுகரமும் முற்றியலுகரமும் குற்றியல் இகரமாய் மாறும்.

உ—ம். வேறு + யாது = வேறியாது
செலவு + யாது = செலவியாது

உயிர்வரின் உக்குறள் மெய்விட்(டு) ஓடும்
'ய'வ்வரின் 'இ'ய்யாம்; முற்றும் அற்(று) ஒரோவழி.— ந. சூ.

(4) 'ம்' கெடுதல்

161. நிலைமொழியீற்றில் ம் இருந்து வருமொழி முதலெழுத்து நகர வரிசையிலோ மகர வரிசையிலோ வகர வரிசையிலோ தொடங்கினால், நிலைமொழியீற்றிலுள்ள 'ம்' மறைந்துவிடும்.

உ—ம். நிறம் + மிக்க = நிறமிக்க
குளம் + நெல் = குளநெல்
அறம் + வினை = அறவினை

(5) நிலைமொழியீற்று 'ள்' கெடுதல்

162. நிலைமொழியீற்றில் 'ள்' இருக்க, வருமொழி முதலில் 'த' வந்தால், வருமொழி முதலில் உள்ள 'த' ஆனது 'ட' ஆக மாற, நிலைமொழியீற்று 'ள்' மறைந்துபோகும்.

உ—ம். நாள் + தோறும் = நாடோறும்
விதங்கள் + தாம் = விதங்கடாம்
அவர்கள் + தாம் = அவர்கடாம்
துகள் + தீர் = துகடீர்

திரிதல்

(1) 'ம்'—ங், ஞ், ந் ஆதல்

163. நிலைமொழியீற்றில் 'ம்' இருக்க, வருமொழி முதலில் க, ச, த, ந என்னும் எழுத்துக்களில் சொற்கள் தொடங்கினால் அந்த 'ம்' வருமொழி 'க' என்பதை நோக்கி 'ங்' ஆகவும் 'ச' என்பதை நோக்கி 'ஞ்' ஆகவும் 'த' என்பதை நோக்கி 'ந்' ஆகவும் மாறும்.

உ—ம்.
மனம் + களித்தான் = மனங்களித்தான் —(ம்-ங் ஆயிற்று)
மரம் + சாய்ந்தது = மரஞ்சாய்ந்து —(ம்-ஞ் ஆயிற்று)
குணம் + திரிந்தது = குணந்திரிந்தது —(ம்-ந் ஆயிற்று)

(2) ண்—ட் ஆதல்

164. நிலைமொழியீற்று 'ண்'—க, ச, ப முன் 'ட்' ஆகும்.

உ—ம். மண் + குடம் = மட்குடம்
மண் + சட்டி = மட்சட்டி
மண் + பாண்டம் = மட்பாண்டம்

(3) ண் முன் த ஆனது 'ட' ஆதல்

165. நிலைமொழியீற்று 'ண்' முன் 'த' வருமொழி முதலில் வந்தால் 'த' ஆனது 'ட' ஆகும்.

உ—ம். தண் + தமிழ் = தண்டமிழ்
மண் + தலம் = மண்டலம்

(4) ன்—ற் ஆதல்

166. நிலைமொழியீற்று 'ன்', வருமொழியில் முதலெழுத்தாக வரும் க, ச, ப என்பவற்றை நோக்கி 'ற்' ஆக மாறும்.

உ–ம். பொன் + குடம் = பொற்குடம்
பொன் + சங்கிலி = பொற்சங்கிலி
பொன் + பாடகம் = பொற்பாடகம்

(5) ன் முன் த ஆனது ற ஆதல்

167. நிலைமொழியீற்று 'ன்' முன் 'த' வருமொழியாக் வந்தால், நிலைமொழியுடைய 'ன்' ஆனது 'ற்' ஆகவும் வருமொழியில் உள்ள 'த' ஆனது 'ற' ஆகவும் மாறும்.

உ–ம். பொன் + தாலி = பொற்றாலி

(6) ள் — ட் ஆதல்

168. நிலைமொழியீற்றில் இருக்கும் 'ள்' வருமொழியில் வரும் க, ச, ப என்பவற்றை நோக்கி 'ட்' ஆக மாறும்.

உ–ம். முள் + செடி = முட்செடி
கள் + குடம் = கட்குடம்
முள் + பழம் = முட்பழம்

(7) ள் முன் த ஆனது ட ஆதல்

169. நிலைமொழி ஈற்றில் வரும் 'ள்' முன் 'த' வருமொழி முதலாக வந்தால் நிலைமொழி ஈற்றிலிருக்கும் 'ள்' ஆனது 'ட்' ஆகவும், வருமொழி முதலில் வரும் 'த' ஆனது 'ட' ஆகவும் மாறும்.

உ–ம். முள் + தாள் = முட்டாள்
முள் + தீது = முட்டீது

(8) ம முன் ள் ஆனது ண் ஆதல்

170. நிலைமொழியீற்றில் இருக்கும் 'ள்' வருமொழியில் வரும் 'ம' என்னும் எழுத்தை நோக்கி ண் ஆகும்.

உ–ம். முள் + மலை = முண்மலை
நாள் + மலர் = நாண்மலர்

(9) ள் முன் ந ஆனது ண ஆதல்

171. நிலைமொழியீற்று 'ள்' முன் 'ந' வருமொழியாக வரின் நிலைமொழியீற்று 'ள்' ஆனது 'ண்' ஆகவும், வருமொழி 'ந' ஆனது 'ண' ஆகவும் மாறும்.

உ-ம். எள் + நெய் = எண்ணெய்
தெள் + நீர் = தெண்ணீர்

(10) ல்—ற் ஆதல்

172. நிலைமொழியீற்றில் வரும் ல் வருமொழி முதலில் வரும் க, ச, ப என்னும் எழுத்துக்களை நோக்கி 'ற்' ஆக மாறும்.

உ-ம். கல் + கம்பம் = கற்கம்பம்
கல் + சிலை = கற்சிலை
நெல் + பயிர் = நெற்பயிர்

(11) ல் முன் த ஆனது ற ஆதல்

173. நிலைமொழியீற்றில் 'ல்' இருந்து வருமொழி முதலில் 'த' இருந்தால், 'ல்' ஆனது 'ற்' ஆவதோடு வருமொழி முதலில் இருக்கும் 'த' என்னும் எழுத்தும் 'ற' ஆக மாறும்.

உ-ம். கல் + தூண் = கற்றூண்
நல் + தாள் = நற்றாள்

(12) ல் முன் ந ஆனது ன ஆதல்

174. நிலைமொழியீற்றில் 'ல்' இருந்து வருமொழி முதலில் 'ந' வந்தால் 'ல்' ஆனது 'ன்' ஆகவும், நிலைமொழியில் இருக்கும் 'ந' ஆனது 'ன' ஆகவும் மாறும்.

உ-ம். நல் + நெறி = நன்னெறி
கல் + நெஞ்சம் = கன்னெஞ்சம்
புல் + நுனி = புன்னுனி

(13) ம முன் ல் ஆனது ன் ஆதல்

175. நிலைமொழியீற்றில் இருக்கும் 'ல்' வருமொழி ம என்னும் எழுத்தை நோக்கி ன் ஆகும்.

உ-ம். மேல் + மேல் = மேன்மேல்
கல் + மனம் = கன்மனம்

(14) ன் முன் ந் ஆனது ன ஆதல்

176. நிலைமொழியீற்றில் 'ன்' இருக்க, வருமொழி முதலில் 'ந' வந்தால், வருமொழி முதலில் உள்ள 'ந' ஆனது 'ன' ஆகும்.

பொன் + நாடு = பொன்னாடு
தன் + நலம் = தன்னலம்

(15) ண் முன் ந ஆனது ண ஆதல்

177. நிலைமொழியீற்றில் 'ண்' இருந்து வருமொழி முதலில் 'ந' இருந்தால், வருமொழி முதலில் இருக்கும் 'ந' ஆனது 'ண' ஆகும்.

விண் + நாடு = விண்ணாடு
தண் + நீர் = தண்ணீர்
கண் + நோய் = கண்ணோய்

குறிப்பு: க, ச, த, ப, ந என்றால் அவ்வரிசை எழுத்துக்கள் என்றுணர்க.

பயிற்சி 23

[குறிப்பு: இவைகளுக்கு விடை எழுதுதல்வேண்டும்.]

1. புணர்ச்சி என்றால் என்ன?

2. நிலைமொழி, வருமொழி—இவற்றை விளக்குக.

3. உயிரீறு, மெய்யீறு, உயிர் முதல், மெய்ம்முதல்—இவற்றை உதாரணங்களுடன் விளக்குக.

4. உயிரீறும் உயிர்முதலும் சேர்தல், உயிரீறும் மெய்ம்முதலும் சேர்தல், மெய்யீறும் மெய்ம்முதலும் சேர்தல், மெய்யீறும் உயிர்முதலும் சேர்தல்—இவற்றிற்கு ஒவ்வொரு உதாரணம் தருக.

5. இயல்பு புணர்ச்சி என்றால் என்ன? அவனெங்கே—இப் புணர்ச்சி இயல்பில் அடங்குமா?

6. விகாரப்புணர்ச்சி என்றால் என்ன? விகாரப்புணர்ச்சி எத்தனை வகைப்படும்? உதாரணங்கள் தருக.

7. யகர உடம்படுமெய் எப்போது வரும்? வகர உடம்படுமெய் எப்பொழுது வரும்?

8. ஏ முன் யகரவுடம்படுமெய்யும் வகரவுடம்படுமெய்யும் வருவதற்கு உதாரணங்கள் தருக.

9. காற்று + இல்லை, நாடு + யாது—இவை எப்படிப் புணர்ந்தன?

10. கீழ்வருபவைகளைச் சேர்த்தெழுதுக:

பூ + உடன், ஏறி + இறங்கினான், அவனே + இருந்தான், எ + ஆணி, இ + யானை, இ + நாடு, எ + மாடு, அ + பையன், உண்மை + இல்லை, விட்டு + ஓடினார், என்று + உரைத்தார், வரவு + ஏற்பு.

11. பிரித்தெழுதுக:

மட்குடம், முண்முடி, பொன்முகத்தான், கன்னெஞ்சம், உண்ணலர், பொற்றுளம்.

12. சேர்த்தெழுதுக:

வீரம் + மாண்பு, மறம் + வினை, நால் + திசை, பொன் + தாலி, நல் + குணம், நின்று + இறைஞ்சும், சிந்தையுள் + நின்ற, மேல் + மேல், பேச்சு + ஒலி, நாள் + தோறும்.

13. கீழ்வரும் அடிகளில் இருக்கும் சந்திகளைப் பிரித்தெழுதுக:

(1) புரிகின்ற வறம் பிறவுங் கேட்டணைந்தோ மெனப் புகல்வார்.
(2) என்றுங் கிழியாதென் பாட்டு.
(3) இருடீர் மணிவிளக்கத் தேழிலார் கோவே, (எழில்—ஒரு மலை).
(4) ஏசியிடலி னிடாமையே நன்றெதிரிற்
பேசு மனையாளிற் பேய் நன்று.
(5) உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு.
(6) உருவத்தா னீண்ட வுயர்மரங்க ளெல்லாம்
பருவத்தா லன்றிப் பழா.
(7) கொடுங்கோன் மன்னர் வாழும் நாட்டில்
கடும்புலி வாழுங் காடு நன்றே.
(8) அங்கிங்கெனாத படியெங்கும் பிரகாசமாய்
(9) ஆழ வமுக்கி முகக்கினு மாழ்கடனீர்
நாழி முகவாது நானாழி
(10) நல்லா ரொருவர்க்குச் செய்த வுபகாரம்
கன்மே லெழுத்துப் போற் காணுமே.

14. சேர்த்தெழுதுக:

அவன் + தான், சொன்னால் + தான், மண்ணின் + நின்று, சொல் + மிக்க, மரம் + காய், மெய் + ஞானம், நீரில் + குமிழி, தண் + தமிழ், தன் + நலம், சேர் + இடம், மண் + ஓரம், பின் + பகல்.

V. அணி இயல் (Figures of speech)

178. செய்யுளுக்கும் உரைநடைக்கும் ஓரளவு அணி செய்வது அஃதாவது அழகுசெய்வது அணி எனப்படும்.

உவமை (Comparison)

179. *கீழ்வரும் வாக்கியத்தைக் கவனியுங்கள்:*

பால்போன்ற வெண்மையான நிலா வந்தது. பால் என்பதை வைத்து நிலாவை அளக்கிறோம். அளக்குங் கருவியாக இருப்பது பால். எனவே, பால் என்பது உபமானம். உபமானம் என்பது உவமானம் என்றும் வரும். இங்கு அளக்கப்பட்ட பொருள் எது? நிலா. நிலா அளக்கப்பட்டது. எனவே, நிலா என்பது உபமேயம். உபமேயம் என்பது உவமேயம் என்றும் வரும். பாலுக்கும் நிலாவுக்கும் பொதுவான தன்மை வெண்மையாகும். உவமையைக் காட்டும் சொல் போல என்பது. போல என்பது உவம உருபு.

உவமானம்	உவமேயம்	உவமஉருபு	பொதுத்தன்மை
பால்	நிலா	போன்ற	வெண்மை

ஒரு பொருளோடு மற்றொரு பொருளுக்கு உள்ள ஒப்புவமையை விளக்குவது உவமையணி. உவமையணியில் உவமானம், உவமேயம், உவம உருபு, பொதுத்தன்மை என்னும் நான்கு உறுப்புக்களும் வரும்.

180. *கீழ்வரும் வாக்கியத்தைக் கவனியுங்கள்:*

பால்போன்ற நிலவு வந்தது.

இங்கே பொதுத்தன்மை வரவில்லை. சில வேளைகளில் உவமையணியில் பொதுத்தன்மை வராமலும் இருக்கும். நான்கு உறுப்புக்களும் பெற்றுவரும் உவமை அணியை முற்று உவமை அணி என்பர். பொதுத்தன்மை குறைந்துவரும் உவமை அணியைத் தொகை உவமை அணி என்பர்.

(1) கீழ்வரும் குறட்பாவைப் பாருங்கள்:

அடுத்ததைக் காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்.

அடுத்ததைப் பளிங்கு காட்டும்—உவமானம்
நெஞ்சம் கடுத்தது காட்டும் —உவமேயம்
போல் —உவம உருபு

∴ இச்செய்யுளில் உள்ளது உவமை அணி.

(2) கீழ்வரும் மூதுரைச் செய்யுளைப் பாருங்கள்:

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கன்மேல் எழுத்துப்போற் காணுமே—அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
நீர்மேல் எழுத்துக்கு நேர்.

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்—உவமேயம்
கல்மேல் எழுத்து—உவமானம்
போல் —உவமை உருபு

ஈரமிலா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்—உவமேயம்
நீர்மேல் எழுத்து—உவமானம்
நேர் —உவம உருபு

∴ இச்செய்யுளில் உள்ளதும் உவமையணி.

(3) கீழ்வரும் உவமையணியைப் பாருங்கள்:

எண்குதன் பிணவொடு இருந்தது போலப்
பெண்டுடன் இருந்த பெற்றி நோக்கி. —மணிமேகலை.

(நாகசாதியாரின் குரு, தன்னுடைய மனைவியுடன் உட்கார்ந்திருந்தது ஆண் கரடி தன் பெண் கரடியுடன் கொலுவீற்றிருந்ததுபோல இருந்ததாம். எண்கு—கரடி. பிணவு—பெண்).

181. உவமையணியில் போல என்பதுமட்டும் உவம உருபாக வரும் என்று நினைத்தல்கூடாது. போல என்பதற்குப் பதிலாக நேர், அற்று, ஒப்ப, புரைய, மான என்பனபோன்ற உவம உருபுகளும் வரும் என்று அறிக.

குறிப்பு: உவமையணி தெரியாததைத் தெரிந்ததைக்கொண்டு விளக்குவதற்காகவே பயன்படுத்தப்படுகிறது. அதைக் கண்டுபிடிக்கும்போது செய்யுளில் முதலில் இருப்பது உவமானம் என்றும் இரண்டாவது வருவது உவமேயம் என்றும் சொல்லிவிடுதல் கூடாது. எது உவமானம் என்றும் எது உவமேயம் என்றும் பார்த்துச் சொல்லப் பழகுவீராக.

உருவக அணி (Figurative Language)

182. உவமானத்தையும் உவமேயத்தையும் ஒன்றுபடுத்துவது உருவக அணி.

1. கீழ்வரும் உதாரணத்தைக் கவனியுங்கள்:

கல்வியாகிய கடலைக் கடப்பதற்கு முயற்சி என்னும் கப்பல் வேண்டும்.

கல்வி என்பது கடலாகவும், முயற்சி என்பது கப்பலாகவும் உருவகிக்கப்பட்டன.

ஃ இஃது உருவக அணி.

2. *கீழ்வரும் உருவக அணியைப் பாருங்கள்:*

(1) *மானிடனாகிய மாலுமி, திருக்குறள் என்னும் கலங்கரை விளக்கொளியைக்கொண்டு வாழ்க்கையாகிய கப்பலைத் துன்பமென்னும் கடலில் அச்சமின்றிச் செலுத்தி இன்பமாகிய கரையை அடையலாம்.*

(2) *மாணவர்களுடைய மனம் என்னும் நிலத்தில் அன்பு என்னும் பயிர் வளர்தல்வேண்டும்.*

(3) *மாணவர்களே, மொழிப்பற்று என்னும் சூரியன் தோன்றிவிட்டான். பிறமொழிப்பற்று என்னும் கொடிய இருள் மறைந்துவிட்டது.*

(4) —*முனிவெனும் வடவை வெங்கனலை*
அறிவெனும் பெரும் பரவையம் புனலினால் அவித்
தான்.— கம்பராமாயணம்.

தற்குறிப்பு ஏற்ற அணி

183. இயல்பாக நடப்பதில் புலவன் தன் குறிப்பை ஏற்றிச் சொல்வது தற்குறிப்பு ஏற்ற அணியாகும். *இஃது அழகான அணி.*

கீழ்வரும் உதாரணங்களைப் பாருங்கள்:

(1) கொடிய கைகேயியின் முகத்தைக் காணக் கூடாது என்று சூரியன் மறைந்தான்.

சூரியன் இயற்கையாக மறைந்தது. புலவர் கைகேயி யின் முகத்தைக் காணக்கூடாது என்று மறைந்தான் என்று கூறினார். இப்படிக் கூறுவதைத் தற்குறிப்பேற்ற அணி என்பர்.

(2) மணி ஆறாயிற்று. வழி தப்பிய சுந்தரத்தின் வருத்தத்தைப் பார்க்கப் பொறாததுபோலச் சூரியனும் மறைந்தது.

சூரியன் இயற்கையாக மறைந்ததில் புலவர் தம் குறிப்பை ஏற்றிக் கூறியதால் இதுவும் தற்குறிப்பேற்ற அணியாயிற்று.

குறிப்பு: செய்யுளிலும் கட்டுரையிலும் அணிகளை ஓரளவு பயன்படுத்துவதுதான் நல்லது. அளவுக்குமேல் அணிகளைக் கட்டுரை யில் கொட்டிவிடுதல் கூடாது. அப்படிச் செய்வது உணவில் அள வுக்குமேல் உப்பைக் கொட்டிவிடுவதுபோல் இருக்கும்.

பயிற்சி 24

1. உவமை அணி என்றால் என்ன? உதாரணம் தருக.

2. உவமை அணியில் இருக்கவேண்டியவை எவை?

3. உவம உருபுகள் எவை?

4. செல்வம் இருந்த இடத்தில் வறுமையும் வறுமை இருந்த இடத்தில் செல்வமும் இல்வாழ்க்கையில் உண்டாவதுபோல மேடாய் இருந்த இடம் பள்ளமாயும் பள்ளமாய் இருந்த இடம் மேடாயும் மணல் தேறியில் மாறி மாறி நிற்கும்—இஃது என்ன அணி?

5. உருவக அணி என்றால் என்ன?

6. கல்வியாகிய கடலைக் கடப்பதற்கு முயற்சியாகிய கப்பல் வேண்டும்—இஃது எப்படி உருவக அணியாகும்?

7. உவமையணிக்கும் உருவக அணிக்கும் உள்ள வேறுபாடு யாது?

8. தற்குறிப்பேற்ற அணி என்றால் என்ன?

9. தற்குறிப்பேற்ற அணிக்கு ஓர் உதாரணம் தருக.

VI

செய்யுள் இயல்

செய்யுள் வடிவம் மட்டும்

(Forms of two kinds of Tamil verse only)

184. *தமிழ்மொழியில் பலவகைச்செய்யுட்கள் உண்டு. தமிழிலக்கணம் அவற்றை நான்கு பெரும் பிரிவில் அடக்கும். அவை இவை:—*

நால்வகைப் பாக்கள்

1. *வெண்பா*
2. *ஆசிரியப்பா*
3. *கலிப்பா*
4. *வஞ்சிப்பா*

இங்கே அறியவேண்டுவன முதல் இரண்டுவகைப் பாக்களே ஆகும். மற்றவற்றைப் பின்பு தெரிந்துகொள்ளலாம்.

1. வெண்பா

வெண்பாவில் முக்கியமாகத் தெரிந்துகொள்ளவேண்டியவை குறள் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா என்பவை.

குறள் வெண்பா

185. *குறள் வெண்பாவில் இரண்டு அடிகள் இருக்கும். முதலடியில் நான்கு சீர்களும் இரண்டாம் அடியில் மூன்று சீர்களும் இருக்கும். அடிகளில் சீர்கள் இடம் விட்டு எழுதப்பட்டிருக்கும். சீர் என்று அறிவதற்கு இடம் விட்டு எழுதுவதே அடையாளம்.*

உ—ம். ***இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்(து)
அதனை அவன்கண் விடல்.***

நேரிசை வெண்பாவும் இன்னிசை வெண்பாவும்

186. *நேரிசை வெண்பாவில் நான்கு அடிகள் இருக்கும். முதலடியில் நான்கு சீர்களும், இரண்டாம் அடியில் மூன்று சீர்களும் ஒரு தனிச் சீரும், மூன்றும் அடியில் நான்கு சீர்களும் நான்காம் அடியில் மூன்று சீர்களும் இருக்கும். தனிச் சீருக்கு முன்னே கோடிட்டிருப்பது நேரிசை*

வெண்பாவிற்கு அறிகுறியாகும். இன்னிசை வெண்பாவிற்கு இரண்டாம் அடியில் தனிச்சீர் இராது.

நேரிசை வெண்பா

மையே! எமைமுன் வளர்த்தநீ கைவிட்டால்
ஐயே! இனிஎமையார் ஆதரிப்பார்?—பெய்யே
கடகட என்றும் களகள என்றும்
சடசட என்றும்நீ தான்.

இன்னிசை வெண்பா

நின்றன நின்றன நில்லா எனஉணர்ந்
தொன்றின ஒன்றின வல்லே செயிற்செய்க.
சென்றன சென்றன வாழ்நாள் செறுத்துடன்
வந்தது வந்தது கூற்று.

2. ஆசிரியப்பா

187. ஆசிரியப்பா, ஆசிரிய விருத்தம் என்னும் இரண்டுவகைப் பாக்களில் முன்னே ஆசிரியப்பாவின் உருவத்தைப் பாருங்கள். ஆசிரியப்பாவை அகவற்பா என்றும் சொல்வர்.

நிலைமண்டில ஆசிரியப்பாவும் நேரிசை ஆசிரியப்பாவும்

188. ஆசிரியப்பாவில் நிலைமண்டில ஆசிரியப்பா, நேரிசை ஆசிரியப்பா என இருவகை உண்டு. நிலைமண்டில ஆசிரியப்பாவில் எல்லா அடிகளும் நான்கு நான்கு சீர்களையே பெற்று வரும். கடைசி அடியின் இறுதிச்சீர் ஏகாரத்தில் முடியும். நேரிசை ஆசிரியப்பா, நான்கு சீர்களையே எல்லா அடிகளிலும் பெற்றுவரும். இறுதிச் சீர் ஏகாரத்திலே முடியும்.

[ஆசிரியப்பாவில் குறைந்தது மூன்று அடிகள் இருத்தல்வேண்டும்; அதிகமாக ஆயிரம் அடிகள்கூட வரலாம்.]

(1) நிலைமண்டில ஆசிரியப்பா

நாங்கூழ்ப் புழுவே! நாங்கூழ்ப் புழுவே
ஈங்கு நின்பணி பாங்குற ஆற்றுதி!
மண்ணில் மறைந்தே மண்ணை உண்டு
நண்ணிருள் தனினும் நண்பகல் தனிலும்

கொள்ளும் முயற்சி தள்ளா தாற்றி
உள்ளுறு மண்ணை உமிழ்தி புறம்பே.
அதனால் மாமும் செடியும் ஆங்காங்
கிதமுற வளர இனிதின் ஆற்றுதி!
அந்தோ! நின்னை அறியா மாக்கள்
சிந்தனை இன்றிச் செய்குவர் இன்னல்.
அன்னோர் துன்பம் ஆற்றா திருக்கப்
பன்னிப் பன்னி வேண்டு வம்மே!

(2) நேரிசை ஆசிரியப்பா

நாங்கள் பாடம் நன்றாய்க் கற்று
நல்வழி நின்று நாட்டிற் குழைத்திட
இன்னருள் புரிக இறைவ,
போற்றி நின்னடி! போற்றி, போற்றியே!

ஆசிரிய விருத்தம்

189. இதை விருத்தம் என்றும் சொல்வதுண்டு. விருத்தத்தில் ஓர் அடிக்கு ஆறு முதற்கொண்டு முப்பத்திரண்டு வரைக்கும் சீர்கள் வரும். சாதாரணமாக ஆறு முதல் பதினான்கு வரைக்கும் சீர்கள் வருவதுண்டு. இப்படி நான்கு அடிகள் வரும். சீர்கள் நீளமாயிருந்தால் அவைகளைச் சீர்களுக்குத் தக்கவாறு இரண்டு வரிகளாகவும், நான்கு வரிகளாகவும் மடித்தெழுதுவது வழக்கம்.

அறுசீர் விருத்தம்

(1) கல்லைத்தான் மண்ணைத்தான் காய்ச்சித்தான் குடிக்கத்தான்
கற்பித் தானா?
இல்லைத்தான் பொன்னைத்தான் எனக்குத்தான் கொடுத்துத்தான்
இரட்சித் தானா?
அல்லைத்தான் சொல்லித்தான் ஆரைத்தான் நோவத்தான்
ஐயோ! எங்கும்
பல்லைத்தான் திறக்கத்தான் பதுமத்தான் புவியிற்றான்
பண்ணி னானே!

இஃது ஆறுசீர்கள்கொண்ட விருத்தத்தில் ஒருவகை யாகும்.

அறுசீர் விருத்தம்

(2) மானிடர் துயரைச் சொல்வர்
மற்றுளோர் அதனைத் தீர்ப்பர்.
ஆனவர் உறுநோய் நீக்க
அனந்தமாம் பரிகா ரங்கள்.
மோனமாய் இடுக்கண் தாங்கி
முறையிட அறியா தல்லல்
தானுறு விலங்கைக் கொல்வோன்
தருமனோ பேயோ அம்மா.

ஆறுசீர்கள் பெற்றுவரும் விருத்த வகைகளில் இது வேறு ஒரு வகையாகும்.

பயிற்சி 25

1. நால்வகைப் பாக்கள் எவை?

2. வெண்பாவில் உள்ள மூன்று பிரிவுகள் எவை?

3. சீரை எப்படி அறியலாம்?

4. நேரிசை வெண்பாவிற்கும் இன்னிசை வெண்பாவிற்கும் வேற்றுமை யாது?

5. திருக்குறள் எவ்வகை வெண்பாவில் எழுதப்பட்டுள்ளது?

6. குறள் வெண்பா எப்படியிருக்கும்? ஒரு குறள் வெண்பாவை எழுதுக.

7. ஆசிரியப்பாவிற்கு வேறு பெயர் யாது?

8. அகவற்பா எப்படியிருக்கும்? இறுதிச்சீர் எவ்வாறு முடியும்? எத்தனை சீர்கள் ஒவ்வோர் அடியிலும் இருக்கும்?

9. இருவகை அகவற்பாக்களை கூறுக. இரண்டுக்குமுள்ள வேற்றுமை யாது?

10. ஆசிரியவிருத்தத்தில் அடிக்கு எத்தனை சீர்கள் அதிகமாக வரலாம்? சாதாரணமாக அடிக்கு எத்தனை சீர்கள் வரும்?

VII

நன்னூல் சூத்திரங்கள்

மனப்பாடஞ் செய்யவேண்டியவை

(எண்—நன்னூல் சூத்திர எண்)

எழுத்து இன்னது என்பதும் அதன் வகையும்

1. *மொழிமுதற் காரணமாம் அணுத் திரள்ஒலி
எழுத்(து); அது, முதல், சார்(பு) என இருவகைத்தே.*—58

முதலெழுத்தின் வகையும் விரியும்

2. *உயிரும் உடம்புமாம் முப்பது முதலே.*—59

வினாவெழுத்து

3. *எ யா முதலும் ஆ, ஓ ஈற்றும்
ஏ இரு வழியும் வினா வாகும்மே.*—67

வல்லின மெய்

4. *வல்லினம் க ச ட த ப ற என ஆறே.*—68

மெல்லின மெய்

5. *மெல்லினம் ங ஞ ண ந ம ன என ஆறே.*—69

இடையின மெய்

6. *இடையினம் ய ர ல வ ழ ள என ஆறே.*—70

குற்றியலுகரம்

7. *நெடிலோ(டு) ஆய்தம், உயிர், வலி, மெலி, இடை
தொடர்மொழி இறுதி வன்மை ஊர் உகரம்
அஃகும்; பிறமேல் தொடரவும் பெறுமே.*—94

குற்றியலிகரம்

8. *யகரம் வரக்'குறள் உ'த்திரி இகரமும்
அசைச்சொல் 'மியா'வின் இகரமும் குறிய.*—93

பகுபத உறுப்பு

9. *பகுதி விகுதி இடைநிலை சாரியை
சந்தி விகாரம் ஆறினும் ஏற்பவை
முன்னிப் புணர்ப்ப முடியும்எப் பதங்களும்.*—133

இறந்தகால இடைநிலை

10. *தடறஒற்(று) 'இன்'னே ஐம்பால் மூவிடத்(து)
இறந்த காலம் தரும்தொழில் இடைநிலை.*—142

நிகழ்கால இடைநிலை

11. *ஆநின்று, கின்று, கிறுமூ விடத்தின்*
ஐம்பால் நிகழ்பொழு(து) அறைவினை இடைநிலை.—143

எதிர்கால இடைநிலை

12. *பவ்வ மூவிடத்(து) ஐம்பால் எதிர்பொழு(து)*
இசைவினை இடைநிலையாம்; இவை சில இல.—144

உடம்படுமெய்

13. *இ, ஈ, ஐ வழி 'ய'வ்வும், ஏனை*
உயிர்வழி வவ்வும், ஏ முன்இவ் விருமையும்
உயிர்வரின் உடம்படுமெய் என்றாகும்.—162

குற்றியலுகரத்தின் முன்னும் முற்றியலுகரத்தின் முன்னும் உயிரும் யகரமும் புணர்தல்

14. *உயிர்வரின் 'உ'க்குறள் மெய்விட் டோடும்;*
'ய'வ்வரின் 'இ'ய்யாம்; முற்றும் அற்(று) ஒரோவழி.—164

மெய்யீற்றின்முன் உயிர்

15. *உடல்மேல் உயிர்வந்(து) ஒன்றுவ(து) இயல்பே.*—204

தனிக்குறில்முன் உயிர்புணர்தல்

16. *தனிக்குறில் முன்ஒற்(று) உயிர்வரின் இரட்டும்.*—205

மூவிடப்பெயர்கள்

17. *தன்மை: யான், நான், யாம், நாம்; முன்னிலை:*
எல்லீர், நீயிர், நீவிர், நீர், நீ;
அல்லன படர்க்கை; எல்லாம் எனல் பொது.—285

தன்மை முன்னிலைகளுக்கு ஒருமை பன்மை

18. *தான், யான், நான், நீ ஒருமை; பன்மைதாம்*
யாம், நாம், எலாம், எலீர், நீயிர், நீர், நீவிர்.—287

ஏழாம் வேற்றுமை உருபுகள்

19. *கண், கால், கடை, இடை, தலை, வாய், திசை, வயின்,*
முன், சார், வலம், இடம், மேல், கீழ், புடை, முதல்,
பின், பா(டு), அளை, தேம், உழை, வழி, உழி, உளி,
உள், அகம், புறம், இல், இடப்பொருள் உருபே.—302

உருபுமயக்கம்

20. *யாத னுருபிற் கூறிற் றாயினும்*
பொருள்செல் மருங்கின் வேற்றுமை சாரும்.—317

கட்டுரை விளக்கம்

இரண்டாம் பாகம்

(PART II)

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

1. வாக்கியம் (The Sentence)

கட்டுரை எழுதுவதற்கு வாக்கியங்கள் வேண்டும். ஆகையால், வாக்கியங்களைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டியது மிகவும் இன்றியமையாதது.

1. வாக்கியம் என்பது யாது? கருத்து முடிந்திருக்கும் சொற்றொடரே வாக்கியமாம். வாக்கியம் வடசொல். தமிழில் வாக்கியத்தை முற்றுச் சொற்றொடர் என்று சொல்லலாம். வாக்கியத்தில் எழுவாயும் பயனிலையும் செயப்படுபொருளும் இருக்கும். சில வாக்கியங்களில் எழுவாய் மறைந்து நிற்கும். சில வாக்கியங்களில் செயப்படுபொருள் இல்லாமலிருக்கும்.

உ—ம். 1. மாணிக்கமூர்த்தி பழம் வாங்கினான்.— இங்கே எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் இருக்கின்றன. மாணிக்க மூர்த்தி—எழுவாய். வாங்கினான்— பயனிலை. பழம்—செயப்படுபொருள்.

2. சாப்பிட வா.—இங்கே நீ என்னும் எழுவாய் மறைந்திருக்கிறது.

3. சந்திரன் உதித்தது.—இங்கே செயப்படு பொருள் இல்லை.

எழுவாயாக வருவன

2. வாக்கியத்தில் பலவகைப் பெயர்ச்சொற்களும் எழுவாயாக வரும். இங்கு மூன்றுக்கு மட்டும் உதாரணங்கள் கொடுக்கப்பட்டுள்ளன:

1. படிப்பது நல்லது.—படிப்பது என்பது தொழிற்பெயர். தொழிற்பெயர் எழுவாயாக வந்தது.
2. படிப்பவன் பரீட்சையில் தேறுவான்.— படிப்பவன்—வினையாலணையும் பெயர். வினையாலணையும் பெயர் இங்கே எழுவாயாக வந்தது.
3. அன்பே மக்களை ஒன்றுசேர்க்கும். — அன்பு—பண்புப்பெயர். இங்கே பண்புப் பெயர் எழுவாயாக வந்தது.

செயப்படுபொருளாக வருவன

3. எல்லாப் பெயர்களும் செயப்படுபொருளாக வரும்.

உ-ம். 1. நீ அன்பைக் காட்டு.—அன்பு—பண்புப் பெயர். பண்புப்பெயர் செயப்படுபொருளாயிற்று.

2. அவர் வந்தவரை அனுப்பிவிட்டார்.—வந்தவர்—வினையாலணையும் பெயர். செயப்படுபொருளாயிற்று.

3. அவருக்கும் இவருக்கும் கொடுக்கல் வாங்கல் உண்டு.—கொடுக்கல், வாங்கல்—இரண்டும் தொழிற்பெயர்கள். இங்கே இரண்டு தொழிற்பெயர்கள் செயப்படுபொருளாயின.

பயனிலையாக வருவன

4. வாக்கியத்தில் பலவகை வினைமுற்றுக்களும் வினுப்பெயரும் பலவகைப் பெயர்ச்சொற்களும் பயனிலைகளாக வரும்.

உ-ம். 1. கந்தன் போனான்.—போனான்—போ என்னும் வினைச்சொல்லிலிருந்து உண்டான வினைமுற்று, பயனிலையாக வந்தது.

2. அவன் கரியன்.—கரியன்—கருமை என்னும் பண்புச்சொல்லிலிருந்து உண்டான குறிப்புவினைமுற்று, பயனிலையாக வந்தது.

3. வந்தவன் யார்?—யார்—வினுவெழுத்து, பயனிலையாக வந்தது.

4. இராமன் என் தம்பி.—தம்பி—பெயர்ச்சொல் பயனிலையாக வந்தது.

வாக்கிய வகை (Kinds of sentences)

5. வாக்கியம் மூவகைப்படும்.

உ-ம். 1. தனி வாக்கியம் (Simple sentence).

2. தொடர்நிலை வாக்கியம் (Connecting sentence).

3. கலவை வாக்கியம் (Mixed sentence).

தனி வாக்கியம்

6. ஒரே எழுவாய் ஒரே வினைமுற்றைப் பெற்று வருவதும், ஒன்றுக்கு மேற்பட்ட எழுவாய்கள் ஒரே வினைமுற்றைப் பெற்று வருவதும் தனி வாக்கியம் எனப் படும்.

உ—ம். 1. இளங்கோ சிலப்பதிகாரத்தை இயற்றி ஞர்.

2. தமிழர்களும் சீனர்களும் எகிப்தியர்களும் பண்டைக் காலத்தில் சிறந்து விளங்கி ஞர்கள்.

தொடர்நிலை வாக்கியம்

7. ஒரே எழுவாய், பல வினைமுற்றுக்களைக்கொண்டு முடிவது தொடர்நிலை வாக்கியம்.

உ—ம். 1. சிலப்பதிகாரம் ஐம்பெருந்தமிழ்க் காப்பி யங்களுள் ஒன்று; தமிழ்நாட்டு முடியுடை வேந்தர் மூவர்க்கும் உரியது; மூன்று சிறந்த உண்மைகளை உணர்த் தும்பொருட்டு எழுந்தது; சொற்சுவை பொருட்சுவை களிற் சிறந்து விளங்குவது.

2. சூரிய நாராயண சாஸ்திரியார், தமிழ்மொழி யோடு வடமொழியும் ஆங்கிலமும் கற்றவர்; நாடகக்கலை யும் நடிப்புத்திறனும் நன்கமைந்த நற்குணச் செல்வர்; உண்மையை என்றும் உறுதியாக உரைத்தவர்.

கலவை வாக்கியம்

8. பல வாக்கியங்கள் கலந்து ஒரு வாக்கியமாக வரு வது கலவை வாக்கியம்.

உ—ம். (1) தொழில்களுள் உழவும் வாணிபமும் மிக வும் சிறந்தவை என்பது அறிஞர்க்கெல் லாம் ஒத்தது.

(2) ஈயினுல் பலவித நோய்கள் உண்டாகின்றன என்பதை ஒவ்வொருவரும் அறிந்து ஈக் களைப் பண்டங்களில் மொய்க்காதபடி பார்த்தல்வேண்டும்.

(3) அநுமன் இராமபிரானைப் பார்த்து, "நான் கற்பினுக்கு அணியை இலங்கையில் கண்களால் கண்டேன். இனித் துயர் நீக்குக" என்று கூறினன்.

(4) புலி கூப்பிட்டதும் பிராமணன், "மரணம் எப்பொழுதும் வரும். ஆறிலுஞ் சாவு, நூறிலும் சாவு என்பது பழமொழி. புலியோ பொற்காப்பைத் தருகிறேன் என்கிறது. நான் அதனருகில் போய் வாங்குகிறேன்" என்று சிந்தித்துப் புலியின் அருகில் சென்றான்.

2. வாக்கிய அமைப்பில் அறியவேண்டியவை (Construction of Sentence)

1. தமிழ் வாக்கியத்தில் பெரும்பாலும் எழுவாய் (Subject) முதலிலும், செயப்படுபொருள் (Object) இடையிலும், பயனிலை (Predicate) கடைசியிலும் வரும். செய்யுளில் இம்முறை மாறி வருதலுமுண்டு.

உ—ம். கண்ணன் முருகனைக் கண்டான்.

2. எழுவாயைத் தழுவிச் சில சொற்களும், செயப்படுபொருளைத் தழுவிச் சில சொற்களும், பயனிலையைத் தழுவிச் சில சொற்களும் அடைமொழிகளாக வரும்.

உ—ம். நல்ல அறிவுடைய மாணவர்கள், பல ஐரோப்பியர்களாலும் புகழப்படுகின்ற தமிழ்மொழியைப் படியாமல் இருக்கமாட்டார்கள்.

3. பயனிலை, எழுவாயுடன் திணை, பால், எண், இடம் ஆகிய இவைகளுடன் மாறுபடாமல் இசைந்து நிற்கும்.

உ—ம். அவன் செய்தான். அவள் செய்தாள். அவர் செய்தார். அது செய்தது. அவை செய்தன. நான் செய்தேன். நாங்கள் செய்தோம். நீ செய்தாய். நீர் செய்தீர்.

4. தன்மைப் பெயர்களுடன் முன்னிலைப் பெயர்களும் படர்க்கைப் பெயர்களும் சேர்ந்து எழுவாயாக வந்தால் அந்த எழுவாய் தன்மைப்பன்மை வினைமுற்றைப் பயனிலையாகக் கொள்ளும்.

உ-ம். 1. நானும் நீயும் வந்தோம்.
2. நானும் அவனும் வந்தோம்.
3. நானும் நீயும் அவனும் வந்தோம்.

5. முன்னிலைப் பெயர்களுடன் படர்க்கைப் பெயர்கள் சேர்ந்து எழுவாயாக வந்தால் அந்த எழுவாய் முன்னிலைப்பன்மை வினைமுற்றையே பயனிலையாகக் கொள்ளும்.

உ-ம். நீயும் அவனும் வந்தீர்கள்.

6. ஒருவர் என்னும் பெயர் ஆண்பாலுக்கும் பெண்பாலுக்கும் பொது. அது பலர்பால் வினையையே ஏற்று வரும்.

உ-ம். 1. ஒருவர் இங்கே வந்தார்.
2. ஆண்களுள் ஒருவரும் இக்காலத்தில் இரு மனைவியரை மணக்க விரும்பார்.
3. பெண்களுள் ஒருவரும் படியாமல் இருக்க விரும்பார்.

7. மரியாதைக்காக ஆண்பாலும் பெண்பாலும் பலர்பால் விகுதி ஏற்பதுண்டு. அப்படி ஏற்றுவரும் பெயர்கள் பலர்பால் வினைமுற்றுக்களையே கொள்ளும்.

உ-ம். 1. உபாத்தியாயர் பாடம் கற்பிக்கிறார்.
2. அவ்வையார் நல்வழி எழுதினார்.

8. மரியாதைப்பன்மை ஏற்றுவரும் எழுவாய் பலர்பாலில் இருந்தால் அதனுடைய பிரதிப்பெயரும் (pronoun) பலர்பாலாக இருத்தல்வேண்டும்.

உ-ம். 1. உபாத்தியாயர் நாளைக்குத் தம் ஊரிலிருந்து வருவார்.
2. அவ்வையார் அழகாகத் தம் நீதிநூலில் இதைக் கூறியுள்ளார்.
3. அவர்கள் எப்பொழுதும் தங்கள் வேலைகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

9. ஒவ்வொருவர் என்னும் தொடர் பன்மை வினைமுற்றையும் ஒவ்வொன்று என்னும் தொடர் ஒருமை வினைமுற்றையும் கொள்ளும்.

உ—ம். 1. ஒவ்வொருவரும் பாட்டைப் பாராமல் படிக்கின்றனர்.

2. ஒவ்வொன்றும் நாள்தோறும் உடைகிறது.

10. உயர்திணைப் பெயர்களும் அஃறிணைப் பெயர்களும் கலந்து வரும்போது சிறப்பு நோக்கி உயர்திணை வினைமுற்றுவது இழிவு நோக்கி அஃறிணை வினைமுற்றுவது வரும். சில இடங்களில் மிகுதி நோக்கி உயர்திணை வினைமுற்றோ அஃறிணை வினைமுற்றோ வரும்.

உ—ம். 1. சந்திரனும் சான்றோரும் ஒப்பர்.—சிறப்பு நோக்கி உயர்திணை வந்தது.

2. மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா.—இழிவு நோக்கி அஃறிணை வினைமுற்று வந்தது.

3. பறவைகளுள் காக்கையும், மனிதருள் குள்ளனும், விலங்குகளுள் நரியும், மாதர்களுள் பணிப்பெண்ணும் தந்திரமுள்ளவர்களாய் இருக்கிறார்கள்.—மிகுதியினால் பன்மை வினைமுற்று வந்தது.

11. பலர், சிலர், அநேகர், பல, சில என்னும் பன்மைப் பெயர்கள் பன்மை வினைகளையே கொள்ளும்.

உ—ம். 1. சிலர் ஆடுகின்றனர். பலர் பாடுகின்றனர். அநேகர் வருகின்றனர்.

2. பல நடக்கின்றன. சில தவழ்கின்றன.

12. யார் என்னும் வினா உயர்திணை முப்பாலுக்கும் வரும்.

உ—ம். அவன் யார்? அவள் யார்? அவர் யார்?

குறிப்பு: இக்காலத்தில் நீ யார் என்றும் நான் யார் என்றும் முறையே முன்னிலையிலும் தன்மையிலும் வருவதுண்டு.

13. ரூபா, அணா, பவுன், ராத்தல், மணங்கு முதலியவை பன்மையில் வந்தாலும் ஒருமை வினையே கொள்வது வழக்கம். இதை ஒருமை பன்மை மயக்கம் என்பர்.

உ—ம். 1. என்னிடம் நூறு மணங்கு இருக்கிறது.

2. அவரிடம் 1000 ரூபா இருக்கிறது.

3. நாள்தோறும் போருக்காக $8\frac{1}{2}$ கோடி பவுன் பிடிக்கிறது.

[நூறு மணங்கு உண்டு. நூறு மணங்கு இல்லை. 1000 ரூபா உண்டு. ஆயிரம் ரூபா இல்லை—இப்படியும் எழுதலாம்.]

14. பல பெயர்கள் ஒன்றுசேர்ந்து எழுவாயாக வரும்போது ஒன்றுக்கு உம்மை இருந்தால் மற்றவற்றிற்கும் உம்மை வேண்டும். வினைகள் அடுக்கி வரும்போதும் உம்மை வேண்டும்.

உ—ம். 1. அண்ணனும் தம்பியும் அக்கையும் தங்கையும் அன்பாய் இருக்கிறார்கள்.

2. இந்தியாவில் வறுமை மிகுந்திருப்பதால், வடநாட்டிலும் தமிழ்நாட்டிலும் உள்ள மக்கள் திடமான உடல் வலிமை இல்லாதவர்களாகவே இருக்கிறார்கள்.

3. சிறுவர் சோம்பியிராமல் ஆடியும் ஓடியும் தேகப்பயிற்சி செய்தும் உற்சாகத்தோடு இருத்தல் வேண்டும்.

4. தமிழ்நாட்டில் இருந்ததுபோன்ற எலிச்சாதி ஒன்று அமெரிக்க நாட்டில் உள்ளது என்றும், அங்கே கஸ்தூரி எலி என அது சொல்லப்படுவது என்றும், பீவர் என்னும் பிராணியையும் முயலையும் ஒப்ப அது மதிக்கப்படுவது என்றும், அதன் மயிரால் உயர்ந்த ஆடை, கம்பளம் முதலியன செய்யப்பட்டன என்றும் அந்த எலி இனம் இப்பொழுது இல்லை என்றும் கூறுவர்.

15. ஐயப்பொருளில் வரும் ஓகாரத்திலும், பிரிக்கும் பொருளில் வரும் ஆவது என்னும் சொல் வருவதன் பின்னும் அல்லது என்னுஞ் சொல் வரவேண்டியதில்லை. பயனிலை ஒருமையாகவே இருக்கும்.

உ—ம். 1. நாயோ பூனையோ வருகிறது. (நாயோ அல்லது பூனையோ வருகிறது என்று சொல்வது பிழையானது.)

2. பறவையாவது மிருகமாவது இதைத் தின்கிறது. (பறவையாவது அல்லது மிருகமாவது என்று எழுதுவது பிழையானது.)

16. 'அன்று' என்பது ஒருமைக்கும் அல்ல என்பது பன்மைக்கும் வரும்.

உ—ம். 1. அது நீ சொல்லியது அன்று. ஒன்று அன்று.
2. நீ சொல்லியவை அவை அல்ல. பல அல்ல.

17. எப்படி, எவ்வாறு, எவ்வளவு, எங்ஙனம், எது என்று வாக்கியம் தொடங்கினுல் சமநிலை வருவதற்கு அப்படி, அவ்வாறு, அவ்வளவு, அங்ஙனம் அது என்று வரல் வேண்டும்.

உ—ம். 1. எவ்வாறு நூலின் நிறம் இருக்கிறதோ அவ்வாறு சேலையின் நிறமும் இருக்கிறது.
2. ஒருவர் எங்ஙனம் பேசுகிறுரோ அங்ஙனமே நடந்து காட்டுதலும் வேண்டும்.

(இப்படியே மற்றவற்றிற்குங் கொள்க.)

18. எத்தனை என்பது எண்ணையும், எவ்வளவு என்பது அளவையும் குறிக்கும்.

உ—ம். 1. எத்தனை தேங்காய் வாங்கினுய்?
2. எவ்வளவு அரிசி இருக்கிறது?

19. ஒரு என்பது உயிர்மெய்யெழுத்தின் முன்னும், ஓர் என்பது உயிர் எழுத்தின் முன்னும் வருதல் நலம்.

உ—ம். 1. ஒரு நாய்
2. ஓர் இலை

20. அது என்பது உயிர்மெய் முன்னும், அஃது என்பது உயிர் முன்னும் வருவது நல்லது.

உ—ம். அது போயிற்று
அஃது இல்லை

குறிப்பு: 19, 20—இவ்விதிகளுக்கு மாறுக எழுதுவதும் உண்டு.

21. ஒரு என்பதை வினைச் சேர்த்தெழுதல் தமிழ் வழக்கன்று.

நல்ல மழை பெய்தது என்று எழுதல்வேண்டுமே யல்லாமல் ஒரு நல்ல மழை பெய்தது என்று எழுதுவது பிழையானது.

22. வேற்றுமை உருபுகளை வாக்கியத்தின் இறுதியில் முடியும்படி எழுதல் தகுதியன்று.

துளசிதாசர் இராமரைப்பற்றி நல்ல பாட்டுக்களைக் கற்றுக்கொடுத்தார். ('துளசிதாசர் நல்ல பாட்டுக்களைக் கற்றுக்கொடுத்தார் ராமரைப்பற்றி' என்று எழுதுவது தப்பு.)

23. எழுவாய், 'கள்' விகுதி பெற்றால் வினைமுற்றும் 'கள்' விகுதி பெறுவது நல்லது.

உ—ம். போனவர்கள் வந்தார்கள். மக்கள் பேசுகிறார்கள். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

24. எழுவாய் அர் விகுதி பெற்று வரும்போது வினைமுற்று அர் விகுதி பெற்று வரும்.

உ—ம். போனவர் வந்தார். பெரியவர் சொன்னார். திருநாவுக்கரசர் பாடினார்.

பயிற்சி

விடப்பட்ட இடங்களில் ஏற்ற நிகழ்காலப் பயனிலைகளைக் கூறுக:

I.
1. பசுக்கள் வயலில் ———.
2. பசு கன்றுடன் ———.
3. இன்று நமக்குச் செய்தி ———.
4. இன்று நமக்குச் செய்திகள் ———.
5. வந்தவர்கள் எங்கே ———.
6. அண்ணனும் தங்கையும் ———.
7. பூனையொடு நாய் சண்டை ———.
8. நூறு ஆடுகள் என்னிடம் ———.
9. எண்பது படி அரிசி அவரிடம் ———.
10. நானும் நீயும் ———.

II. விடப்பட்ட இடங்களில் பயனிலைகளுக்கு ஏற்ற எழுவாய்கள் கூறுக:

1. ——— வீட்டைக் காக்கின்றன.
2. ——— இன்று ஓடா.
3. ——— மேய்கிறது.
4. ——— எவை?
5. ——— எது?
6. ——— யாது?
7. ——— யாவை?
8. ——— கிடையா.
9. ——— இல்லை.
10. ——— உண்டு.

III. தான், தாம், தன், தம், தங்கள், எல்லாம் ஆகிய இவற்றுள் ஏற்றதை விடப்பட்ட இடங்களில் பெய்து எழுதுக:

1. ஒவ்வொருவரும்—வேலையைச் செய்கின்றனர்.
2. அவன்—இதைச் செய்தான்.
3. அவர்—அங்குப் போகச் சொன்னார்.
4. கண்ணன் நேற்றுத்—ஊருக்குப் போனான்.
5. திருவள்ளுவர் இதைத்—நூலில் சொல்லியுள்ளார்.
6. நீங்கள்—இப்படிக் கூறுகிறீர்கள்.
7. வியாபாரிகள் என்றும்—பொருள்களை அதிக விலைக்கே விற்கிறார்கள்.
8. அவை —— இப்படிச் செய்தன.
9. நாங்கள் —— பள்ளிக்கூடம் போகிறோம்.
10. வந்தவர் இங்கே —— குடையை வைத்துவிட்டுப் போனார்.

IV. கீழ்வரும் சொற்கள் எல்லாவற்றையும் ஒன்றுசேர்த்துப் பொருள் விளங்கும்படி வாக்கியமாக அமைத்து எழுதுக:

1. நற்குணத்தையும், அரசாங்கத்தார், வியந்து, ராய்பகதூர், கல்வித்திறமையையும், கண்டு, என்ற, அவருடைய, பட்டம், தர்ம சிந்தையையும், வழங்கினர், அவருக்கு.

2. இரண்டு மணிக்கு, பிற்பகல், நாங்கள், புறப்பட்டோம், சென்னைக்கு.

3. சென்னையில், இருக்கின்றன, கல்லூரிகளும், சில, பல பள்ளிக்கூடங்களும்.

4. பிழைக்கின்றனர், சென்னையில், பலர், மல மாகாணங்களிலிருந்து, வந்து.

5. அவள் தாயார் சௌந்தரியம்மாளும், கோயிலுக்குப் போனார்கள் சிறுமி சாரதாவும்.

6. திரிசிரபுரத்துக்கு அருகில், இருக்கின்றன, ஸ்ரீரங்கமும், திருவானைக்காவும்.

V. கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள பிழைகளைத் திருத்துக:

1. அவை யாது? இவை எது?
2. பத்திரிகைகளால் உண்டாகும் தீமைகள் மிகக் கொடியது.
3. கோவிலுக்குப் போவதற்கு ஒருவர் வழி காட்டினான்.
4. அவரைப்பற்றி வருந்தாதார் கிடையாது.
5. அவனுக்கு ஆசையும் நம்பிக்கையும் கிடையாது.
6. தஞ்சாவூர் ஜில்லாவில் இருபோகமும் முப்போகமும் விளைகிறது.
7. இராமர் காட்டிற்குப்போகும் முன் தன் தாயிடஞ் சென்றான்.
8. இவருடைய கொள்கையும் அவருடைய கொள்கையும் ஒன்றுதான்.
9. இப்பொழுது அவைகளெல்லாம் முற்றும் மாறிவிட்டது.
10. அவை இனிமையானதாக இருந்தன.

3. பிழையான வாக்கியங்களும் திருத்தங்களும்

(Common errors and their corrections)

(இங்கே வேண்டிய திருத்தங்கள்மட்டும் கொடுக்கப்பட்டுள்ளன. விட்டவற்றைக் கூட்டிக்கொள்க.)

	பிழை	திருத்தம்
I. (1)	ஆண்டுகள் சென்றது.	ஆண்டுகள் சென்றன.
(2)	வண்டிகள் ஓடாது.	வண்டிகள் ஓடா.
(3)	நாயும் பூனையும் சண்டையிடுகிறது.	... சண்டையிடுகின்றன.
(4)	வருவதும் போவதும் கிடையாது.	வருவதும் போவதும் கிடையா.
(5)	அது நம்மிடம் உள.	அது நம்மிடம் உளது.
(6)	அவை இங்கே உளது.	அவை இங்கே உள.
(7)	நல்லது அல்ல.	நல்லது அன்று.
(8)	நல்லவை அன்று.	நல்லவை அல்ல.
(9)	இது எல்லாம்.	இவை எல்லாம்.

	பிழை	திருத்தம்
(10)	நீங்கள் தான்.	நீங்கள் தாம்.
(11)	நீர் தான்.	நீர் தாம்.
(12)	அவர் தான் போனார்.	அவர் தாம் போனார்.
(13)	அவை தான் இல்லை.	அவை தாம் இல்லை.
(14)	இவைகளில் முக்கியமானது திணை வகைகள்.	இவைகளுள் முக்கியமானவை திணை வகைகள்.
II. (1)	வந்தவன் அவன் அல்ல.	வந்தவன் அவன் அல்லன்.
(2)	வந்தவர் அவர் அல்ல.	வந்தவர் அவர் அல்லர்.
(3)	ஜனங்கள் கிடையாது.	ஜனங்கள் இல்லை.
(4)	நீக்ரோவர் கிடையாது.	நீக்ரோவர் கிடையார்.
(5)	அவரைப் போற்றுதவர் கிடையாது.	அவரைப்போற்றுதவர் கிடையார்.
III. (1)	அது இல்லை.	அஃது இல்லை.
(2)	ஒரு ஆடு.	ஓர் ஆடு.
IV. (1)	அவர் போக முடியாது.	அவர் போவது முடியாது.
(2)	நான் நகர முடியவில்லை.	நான் நகர்வது முடியவில்லை.

V. (1) எகிப்து என்னும் ஒரு தேசத்தைக் காண்பீர்.—எகிப்து தேசத்தைக் காண்பீர்.

(2) திடீரென ஒரு மின்னல் மின்னியது.—திடீரென மின்னல் மின்னியது.

VI. (1) அவர் நேற்றுத் தன் வீட்டிற்குப் போனார்.—அவர் நேற்றுத் தம் வீட்டிற்குப் போனார்.

(2) அவர்கள் இனிமேல் தம் குற்றங்களை உணர்வார்கள்.—அவர்கள் இனிமேல் தங்கள்...

VII. (1) எனது தம்பி.—என் தம்பி.

(2) நமக்கு அடித்தான்.—நம்மை அடித்தான்.

VIII. (1) நாயோ அல்லது பூனையோ வந்தன.—நாயோ பூனையோ வந்தது.

(2) நாயாவது அல்லது நரியாவது அதைத் தின்றிருக்கும்.—நாயாவது நரியாவது அதைத் தின்றிருக்கும்.

IX. (1) இந்தத் தெருவில் நூறு வீடுகளுக்குமேல் இருக்கிறது.—இந்தத் தெருவில் வீடுகள் நூறுக்கு மேல் இருக்கின்றன.

(2) ஜனங்கள் அதிகமாக மாண்டுபோகின்றனர்.—ஜனங்கள் அதிகமாக மாண்டுபோகிறார்கள்.

(3) நான் பிரயாணத்தை நடத்தினேன்.—நான் பிரயாணஞ் செய்தேன்.

(4) நம் நாட்டில் பண்டைக்காலத்தில் மென்மையான மசிலின் துணி நெய்தார்கள் என்று தெரிகிறது. } என்பது தெரிகிறது.

(5) ஆப்பிரிக்காவை இருண்ட கண்டம் என்று அழைக்கிறார்கள்.—என்று சொல்கிறார்கள்.

X. காவிரியாற்றில் நீர் மிகுதியாகி வெள்ளம் வந்தது.—காவிரியாற்றில் நீர் மிகுதியாக வெள்ளம் வந்தது.

பயிற்சி

கீழ்வரும் வாக்கியங்களைக் காரணங்காட்டித் திருத்துக:

1. அவைகள் நம்முடையது. மாடுகள் மேய்கிறது. இவை எது?

2. சண்டை தொடங்கி இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகிறது.

3. குண்டுவீச்சு நடக்கும்போது வெளியிலோ அல்லது ஜன்னலுக்கு அருகிலோ போதல் கூடாது.

4. நமக்குப் படங்கள் எப்படி கிடைக்கிறது?

5. தாஜ்மஹாலைக் கட்டி முடிக்க பத்தொன்பது ஆண்டுகள் சென்றது.

6. அவரைப் பார்த்து இரண்டு மூன்று மாதங்களாயிற்று.

7. புத்தகங்கள் உனக்கு எப்படிக் கிடைத்தது?

8. எல்லாவற்றிலும் அதிகமானது ஆகாயவிமானங்கள்.

9. இந்துக்கள் கோயில்களை இடிப்பதும் விக்கிரகங்களை உடைப்பதும் கோயில் பொருள்களைக் கொள்ளையடிப்பதும் கஜினி முகம் மதிற்குச் சரி என்று தோன்றிற்று.

10. ஆப்கானிஸ்தானம் ஒரு மலைநாடு.

11. அவர் எப்பொழுதும் தன் நண்பனுடனே இருப்பார்.

12. தென் கண்டங்கள் என்பது எது?

13. நதிச் சமவெளிகள் ஆப்பிரிக்காவில் கிடையாது.

14. அரசன் இதைக் கூறினார்.

15. மீன் பிடிப்பதும் வேட்டையாடுவதும் இவர்கள் தொழில்.

16. ஒவ்வொரு பாகமும் ஒரு ஜில்லா எனப்படும்.

4. வாக்கிய மாற்றம் (Combination and transformation of sentences)

வாக்கியங்கள் பலவாய் இருப்பனவற்றைச் சொற் சுருக்கம் கருதியும் அழகு நோக்கியும் ஒரே வாக்கியமாக மாற்றலாம். முதன்மை அளிப்பது நோக்கிச் செய்வினையைச் செயப்பாட்டு வினையாக மாற்றலாம். செய்தியைச் சுருங்கக் கூறுவதற்காக நேர்க்கூற்றை (நேர்முகப் பேச்சை) அயற்கூற்றாக (அயல்முகப் பேச்சாக) மாற்றலாம். இவ்வகைப் பயிற்சி நல்ல உரைநடை எழுதுவதற்கு இன்றியமையாதது.

பெயரோடும் வினையோடும் உம் என்னும் இடைச் சொல்லைச் சேர்த்துப் பல வாக்கியங்களாயிருப்பதை ஒரு தனி வாக்கியமாக்கலாம்.

தனி வாக்கியமாக மாற்றல்

கீழ் வருவனவற்றைப் பாருங்கள்:

மூன்று வாக்கியங்கள்

1. கம்பர் இராமாயணம் இயற்றினார். அவர் சரஸ்வதி அந்தாதி பாடினார். அவர் சடகோபரந்தாதியும் எழுதினார்.

தனி வாக்கியம்

கம்பர், இராமாயணத்தையும் சரஸ்வதி அந்தாதியையும் சடகோபரந்தாதியையும் இயற்றினார்.

இரு வாக்கியங்கள்

2. வரிகாரர் மக்களிடத்தில் வரி வாங்குகிறார். அவர் வாங்கிய வரிப்பணத்தை வரிச்சாவடியில் கட்டுகிறார்.

வரிகாரர் மக்களிடமிருந்து வரி வாங்கி அதை வரிச் சாவடியில் கட்டுகிறார்.

மூன்று வாக்கியங்கள்

3. திரு. வி. கலியாண சுந்தரனார் இனிமையாகச் சொற்பொழிவாற்றுவார். அவர் இனிமையாக உரை நடை எழுதுவார். அவர் இனிமையாகச் செய்யுளும் இயற்றுவார்.

தனி வாக்கியம்

திரு. வி. கலியாண சுந்தரனார் இனிமையாகச் சொற் பொழிவாற்றவும், இனிய உரைநடை யெழுதவும், இனி மையாகச் செய்யுள் இயற்றவும் வல்லவர்.

இரு வாக்கியங்கள்

4. வாத்து நீரில் வசிக்கும். அது நிலத்திலும் வசிக்கும்.

வாத்து நீரிலும் நிலத்திலும் வசிக்கும்.

நான்கு வாக்கியங்கள்

5. சிறுவர்கள் வண்டிகளின்பின் ஏறுவது கூடாது. வண்டியைப் பிடித்துக்கொண்டும் அவர்கள் ஓடுவது கூடாது. வண்டி ஓடும்பொழுது இறங்குதலும் கூடாது. இவ்வாறுசெய்வது ஆபத்து.

தனி வாக்கியம்

சிறுவர்கள் வண்டியின்பின் ஏறுவதும் வண்டியைப் பிடித்து ஓடுவதும் வண்டி ஓடும்போது இறங்குவதும் ஆபத்தானவை.

மூன்று வாக்கியங்கள்

6. வீதியில் நடப்பவர்கள் வாழைப்பழம் தின்று விட்டுத் தோலைச் சாலைவழிகளில் போடுவது கூடாது. வீதியில் எச்சில் துப்புவதும் சளியைச் சிந்துவதும் தப்பிதமானவை. அப்படிச் செய்வது பெரிய பாவமு மாகும்.

தனி வாக்கியம்

வீதியில் நடப்பவர்கள் வாழைப்பழத்தோலைச் சாலை வழிகளில் போடுவதும் வீதியில் எச்சில் துப்புவதும் சளியைச் சிந்துவதும் செய்யக்கூடாத செயல்களன்றிப் பாபச் செயல்களுமாகும்.

செய்வினை செயப்பாட்டு வினையாக்கல்

ஒரு பொருள் செய்கிற வினையே செய்வினையாகும் செய்வினையோடு படு என்பதையோ உண் என்பதையோ சேர்த்தால் செயப்பாட்டுவினை வரும்.

கீழ்வருவனவற்றைப் பாருங்கள்:

செய்வினை

1. சேக்கிழார், பெரிய புராணத்தை இயற்றினார்.

செயப்பாட்டுவினை

பெரிய புராணம் சேக்கிழாரால் இயற்றப்பட்டது.

செய்வினை

2. கட்டியங்காரன் சச்சந்த மன்னனைக் கொன்றான்.

செயப்பாட்டுவினை

சச்சந்த மன்னன் கட்டியங்காரனால் கொலையுண்டான்.

செய்வினை

3. ஔவையார் பல பாடல்கள் இயற்றினார்.

செயப்பாட்டுவினை

பல பாடல்கள் ஔவையாரால் இயற்றப்பட்டன.

செய்வினையில் எழுவாய் முதல் வேற்றுமையிலும், செயப்படுபொருள் இரண்டாம் வேற்றுமையிலும் இருக்கும். செயப்பாட்டுவினையில் செய்வினையிலிருந்த செயப்படு பொருளானது எழுவாயாகவும், எழுவாயானது செயப்படுபொருளாகவும் மாறும்.

கீழ்வருவனவற்றைப் பாருங்கள்:—

1. மகனே, வேந்தன் உன்னை வெட்டினான்—செய்வினை.
மகனே, நீ வேந்தனால் வெட்டுண்டாய்—செயப்பாட்டுவினை.

2. சோழன் சேரனைக் கட்டினன்.
சேரன் சோழனல் கட்டப்பட்டான்.

3. இந்திரஜித்து மாயச் சீதையை வெட்டினன்,
மாயச்சீதை இந்திரஜித்தால் வெட்டுண்டாள்.

4. மரங்கள் விழுந்து தந்திக்கம்பிகளை அறுத்து விட்டன.
தந்திக்கம்பிகள் மரங்கள் விழுந்ததால் அறுபட்டன.

நேர்கூற்றை அயல்கூற்ருக்குதல்.

நேர்க்கூற்று

சுசீலை தன் தலைவனைப் பார்த்து, "நாதா, வறுமை மிக மிகக் கொடிது. அது தலைவனுக்கும் தலைவிக்கும் மனக்கசப்பை உண்டாக்கும். அது சோம்பலைப் புகுத்தும். அது எல்லாப் பாவங்களையும் வருவிக்கும். ஆகையால் நீங்கள் வறுமையைப் போக்க ம்யற்சி செய்வீராக' என்ருள்.

அயற்கூற்று

சுசீலை தன் தலைவனைப் பார்த்து வறுமை மிக மிகக் கொடிது என்றும், அது தலைவன் தலைவியரிடம் மனக்கசப்பை உண்டாக்கும் என்றும், அது சோம்பலைப் புகுத்துவதன்றி எல்லாப் பாவங்களை வருவிக்கும் என்றும், அதனல் அவர் வறுமையைப் போக்க முயற்சி செய்யவேண்டும் என்றும் கூறினள்.

நேர்கூற்று

என் தந்தையார், "நான் நாளைக் காலை வருவேன்' என்று கூறிவிட்டுச் சென்ருர்.

அயற்கூற்று

என் தந்தையார் மறுநாள் காலையில் தாம் வருவதாகக் கூறிவிட்டுச் சென்ருர்.

குறிப்பு: நேர்க்கூற்றை அயற்கூற்ருக மாற்றும்பொழுது என்றும் என்னும் இணைப்புச்சொல்லைச் சேர்த்தெழுதல் வேண்டும். சில இடங்களில் ஆக என்னும் சொல்லைச் சேர்த்தெழுதலாம். அயற்கூற்றுக்கு மேற்கோள் குறிபோடுதல் கூடாது.

பயிற்சி

I. ஒவ்வொரு எண்ணிலுள்ள பல வாக்கியங்களையும் சேர்த்து ஒவ்வொரு வாக்கியமாக மாற்றி எழுதுக:—

(1) புலிகேசி பல அரசர்களை வென்றார். அதற்கு அறிகுறியாக அவர் ஓர் அஸ்வமேத யாகம் செய்தார்.

(2) கிராம முனிசிப் கிராமத்தில் திருடு நடவாதபடி பார்க்கிறார். அவர் கலகம் நடவாதபடியும் பார்க்கிறார். அவர் கிராமத்தில் நடக்கும் சிறு சிறு வழக்குகளையும் விசாரிக்கிறார்.

(3) இராமன் படிப்பதில் வல்லவன். அவன் பாடுவதிலும் வல்லவன். அவன் எழுதுவதிலும் வல்லவன்.

(4) தகப்பன் வயலுக்கு வருகிறான். மகனும் வயலுக்கு வருகிறான். வேலையாட்களும் வயலுக்கு வருகிறார்கள்.

நேர்க்கூற்றை அயற்கூற்றாக மாற்றுக:—

II. (1) வானம்பாடி, "இனிமேல் நாம் இருப்பது முடியாது. குடியானவன் தன் கையே தனக்கு உதவி என்பதைத் தெரிந்துகொண்டான். நாம் போவோம்" என்றது.

(2) "இரண்டு நாட்களுக்கு முன் நான் வந்தேன்" என்று முருகன் கூறினான்.

(3) "நான் வள்ளுவரைப்போல் இளங்கோவைப்போல் கம்பரைப்போல் புலவர்களைக் கண்டதில்லை" என்று பாரதியார் கூறுகிறார்.

III. அயற்கூற்றை நேர்க்கூற்றாக மாற்றுக:—

(1) முத்துசாமி நாளைய தினம் திருநெல்வேலிக்குப் போவதாக என்னிடம் சொன்னான்.

(2) முருகன் தன் அகராதியை அன்று இழந்துவிட்டதாகக் கூறினான்.

(3) ராஜாமணி என்னை மறுநாள் பார்ப்பதாகக் கூறினாள்.

(4) தான் மிகவும் துன்பப்படுவதாக என்னிடம் தம்பி கூறினான்.

IV. செய்வினையைச் செயப்பாட்டுவினையாக்குக:—

(1) பள்ளிக்கூடம் கண்ணனுக்குச் சம்பள உதவி அளிக்கிறது.

(2) பல்லவர்கள் தமிழ்நாட்டில் கற்கோயில்கள் கட்டினார்கள்.

(3) கட்டியங்காரன் சச்சந்தனைக் கொன்றான்.

(4) பெண்கள் நிலைமை ஒரு நாட்டின் நாகரிகத்தைக் காட்டுகிறது.

V. செயப்பாட்டுவினையைச் செய்வினையாக மாற்றுக:—

(1) ஏலாதியில் ஒவ்வொரு வெண்பாவிலும் ஆறு பொருள்கள் கூறப்பட்டுள்ளன.

(2) உள்ளூர்களிலிருந்து விளைபொருள்கள் கொண்டுவரப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

(3) வானொலி நிலையத்தில் சத்தம் வெளிப்போகாதவாறு அறைகள் கட்டப்பட்டுள்ளன.

(4) பார்ப்பனி கொலையுண்டாள்.

VI. கீழ்வரும் வாக்கியத்தைத் தனிவாக்கியங்களாகப் பிரித்தெழுதுக:—

நாணயங்களுக்கு ஏற்ற உலோகங்கள், பல நூற்றாண்டுகளாயினும் அழியாது நீடித்திருப்பனவாயும், ஒளியாலும் ஒலியாலும் எல்லோரும் கண்டுகொள்ளத்தக்கனவாயும், எவ்வளவு சிறிதாகப் பகுத்தாலும் அவ்வளவு பகுப்புக்கும் இடம் தரத்தக்கனவாயும், எளிதில் உருக்கவும் முத்திரையிடவும் கூடியனவாயும், சிறிய எடையினவாயினும் பெரிய மதிப்புடையனவாயும், நிலையுள்ள விலையுடையனவாயும் இருத்தல்வேண்டும்.

6. எழுத்துப் பிழைகள் நீக்கும் வழிகள் (How to avoid spelling mistakes)

மாணவர்கள் எழுத்துப் பிழைகளை நீக்குவதற்குத் தமிழறிஞர்கள் எழுதிய உரைநடை நூல்களைப் படிப்பது இன்றியமையாதது. படிக்கும்பொழுது மாணவர்கள் சொற்களைக் கவனித்துப் படித்தல்வேண்டும். சொல்வது எழுதும் பயிற்சியால் (Dictation) பிழைகள் நீங்கலாம். சொற்களின் பகுதிகளைப் பார்ப்பதாலும் ஒருவாறு பிழைகள் நீங்கும். சில விதிகளை நினைவில் வைத்துக் கொண்டால் பல எழுத்துப் பிழைகள் ஒழியும்.

சில விதிகள்

1. சொல்லுக்கு முதலில் யி, யீ, யெ, யே, யொ, வு, வூ, வொ, வோ ற என்னும் எழுத்துக்கள் வரா.

பிழை	திருத்தம்	பிழை	திருத்தம்
யிலை	இலை	வுடு	விடு
யீது	ஈது	வூடு	வீடு
யெங்கே	எங்கே	வொன்று	ஒன்று
யேது	ஏது	வோலை	ஓலை
யொரு	ஒரு	றாமசாமி	ராமசாமி

2. ற் என்னும் மெய், சொல்லுக்குக் கடைசியில் நிற்காது.

பிழை	திருத்தம்
கதிற்	கதிர்

3. ட், ற், ஸ், ஷ்—இவ்வெழுத்துக்களுக்குப் பக்கத்தில் எந்த மெய்யெழுத்தும் வராது.

பிழை	திருத்தம்
அதற்க்கு	அதற்கு
நட்ப்பு	நட்பு
புஸ்த்தகம்	புஸ்தகம்
புஷ்ப்பம்	புஷ்பம்

4. தகரத்திற்கு முன்வரும் மெய் தந்நகரமாகவும், டகரத்திற்கு முன்வரும் மெய் டண்ணகரமாகவும், றகரத்துக்கு முன்வரும் மெய் றன்னகரமாகவும் இருக்கும்.

வந்த, அந்தி—தகர வரிசைக்குமுன் ந் வந்தது.
கண்ட, வண்டு—டகர ,, ண் ,,
என்ற, கன்று—றகர ,, ன் ,,

5. ன்ன, ண்ண, ல்ல, ள்ள—இவ்வெழுத்துக்கள் இரட்டையாக வந்தால் வெவ்வேறு எழுத்துக்கள் இணைந்து வரா.

கன்னம், எண்ணம், நல்ல, வெள்ளம்

கீழ்வரும் சொற்களைப் பார்த்து நினைவில் வையுங்கள்:
(Correct spelling)

அடுப்புக்கரி
அதற்கு
அருகில்
அருமை
அருவெறுப்பு
அந்நியர்
அறிந்தான்
அவ்வாறு
அவ்வையார்
அநியாயம்
அதிகாரிகள்
அநேகர்
ஆரம்பம்
ஆட்சி
ஆயிரம்
இரக்கம்
இரவு
இறப்பு
இறந்தான் (செத்தான்)
இறக்குமதி
இறங்கு
இறகு
இளமை
இறுகிவிட்டது
ஈரம்
உட்கார்ந்தான்
உரிமை
உறுப்பு
உணர்ச்சி
உத்தரவு
ஊறுகாய்
எந்நாள்
எறும்பு
ஏறக்குறைய

ஏமாற்றம்
ஏற்பாடு
ஐந்நூறு
கருநிறம்
கல்லறை
கதிர்
கடைசி
காய்கறி
காட்சி
காத்தருள்
காரணம்
கிணறு
குறைந்தது
குறிப்பு
கூட்டுக்கறி
கூர்மை
கூறுவான்
கேட்கிறான்
கேள்வி
கேட்டான்
கோருகிறேன்
சகோதரர்
சமையல்
சிறிய
சுறுசுறுப்பு
சுருக்கம்
சூரியன்
சேறு
சோறு
தண்ணீர்
தவிர
தவறு
தரித்திரம்
திறந்துவிடு

தேர்தல்
நாகரிகம்
நாட்டுப்புறம்
நானூறு
நியாயவாதி
நிரம்பிற்று
நிறைவேறியது
நூற்றாண்டு
பதவுரை
பயிற்சி
பிரயாணம்
பிறப்பு
புறப்படு
பெரிய
பொழிப்புரை
பொருத்தம்
பொறுமை
பொறுப்பு
போர்
மறுத்தான்
மறுநாள்
மாறிவிட்டது
முன்னுரை
முடிவுரை
முந்நூறு
முற்காலம்
மேற்கு
வரலாறு
வாக்குறுதி
வியர்வை
விருப்பு
வெந்நீர்
ஸ்திரீ

ரகற றகர வேறுபாடு

அரம்—ஓர் ஆயுதம்
அறம்—தருமம்
அரி—விஷ்ணு
அறி—தெரிந்துகொள்
ஆர—நிறைய
ஆற—சூடு குறைய
இரங்கு—கருணைகொள்
இறங்கு—கீழ்வா
இரந்தான்—பிச்சையெடுத்தான்
இறந்தான்—செத்தான்
இரை—பறவை உணவு
உரை—சொல்
உறை—தலையணை உறை
எரி—தீ
எறி—வீசு
ஏரி—நீர்நிலை
ஏறி—மேல்போய்
ஒரு—ஒன்று
ஒறு—தண்டி
கரி—அடுப்புக்கரி, யானை.
கறி—பதார்த்தம்
கருப்பு—பஞ்சம்
கறுப்பு—கருநிறம்
கரை—ஓரம்
கறை—குற்றம்
குரவர்—பெரியோர்
குறவர்—குற ஜாதி
கூரிய—கூர்மையான
கூறிய—சொன்ன
கூரை—மேற்கூரை
கூறை—புதுத் துணி
கோரு—விரும்பு
கோறு—வெட்டு
துரவு—பெரிய கிணறு
துறவு—துறந்துவிடுதல்
துரத்தல்—செலுத்துதல்
துறத்தல்—விட்டுவிடுதல்
துரை—பெரியவன்
துறை—வழி
நரை—வெண்மயிர்
நறை—வாசனை
பரந்த—பரவிய
பறந்த—பறந்துவிட்ட
பரவை—கடல்
பறவை—பட்சி
முப்புரம்—மூன்று பட்டணம்
நாட்டுப்புறம்—நாட்டுப்பக்கம்
பெரு—பெரிய
பெறு—அடை
பொரி—நெற்பொரி
பொறி—எந்திரம்
பொரித்தல்—குஞ்சு பொரித்தல்
மரம்—விருட்சம்
மறம்—வீரம்
மாரி—மழை
மாறி—மாறுதலடைந்து
வருத்தல்—துன்புப்படுத்தல்
வறுத்தல்—கிழங்கு வறுத்தல்
விரகு—தந்திரம்
விறகு—கட்டை

லகர ளகர ழகர வேறுபாடுகள்

ஒலி — ஓசை
ஒளி — வெளிச்சம்
ஒழி — ஒழித்துவிடு

காலை — morning
காளை — எருது

குலம் — ஜாதி
குளம் — நீர்நிலை

கொல் — கொன்றுவிடு
கொள் — பெறு

தால் — நாக்கு
தாள் — கால், முயற்சி
தாழ் — தாழ்வடை

தோல் — skin
தோள் — shoulder

நால் — நான்கு
நாள் — தினம்

பலம் — ஒரு பலம்
பழம் — fruit

புல் — grass
புள் — பறவை

மூலை — corner
மூளை — brain

வலி — நோய்
வளி — காற்று
வழி — way

வால் — tail
வாள் — saw
வாழ் — வாழ்ந்திரு

விலக்கு — தவிர்
விளக்கு — தீபம்

விலா — விலா எலும்பு
விளா — விளாமரம்
விழா — திருவிழா

வெல்லம் — jaggery
வெள்ளம் — flood

வேலை — தொழில், கடல்
வேளை — பொழுது

வேல் — வேலாயுதம்
வேள் — மன்மதன்

னகர ணகர நகர வேறுபாடுகள்

அன்னாள் — அவள்
அந்நாள் — அந்த நாள்

ஊன் — மாமிசம்
ஊண் — உண்வு [மாட்டாள்

என்னாள் — என்று சொல்ல
எந்நாள் — எந்த நாள்

கன்னன் — கர்ணன்
கண்ணன் — கிருஷ்ணன்

தன் — தன்னுடைய
தண் — குளிர்ச்சி

தின் — eat
திண் — பலம்

பனி — குளிர்ச்சி
பணி — வேலை

பானம் — குடிப்பது
பாணம் — அம்பு

மனம் — உள்ளம்	மான் — deer
மணம் — வாசனை	மாண் — சிறப்பு
மனை — வீடு	முன்னாள் — முற்காலத்தில்
மணை — பீடம்	மூந்நாள் — மூன்று நாள்
மன் — அரசன்	வன்மை — பலம்
மண் — பூமி	வண்மை — கொடுத்தல்

7. பிழையான சொற்களும் திருத்தங்களும் (Wrong words and their corrections)

பிழை	திருத்தம்	பிழை	திருத்தம்
அருகாமை	அருகில்	பயிறு	பயறு
அதுகள்	அவை	பிறமணாள்	பிராமணர்கள்
அவன்கள்	அவர்கள்		
இடை	எடை (weight)	புடவை	புடைவை
		புட்டு	பிட்டு
இஸ்டம்	இஷ்டம்	பூசிணி	பூசுணி
உத்திரவு	உத்தரவு	மானம்	வானம் (sky)
என்னமோ	என்னவோ	முந்தாணி	முன்தானை
எண்ணை	எண்ணெய்	முழித்தான்	விழித்தான்
கம்மநாட்டி	கைம்பெண்டாட்டி	முழுங்கு	விழுங்கு
		ரொம்ப	நிரம்ப
கார்க்கும்	காக்கும்	வயறு	வயிறு
கொசு	கொசுகு	வத்தி	வர்த்தி
சிலவு	செலவு	வாத்தியார்	உபாத்தியாயர்
சிலது	சில		
சுந்திரம்	சுந்தரம்	வாழ்வு	வாய்வு
சுதந்தரம்	சுதந்திரம்	விரை	விதை
சுவற்றில்	சுவரில்	வெண்ணை	வெண்ணெய்
சேதி	செய்தி	வெய்யில்	வெயில்
திரேகம்	தேகம்	வேணும்	வேண்டும்
தீவட்டி	தீவர்த்தி	வேர்க்குரு	வேர்க்குறு
நிகளம்	நீளம்	வைக்கல்	வைக்கோல்
நீசல்	நீர்ச்சீலை	வொன்று	ஒன்று
பலது	பல		

8. எதிர்மொழிகள்
(Antonyms)

அகநகர் × புறநகர்
அகம் × புறம்
அக வாழ்வு × புற வாழ்வு
அடி × முடி
அணு × மலை
அர்த்தம் × அநர்த்தம்
அடக்கம் × செருக்கு
அறம் × மறம்
அறிவு × மடமை
அலர்தல் × குவிதல்
அன்பு × அன்பின்மை
அழகு × விகாரம்
அரும்பு × மலர்
அண்மை × சேய்மை
அருகில் × தூரத்தில்
அமுதம் × விஷம்
அசையும்பொருள் × அசையாப்பொருள்
அந்தம் × ஆதி
ஆஸ்திகம் × நாஸ்திகம்
ஆண் × பெண்
ஆசை × நிராசை
ஆக்கல் × அழித்தல்
இல்லறம் × துறவறம்
இன்பம் × துன்பம்
இளமை × முதுமை
இளைஞர் × முதியர்
இனிமை × இன்னுமை
இம்மை × மறுமை
இலாபம் × நஷ்டம்
இன்சொல் × வன்சொல்
இயற்கை × செயற்கை
இலேசு × கடினம்
ஈரம் × வறட்சி
ஈதல் × ஈயாமை
உண்டு × இல்லை
உறுதி × நொய்ம்மை
உண்மை × பொய்மை
உபகாரம் × அபகாரம்
உயர்வு × தாழ்வு
உள் × வெளி
உள்நாடு × வெளிநாடு
உள்ளூர் × வெளியூர்
உருவம் × அருவம்
ஏறுதல் × இறங்குதல்
ஐயம் × தெளிவு
ஒற்றுமை × வேற்றுமை
ஒன்று × பல
ஒன்றுதல் × வேறுதல்
ஓட்டம் × நடை
கலக்கம் × தெளிவு
கவனம் × மறதி
கற்றார் × கல்லார்
கனவு × நனவு
காலை × மாலை
கிருகஸ்தன் × சந்நியாசி
கீழ் × மேல்
குணதிசை × குடதிசை
குறைவு × நிறைவு
கூடல் × பிரிதல்
கொள்விலை × கொடுவிலை
கொடையாளி × லோபி
கொடுங்கோல் × செங்கோல்
கோபம் × சாந்தம்

கோழை × தைரியசாலி
சப்தம் × நிசப்தம்
சாதல் × பிறத்தல்
சிற்றின்பம் × பேரின்பம்
சிறியோர் × பெரியோர்
சிறுமை × பெருமை
சுறுசுறுப்பு × சோம்பல்
சுருக்குதல் × விரித்தல்
சுத்தம் × அசுத்தம்
சுமங்கலி × அமங்கலி
சூட்சமம் × ஸ்தூலம்
சூம்புதல் × பருத்தல்
செலவாளி × சிக்கனக்காரன்
செய்யுள் × உரைநடை
செல்வந்தன் × ஏழை
சேய்மை × அண்மை
செளக்கியம் × அசெளக்கியம்
தண்ணீர் × வெந்நீர்
தண்மை × வெம்மை
தன்னலம் × பிறர்நலம்
தனிகன் × கடனாளி
தனிமை × கூட்டம்
தீமை × நன்மை
தீக்குணம் × நற்குணம்
தைரியம் × அதைரியம்
தோல்வி × வெற்றி
நட்பு × பகை
நல்லொழுக்கம் × தீயொழுக்கம்
நம்பிக்கை × அவநம்பிக்கை
நல்லது × கெட்டது
நாடு × நகரம்
நினைவு × மறதி
நியாயம் × அநியாயம்
நித்தியம் × அநித்தியம்
நீதி × அநீதி
நீளம் × குட்டை
நீர்ப்பரப்பு × நிலப்பரப்பு
நுண்பொருள் × பருப்பொருள்
நுண்மை × பருமை
நூலறிவு × உலகியலறிவு
நூற்கல்வி × உலகக்கல்வி
நேசநாடு × பகைநாடு
பருத்தல் × சிறுத்தல்
பன்மை × ஒருமை
பணக்காரன் × ஏழை
பாவம் × புண்ணியம்
புதுமை × பழமை
புகழ்ச்சி × இகழ்ச்சி
பெருமை × சிறுமை
பெரும்பான்மை × சிறுபான்மை
மண்ணுலகம் × விண்ணுலகம்
மங்கலம் × அமங்கலம்
மரியாதை × அவமரியாதை
மதிப்பு × அவமதிப்பு
மணக்கோலம் × பிணக்கோலம்
மானம் × அவமானம்
முகமலர்ச்சி × முகவாட்டம்
முதலாளி × தொழிலாளி
மேடு × பள்ளம்
மேல் × கீழ்
மேன்மை × கீழ்மை
மௌனப்படிப்பு × உரக்கப்படிப்பு
ரூபி × அரூபி
வறுமை × செல்வம்

வரவு × செலவு	விரைவு × மெதுவு
வளர்தல் × தேய்தல்	வீரன் × கோழை
வளர்பிறை × தேய்பிறை	வெளி × உள்
வன்மை × மென்மை	வெற்றி × தோல்வி

9. சந்தி (Rules about Combination)

எழுதும்பொழுது கடின சந்திகள் வேண்டியதில்லை. செய்யுளைச் சந்தி பிரித்துப் பொருளறிவதற்கு முன்னமே இலக்கணப்பகுதியில் சந்தியைப்பற்றித் தெரிந்துகொண்டீர்கள். இங்கே உடம்படு மெய்யை ஒருவாறு தெரிந்து கொண்டு வல்லெழுத்து மிகாத இடங்களையும் அறிந்து கொள்ளுங்கள்.

உடம்படுமெய்

உரைநடைக்கு உடம்படுமெய்ச் சந்திகூட அதிகமாகத் தேவை இல்லை. அது சில இடங்களில் மட்டும் வேண்டியது. அதை இங்கே சிறிது நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

நிலைமொழி ஈற்றிலுள்ள உயிரையும் வருமொழி முதலில் உள்ள உயிரையும் உடன்படுத்தும் மெய் உடன்படு மெய்.

எழுதி + இருந்தான் = எழுதியிருந்தான்	இ, ஈ, ஐ முன் யகர உடன்படு மெய் வந்தது.
நீ + எழு = நீ யெழு	
மலை + அடிவாரம் = மலையடிவாரம்	
போக + இல்லை = போகவில்லை	ஏனை உயிர்முன் வகர உடம்படு மெய் வந்தது.
மா + இலை = மாவிலை	
திரு + ஓணம் = திருவோணம்	
தூ + என்றான் = தூவென்றான்	
போ + என்று = போவென்று	
கௌ + இல்லை = கௌவில்லை	
அவனே + எழுதினான் = அவனேயெழுதினான்	ஏ முன் யகர, வகர உடம்படு மெய்கள் வந்தன.
சே + அடி = சேவடி	

வல்லெழுத்து மிகா இடங்களும் மிகும் இடங்களும்

படிப்பவர் தடுமாறுமல் படிப்பதற்குச் சந்திகள் பயன்படுகின்றன. வல்லெழுத்து மிகவேண்டிய இடங்களில் அது மிகாமலிருந்தால் சில இடங்களில் பொருள் மயங்கும். அதனால், வல்லெழுத்து மிகுவதையும் மிகாமலிருப்பதையும் தெரிந்துகொள்க.

க, ச, ட, த, ப, ற என்னும் ஆறு வல்லெழுத்துக்களுள் நான்கே, சொல்லுக்கு முதலில் வரும். ட, ற என்பவை சொல்லுக்கு முதலில் வரா. க, ச, த, ப என்பவைகளே சொல்லுக்கு முதலில் வரும். க, ச, த, ப என்றால் க வரிசையில் 12 எழுத்துக்களும், ச வரிசையில் 12 எழுத்துக்களும், த வரிசையில் 12 எழுத்துக்களும், ப வரிசையில் 12 எழுத்துக்களும் கொள்ளுதல் வேண்டும்.

சந்தியில் வல்லெழுத்து மிகாமல் வருவது வல்லெழுத்து மிகாதது. சந்தியில் வல்லெழுத்து வருவது வல்லெழுத்து மிகுவது. வல்லெழுத்து மிகும் என்பது இது. க வரிசை வருமொழி முதலெழுத்தாக வந்தால் சந்தியில் க் வரும். ச வரிசை வருமொழி முதலெழுத்தாக வந்தால் ச் வரும். த வரிசை வருமொழி முதலெழுத்தாக வந்தால் த் வரும். ப வரிசை வருமொழி முதலெழுத்தாக வந்தால் ப் வரும்.

வல்லெழுத்து மிகா இடங்கள்

கீழ்வரும் விதிகளைப் படியுங்கள்:

1. அது, இது, எது, அவை, இவை, எவை, அன்று, இன்று, என்று, அத்தனை, இத்தனை, எத்தனை, அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு, அவ்வாறு, இவ்வாறு, எவ்வாறு, ஒரு, இரு, அறு, எழு, பல, சில, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, ஒன்பது ஆகிய இச்சொற்களுக்குப்பின் வல்லெழுத்து மிகாது.

உ-ம். அது + பெரிது = அது பெரிது.
இது + சிறிது = இது சிறிது.
எது + போயிற்று + எது போயிற்று?

அவை + சென்றன = அவை சென்றன.
இவை + போயின = இவை போயின.
எவை + கத்தின = எவை கத்தின?
அன்று + போனார் = அன்று போனார்.
இன்று + கேட்டார் = இன்று கேட்டார்.
என்று + தந்தார் = என்று தந்தார்?
அத்தனை + செடிகள் = அத்தனை செடிகள்.
இத்தனை + பொருள்கள் = இத்தனை பொருள்கள்.
எத்தனை + பசுக்கள் = எத்தனை பசுக்கள்?
அவ்வளவு + பருப்பு = அவ்வளவு பருப்பு.
இவ்வளவு + கடுகு = இவ்வளவு கடுகு.
எவ்வளவு + கேட்டான் = எவ்வளவு கேட்டான்?
அவ்வாறு + கூறினான் = அவ்வாறு கூறினான்.
இவ்வாறு + பாடினான் = இவ்வாறு பாடினான்.
எவ்வாறு + தந்தான் = எவ்வாறு தந்தான்?
ஒரு + பொருள் = ஒரு பொருள்.
இரு + பற்கள் = இரு பற்கள்.
அறு + தொழில் = அறுதொழில்.
எழு + தூண்கள் + எழு தூண்கள்.
இரண்டு + பாய்கள் = இரண்டு பாய்கள்.
மூன்று + பிள்ளைகள் = மூன்று பிள்ளைகள்.
நான்கு + கால்கள் = நான்கு கால்கள்.
ஐந்து + சிறுவர் = ஐந்து சிறுவர்.
ஆறு + பேர்கள் = ஆறு பேர்கள்.
ஏழு + கடிதங்கள் = ஏழு கடிதங்கள்.
ஒன்பது + செடிகள் = ஒன்பது செடிகள்.
பல + பேர்கள் = பல பேர்கள்.
சில + கொடிகள் = சில கொடிகள்.

2. விதம் என்னும் பொருள்படும் ஆறு என்னும் சொல்லும், படி என்னும் சொல்லும் சேர்ந்து வரும் சொற்களுக்குப்பின் வல்லெழுத்து மிகாது.

உ-ம். வந்தவாறு + பேசினான் = வந்தவாறு பேசினான்.
வந்தபடி + கேட்டான் = வந்தபடி கேட்டான்.

3. மூன்றும் வேற்றுமை உருபுகளாகிய ஒடு, ஓடு என்பவற்றின் பின்னும், ஐந்தாம் வேற்றுமை உருபுகளாகிய இருந்து, நின்று என்பவற்றின் பின்னும், ஆறும் வேற்றுமை உருபுகளாகிய அது, உடைய, அ என்பவற்றின் பின்னும் வல்லெழுத்து மிகாது.

உ–ம். தம்பியொடு + பேசினன் = தம்பியோடு பேசினன்.
தந்தையோடு + செல் = தந்தையோடு செல்.
வீட்டிலிருந்து + கொடு = வீட்டிலிருந்து கொடு.
மலையினின்று + போன = மலையினின்று போன.
சேவலினது + சிறகு = சேவலினுடைய சிறகு.
அண்ணனுடைய + சட்டை = அண்ணனுடைய சட்டை.
என + கைகள் = என கைகள்.

4. எல்லா வகைப் பெயரெச்சங்களின் பின்னும் வல்லெழுத்து மிகாது.

உ–ம். நல்ல + பிள்ளை = நல்ல பிள்ளை.
பெரிய + பெட்டி = பெரிய பெட்டி.
சிறிய + சட்டை = சிறிய சட்டை.
படித்த + பையன் = படித்த பையன்.
படியாத + சிறுவன் = படியாத சிறுவன்.

5. வினா எழுத்துக்களின் பின் வல்லெழுத்து மிகாது.

உ–ம். அவனா + கண்டான் = அவனா கண்டான்?
இவனோ + போனான் = இவனோ போனான்?
யா + சென்றன = யா சென்றன?
[யா—பலவின்பால் வினா]

6. விளிப்பெயர், வியங்கோள் வினைமுற்று ஆகிய இவற்றின்பின் வல்லெழுத்து மிகாது.

உ–ம். தம்பி + போ = தம்பி போ—விளி
வாழி + கோபாலா = வாழி கோபாலா—(வியங்கோள்)

7. நிலைமொழி உயர்திணையாய் இருந்து வருமொழி முதலெழுத்து க, ச, த, ப என்னும் எழுத்துக்களில் தொடங்கினால் வல்லெழுத்து மிகாது.

உ–ம். காளி + கோயில் = காளி கோயில்
கண்ணகி + கை = கண்ணகி கை
தம்பி + சட்டை = தம்பி சட்டை

8. வன்றொடர் தவிர மற்றக் குற்றியலுகரங்களுக்குப்பின் வல்லெழுத்து மிகாது.

உ—ம். (1) என்று + பேசினான் / கண்டு + கொண்டாள் / வந்து + கொடுத்தார் — மென்தொடர்க்குற்றியலுகரத்துக்குப்பின் வல்லெழுத்து மிகவில்லை.

(2) செய்து + கொடுத்தான் = செய்து கொடுத்தான் — இடைத்தொடர் குற்றியலுகரத்துக்குப்பின் வல்லெழுத்து மிகவில்லை.

(3) காசு கொடு — நெடிற்றொடர்க்குற்றியலுகரத்துக்குப்பின் வல்லெழுத்து மிகவில்லை.

வல்லெழுத்து மிகும் இடங்கள்

வல்லெழுத்து மிகும் என்றால் வல்லின மெய் வரும் என்று கொள்க.

1. கீழ் வரும் சொற்களுக்குப்பின் வல்லெழுத்து மிகும்.

அ, இ, எ, அந்த, இந்த, எந்த, அப்படி, இப்படி, எப்படி, அங்கு, இங்கு, எங்கு, ஆண்டு, ஈண்டு, யாண்டு, ஆங்கு, ஈங்கு, யாங்கு, அன்றி, இன்றி, இனி, தனி, மற்று, மற்ற, மற்றை, அவ்வகை, இவ்வகை, எவ்வகை, எட்டு, பத்து, அரை, பாதி ஆகிய இச்சொற்களுக்குப்பின் வல்லெழுத்து மிகும்.

உ—ம். அ + பையன் = அப்பையன்.
இ + பிள்ளை = இப்பிள்ளை.
எ + செடி = எச்செடி?
அந்த + குழந்தை = அந்தக் குழந்தை.
இந்த + குடம் = இந்தக் குடம்.
எந்த + செவிடன் = எந்தச் செவிடன்?
அங்கு + போனான் = அங்குப் போனான்.
இங்கு + சென்றான் = இங்குச் சென்றான்.
எங்கு + கொடுத்தாய் = எங்குக் கொடுத்தாய்?
ஆங்கு + போ = ஆங்குப் போ.
ஈங்கு + செல் = ஈங்குச் செல்.
யாங்கு + கொடுத்தாய் = யாங்குக் கொடுத்தாய்?

ஈண்டு + போ = ஈண்டுப் போ.
ஆண்டு + செல்லாதே = ஆண்டுச் செல்லாதே.
யாண்டு + பாடினை = யாண்டுப் பாடினய்?
அப்படி + சொல் = அப்படிச் சொல்.
இப்படி + கேள் = இப்படிக் கேள்.
எப்படி + போனய் = எப்படிப் போனய்?
இனி + பேசுவேன் = இனிப் பேசுவேன்.
தனி + பாடல் = தனிப் பாடல்.
அன்றி + கொடேன் = அன்றிக் கொடேன்.
இன்றி + செல்லேன் = இன்றிச் செல்லேன்.
மற்ற + பாடம் = மற்றப் பாடம்.
மற்று + கூறு = மற்றுக் கூறு.
மற்றை + பிள்ளைகள் = மற்றைப் பிள்ளைகள்.
அவ்வகை + கேள்வி = அவ்வகைக் கேள்வி.
இவ்வகை + செடி = இவ்வகைச் செடி.
எவ்வகை + பாடல் = எவ்வகைப் பாடல்.
எட்டு + தொகை = எட்டுத்தொகை.
பத்து + பாட்டு = பத்துப்பாட்டு.
அரை + பக்கம் = அரைப் பக்கம்.
பாதி + துணி = பாதித் துணி.

2. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின்பின் வல்லெழுத்து மிகும்.

உ-ம். அறியா + குழந்தை = அறியாக் குழந்தை.

3. இகர ஈற்று வினையெச்சத்தின் பின்னும், அகர ஈற்று வினையெச்சத்தின் பின்னும், ஆய், போய், ஆக, என என்னும் வினையெச்சங்களின் பின்னும் வல்லெழுத்து மிகும்.

உ-ம். தேடி + போனன் = தேடிப் போனன்.
தேட + சென்றன் = தேடச் சென்றன்.
மெல்ல + கூறினள் = மெல்லக் கூறினள்.
வருவதாய் + சொல் = வருவதாய்ச் சொல்.
போய் + தேடினர் = போய்த் தேடினர்.
என + பேசு = எனப் பேசு.

4. வன்தொடர்க்குற்றியலுகரத்துக்குப்பின் வல்லெழுத்து மிகும்.

உ—ம். மக்கு + பையன் = மக்குப் பையன்.
நச்சு + பாம்பு = நச்சுப் பாம்பு.
விட்டு + போ = விட்டுப் போ.
செத்து + பிழைத்தாள் = செத்துப் பிழைத்தாள்.
உப்பு + பண்டம் = உப்புப் பண்டம்.
கற்று + கொடு = கற்றுக் கொடு.

5. திரு, நடு, முழு போன்ற சொற்களுக்குப்பின் வல்லெழுத்து மிகும்.

உ—ம். திரு + குறள் = திருக்குறள்.
நடு + தெரு = நடுத்தெரு.
முழு + கடலை = முழுக்கடலை.

6. இரண்டாம் வேற்றுமை உருபின் பின்னும், நான்காம் வேற்றுமை உருபின் பின்னும் வல்லெழுத்து மிகும்.

உ—ம். குழந்தையை + பார் = குழந்தையைப் பார்.
அவனை + கண்டான் = அவனைக் கண்டான்.
வீட்டிற்கு + செல் = வீட்டிற்குச் செல்.
அவனுக்கு + தந்தான் = அவனுக்குத் தந்தான்.

7. ஓரெழுத்து ஒரு மொழிக்குப்பின் வல்லெழுத்து மிகும்.

உ—ம். தீ + பிடித்தது = தீப்பிடித்தது.
பூ + பறித்தான் = பூப்பறித்தான்.

8. நிலைமொழி அஃறிணையாயிருக்கும் சொல்லுக்குப் பின் வல்லெழுத்து மிகும்.

உ—ம். குதிரை + படை = குதிரைப்படை.
படை + தலைவன் = படைத்தலைவன்.
கோழி + தலை = கோழித்தலை.

சாரியான சந்தித்தோடர்கள் (Words of correct santhi)

இவைகளைப்பார்த்து நினைவில் இறுத்துங்கள்:

அந்நாடு
அவ்யானை
அந்தச் செடி
அவ்வணி
அவ்வாறு பேசினன்
அரிய புத்தகம்
அன்புடைய சிறுவன்
ஆதாவற்ற பிள்ளை
இறந்த பிறகு
இவ்யானை
எந்நாடு?
எந்நாள்?
என்னுல்
ஏரிகரை
ஐந்நூறு
ஒரு பையன்
ஒருகாலும்
கண்டாற்போல்
கற்றுக்கொடு
காளி கோயில்
கீழ்க்கணக்கு
கம்பர் திருநாள்
கார்காலம்
குதிரைத்தலை
குதிரைப்படை
கோடைக்காலம்
சிறு தேர்
சிறிய பையன்
சிற்சில
சிலசில
சில குரங்குகள்
சின்னுள்
செய்ந்நன்றி
செந்நிறம்
சேனைப்படை
சேனைத்தலைவன்
தம்பி சட்டை
தண்ணீர்
நல்ல பிள்ளை
நல்லணி
நெடிற்றொடர்
நாடோறும்
பலபல
பற்பல
பண்டைக்காலம்
பவானந்தர் கழகம்
பல செடிகள்
பிற்காலம்
பெரிய பெட்டி
பொன்னிறம்
மற்றப் பிள்ளை
மழைக்காலம்
மேனுடு
மேன்மேல்
முதலி தெரு
செட்டி தெரு
முந்நாள்
முன்னுள்
முந்நூறு
முற்காலம்
மென்றொடர்
மெய்காவலர்
வந்தவுடன்
விட்டுச் சென்றன்

வெண்ணிறம்	எவ்வேழு
வெந்நீர்	எவ்வெட்டு
வாழைப்பழம்	ஒன்பதொன்பது
வந்துபோனான்	பப்பத்து
என்று சொன்னான்	வெவ்வேறு
கண்டு பேசினான்	பப்பாதி
செய்து கொடுத்தான்	நற்றாமரை
வந்தபடி சொல்	குளிர்காலம்
சொன்னவாறு செய்	சுடு சோறு
ஒவ்வொன்று	மாரிகாலம்
இவ்விரண்டு	தேசப்படம்
மும்மூன்று	தாய்பறவை
நந்நான்கு	உயர்நிலைப்பள்ளி
ஐவைந்து	தாய்தந்தை
அவ்வாறு	செடிகொடி

திருப்பல் பயிற்சி (Revision exercise)

I. கீழ்வரும் சந்திப்பிழைகளைத் திருத்துக:—

எடுத்துகொண்ட	மூன்னூறு வீடுகள்	வாந்தால்ற்போல்
என்றே வுரைத்தான்	சரித்திரயுணர்ச்சி	கொடுத்தால்ச் சொல்
வாழைபழம்	வரயில்லை	மூந்நாளில்
பலயிடங்கள்	கண்டாப்போல்	கேடுவுண்டாகிறது
சிலயுரைகள்	உய்த்துணரர்பாலது	வந்து யெடுத்தான்
வெனீர்	விடியர்க்காலம்	குவியலாகயிருக்கும்
செய்துக்கொள்	முதநூல்	சும்மாயிரு
மற்ற தெருக்கள்	மூந்நிலைமை	தகுந்தயிடம்
தெரிந்துக்கொள்	நன்நடத்தை	என்னயிருந்தாலும்
சிலச்செடிகள்	நற்தாள்	நன்றாய்யில்லை

II. கீழ்வருஞ் சொற்களில் இருக்கும் எழுத்துப் பிழைகளைத் திருத்துக:—

ஸ்திரி	கிளைபுடுங்கு	பயிற்
மூன்று காகூஷிகள்	வெத்திலை	எதிர்மரை
அரசாக்ஷி	பில்லு	மருத்துவிட்டான்
மணிகோர்க்கிறான்	போராது	ஊுதுகோல்
வாசனை முகருகிறோம்	கிணர்	விரை

வரவு சிலவு	அடுப்பு விரகு	விசிரி
கார்த்திருந்தான்	காய்கரி	வெய்யில்
நாட்டுப்புரம்	விறகு கத்தை	ரூபாய்
பயிற்ச்சி	வென்னீர்	முழிக்கிறது
அதற்க்கு	பூசினி	வத்தி
வருவதிற்கு	வயறு	நாகரீகம்
எண்ணை	பயிறு	கோர்த்து
வெண்ணை	பொம்பிளை	கேழ்வி
நடப்பதர்க்கு	சுத்திவந்தான்	காக்கா
பெறிய பிள்ளை	சுவற்றில்	கடப்பாறை
சிரிய நூல்	படிக்கிர	இடை
பிராமணாள்	சுந்திரம்	ஆக்ஷி
மாக்ஷி	சுதந்தரம்	மாட்க்ஷி
நூர்க்கிற	உத்திரவு	வாழைப்பளம்
அயற்சி	சென்ரான்	ஜாமான்

III. கீழ்வருபவைகளில் உள்ள எழுத்துப் பிழைகளைத் திருத்துக:—

(1) விடுமுறையை நல்ல வழியில் களிக்கவேண்டும்.
(2) அவர்களைப்பற்றி அரியவேண்டும்.
(3) பிள்ளைகளைப் பெற்றுக்கொல்லாதவர்கள் நரகம் சேர்வார்கள்.
(4) முன்னொரு காலத்தில் சிபிச்சக்கரவர்த்தி புராவுக்கு உயிரையும் கொடுக்கச் சித்தமானார்.
(5) என் உற்றோரும் மற்றோரும் இங்கு இல்லை.
(6) பகைவற்கள் கடேசியில் கூடாரத்தைக் கைப்பற்றினார்கள்.
(7) நாங்கள் வென்றே தீறுவோம்.
(8) அவர்கள் அப்புரம் நாட்டுப்புரத்துக்குப் புறப்பட்டார்கள்.
(9) நண்பர் பிறிவினால் நான் வருந்துகிறேன்.
(10) நீ வரவு சிலவு கணக்கு எழுது.
(11) துரவிகள் துறவில் குழிக்கிறார்கள்.
(12) இவ்வாண்டில் ஜனத்துகை அதிகரிக்கிறது.
(13) அவல் தினந்தோரும் அவள் இடிக்கிறாள்.
(14) பிறமணர்கள் கிறமங்களில் செல்வாக்குடையவர்கல்.
(15) முன்னூறு பழங்களுள் முன்னூறு கொடுத்தான்.
(16) எங்கள் கிருகத்தில் திருமணம் நடக்கும்.
(17) நீங்கள் உற்றார் உரவினருடன் வரும்படி உங்களைக் கோறுகிறேன்.

IV. கீழ்வருபவைகளில் உள்ள பிழைகளைத் திருத்துக:—

[பிழைகள் தடித்த எழுத்தில் இருக்கின்றன.]

(1) சிறுவராய் **இருக்கும்போதே** கஜினி **இந்தியாவின்மீது** படையெடுக்கச் சபதஞ் செய்துகொண்டார்.

(2) சந்திரகுப்தருக்குக் குமாரதேவியின் மூலமாகச் செல்வாக்கு ஏற்பட்டதால் அவருடைய நாணயங்களில் **குமாரதேவியின் உருவம் தோன்றுகிறது.**

(3) அவன் மனத்தில் யோசனைக்குமேல் **யோசனை வந்து கொண்டிருந்தன.**

(4) சைபீரியாப் புல்வெளிகளில் **கிராமங்களாவது** நகரங்களாவது காண்பது அரிது.

(5) இங்கு மரஞ்செடிகள் **ஒன்றும் வளர்வதில்லை.**

(6) ஒவ்வொருவனும் ஒவ்வொரு அபிப்பிராயம் **கொண்டிருப்பார்கள்.**

(7) ஒவ்வொரு மணிநேரமும் தங்கத்திற்குச் **சமமானவை.**

(8) நம் **கிராமங்களானது வாடி வதங்குகிறது.**

(9) நகரத்தில் **உள்ளது எல்லாம்** சுகாதாரத்துக்குக் **கெடுதியானதே.**

(10) வீடுகள் மிகச் **சிறியதாய்க்** கட்டப்படுகின்றன.

(11) கிராமத்தில் **உள்ளவர்கள்** ஒற்றுமை உடையவர்களாயும் எதிரிகளைத் தாக்குவதில் **வைராக்கியம் படைத்தவர்களாய்** இருப்பார்கள்.

(12) அவள் கொஞ்சமும் கண்ணீர் சிந்தினவள் **அல்ல.**

(13) இந்திய மக்கள்கள் நவீன வாழ்க்கை வாழத் **தொடங்கி விட்டனர்.**

(14) கண்ணை எவ்வாறு **ஒரு மனிதன்** காப்பாற்றுவானோ அதேபோல் கிராமத்தையும் காப்பாற்றவேண்டும்.

(15) நாம் விளையாடவாவது **அல்லது** உலவுதலாவது செய்தல்வேண்டும்.

(16) சண்டை சச்சரவும் **நடைபெறுது.**

(17) குளம் குட்டை **சுத்தமடைகிறது.**

(18) பணச்செலவும் காலச்செலவும் **வீணாகிறது.**

(19) நகரத்தில் கொடிய வியாதிகள் வருமானால் **அதைத்** தடுக்க வழிகளை முன்னமே செய்தல்வேண்டும்.

(20) **என்** தகப்பனார் நேற்றுத் **தன்** தமையனார் வீட்டுக்குப் போனார்.

(21) இந்தியாவைப் போஷிப்பது நமது கிராமங்கள்.
(22) அரசன் நாட்டை ஆள்கிறார்.
(23) அவர் செலவு செய்தது கொஞ்சமல்ல.
(24) துரை தீனி தின்கிறார்.
(25) நீங்கள் புத்தியை விஸ்தீரணப்படுத்தவேண்டும்.
(26) நார்வே ஸ்வீடன்களின் பெரும்பாகம் உஷ்ணக் காடுகளால் மூடப்பட்டிருக்கின்றன.

10. நிறுத்தற் குறிகள் (Punctuations)

படிப்பவர்களுக்கு எளிதில் பொருள் விளங்கும்படி உரைநடையில் குறியீடுகள் (Punctuations) இட்டு எழுதுவது இக்காலத்து வழக்கம். சில இடங்களில் குறியீடுகள் இல்லாவிட்டால் பொருளே மாறிவிடும். 'அண்ணன் தம்பி வீட்டிற்குச் சென்றதால் நான் பார்க்கவில்லை' என்னும் இவ்வாக்கியத்தில் அண்ணன் என்னும் சொல்லின் பக்கத்தில் காற்புள்ளி இல்லாததால் அண்ணனும் தம்பியும் வீட்டிற்குச் சென்றதால் என்று பொருள்படும். 'அண்ணன், தம்பி வீட்டிற்குச் சென்றதால் நான் பார்க்கவில்லை' என்னும் இவ்வாக்கியத்தில் அண்ணன் என்னுஞ் சொல்லுக்குப் பக்கத்தில் காற்புள்ளியிட்டதால் பொருள் மாறுபடுவதைப் பாருங்கள். ஆகையால், நாம் எழுதும் பொருள் விளக்கமாகத் தெரிவதற்குக் குறியீடுகள் அவசியம்.

குறியீடுகள்

. — முற்றுப்புள்ளி (Full-stop)	? — கேள்விக்குறி (Question mark)
: — முக்காற்புள்ளி (Colon)	! — உணர்ச்சிக்குறி (Interjection mark)
; — அரைப்புள்ளி (Semi-colon)	" " — இரட்டை மேற்கோள் குறி
, — காற்புள்ளி (Comma)	' ' — ஒற்றை மேற்கோள் குறி

**** — விடுகுறி
( ) — நகவளைவடைப்பு
[ ] — பகர அடைப்பு
{ } — இரட்டை நகவளைவு

முற்றுப்புள்ளி (Full-stop)

1. வாக்கிய முடிவில் முற்றுப்புள்ளி யிடுக.

உ—ம். (1) நீ வீட்டுக்குப் போ.

(2) கம்பர் இராமாயணம் இயற்றினார்.

2. சொற்சுருக்கத்தில் முற்றுப்புள்ளி யிடுக.

கி. பி., கி. மு., திரு. (திருவாளர்), B.A.

முக்காற்புள்ளி (Colon)

1. வாக்கியத்தில் கூறியதொன்றை விரித்துக் கூறும் பொழுது முக்காற்புள்ளி யிடுக.

உ—ம். வாழ்வு இரு திறத்தது: ஒன்று உயிர் வாழ்வு; மற்றொன்று உடல் வாழ்வு.

2. வாக்கியத்தில் ஒரு கருத்தை விளக்கவோ ஆதரிக்கவோ மற்றொரு கருத்து அதைத் தொடர்ந்துவருமாயின் முன் கருத்து முடியுமிடத்தில் முக்காற்புள்ளி யிடுக.

உ—ம். உடல்நலத்தைப் பாதுகாக்க எல்லா வகைகளிலும் முயற்சி செய்: உடல்நலம் இல்லாவிட்டால் வாழ்க்கையில் இன்பமே இராது.

முக்காற்புள்ளியுடன் கோடிட்டு :— இம்மாதிரி எழுதுவதுமுண்டு. இதைக் கீழ்வருமாறு பயன்படுத்துவர்:

உ—ம். (1) பொருள் கூறுக:—

(2) முற்றுப்புள்ளி வருமிடங்களாவன:—

அரைப்புள்ளி (Semicolon)

1. வாக்கியத்தில் ஒரே எழுவாய் பொதுவாக இருந்து பல பயனிலைகளைக் கொள்ளுமாயின், இடையிலுள்ள பயனிலைகளுக்கு அரைப்புள்ளி யிடுக.

உ—ம். (1) பெரும்பாலோர் வயிற்றளவை மீறி உண்பர்; பசியாதும் உண்பார்; வழக்கம் என்று உண்பர்; கிடைத்தபோதெல்லாம் உண்பர்; நாக்கிற்காக உண்பர்; வேளை தப்பி உண்பர்; வாய் நாற வயிறு நாறக் குடல் நாற மலம் வைத்துண்பர்.

(2) பாரதியார் பண்டைப் பாவலர் பலர்க்கும் இளையாதவர்; இக்காலத்திலும் இணையற்றவர்.

(3) உடல்நலத்தைக் கவனித்துப் போற்றாவிட்டால் உடலுறுப்புக்கள் ஊனமுறும்; உள்ளச்சோர்வும் ஊக்கக் குறைவும் ஏற்பட மனக்கருவியும் கெடும்.

2. ஒன்றுக்கு ஒன்று மாறான கருத்துக்களைக் கொண்ட சிறு சிறு வாக்கியங்கள் சேர்ந்து முழுக் கருத்தை விளக்குமானால் ஒவ்வொரு சிறு வாக்கியத்தின் இறுதியிலும் அரைப்புள்ளி யிடுக.

உ-ம். எவன் தன் வலியும் பிறன் வலியும் பார்க்கிறதில்லையோ அவன் துன்பமடைவான்; எவன் அவற்றைப் பார்க்கிறானோ அவன் இன்பமடைவான்.

3. காரணங்காட்டும் 'ஏனென்றால்' என்பதற்கு முன் அரைப்புள்ளி யிடுக.

உ-ம். நான் இன்று விளையாடமாட்டேன்; ஏனென்றால் என் கால் அடிபட்டிருக்கிறது.

காற்புள்ளி (Comma)

குறிப்பு: காற்புள்ளியைக் கோலம் போடுதல்போல வாக்கியத்தில் எங்கும் தெளித்துவிடுதல் கூடாது. காற்புள்ளியிடுமிடத்தில் சந்தி போடுவது கூடாது.

1. சொற்களைத் தனியாகவோ அடுக்கடுக்காகவோ பிரிக்குமிடங்களில் காற்புள்ளி யிடுக.

உ-ம். (1) சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி என்பவை ஐம்பெருங்காப்பியங்கள்.

(2) நட்புக்குக் குகனும் பரதனும், பிசிராந்தையாரும் கோப்பெருஞ் சோழனும், உதயணனும் யூகியும் தலைசிறந்த உதாரணமாவார்கள்.

குறிப்பு: மிகவும் அருகில் எண்ணும்மை வருமிடங்களிலும் டன்மையீற்றில் முடியும் தொடர்களிலும் காற்புள்ளியிடுதல் கூடாது.

உ–ம். கல்வி அறமும் *பொருளும் இன்பமும் வீடும் நல்கும். (கல்வி அறமும், இன்பமும், பொருளும், வீடும் என்று காற்புள்ளி யிடுவதும் நன்றன்று. காய்கறிகள் என்றெழுதுமிடத்தில் காய், கறிகள் என்று எழுதுவதும் வழுவாகும்.)

2. ஆகையால், ஆதலால், எனினும், என்றாலும், எனவே, ஆகவே, ஆயினும் என்பன போன்ற இணைப்புச் சொற்களுக்குப்பின் காற்புள்ளி யிடுக.

உ–ம். ஈக்கள் மொய்த்துக்கொண்டிருக்கும் பண்டங்களைத் தின்றால் சீதபேதி, வாந்திபேதி முதலிய நோய்கள் உண்டாகும். ஆகையால், அப்பொருள்களை வாங்கி உண்ணாதே.

3. விளியாக வரும் பெயர்களுக்குப் பின்னும், கடிதத்தில் ஐயா, பெரியீர் என்று எழுதும் சொற்களுக்குப் பின்னும், மேல்விலாசத்தில் குறிப்பிடும் எண், தெரு, ஜில்லா இவைகளுக்குப் பின்னும் காற்புள்ளி யிடுக.

உ–ம். (1) கடவுளே, என்னைக் காத்தருளும்.
(2) ஐயா, (கடிதத்தின் முற்கூற்றில்).
(3) 18, முத்து முதலி தெரு, சென்னை. (மேல் விலாசத்தில்)

4. வாக்கியத்தில் எழுவாய் ஒன்றாக நின்று உணர்ச்சி தரும் முற்றெச்சங்களை அடுக்காகப் பெற்று வருமிடங்களில் காற்புள்ளி யிடுக.

உ–ம். தன் காதலன் கொலையுண்டு இறந்தான் என்று கேட்ட கண்ணகி பொங்கியெழுந்தாள், விழுந்தாள், விம்மினாள், அரற்றினாள், ஏங்கினாள், கலங்கினாள், மயங்கினாள்.

குறிப்பு: மயங்கினாள் என்பதுதான் வினைமுற்று. மற்றவை வினைமுற்றுக்கள்போலிருப்பினும் அவை வினையெச்சங்களே. பொங்கியெழுந்து விழுந்து விம்மி அரற்றி ஏங்கிக் கலங்கி என்று பொருள் கொள்ளல்வேண்டும். ஆகையால், இவ்விடங்களில் காற்புள்ளியிடவேண்டுவதாயிற்று.

5. மேற்கோட் குறிக்குமுன் காற்புள்ளி யிடுக.

முருகன், "நீ பின்னால் வா. நாங்கள் போகிறோம்" என்றான்.

கேள்விக்குறி

கேள்வி கேட்கும் வாக்கியத்தில் கேள்விக்குறி யிடுக.

உ-ம். (1) நீ எங்கே சென்றாய்?

(2) முயற்சியுடையார் இகழ்ச்சியடைவரோ?

குறிப்பு: தமிழில் மொழிபெயர்க்கும் முறையாது என்று தெரிந்து கொள்.—இங்குக் கேள்விக் குறியிடுதல் கூடாது.

உணர்ச்சிக்குறி

உணர்ச்சி வரும் இடங்களில் உணர்ச்சிக்குறி யிடுக.

உ-ம். (1) ஐயோ! பல அருந்தமிழ் நூல்கள் அழிந்து போயின.

(2) ஆரியம்போல் அழிந்தொழியாத் தண்டமிழின் பெருமை என்னே! என்னே!

(3) நாயகனே, ஒரு நிமிஷமும் தங்களைவிட்டுப் பிரியேன்! பிரிந்தால் உயிர்விடுவேன்! இது திண்ணம், திண்ணம்' இதுவே என் எண்ணம்!

குறிப்பு: தமிழ்ச் செய்யுளில் விளியிலும் உணர்ச்சிக் குறியிடுதல் வழக்கம். உணர்ச்சிக் குறியிட்டால்தான் விளி என்பதை நன்றாகச் செய்யுளில் தெரிந்துகொள்ளுதல் கூடும்.

ஒற்றை மேற்கோட்குறி

1. நேர்க்கூற்றுக்குள் இருக்கும் நேர்க்கூற்றை ஒற்றை மேற்கோட்குறிக்குள் எழுதுவர்.

உ-ம். (1) பரதன், "நான் என்ன செய்வேன்! அவரைக் கூப்பிட்டுப் பார்த்தேன். 'நீ போ. நான் பதினான்கு ஆண்டுகள் கழித்தே வருவேன்' என்று கூறினார். நான் வந்துவிட்டேன்" என்றான்.

2. பிறருடையது என்று அறிவித்தற்கும் பிரித்துக் காட்டுதற்கும் பழமொழிகளைத் தெரிவித்தற்கும் ஒற்றை மேற்கோட்குறி யிடுவதுண்டு.

உ—ம். (1) 'வ்', 'மார்க்கு'.
(2) 'இமயஞ் சேர்ந்த காக்கை' பொன்னிற மாகும் என்றுரே.
(3) 'சுத்தம் சோறுபோடும்.'

இரட்டை மேற்கோட்குறி

1. நேர்க்கூற்றை எழுதும்பொழுது முன்னும் பின்னும் இரட்டை மேற்கோட்குறி யிடுக.

உ—ம். சுந்தரம் கள்வர் தலைவனைப் பார்த்து, "என் அண்ணன்மாரே! நீங்கள் என்னைப் பக்ஷித்தாலும் சரி, ரக்ஷித்தாலும் சரி" என்று அலறினுள்.

குறிப்பு: பேச்சுக்கு முன்னும் பின்னும் மேற்கோட் குறியிட வேண்டுமேயன்றி என்றுள் என்னும் வினைமுற்றுக்குப்பின் இக்குறி யிடுதல் வழுவாகும்.

2. மேற்கோள் எழுதினுல் அதனை மேற்கோள் குறிக்குள் எழுதுக.

உ—ம். "தேனை மறந்திருக்கும் வண்டும்—ஒளிச்
சிறப்பை மறந்துவிட்ட பூவும்,
வானை மறந்திருக்கும் பயிரும்,
இந்த வையம் முழுதும் இல்லை தோழீ"

என வரும் பாரதியார் செய்யுளில் அழகிய உவமைகள் இருப்பதைக் காண்க.

3. குறிப்பிட்ட தலைப்பு இஃதெனக் காட்டுதற்கும் இரட்டை மேற்கோட் குறியிடுவதுண்டு.

உ—ம். நான் பேச எடுத்துக்கொண்ட பொருள், "சோழர் காலத்திய கோயில்களும் மடங்களும்" என்பது.

11. சில உவமைகள்
(Some Similes)

1. அடியற்ற மரம்போல்—வேரற்ற மரம் விழுவதுபோல்.

கண்ணன் தன் தந்தை இறந்த செய்தி கேட்டதும் அடியற்ற மரம்போல் படி மிசை விழுந்தான் (படி—பூமி).

2. அச்சுமுறிந்த தேர்போல்—திடீரென.

முருகன் செய்துவந்த சாய வியாபாரம் போர் தொடங்கியதும் அச்சுமுறிந்த தேர்போல் நின்று விட்டது.

3. அத்தி பூத்தாற்போல்—அபூர்வமாக.

அவன் அத்தி பூத்தாற்போல் வந்தான்.

4. அலைகடலில் திசைதப்பிய மீகாமன்போல்—வழிதப்பிய கப்பல் தலைவன்போல்

வழிதப்பிய சுந்தரன் அலைகடலில் திசை தப்பிய மீகாமன்போல் மனங்கலங்கினான்.

அலை ஓய்ந்த கடல்போல்—ஓசையற்ற கடல்போல்.

சோதிடத்தைச் சொன்னதும் செங்குட்டுவன் சபை அலை ஓய்ந்த கடலைப்போல் ஒலி யடங்கி இருந்தது.

5. உகிர்ச்சுற்றின்மேல் உலக்கை விழுந்தாற்போல்—நகப்புண்ணின்மேல் உலக்கை விழுந்தாற்போல்.

தந்தை இழந்த கோபாலனுக்குப் பரீட்சையில் தவறிய செய்தி உகிர்ச்சுற்றின்மேல் உலக்கை விழுந்தது போல் இருந்தது.

6. உள்ளங்கை நெல்லிக்கனிபோல்—விளக்கமாக.

அயல்நாட்டுப் பொருள்களை வாங்குவதால் நம் நாட்டுப் பணம் வெளிநாட்டுக்குப் போகிறது என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கவில்லையா?

7. உமிகுத்தி கை வருந்துவதுபோல்—வீண்.

திருந்த மனமில்லாதவனுக்குப் புத்தி சொல்வது உமி குத்திக் கை வருந்துவது போலாகும்.

8. எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதுபோல்—எரிகிற கொள்ளியை ஏறவிட்டதுபோல்—அதிகப்படுத்துவது.

முன்னமே என்மேல் கோபப்பட்டிருந்த தந்தையிடம் வந்து 'நான் பள்ளிக்கூடம் போகவில்லை' என்று நண்பன் கூறியது எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதுபோல் இருந்தது. (இப்படியே மற்றதற்கும்.)

9. இரு கன்றுக்கு இரங்கும் ஒரு தாய்பசுபோல்—

தசரதர் இராமர் பட்டங்கட்ட முடிவுகட்டியதைக் கேட்டு மந்திரிமார்கள் இரு கன்றுக்கும் இரங்கும் ஒரு தாய்பசுபோலானார்கள்.

10. கற்றாவின் மனம்போல்—கன்றுக்கு இரங்கும் தாய்பசுவின் மனம்போல்.

அன்பர்கள் கடவுளிடத்தில் கற்றாவின் மனம்போல் கசிந்துருகல் வேண்டும்.

11. கடல்மடை திறந்தாற்போல்—பிரவாகம்போல்.

அலர்மேல்மங்கைத் தாயாரம்மாள் கடல்மடை திறந் தாற்போல் பேசினார்கள்.

12. கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வது போல்—பயனில்லை.

உடல்நலம் கெட்டபின் தேகப்பயிற்சி செய்வது கண் கெட்டபின் சூரிய நமஸ்காரம் செய்வதை ஒக்கும்.

13. கடலில் கரைத்த பெருங்காயம்போல்—வீணாயிற்று.

ஆசிரியர் மாணவர்களுக்குக் கூறிய உபதேசம் கட லில் கரைத்த பெருங்காயம்போலாயிற்று.

14. கூழில் விழுந்த ஈப்போல்—வரமுடியாது தவித்தல்.

அவன் கூழில் விழுந்த ஈப்போல் தவித்தான்.

15. குன்றில் இட்ட விளக்குப்போல்—நன்றாய் விளங்குவது.

அவன் புகழ் குன்றில் இட்ட விளக்குப்போல் விளங் கிற்று.

16. குளிக்கப்போய்ச் சேறு பூசிக்கொள்வதுபோல்— நல்லது செய்யப்போய்க் கெட்டது செய்தல்.

கோயிலுக்குக் கும்பிடப்போய் அங்கே பாவஞ் செய் வது குளிக்கப்போய்ச் சேறு பூசிக்கொள்வதுபோலாகும்.

17. குங்குமம் சுமந்த கழுதைபோல்—வீணைச் சுமப்பது.

புத்தகங்கள் வாங்கி வைத்துக்கொண்டு அவற்றைப் படிக்காமலிருப்பது குங்குமஞ் சுமந்த கழுதையை ஒக்கும். (குங்குமம் = வாசனைப்பொருள்.)

18. கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தாற் போல்—தேடிச்சென்றது எதிர் வந்தது.

நான் தேடிப்போன நண்பன், கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததுபோல் எதிரே வந்தான்.

19. சர்க்கரைப்பந்தலில் தேன்மாரி பொழிந்தாற் போல்—பழம் நழுவிப் பாலில் விழுந்தாற்போல்—நன்மைமேல் நன்மை.

வேலை கிடைத்துச் சம்பளமும் அகப்படுமானால் அது சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்தாற்போல் இருக்கும்.

20. சூரியனைக்கண்ட பனிபோல்—உடனே மறைந்தது.

சீதையினுடைய துன்பம், அநுமனைக் கண்டதும் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கிற்று.

21. தாமரை இலைமேல் தண்ணீர்போல்—ஒட்டாமலிருப்பது.

மாணிக்கவாசகர் மந்திரி தொழில் செய்திருந்தாலும் அவர் மனம் தாமரை இலைமேல் தண்ணீர்போல் உலக இச்சையில் ஈடுபடாமல் இருந்தது.

22. பசுமரத்தாணிபோல்—நன்றாகப் பதியும்படி.

ஆசிரியர் பசுமரத்து ஆணிபோல் பதியும்படி போதித்தார்.

23. பன்றியொடு சேர்ந்த கன்றுபோல்—கெட்டுப் போதல்.

நல்ல மாணக்கர்கள் தீயவர்களோடு சேர்ந்து பன்றியொடு சேர்ந்த கன்றுபோல் கெடுவார்கள்.

24. பூவுடன் சேர்ந்த நார்போல்—ஒன்றைச்சேர்ந்த மற்றொன்று நன்மையடைதல்.

அறிவற்றவர்களும் பெரியோர்களை அடைந்தால் பூவுடன் சேர்ந்த நார்போல் மணம் பெறுவார்கள்.

25. பொன்மலர் நாற்றமுற்றதுபோல்—உயர்ந்த சிறப்படைவது.

கல்வியறிவுடையவன் பேசுந்திறமையும் பெற்றால் அது பொன்மலர் நாற்றமுடைத்து.

26. வெந்த புண்ணில் வேல்விட்டதுபோல்—துன்பத்தின்மேல் துன்பம்.

முன்னமே வருத்தப்பட்டுக்கொண்டிருந்த முருகனுக்கு இக்கடுஞ்சொல் வெந்த புண்ணில் வேல்விட்டது போலாயிற்று.

27. பிறைச்சந்திரன்போல்—வளர்ந்தது.

இருவர் நட்பும் பிறைச்சந்திரன்போல் வளர்ந்தது.

28. தேய்பிறைபோல் குறைந்தது.

அற்பர்கள் நட்பு, தேய்பிறைபோல் நாளும் குறையும்.

29. நெருப்பில் விழுந்த புழுப்போல்—தத்தளித்தல்

இராமன், நெருப்பில் விழுந்த புழுப்போல் வறுமைத் துன்பத்தில் அகப்பட்டுத் தத்தளித்தான்.

30. சிறந்து விளங்குவதற்கு உரிய உவமைகள்

ஆண்

சுந்தரன், கல்வியில் சூரியனையும், பலத்தில் பீமனையும், உண்மையில் அரிச்சந்திரனையும், பொறுமையில் தருமனையும், கொடையில் கர்ணனையும், அழகில் மன்மதனையும் ஒத்திருந்தான்.

பெண்

மங்கையர்க்கரசி அழகில் மலர்மகளையும், பொறுமையில் பூமிதேவியையும், கல்வியில் கலைமகளையும், கற்பில் அருந்ததியையும் ஒத்திருந்தாள்.

12. சில பழமொழிகள்

(Some Proverbs)

கடவுள்

கடவுளை நம்பினவர் கைவிடப்படார்.
அவனன்றி ஓர் அணுவும் அசையாது.

அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்.
தான் ஒன்று நினைத்தால் தெய்வம் ஒன்று நினைக்கும்.
எளியாரை வலியார் வாட்டினால் வலியாரைத் தெய்வம் வாட்டும்.

பெற்றோர்

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
தாயிற் சிறந்ததோர் கோயிலுமில்லை.
தந்தை சொல்மிக்க மந்திரமில்லை.
பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு.
பெற்றவளுக்குத் தெரியும் பிள்ளை அருமை.

கல்வி

கண்டதைக் கற்கப் பண்டிதனாவான்.
இளமையிற் கல்வி சிலையில் எழுத்து.
இளமையிற் கல்.
கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு
குலவித்தை கற்றுப் பாதி, கல்லாமல் பாதி.

செல்வம்

ஈட்டி எட்டினமட்டும் பாயும், பணம் பாதாளமட்டும் பாயும்.

இல்லாதவனே பொல்லாதவனே.
பணமில்லாதவன் பிணம்.
பணம் பந்தியிலே குலம் குப்பையிலே.
பல துளி பெரு வெள்ளம்.
பணமில்லாத மனுஷன் பாணம் இல்லாத வில்.
குந்தித் தின்றால் குன்றும் மாளும்.

வேளாண்மை

மண்ணுழுது வாழ்ந்தவனுமில்லை, மண்ணுழுது கெட்டவனுமில்லை.

ஆடி விதைத் தேடிப்போடு.
உழவு அற உழுதால் விளைவு அற விளையும்.
அகல உழுவதைக் காட்டிலும் ஆழ உழு.
மேழிச் செல்வம் கோழைபடாது.

நட்பு

அன்பான சிநேகிதனை ஆபத்தில் அறியலாம்.
ஆரும் அற்றதே தாரம், ஊரில் ஒருவனே தோழன்.
ஒருவர் பொறை இருவர் நட்பு.
பன்றியோடு கூடும் கன்றும் கெடும்.
பழகப் பழகப் பாலும் புளிக்கும்.

நன்றி

உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
அன்னமிட்டவரைக் கன்னமிடலாமா?

பெரியோர் தன்மை

அடக்கம் ஆயிரம் பொன் தரும்.
அரைகுடம் ததும்பும், நிறைகுடம் ததும்பாது.
குப்பையிலிருந்தாலும் குன்றுமணி நிறம் மாறுமா?

சிறியோர் தன்மை

முட்டாளுக்கு கோபம் மூக்கின்மேலே.
மூர்க்கரும் முதலையும் கொண்டது விடா.
மலையைப் பார்த்து நாய் குலைத்தென்ன?
நுணலும் (தவளையும்) தன் வாயால் கெடும்.

முயற்சி

முயற்சி திருவினையாக்கும்.
முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்.
அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.
வருந்தினால் வாராதது இல்லை.

பழக்கம்

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்.
அஞ்சில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
அப்பியாச வித்தைக்கு அழிவில்லை.
சோம்பேறிக்குத் தோலோடு வாழைப்பழம்.
புலிப் பசித்தாலும் புல்லைத் தின்னாது.
இளமையிற் சோம்பல் முதுமையில் மிடிமை.

சுகம்

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
சுவரை வைத்துச் சித்திரம் எழுதவேண்டும்.
சுத்தம் சோறு போடும்.
கூழானாலும் குளித்துக் குடி, கந்தையானாலும் கசக்கிக் கட்டு.
அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.
பாலோடாயினும் காலமறிந்துண்.
வைத்தியனுக்குக் கொடுப்பதை வாணியனுக்குக் கொடு.

பத்தியமைப்பு (Paragraph construction)

வாக்கியங்களை எழுத்துப்பிழை, சொற்பிழை, சந்திப்பிழை முதலியவை இல்லாமல் எழுதிவிடுவது மாத்திரம் போதாது. எழுதும் விஷயத்தைப் பத்தியாகப் பிரித்தெழுதுவது மிகவும் முக்கியமானது. கருத்து ஒழுங்கு ஏற்படுவதற்குப் பத்தி பயன்படுகிறது.

பத்தி ஆங்கிலத்தில் பாரா எனப்படும். ஒரே கருத்தைக்கொண்டிருப்பது பாரா ஆகும். பத்தியில் முதல் வாக்கியம் அதில் வரும் முக்கிய கருத்தைக் கூறும்; மற்ற வாக்கியங்கள் அக்கருத்தைப் பல வழிகளில் விளக்கும். பத்தியில் ஒவ்வொரு வாக்கியமும் இணைந்து நிற்கும். ஒரு பத்தியில் பல வாக்கியங்கள் இருப்பினும் அவைகளனைத்தும் ஒரே முழுக்கருத்தை விளக்கும் என்பதை மறத்தல் கூடாது. உதாரணத்தைப் பாருங்கள்.

[library stamp]

நல்ல நட்பு

1. நல்ல இயல்புடையவர்களுடைய நட்பு நன்மையைத் தரும். பூவுடன் சேர்ந்த நாரும் மணம்பெறுவது போல நல்லவர்களோடு சேர்பவர்கள் நல்லியல்பே அடைவார்கள். நல்லவர்கள், தங்களுடைய நண்பர்கள் தீய வழியில் செல்லும்பொழுது இடித்துரைத்து அவர்களை நல்வழிக்குத் திருப்புவார்கள்.

2. தமிழர் யார்? தொன்றுதொட்டுத் தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவரும் தமிழ்நாட்டில் குடியேறி நிலைத்து வாழ்வு பெற்றவரும் தமிழராவார் என்று கூறலாம். இவருள் சைவர் இருக்கலாம்; வைணவர் இருக்கலாம்; அருகர் இருக்கலாம்; பௌத்தர் இருக்கலாம்; கிறிஸ்தவர் இருக்கலாம்; இஸ்லாமானவர் இருக்கலாம்; ஆத்திகர் இருக்கலாம்; நாத்திகர் இருக்கலாம். இவரனைவரும் தமிழர் என்பதைமட்டும் மறத்தலாகாது.

சிலவேளைகளில் ஒரு விஷயத்தைப்பற்றி ஒரே ஒரு பத்தி எழுதவுமுண்டு. இப்பத்தி வருணனையாகவோ, வரலாறாகவோ விளக்கவுரையாகவோ இருக்கலாம். கீழ் வரும் உதாரணத்தைப் பாருங்கள்.

அருணகிரிநாதர்

அருணகிரிநாதர் தொண்டைமண்டலத்தில் திருவண்ணாமலையில் பிறந்தார். இவர் முருகப்பெருமானை வழிபட்டு அவர்மீது பல பாடல்களைப் பாடினார். அப்பாடல்களுக்குத் திருப்புகழ் என்பது பெயர். 'வாக்கிற்கு அருணகிரி' என்னுஞ் செய்யுளடியால் இவர் இனிமையாகப் பாட வல்லவர் என்பது புலனாகிறது. கந்தரந்தாதி, கந்தரனுபூதி, கந்தரலங்காரம் முதலியவை இவர் எழுதிய வேறு நூல்கள். இவரது காலம் கி. பி. 15-ம் நூற்றாண்டு என்பர்.

பயிற்சி

I

கீழ்வரும் பொருளை வைத்து பத்தி அமைத்து எழுதுக:

1. இரும்பின் உபயோகம்மட்டும். 2. நாயின் உபயோகமட்டும். 3. ராஜாராம் மோஹன்ராய் செய்த சீர்திருத்தங்கள் மட்டும். 4. தன் முயற்சியின் நன்மைகள் மட்டும்.

II

கீழுள்ள குறிப்புக்களை வைத்துக்கொண்டு பத்தி அமைத்தெழுதுக.

1. இரும்பு [குறிப்பு: நிறமும் தன்மையும்—கிடைக்குமிடம்—உபயோகம்—முடிவுரை.]

2. நாய் [உருவம்—வகை—குணம்—உபயோகம்—அன்பு.]

3. ராஜாராம் மோஹன்ராய் [1772–1883—பிறப்பு—தொண்டுகள்—பிரம சமாஜம்—இறப்பு.]

4. தன் முயற்சி [பொருள்—பிறரை எதிர்பார்த்தல்கூடாது—நம்பிக்கை வரும்.]

III

1. இப்பத்திக்கு ஏற்ற தலைப்பு எழுதுக:—

கல்வியை இளமையிலேயே கற்றல்வேண்டும்; ஏனெனில் அந்தப் பருவத்தில் மனம் வேறு எதிலும் செல்லாது. அப்போது படித்தால் படித்த விஷயம் கல்லின்மேல் செதுக்கிய எழுத்துப்போல் மனத்தில் நிற்கும். அதனால், இளமைப்பருவத்தை வீணாக்காமல் கல்வி கற்பதில் பயன்படுத்தல்வேண்டும்.

2. உங்கள் தமிழ்ப்பாட புத்தகத்தில் ஒரு பாடத்தை எடுத்துப் படித்து அப்பாடத்தில் வரும் ஒவ்வொரு பத்திக்கும் தலைப்பு எழுதுக.

எழுதும்பொழுது கவனிக்கவேண்டியவை
(What to observe when writing essays)

1. கையெழுத்து—எழுதுவதில் கையெழுத்து மிகவும் முக்கியமானது. எழுத்துக்களைச் சரியான உருவத்தோடு எழுதுக.

மெய்யெழுத்துக்குமேல் வைக்கும் புள்ளி வட்டமாயிருந்தால் எழுத்து அழகாயிருக்கும். சங்கிலிக் கையெழுத்து உதவாது. உருட்டுக்கையெழுத்தைவிட வலப் பக்கஞ் சாய்ந்த கையெழுத்தே வேகமாய் எழுதப் பயன் படும்.

2. இடம்விட்டெழுதல்—சொற்களுக்கு இடையில் $\frac{1}{8}$ அங்குலம் இடம்விட்டெழுதினால் படிப்பவர்கள் எழுதுவதை நன்றாகப் படித்தல்கூடும். அப்படி எழுதுவது அழகாகவும் இருக்கும்.

3. தவறான பிரிப்பு—எழுத்து எழுத்தாகச் சொற்களைப் பிரித்தல் கூடாது. சொற்களைத் தவறாகப் பிரித்

தால் பொருள்கூட வேறுபடும். தச்சன்தானே இதைச் செய்தான். தச்சன் தானே இதைச் செய்தான்—இந்த இரண்டு வாக்கியங்களும் பொருள் வேறுபடுதல் காண்க. கீழே பிழையாகப் பிரித்திருத்தலையும் திருத்தமாக இருக்கவேண்டியதையும் பாருங்கள்.

பிழை	திருத்தம்
1. பழங் கள் கிடைக்கும்.	பழங்கள் கிடைக்கும்.
2. இங்குப் பிராமணர்கள் சாப்பிடுவார்கள்.	இங்குப் பிராமணர் கள் சாப்பிடுவார்கள்.
3. அவரைப்பூவில் காண லாம்.	அவரைப் பூவில் காணலாம்.

பிழையாகச் சொற்களைப் பிரித்தல்
(Wrong splitting of words)

பிழை	திருத்தம்
4. வந்த உடன்	வந்தவுடன்
5. வீட்டில் இருந்து	வீட்டிலிருந்து
6. மாற்றுவதற்கு ஆக	மாற்றுவதற்காக
7. எண்ணி உள்ளேன்	எண்ணியுள்ளேன்
8. வயது ஆன உடன்	வயதானவுடன்
9. அதிகரிக்கும் ஆனால்	அதிகரிக்குமானால்
10. விருத்தி ஆக்கிக்கொள்	விருத்தியாக்கிக்கொள்
11. மலை அடிவாரம்	மலையடிவாரம்
12. வர அழைத்தான்	வரவழைத்தான்
13. அவர்கள் இடம்	அவர்களிடம்
14. வெங் நீர்	வெந்நீர்
15. பலாச் செடி	பலாச்செடி
16. மரப் பெட்டி	மரப்பெட்டி
17. தெரிந்து கொள்	தெரிந்துகொள்
18. வந்து விட்டான்	வந்துவிட்டான்
19. பழங் கள் தின்	பழங்கள் தின்
20. திருநீலகண்ட நாயனார்	திருநீலகண்ட நாயனார்
21. கட்டளை இட்டான்	கட்டளையிட்டான்
22. ஆவி ஆக	ஆவியாக
23. வெளி ஏறினர்	வெளியேறினர்

செய்துகொண்டு, தெரிந்துகொள் போன்ற சொற்களைப் பிரித்தெழுதல் கூடாது என்பதறிக.

4. வீணை சந்திகள்—உரைநடையில் வீணை சந்திகளைச் சேர்த்தெழுதுவது படிப்பவர்களுக்கும் தொல்லை கொடுக்கும். 'புற்றரையில், பெரி விடம்' என்று எழுதாமல் 'புல் தரையில், பெரிய இடம்' என்றே எழுதுக.

13. கட்டுரை எழுதும் முறை
(Some hints to write an essay)

கட்டுரைக்கு அடிப்படையானவற்றை இதுவரைக்கும் படித்தீர்கள். இங்குக் கட்டுரைக்கு உள்ள பொது விதிகளையும் கட்டுரை வகைகளையும் கட்டுரைக்குக் குறிப்பெழுதும் முறையையும் படிப்பீர்கள்.

கட்டுரை என்பது யாது?

கட்டுரை என்பது ஒன்றைப்பற்றிக் கோவையாகப் பொருள் அமைத்துப் பொருத்தமாக எழுதும் உரையாகும். கட்டுரை ஒரு பொருளையே குறிப்பிடுதல் வேண்டும். விஷயங்கள் கோவையாக அமைந்திருத்தல் இன்றியமையாதது.

பொது விதிகள்

1. பொருட்பொருத்தம் — கட்டுரையில் இது மிகவும் முக்கியம். எழுதும் பொருளை முதலில் நன்றாகச் சிந்தித்து வரையறுத்துக்கொள்க.

2. குறிப்பெழுதல்—அடுத்த வேலை இது. எழுதப் புகுவதற்குமுன் எழுதப்புகும் விஷயத்தைப்பற்றிக் குறிப்பெழுதிக்கொள்க. இது பேருதவியாயிருக்கும்.

3. பாகுபாடு செய்தல்—இது கட்டுரை எழுதும்பொழுது மறவாமல் கைக்கொள்ளவேண்டிய மற்றொரு வேலை. எந்த விஷயத்தையும் முன்னுரை, உடல், முடிவுரை என்று பிரிக்கலாம். முன்னுரை எழுதுவதில் $\frac{1}{10}$ இருத்தல் வேண்டும். முன்னுரையும் முடிவுரையும் இனியனவாக இருத்தல் சிறப்பாகும்.

4. பத்தி பிரித்தல்—இது கட்டுரையில் கைக்கொள்ள வேண்டிய மற்றொரு முறை. பத்தி பிரித்து எழுதுவது நாகரிகக் கட்டுரைக்கு அடையாளம்.

5. கருத்து வரிசை முறை — இதையும் கட்டுரையில் கவனிப்பது அவசியம். முன்வரவேண்டியது முன்னும் பின்வரவேண்டியது பின்னும் வர எழுதுக. முன்னுக்குப் பின் முரண்பாடாக இருப்பது தவறு.

6. திரும்பப் படித்துத் திருத்துதல்—இது கட்டுரையில் இறுதியில் கவனிக்கவேண்டிய முக்கியமான வேலை. யானைக்கும் அடி சறுக்கும். நன்றாக எழுதப் பழகியவர்களும் தங்களை அறியாமல் பிழை செய்யக்கூடுமானால், மாணவர்கள் எழுதும்போது பிழைசெய்யாமல் இருப்பது கூடுமா? ஆகையால், எழுதியதைத் திரும்பப் படித்துத் திருத்துக.

7. மொழிநடை—கட்டுரையில் மொழிநடை மிகவும் எளிதாக இருத்தல்வேண்டும். 'எளிய நடையே அழகிய நடை.' எளிய நடையில் எழுதுவது இலேசாக வராது. அது முயற்சியால்தான் வரும். மொழிநடை எளிதாயிருப்பதற்கு வீணை சந்திகள் வேண்டியதில்லை. 'மேனிற்பினும்', 'கூறுகண் மிகுதி' (கூறுகள் மிகுதி) போன்ற சந்திகள் உரைநடையில் வேண்டுமா? சிந்தித்துப் பாருங்கள்.

கட்டுரை வகை

கட்டுரை பலவகைப்படும். முக்கியமாக நீங்கள் நான்குவகைக் கட்டுரைகளைப்பற்றி மட்டும் தெரிந்து கொள்ளுங்கள்.

I. சிந்தனைக் கட்டுரை (Reflective essay)—சிந்தனையில் அல்லது கருத்தில் எழும் பொருளைப்பற்றியது சிந்தனைக் கட்டுரையாகும். இது பொதுவாகப் பண்பு, சமூக விஷயம், அரசியல் விஷயம் ஆகிய இவைகளைப்பற்றி வரும்.

உ—ம். (1) பண்புப்பொருள்—அன்பு, வீரம்.
(2) சமூக விஷயம்—நட்பு, கல்வி.
(3) அரசியல் விஷயம்—நாட்டுப்பற்று, இந்தியநாடு.

II. கதைக் கட்டுரை (Narrative essay)—ஒரு நிகழ்ச்சியையோ பல நிகழ்ச்சிகளையோ கதைப்போக்கில் கூறுவது கதைக் கட்டுரையாம்.

உ-ம். (1) புராணக்கதை—பீமன் கதை, பஞ்சதந்திரக் கதை.
(2) சரித்திரக் கதை—கரிகாற்சோழன், சிவாஜி.
(3) வாழ்க்கை வரலாறு—கம்பர், காந்தியடிகள்.
(4) என் வாழ்க்கை வரலாறு—நேரு சுயசரிதை, காந்தியடிகள் சுயசரிதை.
(5) நிகழ்ச்சி—பண்டிகை, தெருச்சண்டை.
(6) விபத்து—வெள்ளம், தீப்பிடித்தல்.
(7) பயணம்—வெளிப்பயணம் (Excursion).
(8) கதை—உண்மைக் கதை, கற்பனைக் கதை.

வரலாறும் என் வரலாறும்
(Biography and Auto-biography)

வரலாறு என்பது வாழ்க்கை வரலாறு. வாழ்க்கை வரலாறு ஒருவருடைய வாழ்க்கையில் நடந்த வரலாற்றைக் கூறுவதாகும். வாழ்க்கை வரலாற்றை எழுதுபவர்கள் மிகவும் கவனமாய் நற்குணமும் தீக்குணமும் விடாமல் நடுநிலைமையாக எழுதல்வேண்டும். தமிழ்மொழியில் சரியான வாழ்க்கை வரலாறுகளே இல்லை எனலாம். கம்பர் வரலாறு, வள்ளுவர் வரலாறு முதலியவை கட்டுக் கதைகளே அல்லாமல் உண்மையான வாழ்க்கை வரலாறுகளாகா. இப்பொழுதுதான் சில மொழிபெயர்ப்பு வாழ்க்கை வரலாறுகள் வந்துகொண்டிருக்கின்றன. காந்தியடிகள் வாழ்க்கை வரலாறு, நேரு வாழ்க்கை வரலாறு முதலியன ஆங்கிலத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டவை. டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரவர்கள் எழுதிய 'மீனாட்சிசுந்தரம் பிள்ளை சரித்திரம்' ஒன்றே தகுதியான தமிழ்மொழியிலே எழுதப்பட்ட வாழ்க்கை வரலாறாகும்.

வாழ்க்கை வரலாறு (Biography) ஒருவர் வாழ்க்கை நடத்திய விதத்தை நமக்கு எடுத்துக்காட்டவேண்டுமே

யன்றி அவர் செய்த செயல்களை எல்லாம் அட்டவணையிட்டுக் கூறவேண்டியதில்லை. முத்துசாமி ஐயர் மிகவும் ஏழையாயிருந்து படித்து முன்னுக்கு வந்தார். சர்வாஞ்சி டாட்டா பட்டக் கல்வி பெறுவிட்டாலும் கூரிய மதியுடையவராக விளங்கிப் பல தொழிற்சாலைகளைத் தொடங்கி வைத்துத் தமக்கும் நாட்டிற்கும் பொருள் தேடிவைத்தார். இந்த வகையில் படிப்பவர்கள் பாடம் கற்றுக்கொள்ளும் நிலையில் வாழ்க்கை வரலாறு எழுதப்படல்வேண்டும்.

'என் வரலாறு' (Auto-biography) என்பது வாழ்க்கை வரலாற்றினும் வேறுனது. பிறர் இதை எழுதுவதில்லை. எழுதுவோரே தம் வாலாற்றைக் குறிப்பிடுவது இது. எழுதுவோர் கள்ளங்கபடமற்ற வெள்ளையுள்ளத்தோடு நடுநிலை நின்று தம் வரலாற்றைக் குறிப்பிடுதல்வேண்டும். என் வரலாற்றில் ஒருவர் தம்மைத் தாமே புகழ்ந்துகொள்வது முடியாது. உண்மையில் என் வரலாறு மிகக் கடினமான நூலே. டாக்டர் சாமிநாத ஐயரவர்களுடைய 'என் சரித்திரம்' இவ்வகையைச் சேர்ந்தது. காந்தியடிகள், நேரு ஆகிய இவர்கள் தாங்களே எழுதிய வரலாறுகள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

என் வரலாற்றை எழுதுபவர் தம் வரலாற்றை உண்மையாக உரைத்தல்வேண்டும். சில வேளைகளில் நாய் தன் வரலாற்றைக் கூறுவதுபோல நாம் கற்பனை செய்து எழுதுவதுமுண்டு. ரூபா தன் வரலாற்றைக் கூறுவதுபோல் எழுதலாம். என் வரலாறு எப்பொழுதும் தன்மை இடத்தில் (1st person) எழுதப்படும்.

III. வருணனைக் கட்டுரை (Descriptive essay)—ஒரு பொருளைப்பற்றியோ இடத்தைப்பற்றியோ வருணிப்பது வருணனைக் கட்டுரையாகும்.

(1) பிராணிகள்—பசு, நாங்கூழ்ப்புழு.
(2) செடி கொடி மரவகை—தென்னை, தேக்கு மரம்.
(3) உலோகப்பொருள்—இரும்பு, மண்ணெண்ணெய்.

(4) நாடு, நகரம், கட்டிடம்—இந்தியா, சென்னை, தாஜமஹால்.

(5) இயற்கை—பூகம்பம், சூரியன்.

(6) செய்பொருள்—புகைவண்டி, காகிதம்.

(7) குணக்குறிப்பு (Description of character)—கிளேவின் குணம், வாரன் ஹேஸ்டிங்.

IV. விளக்கக் கட்டுரை (Expository essay)—ஒரு பொருளை விளக்கி எழுதுவது விளக்கக் கட்டுரையாகும்.

(1) நிலையங்கள், சாலைகள், தொழில்கள் முதலியன—காங்கிரஸ் மகாசபை, பத்திரிகை, கைத்தொழில்.

(2) விஞ்ஞான விஷயம்—மின்சாரம், வானவூர்தி.

(3) இலக்கியப்பொருள்—கம்பர் கவியின் அழகு, திருக்குறளின் சிறப்பு.

குறிப்பெழுதும் முறை

சிந்தனைக் கட்டுரை

வீரம்

I. 1. முன்னுரை—வீரம் என்பது யாது?

2. உடல்—(1) போரில் துணிவு. (2) வறுமையில் செம்மை. (3) உண்மைக்கு உயிர்விடல். (4) கடவுளன்பு.

3. முடிவுரை—வீரத்தைப்பற்றி என் கருத்து.

நாட்டுப்பற்று

1. முன்னுரை—நாட்டுப்பற்று என்பது யாது?

2. உடல்—(1) இருவகை நாட்டுப்பற்று. (2). பயன். (3) தீமை.

3. முடிவுரை—எத்தகைய நாட்டுப்பற்று வேண்டும்? நல்ல நாட்டுப்பற்றை வற்புறுத்தல்.

கதைக் கட்டுரை

வாழ்க்கை வரலாறு

II. 1. முன்னுரை—வாழ்க்கைவரலாறு அறிவது என்?
2. உடல்—(1) பிறப்பு. (2) இளமைப்பருவம். (3) வேலை. (4) செய்த தொண்டுகள். (5) இறப்பு.
3. முடிவுரை—மதிப்புரை.

என் வரலாறு

(1) பிறப்பு. (2) இளமைப்பருவம். (3) முன்னுக்குவந்த விதம். (4) என் வழக்க பழக்கங்கள். (5) இப்போதுள்ள என் நிலை, (6) என் குறைவும் நிறைவும்.

மோட்டார் விபத்து

1. முன்னுரை—விபத்து நடந்த இடம்.
2. உடல்—(1) விபத்துக்குக் காரணம். (2) எங்கு நடந்தது. (3) கிடைத்த உதவி.
3. முடிவுரை—படிப்பினை.

வெளிச்செலவு (Excursion)

1. முன்னுரை—வெளிச்செலவினால் வரும் பயன்.
2. உடல்—(1) புறப்பட்ட இடம். (2) வழியில் கண்டவை. (3) போன இடமும் கண்டவைகளும்.
3. முடிவுரை—திரும்பி வந்தது.

வருணனைக் கட்டுரை

III.

பொன்

1. முன்னுரை—பொன் என்பது யாது?
2. உடல் — (1) கிடைப்பது. (2) கிடைக்கும் இடங்கள். (3) உபயோகம்.
3. முடிவுரை—பொன்னை நாம் என்ன செய்தல் கூடாது.

நான் கண்ட இடம்.

1. முன்னுரை—இடம் எங்கே இருக்கிறது?
2. உடல்—(1) கண்ட காட்சி (இயற்கையழகும் செயற்கையழகும்). (2) தட்ப வெப்ப

நிலை. (3) மக்கள், மிருகங்கள் முதலியன. (4) வினைபொருளும் முக்கிய கைத்தொழிலும்.

3. முடிவு—இடத்தைப்பற்றிய கருத்து

ஆறு

1. முன்னுரை—பிறப்பிடம்.

2. உடல்—(1) வழியும் வழி அழகும். (2) வழிமேல் இருக்கும் நகரங்கள். (3) முடியும் இடம். (4) பயன்.

3. முடிவுரை—என் கருத்து.

மலை

1. முன்னுரை—மலை உண்டான விதம்.

2. உடல் — (1) தொலைவில் காணும் காட்சி. (2) அருகில் காணும் காட்சி. (3) உச்சி.

3. முடிவுரை — கண்டபோது தோன்றிய எண்ணம்.

குணக்குறிப்பு

(1) தோற்றம்—உருவத் தோற்றம்—அழகு அல்லது விகாரம்—உயரம் அல்லது குட்டை.

(2) மனப்பண்பு—கல்வி நிலை—அறிவோ அறிவின்மையோ.

(3) ஒழுக்க நிலை—உண்மை அல்லது பொய்ம்மை—அறம் அல்லது மறம்.

(4) தொண்டாற்றிய காரணம்—அன்பால் அல்லது பகையால் அல்லது பொறுமையால்—நாட்டுப்பற்றால் அல்லது பேராசையால் அல்லது பதவி வேட்டையால்.

(5) ஏற்பட்ட நன்மை தீமை—(1) குணமுடையவனுக்கு ஏற்பட்ட அழிவோ வெற்றியோ. (2) நாட்டுக்கு ஏற்பட்ட நன்மை தீமை.

(6) வரலாற்றில் இடம்—மதிப்பிடம் அல்லது இழிவிடம்.

IV. விளக்கக் கட்டுரை

1. மின்சாரம்

முன்னுரை—மின்சாரம் என்பது யாது?

உடல்—(1) மின்சாரம் கண்டுபிடித்தது. (2) உற்பத்தி. (3) பயன்.

முடிவுரை—மின்சாரத்தின் எதிர்காலம்.

2. திருக்குறள்

முன்னுரை—சிறந்த நூல்களில் தலைசிறந்தது.

உடல்—(1) நூலாசிரியர். (2) பெயர்க்குக் காரணம். (3) பிரிவுகள். (4) நூலில் சொல்லப்பட்ட விஷயம். (5) படிப்பதால் வரும் பயன்.

முடிவுரை—திருக்குறளைப் படிக்கும் விதம்.

பயிற்சி

குறிப்புக்கள் மட்டும் எழுதுக:—

(1) **சிந்தனைக் கட்டுரை:**—அன்பு, ஜீவகாருண்யம், ஓய்வுநேரம், குண அமைப்பு, கல்வி, உரிமை, சிக்கனம், வறுமை.

(2) **கதைக் கட்டுரை:**—தீபாவளிப் பண்டிகை, தேர்த்திருவிழா, கிறிஸ்துநாதர் ஜயந்தி, சிவாஜி, சைக்கில் விபத்து, வீடு தீப்பற்றியது, ஊர்ப்பயணஞ் சென்றது (any excursion), கற்பனைக் கதை ஒன்று, பண்டைத்தமிழரசர் ஆட்சி முறை, கம்பர் வரலாறு.

(3) **வருணனைக் கட்டுரை:**—காவிரியாறு, மகாபலிபுரம், திரிசிராப்பள்ளி, கண்ணம்பாடி அணைக்கட்டு, கிராமத்தில் காலைக்காட்சி, கடற்கரையில் மாலைக்காட்சி, குற்றாலம், யானை, மண்ணெண்ணெய், பூகம்பம்.

(4) **விளக்கக் கட்டுரை:**—வான விமானம், பத்திரிகை படிப்பது, கைத்தொழில், 'தொட்டிற் பழக்கம் சுடுகாடுமட்டும்', வானொலி, பள்ளிக்கூடச் சங்கங்கள், 'சுத்தம் சோறு போடும்', எறும்புகளின் வாழ்க்கை, தற்காலப் போக்குவரத்துச் சாதனங்கள், கல்விச்சாலை வெளியீடு (school-magazine).

பயிற்சி

I. கீழ்வரும் குறிப்புக்களைக்கொண்டு கட்டுரைகள் வரைக:—

(1) கீழ்ப்படிதல் (Obedience)

கீழ்ப்படிதல் என்பது யாது—பெற்றோர், குரு, தலைவன், அரசன், கடவுள் ஆகிய இவர்களுக்குக் கீழ்ப்படிதல்—பயன்—கீழ்ப்படியாவிட்டால் வரும் தீமை—கீழ்ப்படிய எவ்வாறு பழகுவது—நாம் யாது செய்தல்வேண்டும்.

(2) இனம் இனத்தைச் சேரும்

பொருள் விளக்கம்—இயற்கையில் காண்பது (காக்கை)—தீயோர் தீயோருடன், நல்லோர் நல்லோருடன்—உதாரணங்கள்—மாணவர் செய்யவேண்டியது.

(3) திருக்குற்றாலம்

இடம்—இயற்கை அழகு—நீர்வீழ்ச்சியின் காட்சி—குளிக்கும் திருக்கோலம்—குற்றாலத்தைப்பற்றிய கருத்து.

(4) முகம்மது நபி

அரபி நாட்டின் தலைநகராகிய மக்காவில் கி. பி. 571-ல் குறைஷிக் குலத்தில் அப்துல்லாவுக்கும் அமீனா அம்மையாருக்கும் பிறந்தார்—இளவயதில் பெற்றோர் இறந்தனர்—உத்தியோகம்—கதீஜா அம்மையாரிடத்தில்—கதீஜாப் பிராட்டியார் நபியை மணந்தார்—சில ஆண்டுகள் வாழ்ந்தபின் மனைவியார் இறந்தார்—இஸ்லாம்பிராசாரம்—முதலில் 40 பேர்கள் இஸ்லாத்தில் சேர்ந்தார்கள்—நாட்டில் எதிர்ப்பு—மக்காவைவிட்டு மதீனாவிற்குச் சென்றார்—அங்கே எதிரிகளுக்கும் நபிக்கும் போர் மூண்டது—ஒருவாறு நபிபெருமான் வெற்றியுற்றார்—மக்காவையும் பின்பு வென்றார்—கி. பி. 632-ல் இறைவன் திருவடி நிழலடைந்தார்.

(5) சர்ச்சில் (குணக்குறிப்பு)

தோற்றம்—உயரமானவர்; மனப்பண்பு—சிறந்த அறிவுடையவர்; முக்கியமாகப் போர்ப்படை அறிவு அதிகம்; ஒழுக்கநிலை—உண்மையானவர், வெறுத்தால் மிக வெறுப்பவர்; தொண்டு—நாட்டுப்பற்றும் உயர்நிலைக்கு வர விரும்பும் எண்ணமும்; நன்மை—1914-ல் நடந்த போரில் கடற்படை வெற்றி—இப்போரிலும் வெற்றி வரும்; வரலாற்றில்—தனியிடம்.

II. கீழ்வருபவைகளில் ஒன்றைப்பற்றிக் கட்டுரை எழுதும் 'நோட்டில்' மூன்று பக்கத்துக்குக் குறையாமல் எழுதுக:—

(1) மலைகளும் அவற்றின் பயன்களும். (2) இந்திய நாட்டுத் தற்கால வணிக நிலை. (3) வைகறைத் துயிலெழு. (4) கிராம முன்னேற்றம். (5) நான் கண்ட ஊர். (6) நான் விரும்பும் தமிழ் நூல். (7) பரதனும் குகனும். (8) பண்டிகை. (9) உப்பு. (10) பள்ளிக்கூடப் பரீட்சை.

மாதிரிக் கட்டுரை (Model essays)

1. உடை

முன்னுரை: இயற்கையும் உடையும்.

பொருள்: (1) நாகரிகமும் உடையின் தோற்றமும். (2) உடுப்பதன் நோக்கங்கள். (3) கால வேறுபாட்டுக்கு ஏற்ற உடை. (4) இந்திய நாட்டு உடை.

முடிவுரை: எப்படிப்பட்ட உடை உடுத்தல்வேண்டும்?

இயற்கையும் உடையும்—இயற்கை அன்னை எல்லா வகையான உயிர்களுக்கும் உடை அளித்திருக்கிறாள். ஆட்டுக்கு உடலில் மயிர் உடையாக இருக்கிறது. மாட்டுக்குத் தடித்த தோல் உடையாக உதவுகிறது. பறவைகளுக்கு இறக்கையும் உடல் மயிரும் உடைகளாக இருக்கின்றன. மரத்துக்கும் பட்டை இருக்கிறது. அவைகளுக்குச் செயற்கை உடை வேண்டியதில்லை. ஆனால், மனிதர்க்குச் செயற்கை உடை வேண்டியது. இதனால், மானிடர்க்கு உடை வேண்டுமென்பது வெள்ளிடை மலை என விளங்குகிறதன்றோ?

மானிட நாகரிகம் வளர வளர உடையும் வளரலாயிற்று. மிகப் பழங்காலத்தில் உலகில் எல்லா நாட்டு மக்களுமே உடையில்லாமலே திரிந்தார்கள். மக்கள் வீடுகட்டி ஆடுமாடுகளை வளர்த்துப் பருத்தியைப் பயிராக்கி வாழ அறிந்த பின்பு ஆட்டு மயிரைக்கொண்டோ பருத்தியைக்கொண்டோ இழைகள் நூற்றுத் துணி நெய்து உடை அணிந்துகொள்ளத் தலைப்பட்டார்கள். துணி நெய்து உடுத்துக்கொள்வதற்குமுன் மக்கள் இலைகளால் செய்த உடைகளையே அணிந்திருந்தார்கள். நாகரிகம் வளர வளர உடையின் விதமும் வளரலாயிற்று.

அந்தந்த நாட்டின் தட்பவெப்ப நிலைக்கு ஏற்ற வாறே உடையும் தோன்றியது. குளிர்ந்த நாடுகளில் உட்சட்டை, கழுத்துக்கட்டு, மேற்சிறுசட்டை, மெய்ப் பை, கம்பள மெய்ப்பை, காலுறை, கையுறை, கால்மூடிச் செருப்பு முதலியவை தோன்றின. வெயில் மிகுந்த நாட்டில் பெருந் தலைப்பாகையும் விரிந்த காற்பையும் உண்டாயின. சமநிலைத் தட்ப வெப்பம் இருக்கும் இந்திய நாட்டில் அரை ஆடையும் மேலாடையும் தோன்றின. தமிழ்நாட்டினர் பண்டைக்காலத்தில் நான்கு முழம் துண்டே உடுத்தி வந்தனர். 'உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்' என்னும் அவ்வையார் செய்யுளடி இதனை வற்புறுத்தும்.

இக்காலத்தில் மக்கள், மானத்தைக் காப்பாற்றவும், ஒழுங்காகத் தோன்றவும், அழகான காட்சி அளிக்கவும் நோக்கங்கொண்டு உடை உடுக்கிறார்கள். மானம் காக்க உடை உடுக்கவேண்டியது அவசியமே. 'ஆடை இல்லா தவன் அரை மனிதன்' என்பது பழமொழி. ஒழுங்காகத் தோன்றுவதற்குப் பெரியோர்கள் உடை உடுப்பது இயல்பு. சிறுவர்கள் அழகுக்காகவே உடை உடுக்கிறார் கள் என்று சொல்லவேண்டியதில்லை. பெரியோர்கள் அழகுக்காக உடை உடுப்பது சிறு பிள்ளைத்தன்மையே ஆகும்.

வெயிற்காலத்தில் பருத்தி உடையையும், மழைக் காலத்தில் சூடளிக்கும் கம்பளி உடையையும் மேல் நாட்டு மக்கள் உடுப்பதைப் பார்க்கிறோம். நம் நாட்டில் அவ்வாறு செய்பவர் தொகை மிகக் குறைவு. எளிய இந்திய நாட்டில், ஏழை இந்திய நாட்டில் அப்படிச் செய்வது எப்படி முடியும்? பணத்தில் புரளும் மேல் நாட்டு மக்களுக்கே அது முடியும். கூடுமானவர்கள் குளிர்காலத்தில் கம்பளிச் சட்டையையும் வெயில் காலத் தில் பருத்தி உடையையும் உடுக்கலாம்.

இந்திய நாட்டு மக்கள், அயல்நாட்டு மக்கள் உடை களை முழுதும் ஏற்றுக்கொள்வது கூடாது. நமது நாட்டு நிலைக்கு ஏற்றவாறு நம் உடையும் இருக்கவேண்டாவோ?

சௌகரியத்தை ஒட்டியும் வேலை நிலையை ஒட்டியும் மேல்நாட்டு உடைகளுள் தக்கவற்றை நாம் கொள்ளலாம்; மற்றவற்றைத் தள்ளலாம். அந்தந்த நாட்டு மக்கள் அந்தந்த நாட்டு உடைகளை உடுப்பதுதான் நல்லது.

மேல்நாட்டுப் போலி நாகரிக வெள்ளத்தில் மூழ்கிக் கிடக்கும் சிலர் குடிப்பது கூழாயிருந்தாலும் டாம்பீகத் துக்காக உயர்ந்த உடை உடுக்கிறார்கள். 'உயர்ந்த உடுப்பு அயர்ந்த அடுப்பு' என்பது நமது நாட்டுப் பழமொழி. பதினைந்து ரூபா சம்பாதிப்பவன் உயர்ந்த உடை உடுத் தால் அவன் குடும்பநிலை என்னாகும்? ஏழைக் குடும்பப் பெண், உயர்ந்த உடை உடுக்கத் தொடங்கினால் அவள் வாழ்வு என்ன நிலை அடையும்? குடும்பம் அழியும் என்று சொல்லவும் வேண்டுமோ? ஆகையால், ஒருநாளும் டாம் பீகத்துக்கு உடை உடுத்தல் கூடாது.

பளப்பளப்பான உடை உடுப்பது சிறு பிள்ளைத் தன்மை. ஒருவனுடைய உடை அவனுடைய குணத் தைக் காட்டும். ஆறுமாத அழுக்கு நிறைந்த மெய்ப் பைகளையும், பல ஆண்டுகளாக அழுக்கேறியுள்ள புட வைகளையும் உடுப்பது நாகரிகமாகாது. தூய்மையான பளபளப்பற்ற உடைகளை நம் நிலைக்குத் தக்கவாறு நாம் உடுத்தல்வேண்டும். இதை நாம் மறந்தால் வறண்ட வாழ்வே நமக்குக் கிடைக்கும் என்பது திண்ணம், திண்ணம்.

2. சென்னையம்பதி

முன்னுரை—சிறப்பு.

பொருள்—(1) இடம். (2) ஏற்பட்ட விதம். (3) பரப் பும் ஜனத்தொகையும். (4) தட்பவெப்ப நிலை. (5) காணத்தக்கவை. (6) வணிகம், ஏற்றுமதி, இறக்குமதி, கைத்தொழில். (7) மக்கள்.

முடிவுரை—சென்னையைப்பற்றிய கருத்து.

சென்னை, இந்தியாவிலுள்ள பெரிய நகரங்களுள் மூன்றாவதாகும். இதன் கடற்கரையும் மிகப் பெரியது.

இங்கே நல்ல செயற்கைத் துறைமுகமும் உண்டு. எனவே, சென்னை, துறைமுகத்தை உடைய தலைமைப்பட்டினமாக இருக்கிறது. சென்னை இருக்கும் இடமோ மிகமிகப் பழமையானது. இது தொண்டை நாட்டில் இருக்கிற தால் கல்விக்குப் புகழ்பெற்ற இடமாகவும் விளங்குகிறது. இக்காலத்தில் சென்னையம்பதி கல்விக்கு உறைவிடமாக வும் செல்வத்துக்கு நிலைக்களமாகவும் செந்தமிழ் வளர்ச் சிக்குச் செவிலியாகவும் தன்னிடம் வருவோரை வேற் றுமை கருதாது போற்றுவதற்குத் தாயாகவும் இருந்து வருகிறது.

இவ்வளவு சிறப்பு வாய்ந்த சென்னையம்பதி இந்தியா வின் தென்பாகத்தில் கடற்கரையோரத்தில் இருக்கிறது. இதை அடுத்துக் கிழக்கு எல்லையாயிருப்பது வங்காளக் குடாக் கடல்.

பிரான்ஸிஸ் டே இற்றைக்கு ஏறக்குறைய முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு சென்னையை அப்போது வாணிகம் செய்திருந்த கிழக்கிந்திய வணிகக் கழகத்திற்காக ஸ்ரீரங்கராயரிடமிருந்து குத்தகைக்கு வாங்கி ஸ்ரீரங்க ராயருடைய தந்தையின் பெயரையே இதற்கு வைத்துக் கோட்டையைக் கட்டிப் பட்டினமாக்கினார். சென்னப் பன் பட்டினம் என்பது சென்னைப் பட்டினம் என மரு விற்று. சென்னைக்கு மதராஸ் என்றும் பெயருண்டு. புகழ் பெற்றிருந்த போர்த்துக்கல் தேச வியாபாரியாகிய, மத ராஸ் என்பவருடைய பெயரால் அப்பெயர் வந்தது. எனவே, இதற்குச் சென்னை, மதராஸ் என இரு பெயர் கள் ஏற்பட்டன. இது இவ்விரு பெயர்களைப் பூண்டு நாளடைவில் பெருநகரமாக வளர்ந்துவிட்டது.

சென்னையின் பரப்பு ஏறக்குறைய 27 சதுர மைல் ஆகும். இப்போது சென்னையில் ஏழு லக்ஷம் ஜனங்கள் இருக்கிறார்கள்.

சென்னையம்பதி கடற்கரைப் பட்டினமாக இருப்ப தால் இங்குக் கடுமையான வெயிலும் குளிரும் பெரும் பாலும் இல்லை. மார்ச்சு மாதத்திலிருந்து வெப்பம் அதி கரித்ததுக்கொண்டே மே, ஜூன் மாதங்களில் சிறிது

கடுமையாகிறதைக் காணலாம். நவம்பர் மாதத்தில் குளிர் தொடங்கி டிசம்பர், ஜனவரி மாதங்களில் சிறிது அதிகமாகிறது. இங்கே அக்டோபர், நவம்பர் மாதங்களில் மழை பெய்கிறது.

டிசம்பர் மாதத்தில் சென்னையம்பதி பார்ப்பதற்கு மிக அழகாக இருக்கும். அக்காலத்திற்றான் வெளியூரிலிருந்து பலர் சென்னைக்கு வருவர். வெளியூரார் சென்னையில் பார்க்கவேண்டிய முக்கியமான இடங்கள் உண்டு. அவையாவன: நீதிமன்றக் கட்டிடங்கள், சீனக் கடைத் தெரு, செயின்ட் ஜார்ஜ் கோட்டை, மிருகக் காட்சிச்சாலை, மூர் 'மார்க்கெட்', தென்னிந்திய மராட்டா இருப்புப் பாதை நிலையம், ஜெனரல் 'ஹாஸ்பிட்டல்' என்னும் மருத்துவச்சாலை, மலைச்சாலை, கவர்னர் மாளிகை, சென்னைப் பல்கலைக் கழகக் கட்டிடங்கள், கடற்கரை, திருவல்லிக்கேணிப் பார்த்தசாரதி பெருமாள் கோயில், அகில இந்திய வானொலி நிலையம், கண் வைத்தியசாலை, பல்பொருட் காட்சிச் சாலை, கன்னிமாரா பொதுமக்கள் நூல்நிலையம், தென்னிந்திய இருப்புப்பாதை நிலையம்.

சென்னைக் கடற்கரை அளிக்குங் காட்சி கண்ணையும் மனத்தையும் கவரும் என்பதில் ஐயமில்லை. மலைச்சாலையில் இருக்கும் வணிகச்சாலைக் கட்டிடங்களும் மற்றப் பெருங்கட்டிடங்களும் பார்ப்பதற்கு அழகாகவே இருக்கும். சிறுசிறு தெருக்களில் நுழைந்தால் தெருக்கள் குறுகியும் அழகற்றனவாயும் சுகாதார நிலையில்லாதனவாயும் இருக்கும். மைசூரைப்போல் சென்னை அழகாகத் தோன்றாது.

வணிகம் சென்னையில் அதிகமாக நடைபெறுகிறது. ஆனால், இது பம்பாய், கல்கத்தாவைப்போல் பெரு வணிகம் நடக்கும் இடமாக இல்லை. இங்கே இருக்கும் இரண்டு பெரிய பஞ்சாலைகள் ஏராளமாகத் துணி நெய்து வெளியூர்களுக்கு அனுப்புகின்றன.

தோல் பதனிடும் தொழிலும் இங்கே நடைபெறுகிறது. வெளிநாட்டுப் பொருள்கள் இங்கு இறக்குமதியாவதாலும் தோல், நிலக்கடலை, எள் முதலியவை அயல்

நாடுகளுக்கு இங்கிருந்து ஏற்றுமதியாவதாலும் இங்கே வணிகம் மும்முரமாக நடைபெறுகிறது.

சென்னையில் இந்தியாவில் இருக்கும் எல்லாவகை ஜாதியினரையும் காணலாம். சென்னையில் என்றும் குடியிருப்பவர்கள் தமிழர்களே. இத்தமிழர்கள் சண்டை சச்சரவுகள் இன்றி அமைதியான வாழ்வை நடத்துபவர்கள்.

பாராதவர்கள் சென்னையை ஒரு முறையாயினும் காணவேண்டியதே. இது கண்கவர் இயற்கையழகும் மாடகூடங்களும், நிறைந்த செல்வ நகரமாக இல்லாவிடினும், ஏழை மக்கள் வாழும் இடமாக இருந்தாலும், அமைதியில் நம்பிக்கையுடைய நகராக விளங்குவது போற்றத்தக்கதே. சென்னை மக்கள் சான்றோர்களாய் எந்நாட்டினர் வந்தாலும் இடம் கொடுத்து ஆதரிக்கும் மனப்பான்மையுடையவர்களாய் சமயச் சண்டை இன்றி வாழ்ந்து வருவது மற்ற நாட்டினரும் பின்பற்றக்கூடியதே. சென்னையம்பதியே, தொண்டை நாட்டுத் தண்டமிழ்ச் செல்வமே, நீடு வாழ்க!

3. தேசபந்து சித்த ரஞ்சன தாசர்

முன்னுரை — வங்க நாட்டின் சிறப்பு.

பொருள் — (1) இளமைப்பருவம். (2) வேலை. (3) நாட்டுத்தொண்டு. (4) இறப்பு.

முடிவுரை — இயல்புகள்.

கங்கைவளம் பொங்கும் வங்கநாடு செல்வத்திலும் கல்வியிலும் தலைசிறந்து விளங்குகிறது. இங்குத்தான் ராஜாராம்மோஹனராய் பிறந்தார். இங்குத்தான் உலகப் புகழ்மாலை சூடிய கவியரசர் ரவிந்திரநாத் தாகூர் தோன்றினர். இங்குத்தான் சித்த ரஞ்சன தாசரும் பிறந்தார்.

1870-ம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 5-ம் நாள் நமது சித்த ரஞ்சன தாசர் செல்வக் குடும்பத்தில் தோன்றி நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தார். அவரது தந்தையார் வங்காளத்தில் இவரைப் படிக்க வைத்த பின்னர் லண்டனுக்கு அனுப்பிப்

பாரிஸ்டர் பரீட்சையில் தேறும்படி செய்தார். தாசர் பாரிஸ்டர் தேர்வில் வாகை சூடிய பின்பு 1893-ம் ஆண்டு தம் தாய்நாடு வந்து சேர்ந்தார்.

சித்த ரஞ்சனர் வங்க நாட்டில் தலைசிறந்த வழக்கறிஞராக விளங்கி ஆண்டுக்கு இரண்டு லக்ஷ ரூபா ஈட்டக்கூடிய நிலையை அடைந்தார்.

தாசருடைய மனம் தேச விடுதலையில் நின்றது. அவர் பெரிய வருமானத்தைச் சீ என உதறித்தள்ளி நாட்டின் விடுதலைக்காக உழைக்கலானார்; சுயராஜ்யக் கட்சியை ஏற்படுத்தித் தாய்நாட்டின் விடுதலைக்காக அல்லும் பகலும் அநவரதமும் பாடுபட்டார்; தம்முடைய உடல், பொருள், ஆவி அனைத்தையும் பாரதமாதாவின் பாதமலரில் அர்ப்பணஞ் செய்தார்.

கல்விச் செல்வமும் பொருட் செல்வமும் வாய்க்கப் பெற்ற தாசர், வங்கநாட்டுச் சிங்கமாக விளங்கிய பெருந்தகையார், அந்தோ! இந்திய மக்கள் கண்ணீர்விட்டுக் கதறியழ, 1925-ம் ஆண்டு ஜூன் திங்கள் ஆறும் நாள் மண்ணுலக வாழ்வைவிட்டு விண்ணுலக வாழ்வையுற்றார்.

சித்த ரஞ்சனருடைய இயல்புகள் மிகமிகச் சிறந்தவை. அவர் இரக்கமே உருவாக வந்தவர். அவருடைய பண உதவியால் முன்னுக்கு வந்தவர் பலர். நாட்டுப்பற்றில் சிறந்து விளங்கியதுபோலவே அவர் மொழிப்பற்றிலும் சிறந்து விளங்கினார். வங்க மொழியில் அவர் பல பாக்களை இயற்றினார். இவை எல்லாவற்றினும் மிகமிக வியக்கத்தக்க நல்லியல்பு அவரிடம் இருந்தது: அஃது அவர் தம் தந்தையாருக்கும் தம் குடும்பத்திற்கும் செய்த கடமையே. அவருடைய தந்தை மோஹன தாசர் பதினாறு லக்ஷம் ரூபா கடன் வாங்கிப் பல பத்திரிகைகள் நடத்தி அத்தொகையைக் கொடுக்கமுடியாமல் 'இன்ஸால்வென்ட்' ஆனார். தாசர், தம் தந்தையாருக்கும் குடும்பத்துக்கும்ஏற்பட்ட இழிவை எண்ணி எண்ணி இரவு பகலாக உழைத்துப் பொருள் தேடிப் பதினாறு லக்ஷ ரூபாவையும் கொடுத்துத் தம் தந்தையையும் தம் குடும்பத்தையும் 'இன்ஸால்வென்ஸ்' இழிவினின்று விடுதலை செய்தார்.

இஃதன்றோ நல்ல பிள்ளையின் கடமை! தம் தந்தையாரையும் தம் குடும்பத்தையும் பெரும்பாடுபட்டு விடுதலை செய்த பெருந்தகையார் நாட்டு விடுதலைக்கும் பாடு படாமல் இருந்திருக்கமுடியுமா? எனவே, அவர் நாட்டிற்கும் தம் உயிர், உடல், பொருள் அனைத்தும் அளித்து உழைத்தார். அத்தகைய அருஞ்செயல் செய்ததால் இன்றும் அவருடைய புகழ் நின்று நிலவுகிறது. செயற்கரிய செய்தார் புகழ் மறையுமோ?

4. ஊர்ப்பயணம் (Excursion to Cape Comorin)

முன்னுரை—ஊர்ப்பயணமும் கல்வியறிவும்.

பொருள்—(1) புறப்பாடு. (2) திருநெல்வேலிப் பஸ் போன வழிக் காட்சி. (3) கன்னியாகுமரிக்குச் சென்றதும் கண்டதும்.

முடிவுரை—என் எண்ணம்.

என் ஆசிரியர் அடிக்கடி ஊர்ப்பயணம் போவது கல்வியில் ஒரு பகுதி என்று கூறுவதுண்டு. அவர், ஐரோப்பிய நாட்டு மாணவர்கள் பல ஊர்கள் சென்று நேரில் இடங்களைப் பார்த்துக் கல்வியறிவை உறுதிப் படுத்துவதையும் சொல்வது வழக்கம். அவர் சொல்லியதைக் கேட்டதிலிருந்து ஊர்ப்பயணம் செல்வதில் எனக்கு ஆர்வம் வளர்பிறைச் சந்திரனைப்போல் வளர்ந்து வந்தது. நான் ஊர்ப்பயணம் போக விரும்புவதை என் தந்தையாரும் அறிந்து என்னைக் கன்னியாகுமரிக்கு அழைத்துக்கொண்டு போவதாகக் கூறினர்.

கோடை விடுமுறை வந்தது. வாக்களித்தவாறே என் தந்தையார் என்னை அழைத்துக்கொண்டு 1940-ம் ஆண்டு ஜூன் திங்கள் 16-ம் நாள் புறப்பட்டார். நாங்கள் மதுரையில் செங்கோட்டை வண்டியில் ஏறித் திருநெல்வேலி நிலையத்தில் மறுநாள் காலை 8–30 க்குப் போய்ச் சேர்ந்தோம்.

திருநெல்வேலி சிறிய பட்டணம். அங்கே இறங்கியே பிரயாணிகள் திருச்செந்தூர், நாகர்கோயில், அம்பாசமுத்திரம், கன்னியாகுமரி முதலிய இடங்களுக்

குப் போதல்வேண்டும். நாங்களும் திருநெல்வேலி ஜங்ஷனில் இறங்கி எங்களுடைய சிறு மூட்டைகளை எடுத்துக் கொண்டு கன்னியாகுமரி பஸ் நிற்குமிடம் சேர்ந்து பஸ்ஸில் ஏறினோம். பஸ் காலை 10–30 மணிக்குப் புறப்பட்டது. அது சுலோசன முதலியார் பாலத்தின் வழியாகச் சென்றது. தாமிரபரணி ஆற்றில் மக்கள் நீராடுவதும், இரண்டு பக்கங்களிலும் மரங்கள் நின்று காட்சியளிப்பதும் என் உள்ளத்தைக் கொள்ளைகொண்டன. பஸ், பாளையங்கோட்டை வழியாகச் சென்று நான்குநேரியை அடைந்து சிறிது நேரம் நின்றது. அங்கே பிரயாணிகள் இறங்கிக் காப்பிநீர் குடித்தும் இளநீர் குடித்தும் இளைப்பாறினார்கள். பஸ் ஓட்டி ரப்பரை அழுத்திச் சப்தமிட்டதும் நாங்கள் எல்லோரும் பஸ்ஸில் ஏறினோம்.

பின்னர் பஸ், வள்ளியூர், பனங்குடி வழியாகப் போய் ஆரல்வாய் என்னும் இடத்தை அடைந்தது. அங்கே திருவிதாங்கூர் சமஸ்தான சுங்கவரித் தொண்டர்கள் எங்கள் பெட்டிகளைச் சோதனை செய்தார்கள். அங்கிருந்து பஸ், புறப்பட்டுப் பகல் ஒரு மணிக்குக் குமரி முனையை அடைந்தது.

நாங்கள் பஸ்ஸை விட்டு இறங்கி ராஜா சத்திரத்திற்குப்போய் ஓர் அறையில் எங்கள் மூட்டைகளை வைத்து விட்டு அங்குள்ள கிணற்று நீரில் நீராடிய பின்பு சத்திரத்துக்கு அருகில் உள்ள ஓர் உணவுச்சாலையில் ஆளுக்கு நாலரை அணு கொடுத்து உணவு உண்டோம். உணவு அவ்வளவு நன்றாக இல்லை; சுத்தமாகவும் இல்லை. என்ன செய்வது!

மாலையில் குமரிமுனைக் கடற்கரைக்குச் சென்றோம். குமரிமுனை அளிக்குந் தெய்வீகக் காட்சியை என்னென்று சொல்வது! அதைச் சொல்லால் எழுதுவது முடியுமா? எழுத்தால் எழுதலும் கூடுமா? பாட்டாக அல்லவா அதைப் பாடல் வேண்டும்! முக்கடல்களும் அங்குக் கலக்கும் காட்சியும், அலைகள் நீரைத் தெள்ளித் தெளித்துச் சிறு குன்றுகள்போல் நிற்கும் பாறைகள்மேல் தாவிக் குதித்து ஓடிவருங் காட்சியும் ஆரு இன்பம் மாறு தளிக்கும்.

கன்னியாகுமரி சிற்றூராகவே இன்றும் இருந்து தன்னிடம் வருவோர்க்கெல்லாம் இன்பம் ஊட்டி வருகின்றது. அது திருவிதாங்கூர் அரசாங்கத்தைச் சேர்ந்திருப்பினும் அங்கிருப்பவர்கள் தமிழர்களே. ஏழைச் செம்படவப் பெண்கள் அங்கே வருவோர்க்குச் சங்குமணி முதலிய கடற்படு பொருள்களை விற்று அதனால் வரும் ஊதியத்தைக்கொண்டு வாழ்கிறார்கள். அவர்கள் இனிய தமிழ் பேசுகிறார்கள்.

கன்னியாகுமரியில் பகவதி அம்மன் கோயில் இருக்கிறது. அது மிகவும் பழமையான கோயில். குமரி அங்குக் கோயில் கொண்டிருப்பதால் அச்சிற்றூர்க்குக் கன்னியாகுமரி எனப் பெயர் ஏற்பட்டது.

நாங்கள் ஒரு வாரம் ராஜா சத்திரத்தில் தங்கியிருந்து காலையும் மாலையும் தண்டமிழ் நாட்டின் தெற்கு எல்லையாகிய குமரிமுனையின் இயற்கைக் காட்சியைக் கண்டு கண்டு உள்ளம் மகிழ்ந்து சலித்தபின்பு பஸ் ஏறி நாகர்கோயில் வழியாகத் திருநெல்வேலி வந்து வண்டியேறி மதுரை வந்து வீடு சேர்ந்தோம்.

இந்த ஊர்ப்பயணத்தின்பின் எனக்கு மிகுந்த அறிவு ஏற்பட்டது என்று நான் துணிந்து கூறுவேன். ஏட்டுப் படிப்பு என்ன படிப்பு? நேரில் கண்டு விஷயங்களை அறிவுதன் வாயிலாகத்தான் அறிவு வளரும். இந்த அனுபவத்தை நான் மறப்பதுமுடியுமா? முடியவே முடியாது! ஊர்ப்பயணத்தின் இன்பமே இன்பம்!

பயிற்சி

கட்டுரை எழுதுக:

I. பொது விஷயம்—(1) அன்பு. (2) ஜீவகாருண்யம். (3) மின்சாரம். (4) தொட்டிற்பழக்கம் சுடுகாடுமட்டும். (5) பனைமரம். (6) பருத்தி. (7) பொன். (8) இரும்பு. (9) வான விமானம். (10) மழை. (11) பொறாமை. (12) பூகம்பம். (13) பொறுமை. (14) செய்ந்நன்றி மறவாமை. (15) அடக்கம். (16) கல்வி. (17) தொழில். (18) உடற்பயிற்சி. (19) பிரயாணம். (20) ஓய்வு நேரம்.

II. வருணனை—(1) குற்றாலம். (2) திருவாங்கூர். (3) கன்னியாகுமரி. (4) மதுரை. (5) சென்னை. (6) திரிசிராப்பள்ளி. (7) நாகூர். (8) வேளாங்கண்ணி. (9) பழனிமலை. (10) நாசரேத். (11) தாமிரவருணி. (12) கண்ணம்பாடி அணைக்கட்டு. (13) மகாபலிபுரம். (14) என் சிற்றூர். (15) தெரு விபத்து. (16) ரயிலடி. (17) தாபாலாள். (18) பிச்சைக்காரன்.

III. வாழ்க்கை வரலாறு—(1) காந்தியடிகள் (2) நேரு. (3) ரவீந்திரநாத் தாகூர். (4) சிவாஜி. (5) அக்பர். (6) சிவப்பிரகாசர். (7) அசோகர். (8) புத்தர். (9) சம்பந்தர். (10) பவுல் அடியார். (11) யோவான். (12) சுப்பிரமணிய பாரதியார். (13) டாக்டர் சாமிநாத அய்யர். (14) கிளைவ். (15) ரிப்பன் பிரபு. (16) சரோஜினி அம்மையார். (17) கிட்டப்பா. (18) ஒரு சினிமா நட்சத்திரம். (19) சர்ச்சில். (20) ரூஸ்வெல்ட்.

IV. குணக்குறிப்பு—(1) கிளைவ். (2) சிவாஜி. (3) ஹிட்லர். (4) முசலோனி. (5) ரூஸ்வெல்ட். (6) அக்பர். (7) யோவான். (8) அசோகர். (9) ரஞ்சிட்சிங். (10) சேரன் செங்குட்டுவன்.

கடிதம் எழுதல் (Letter-writing)

தமிழில் கடிதம் எழுதுவது ஆங்கிலத்தைப்போல் கடினமான வேலை அன்று; மிகவும் எளிதானது. எழுதும் முறை சிறிது அறிந்துகொண்டால் நீங்கள் தொல்லை இன்றி நல்ல முறையில் கடிதம் எழுதலாம்.

அறிந்துகொள்ளவேண்டியவை:—

(1) கடிதத்தில் எளிய நடையே இருத்தல்வேண்டும். உயர்ந்த நடையில் கடிதம் எழுதுவது முறை அன்று; ஏனென்றால் படிப்போர் எழுதுவதை அறிதல்வேண்டும். படிப்போர்க்கு விளங்காத நடையிலும் செய்யுளிலும் கடிதம் எழுதினால் அது விளங்குமா? கல்வியறிவு இல்லாதவர்களுக்கு எழுதும் கடிதம் சாதாரண பேச்சு நடையில் இருந்தாற்றான் அவர்களுக்கு அது விளங்கும்; இல்லாவிட்டால் அது விளங்காது. எழுதுவோர் செந்தமிழ்ப் பண்டிதர்களாயிருந்தாலும் படிப்போர் நிலை நோக்கியே எழுதல்வேண்டும்.

(2) பிறர் பார்க்கக்கூடாத கடிதமாயின் கடிதம் எழுதி உறையில் வைத்து அனுப்பல்வேண்டும்; பார்க்கக்கூடியதாயின் அஞ்சல் அட்டையில் (Post card) எழுதுக.

(3) எழுதுவதைக் கவலையீனமாகவும் சங்கிலி யெழுத்திலும் எழுதுதல் கூடாது; ஏனென்றால் படிப்போர் நன்றாய்ப் பொருள் அறிந்துகொள்ளமுடியாமல் தவிப்பர்.

(4) எழுத்துப்பிழை முதலியவை இல்லாமல் எழுதுக. பிழையிருப்பின் எழுதினவரைப்பற்றிய மதிப்புக் கெடும் என்பது நிச்சயம்.

(5) கையெழுத்திடவும் மேல்விலாசம் எழுதவும் மறந்துவிடாதீர்கள். கையெழுத்திட மறந்து அனுப்புங் கடிதங்கள் பல. மேல்விலாசம் எழுதாமல் போடும் கடிதங்களும் எண்ணிறந்தவை.

(6) கடிதம் முழுதும் எழுதியபின்பு பிற்சேர்க்கை என்று எழுதுவது மரியாதைக் குறைவான செயலே.

(7) முதலில் என்ன என்ன எழுதுவது என்று குறித்துக்கொண்டு பின் எழுதுக.

(8) எழுதி முடித்ததும் திரும்பவும் படித்துப் பார்க்க. திரும்பப் படிக்கும்பொழுது பிழைகளைத் திருத்தலாம்.

மேல்நாட்டில் கடிதம் எழுதுவது கலையாகவே இருந்தது. சில கடிதங்கள் சிறந்த இலக்கியங்களாகவே இன்றும் நிலவி வருகின்றன. நம் நாட்டில் அப்படி ஒன்றும் இல்லை. நாம் கடிதம் எழுதுவதைக் கலையாகவே வளர்த்தல்வேண்டும். கற்றவர்களிடையே கடிதம் கலையாக வளர்தல்வேண்டுமே அன்றி மற்றவர்களிடையே கலையாக வளர்தல் கூடாது. கல்வியறிவற்றவர்களுக்கு எழுதும் கடிதம் அவர்களுக்கு மிகவும் விளங்கும் நிலையில் இருத்தல்வேண்டும் என்பதை மறத்தல்கூடாது.

கடிதத்தில் இருக்கவேண்டியவை:

1. எழுதும் இடமும் தேதியும்
2. முற்கூற்று
3. செய்தி
4. கையொப்பம்

எழுதும் இடமும் தேதியும்

இவற்றைக் கடிதத்தின் முதற்பக்க மூலையில் எழுதுதல்வேண்டும். முதலில் மேல்விலாசத்தையும் அதன்பின் தேதியும் குறிப்பிடுக.

உ-ம்.

18, முத்து முதலி தெரு,
புரசை, சென்னை,
செப்டம்பர் 12, 1943.

குறிப்பு: 1943 ஐ சுருக்கமாக எழுத விரும்பினால் விடுகுறியிட்டு '43 என்று எழுதுக. தேதியை மேலே குறிப்பிட்ட விதமாக எழுதுவது ஆங்கிலமுறை. 12-9-'43 என்று எழுதினால் உடனே இன்ன மாதம் என்று அறிவது சிறிது கடினமாக இருக்கும்.

முற்கூற்று

முற்கூற்று என்பது முன் எழுதுவது. பெரியோருக்குத் தேவரீர் என்றும், சிறியோருக்குத் திரு. என்றும், நண்பருக்கு அன்பார்ந்த என்றும் எழுதலாம். பெரியோர், சிறுவயதுடைய ஆண்களுக்குச் சிரஞ்சீவி என்னும் வடசொல்லையும், சிறுவயதுடைய பெண்களுக்குச் சௌபாக்கியவதி என்னும் வடசொல்லையும் எழுதுவதுண்டு. துறவிகளுக்கு மறைத்திருவாளர் என்று எழுதலாம். வடமொழியில் ஸ்ரீலஸ்ரீ என்று எழுதுவர்.

செய்தி

இப்பகுதியில் எழுதவேண்டிய செய்திகளைப் பத்தி பத்தியாகப் பிரித்து எழுதுக.

கையொப்பம்

கடிதத்தின் இறுதியில் இங்ஙனம் என்று எழுதி அதனடியில் கையெழுத்துப் போடுக. இதுதான் தமிழ் முறை. 'தங்கள் அன்பான,' 'தங்கள் பணிவுள்ள' என்பவைகளை எழுதுவது வீண். இவைகளை ஏன் கட்டியழவேண்டும்? இங்ஙனம் என்பதற்குப் பதிலாக இப்படிக்கு என்றும் எழுதலாம். கையெழுத்திடும்பொழுது பட்டங்களையும் சேர்த்து எழுதிவிடுதல் கூடாது.

உ-ம்.

இங்ஙனம்,
சோமசுந்தரன்.

மேல்விலாசம் எழுதும் விதம்

உ-ம்.

1. திரு. தி. வீ. இராமச்சந்திரன்,
M.A., B.L.,
பச்சையப்பன் அறநிலையக்கழகச்
செயலாளர்,
ஜார்ஜ் டவுன், சென்னை.

2. திரு. ஆ. மு. கோட்டிலிங்கனார்,
20, பெருமாள் நாய்க்கன் தெரு,
புரசை, சென்னை.

மாதிரிக் கடிதங்கள் (Model letters)

தந்தை மகனுக்கு எழுதுவது

14, ஆவணிமூல வீதி,
மதுரை,
அக்டோபர் 5, 1943.

அருமைச் செல்வநாதா,

நலம்; நலம் அறிய விரும்புகிறேன். உன் கடிதம் கிடைத்தது. நீ மாணவர் விடுதியில் மகிழ்ச்சியோடு இருந்து பந்தாட்டம் முதலிய விளையாட்டில் கலந்து கொள்கிறாய் என்பதைக் கேட்டு மிக மகிழ்ச்சியடைகிறேன்.

நான் உன் தலைமையாசிரியரிடமிருந்து உன் காலாண்டுத் தேர்வின் 'மார்க்கு'க் குறிப்பேடு வரப்பெற்றேன். தமிழ்மொழியில் தவிர மற்றெல்லாப் பாடங்களிலும் நீ நல்ல 'மார்க்கு' வாங்கியிருக்கிறாய். உன் தாய்மொழியாகிய தமிழிலா 'மார்க்கு'க் குறைவாய் வாங்குவது? இது நம் குலத்துக்கே இழிவு தேடுவதாகும். எதனால் உனக்குத் தமிழில் 'மார்க்கு'க் குறைந்தது? எழுத்துப் பிழை ஏற்படுகிறதா? வாக்கியப் பிழைகள் ஏற்படுகின்றனவா? உன் கையெழுத்து நன்றாக இல்லையா? கையெழுத்து நன்றாக இல்லாவிட்டால் மார்க்குக் குறைவாகவே வரும். கையெழுத்து மிகவும் முக்கியமானது. நல்ல கையெழுத்தே சிறந்த கல்விக்கு அடையாளம். இதை நன்றாய் உணர்ந்துகொள். 'தமிழ்க் காப்பி' எழுது; வெட்கப்படாதே. இப்பொழுதே நல்ல கையெழுத்து எழுதப் பழகு. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது. சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம். எனவே, நல்ல கையெழுத்து எழுதப் பழகு.

நான் ஒரு தமிழகராதியும் கட்டுரை நூலும் தபால் பார்சலில் அனுப்புகிறேன். நீ அப்புத்தகங்களின் உதவியால் பிழைகளை நீக்கு. அடிக்கடி தமிழகராதியைப் புரட்டிப் பார். நீ டிசம்பரில் ஊருக்கு வரும்பொழுது உன் பயிற்சிகளைப் பார்ப்பேன். பிற பின்.

என் அன்பான வாழ்த்து உனக்கு உரியதாகுக.

இங்ஙனம்,
பி. முத்துசாமி.

மகன் தந்தைக்கு எழுதுவது

சத்திய மாணவர் விடுதி,
வேப்பேரி, சென்னை,
டிசம்பர் 4, 1943.

தேவரீர் அப்பா அவர்களுக்கு,

பல வணக்கம். தங்கள் கடிதம் பெற்று மகிழ்ந்தேன். தாங்கள் சொல்லிய புத்திமதியின்படி நடப்பேன். தமிழ்க் காப்பி முதல் எண் தொடங்கி மூன்றும் எண் வரைக்கும் வந்திருக்கிறேன். என் கையெழுத்து இப்பொழுது ஒருவாறு திருத்தமடைந்து வருகிறது. தாங்கள் சொன்னபின்பே என் பிழையை உணர்ந்தேன். அதற்காகத் தங்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன்.

நாள்தோறும் தமிழகராதியில் ரகர றகர லகர ளகர ழகரச் சொற்களையும் அவற்றிற்குப் பொருளையும் சிறிது சிறிதாகப் பார்த்து வருகிறேன். தினந்தோறும் அகராதியைப் பார்ப்பதாலும் நல்ல தமிழ் நூல்களைப் படிப்பதாலும் எழுத்துப் பிழைகள் நீங்கி வருகின்றன.

எங்கள் பள்ளியில் 1943-ம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் 23-ம் நாள் விடுமுறை தொடங்குகிறது. அரையாண்டுத் தேர்வில் நன்றாகவே எழுதியிருக்கிறேன். தமிழில் நல்ல 'மார்க்கு'க் கிடைக்கும்.

தாங்கள் தயவுசெய்து ரயில் கட்டணம் அனுப்பவும். நான் வரும்போது தம்பிக்கு விளையாட்டுச் சாமான்கள் வாங்கி வருவேன்.

இங்ஙனம்,
செல்வநாதன்.

வியாபாரக் கடிதம்

முருகன்குறிச்சி,
திருநெல்வேலி,
நவம்பர் 14, 1943

மேலாளர் அவர்கள்,
கிறிஸ்தவ நூல் பதிப்புக் கழகம்,
பார்க் டவுன், சென்னை.

ஐயா,

தாங்கள் தயவுசெய்து இக்கடிதம் கண்டதும் தாமதம் செய்யாமல் கீழ்வரும் நூல்களை ரயில்வே பார்சல் மூலம் அனுப்ப வேண்டுகிறேன். பார்சல் வந்ததும் தடையின்றிப் பணம் கட்டிப் பெற்றுக்கொள்வேன். முன்பணமாக இருபத்தைந்து ரூபா மணியார்டர் செய்திருக்கிறேன். வேண்டிய நூல்கள்:

1. திருக்குறள் (திரு. வடிவேற் செட்டியார் விளக்கவுரை) (இரண்டு பாகங்கள்) ... 1
2. சிலப்பதிகாரம் (திரு. வேங்கடசாமி நாட்டார் உரை) ... 1
3. நல்லாப்பிள்ளை பாரதம் ... 1
4. சென்னைப் பல்கலைக் கழகத் தமிழகராதி (7 தொகுதிகள்) ... 1
5. ரக்ஷண்ய யாத்திரிகம் (கிறிஸ்தவ நூற்பதிப்புக் கழகத்தார் வெளியீடு) ... 1
6. இந்துமத சங்கிரகம் (கிறிஸ்தவ நூற்பதிப்புக் கழக வெளியீடு) ... 1

இப்படிக்கு,
செந்தில்வேலன்.

அழைப்புக் கடிதம்

அன்பார்ந்த ஐயா,

நிகழும் 1943-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 19-ம் நாள் சனிக்கிழமை இரவு 8 மணிக்கு, நண்பர் திரு. ம. சுந்தர வடிவேலனார், பி. ஏ. தேர்வில் தேறியதைப் பாராட்டு

வதற்கு மலைச்சாலை உடுப்பி உணவுச்சாலையில் விருந்து நடக்கும். அப்பொழுது தாங்கள் வந்து எங்களை மகிழ்விக்க வேண்டுகிறேன். வருவதைத் தெரிவிக்குமாறு கோருகிறேன்.

18, முத்து முதலி தெரு,
புரசை, சென்னை.

இங்ஙனம்,
வரவேற்புக் குழுவினர்.

விளம்பரக் கடிதம்

தென்னிந்தியத் தமிழ்க் கல்விக்கழகம்,
புரசை, சென்னை.

நிகழும் 1944-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 6-ம் நாள் வியாழக்கிழமை 6 மணிக்குச் சென்னை வேப்பேரித் திருப்பவுற் கலாசாலை 'விதர்ஸ்' ஹாலில் தென்னிந்தியத் தமிழ்க் கல்விக்கழக ஆண்டு நிறைவுவிழா நடைபெறும்.

அப்பொழுது திரு. வித்வான் நா. சீனிவாச முதலியாரவர்கள், 'தமிழும் எதிர்காலமும்' என்பது பொருளாகச் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழாராய்ச்சித் துறை விரிவுரையாளர் திரு. வித்வான் வே. வேங்கடராஜுலு ரெட்டியாரவர்கள் தலைமை வகிப்பார்கள்.

அன்பர்கள் அனைவரும் வருக!

இங்ஙனம்,
அ. கி. பரந்தாமனார்,
செயலாளர்.

விண்ணப்பம்

18, முத்து முதலி தெரு,
புரசை, சென்னை,
நவம்பர் 14, 1943.

சென்னைப் பல்கலைக் கழகத் தலைவர்,
சேப்பாக்கம், சென்னை.

பெரியீர்,

தங்கள் கழகத்திற்குத் தமிழ்ப்புலவர் ஒருவர் தேவை என்ற விளம்பரத்தைக் கண்டு நான் அவ்வேலைக்கு விண்ணப்பித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நான் சென்னைப் பல்கலைக் கழக வித்வான் தேர்விலும், மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் பண்டித பரீட்சையிலும் தேறியுள்ளேன். வேண்டிய அளவு ஆங்கில அறிவும் எனக்கு உண்டு. தொல்காப்பிய எழுத்து, சொல், பொருள் ஆகிய இவற்றின் ஆராய்ச்சியிலும், கம்பராமாயணம், சிந்தாமணி ஆகிய இவற்றின் ஒப்பியல் ஆராய்ச்சியிலும் நெடுநாளாக ஈடுபட்டுள்ளவன் நான். சேனாவரையம் முதலிய இலக்கண நூல்களைப் பதிப்பித்தற்கு உரிய ஆற்றலும், இதுவரை உரை வெளிவராத சூளாமணி என்னும் நூலுக்கு உரை எழுதும் திறனும் எனக்கு உண்டு என்று விண்ணப்பித்துக்கொள்கிறேன்.

என்னைப் பற்றிய சில தகுதித்தாள்கள் இங்கே வைத்துள்ளேன். தாங்கள் அன்புகூர்ந்து எனக்கு அவ்வேலையைக் கொடுக்கும்படி தங்களை வேண்டுகிறேன்.

இங்ஙனம்,
ரா. நடேச நாயகர்.

சொல்லாடல் (Dialogue)

சொல்லாடல் வடமொழியில் சம்பாஷணை எனப்படும். சொல்லாடற் பயிற்சி எதற்கு வேண்டும் என்று நீங்கள் கேட்கலாம். முதலாவது, சொல்லாடல் எழுதும் பயிற்சி, கற்பனாசக்தியை வளர்க்கும். இரண்டாவது, நாடகம் எழுதுவதற்குச் சொல்லாடல் வேண்டுமாகையால் அது நாடகம் எழுதும் திறமைக்கு அடிகோலும். மூன்றாவது, அது பேசுவதுபோல் எழுதும் ஆற்றலை வளர்க்கும். ஆகையால், சொல்லாடற் பயிற்சி மாணவர்களுக்கு வேண்டியதே.

சொல்லாடல் எழுதுவதில் அறியவேண்டியவை:—

1. மேற்கோள் குறி சொல்லாடலுக்குப் போடவேண்டியதில்லை. பேசுவோர் பெயரை மாத்திரம் குறிப்பிட வேண்டுமேயன்றி 'என்று சொன்னார்' என்று எழுத வேண்டியதில்லை.

2. பேச்சு நீளமாய் இருத்தல் கூடாது. சுருக்கமாக இருத்தல்வேண்டும்.

3. பேச்சு உலக இயற்கைக்கு மாறுபட்டிருத்தல் கூடாது. நாயகன் மனைவியைப் பார்த்து, ''தலைவியே உன் உடல் நலம் எவ்வாறுளது?'' என்று கேட்பது இயற்கையாய் இராது.

4. சொல்லாடலில் பேசுவோர் நிலைக்குத் தக்கவாறு பேச்சு இருத்தல்வேண்டும்; வயது, அறிவு இவைகளுக்கு ஏற்றவாறும் பேச்சு இருத்தல்வேண்டும்.

5. பேச்சில் நகைச்சுவை ததும்பலாம்.

6. ஆ, ஹா என்னும் வியப்புச் சொற்கள் அதிகமாக வருதல் நன்றன்று.

7. பெயருக்கு முன்னே முற்றுப்புள்ளியிட்டுச் சிறிது இடம் விட்டுப் பேசும் பேச்சை எழுதுக.

8. எழுதுவது உள்ளங் கவரும் நிலையில் இருத்தல் வேண்டும்.

மாதிரிச் சொல்லாடல் (Model dialogues)

(1)

(சாதாரண சொல்லாடல்)

சென்னை பேசுகிறது

(தந்தையும் மகனும் வானொலிப் பேச்சைக் கேட்கப்போகிறார்கள்.)

இளங்கோ:—அப்பா ஏன் எப்பொழுதும் சென்னை பேசுகிறது என்று ரேடியோவில் கேட்கிறோம்?

குற்றாலம் பிள்ளை:—பல ஊர்களிலிருந்து பேசினாலும் பாடினாலும் ரேடியோவில் கேட்கலாம். எந்த ஊரிலிருந்து அந்தப் பேச்சு அல்லது அப்பாட்டு வருகிறது என்று தெரியவேண்டாமா? அதைத் தெரிவிப்பதற்குத்தான் 'சென்னை பேசுகிறது' என்று சொல்வது.

இளங்கோ:—சென்னையில் எங்கிருந்து அது வருகிறது? சொல்லுங்கள் அப்பா!

குற்றாலம் பிள்ளை:—சென்னையில் எழும்பூர் என்னும் இடத்தில் அகில இந்திய வானொலி நிலையம் இருக்கிறது. அங்கே ரேடியோ இருக்கிறது. அங்குப் பேசினாலும்

பாடினாலும் உலகமெங்கும் ரேடியோ உள்ள இடங்களில் கேட்கும்.

இளங்கோ:—எப்படி அப்பா, அங்குப் பேசுகிறார்கள், பாடுகிறார்கள்?

குற்றாலம் பிள்ளை:—வானொலி நிலையத்தில் சத்தம் வெளிப் போகாத முறையில் அறைகள் கட்டப்பட்டிருக்கின்றன. அறையில் ஒலி அனுப்புங் கருவி உண்டு. பேசுகிறவரோ பாடுகிறவரோ அக்கருவிக்கு முன் உட்கார்ந்து பேசவோ பாடவோ செய்வார். பேசும் பேச்சும் பாடும் பாட்டும் இங்கு உள்ள ஒலி எடுத்துப் பெருக்கும் கருவியின் வழியால் நமக்குக் கேட்கின்றன. பேசுகிறவர்கள் முன்னமே பேசவேண்டியதை எழுதிவைத்துக்கொண்டு அதைப் பார்த்துப் பேசுவதுபோல் படிப்பார்கள். பேசுபவர்களையும் பாடுபவர்களையும் மேற்பார்வையிட ரேடியோ நிலைய ஆட்கள் இருக்கிறார்கள். அவர்கள் வேண்டிய உதவி செய்கிறார்கள்.

இளங்கோ:—அப்பா, பேச்சு ஆனதும் பாட்டு வருகிறது. குறித்த நேரம் தவறுவதில்லையே! அது எப்படி?

குற்றாலம் பிள்ளை:—பேசுகிற விஷயம் முடிந்தாலும் முடியாவிட்டாலும் குறித்த நேரம் ஆனதும் சிவப்பு மின்சார வெளிச்சம் வீசும். பேசுபவர் பேச்சை உடனே நிறுத்திவிடுவர். பாடுபவர்கள் பாட்டைக் குறித்த நேரத்தில் தொடங்கிவிடுவார்கள். இதனால் குறித்த நேரம் தவறுவதே இல்லை.

இளங்கோ:—ரேடியோ பேச்சுக்கும் பாட்டுக்கும் மாத்திரம் பயன்படுகிறதா, வேறு எதற்காவது பயன்படுகிறதா?

குற்றாலம் பிள்ளை:—ரேடியோவால் பல பயன்கள் உண்டு.

இளங்கோ:—என்ன, அப்பா, அப்படிப்பட்ட பிரயோஜனம்?

குற்றாலம் பிள்ளை:—ஒரு கப்பல் நீரில் முழுகிப்போவதாயிருந்தால் கப்பல் தலைவன் தன்னிடம் இருக்கும்

ரேடியோவின் மூலமாய் அபாயத்தைச் சொல்லி யாருடைய உதவியையாவது நாடுவான். உடனே உதவி கிடைக்கும்.

இளங்கோ:—வேறு என்ன பிரயோஜனம்?

குற்றுலம் பிள்ளை:—அன்றன்று சாமான்கள் விலைகளை ரேடியோவின் மூலமாய்ப் பொது ஜனங்களுக்குத் தெரிவிக்கலாம். உலகச் செய்திகளை உடனுக்குடன் அறியலாம்.

இளங்கோ:—என்ன ஆச்சரியம் அப்பா! ரேடியோவைக் கண்டுபிடித்தவர் யாரோ?

குற்றுலம் பிள்ளை:—மார்க்கோனி என்பவர் பலமுறை முயற்சிசெய்து இதைக் கண்டுபிடித்தார்.

இளங்கோ:—ரேடியோவிடம் வந்துவிட்டோம். தியாக ராஜ பாகவதர் பாடுகிறுர். பாட்டு நன்ருக இருக்கும் அப்பா!

குற்றுலம் பிள்ளை:—ஆமாம். இங்கே வா. உட்காரலாம். [இருவரும் உட்கார்ந்து பாட்டுக் கேட்கின்றனர்.]

கற்பனைச் சொல்லாடல்

(2)

நடக்காததை நடந்தது போலக் கற்பனைசெய்து எழுதுவது இது. புருஷோத்தமனும் அலக்சாண்டரும் எவ்வாறு பேசியிருந்திருக்கக்கூடும் என்று கற்பனை செய்து எழுதுவதுபோன்றது கற்பனைச் சொல்லாடல். இதற்குக் கற்பனைசெய்யும் ஆற்றல் வேண்டும்.

ஹிட்லரும் காந்தியடிகளும் பேசுவதாகக் கற்பனை:

பொருள்:—உலக அமைதி (World Peace)

ஹிட்லர்;—வாருங்கள், வணக்கம்.

காந்தி:—(புன்சிரிப்புடன்) வணக்கம்.

ஹிட்லர்;—என்ன விசேஷம்! இவ்வளவு சிரமப்பட்டு வந்தீர்களே.

காந்தி:—ஒன்றுமில்லை. உலக அமைதி ஏற்படவேண்டிய வழிக்குத் தாங்கள் உதவிசெய்யவேண்டும் என்று வந்தேன்.

ஹிட்லர்:—என்ன ஏற்பாடு?

காந்தி:—உலகமே இப்போரால் நொறுங்குகிறது. மக்கள் லக்ஷக்கணக்காகச் சாகிறார்கள். நாடுகள் அழிகின்றன. நாகரிகம் ஒழிகிறது. தாங்கள் ஏதாவது வழி செய்யப்படாதா?

ஹிட்லர்:—ஓ! ஓ! எது எப்படிப்போனால் எங்களுக்கு என்ன? எங்களுடைய தந்தை நாட்டைப் பாவிகள் அழித்தார்களே! பழிக்குப் பழி வாங்காமல் போவேனா? ஹூம்!

காந்தி:—நன்றாகச் சொன்னீர்கள்! ஒன்றுமறியாத குடிமக்கள் சாகிறார்களே! குடிகள் இல்லாவிட்டால் தாங்கள் எந்த நாட்டை வென்றாலும் என்ன பயனடைவீர்கள்? மக்கள் இறந்துபோனால் உங்கள் கருத்தை, புத்துலக அமைப்பை, எப்படி நிறைவேற்றமுடியும்? சுடுகாட்டுக்கு அரசனாவதால் என்ன பயன்? சிறிது சிந்தனைசெய்து பாருங்கள்!

ஹிட்லர்:—சரி, சரி! சண்டைசெய்து வெல்லாமல் பிற நாடுகளை எப்படி அடக்கமுடியும்? அஹிம்சா தர்மத்தால் முடியுமா? பொறுத்துக்கொள்ளவேண்டும். அதில் எள்ளளவும் எனக்கு நம்பிக்கையே கிடையாது.

காந்தி:—தாங்கள் அப்படி நினைக்காதீர்கள். அஹிம்சையால் முடியாததில்லை. முயன்று பார்க்கவேண்டும். அஹிம்சையால் யாருடைய எண்ணத்தையும் மாற்றிவிடலாமே! பொறுமைதான் வேண்டும்.

ஹிட்லர்:—சற்று மன்னித்தருளுங்கள். என் நோக்கம் வேறு, தங்கள் நோக்கம் வேறு. ஒன்றுக்கு ஒன்று மாறுபட்டது. பழிக்குப் பழி வாங்காமல் விடேன். நாங்கள் ஆரியர்கள். அந்த மிலேச்சர்களை வெல்லாமல் விடேன், விடேன்! மாறுபாட்டிற்கு மன்னிக்கவும்!

காந்தி:—அஹிம்சையைக் கடைப்பிடியுங்கள். போரை நிறுத்துங்கள். உலகில் அமைதி நிலைநாட்டுங்கள். அப்பொழுது உலகம் தங்களைப் போற்றும்; இல்லா விட்டால் உலகம் தூற்றுமே! தாங்கள் இப்பொழுது நடத்தும் போரை நிறுத்தி உலகில் அமைதியை நிலைநாட்டி அஹிம்சா தருமத்தைக் கைக்கொண்டால் உங்கள் தந்தை நாட்டிற்கும் உங்களுக்கும் பெரு வெற்றி — நிலையான வெற்றி — அழியாத வெற்றி—ஏற்படுமே. கூடுமானால் செய்து பாருங்கள். தங்கள் காலத்தைக் கொள்ளைகொண்டதற்கு மன்னிக்கவும். வணக்கம். போய்வருகிறேன்.

ஹிட்லர்:—(புன்சிரிப்புடன்) வணக்கம். போய் வாருங்கள்.

பயிற்சி

1. திரைப்படக் காட்சிக்குப் போவதால் வரும் நன்மை தீமைகளைப்பற்றி இரு நண்பர்கள் பேசுவதுபோல் சொல்லாடல் எழுதுக.

2. நாடு நகர வாழ்க்கையின் உயர்வு தாழ்வுகளைக் குறித்துச் சொல்லாடல் எழுதுக.

3. பள்ளிக்கூடத்தில் சேர வரும் மாணவனுக்கும் பள்ளித் தலைவர்க்கும் நடக்கும் பேச்சைச் சொல்லாடலாக எழுதுக.

4. தமிழில் சிறந்த அறிவுடைய நண்பன், தமிழில் குறைந்த மார்க்கு வாங்கும் மாணவனுக்குத் தேறுவதற்கு உரிய வழிகளைச் சொல்வதுபோல் சொல்லாடல் எழுதுக.

5. மாணவர் விடுதியில் இருக்கும் இரு மாணவர்கள் ஆண்டு முடிவில் பிரியும்போது பேசக்கூடிய நிலையில் சொல்லாடல் எழுதுக.

6. 'விதியும் மதியும்' என்னும் பொருள்பற்றிச் சொல்லாடல் வரைக.

7. தோற்ற புருஷோத்தமனோடு அலக்சாண்டர் பேசுவதுபோல் கற்பனைச் சொல்லாடல் ஒன்று எழுதுக.

8. சிவாஜியை வரவழைத்த அவுரங்கசீப்புக்கும் சிவாஜிக்கும் நடந்திருக்கக்கூடிய பேச்சைக் கற்பனை செய்து சொல்லாடலாக எழுதுக.

9. ஆங்கில மாணவனுக்கும் இந்திய மாணவனுக்கும் 'இந்தியாவிற்குத் தன்னாட்சி' என்பதைப்பற்றிப் பேச்சு நடப்பதுபோல் சொல்லாடல் ஒன்று எழுதுக.

10. 'தாய்மொழியில் கல்வி கற்பது' என்பது பொருளாக இரு மாணவர்களுக்கும் நடக்கும் பேச்சைச் சொல்லாடலாக எழுதுக.

11. பொது இடங்களில் நடந்துகொள்ளவேண்டிய முறையைப் பற்றி ஆசிரியர்க்கும் மாணவனுக்கும் நிகழும் பேச்சைச் சொல்லாடலாக எழுதுக.

12. தம்பிக்கும் தங்கைக்கும் சொத்துரிமையைப்பற்றிச் சொல்லாடல் ஒன்று எழுதுக.

13. 'பெண்களுக்கு வேலை கொடுக்கக்கூடாது' என்பது பொருளாக ஒரு பெண்ணுக்கும் ஓர் ஆணுக்கும் நடக்கும் சொல்லாடலை எழுதுக.

14. மரக்கறி உணவு, புலால் உணவு—இவற்றைப்பற்றி வாதம் நடப்பதுபோல் சொல்லாடல் ஒன்று எழுதுக.

கதை எழுதல் (How to write stories)

கதை யாவருக்கும் மகிழ்ச்சி யூட்டுவதால் மாணவர்கள் கதை எழுதும் திறமை பெறல்வேண்டும். கதையமைப்பு, கதைப்போக்கு, முடிவு ஆகிய இவை கதையில் இருத்தல்வேண்டும். இவற்றைப் பார்க்கிலும் கதையில் முக்கியமானது உணர்ச்சியே. உணர்ச்சியே கதைக்கு உயிர்.

எழுதும் முறை

1. கதை எழுதும் முன்னே கதையை முழுதும் மனத்தில் அமைத்துக்கொள்க.

2. கதைச் சம்பவங்களை வரிசை முறையில் சொல்க. முன்னே நடந்ததை முன்னும், பின்னே நடந்ததைப் பின்னும் கூறுக.

3. எந்தக் காலத்தில் கதை யமைக்க விரும்புகிறோமோ அந்தக் காலத்துக்குத் தக்கவாறு அக்கதையின் கதா பாத்திரங்களின் வழக்க பழக்கங்கள் இருத்தல் வேண்டும். இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் தமிழ் நாட்டில் நடந்த கதைபோல் எழுதுவதென்றால் அக் கதையில் அக்கால வழக்க பழக்கங்களை வைத்தே எழுதல்வேண்டும்.

4. கதையை எளிய நடையில் எழுதுக. அப்பொழுது தான் யாவரும் அதைப் படித்து இன்புறக்கூடும்.

5. கதையில் தொடக்கமும் முடிவும் நன்றாயிருத்தல் வேண்டும்.

6. கதையில் வரும் முக்கியமான பாத்திரங்களைக் கொண்டோ முக்கிய சம்பவங்களைக் கொண்டோ கதைக்குத் தலைப்புக் கொடுக்கலாம். தலைப்பு மனங்கவரக்கூடிய நிலையில் இருப்பது நல்லது.

மாதிரிச் சிறு கதை

நொண்டிப் பிச்சைக்காரன்

சாரதாவுக்கு எட்டு வயது இருக்கும். அவள் நல்ல பழக்கமுடையவள். எப்போதும் அவள் காலையில் எழுந்து காலைக் கடன்களை முடித்துக்கொண்டு பாடங்களைப் படிப்பாள். அவள் பணக்காரக் குடும்பத்தில் பிறந்தாலும் ஏழைகள்மேல் அவளுக்கு மிகுந்த இரக்கம் உண்டு. குருடனோ கிழவனோ நோயாளியோ வீட்டுக்கு வந்து பிச்சை கேட்டால் அவள் உடனே அரிசி கொண்டு வந்து மரியாதையுடன் அவனுக்குப் போடுவாள்.

ஒருநாள் சாரதாவும் அவள் தாயார் சௌந்தரி அம்மாளும் கோயிலுக்குப் போனார்கள். கோயிலுக்கு அருகில் நொண்டிப் பிச்சைக்காரன் களைத்து மயக்கமாய்ப் படுத்துக் கிடந்தான். பலபேர்கள் தேங்காய் பழங்களை அழகான கூடைகளில் வைத்துக்கொண்டு கோயிலுக்கு வேகமாய்ப் போய்க்கொண்டிருந்தார்கள். அன்றைய தினம் கார்த்திகை தீபம். கோயிலுக்கு வந்த சாரதாவும் அவள் தாயாரும் களைத்து விழுந்துகிடந்த நொண்டியைப் பார்த்தார்கள்; பார்த்தும் அருகில் போனால் தீட்டு வந்துவிடும் என்று கோயிலை நோக்கிப் போனார்கள்.

கோயில் படிக்கட்டுமேல் சாரதாவும் சௌந்தரி அம்மாளும் காலை வைத்தார்கள். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தனர். சாரதா தன் தாயைப் பார்த்து, "அம்மா, அங்கே நொண்டி விழுந்துகிடக்கிறானே! ஒன்றும் செய்யாமல் வந்துவிட்டோமே! நாம் ஏதாவது உதவிசெய்யக்கூடாதா?" என்று இரக்கமான குரலில் கேட்டாள். சௌந்தரி அம்மாளும் சிறிது நேரம்

யோசித்து உடனே திரும்பி அந்த நொண்டிப் பிச்சைக் காரனிடம் வந்தாள். சாரதாவும் கூடவே சென்றாள். சாரதா, "அம்மா, பட்டாஸ் வாங்க அப்பா கொடுத்த அரை ரூபா என்னிடம் இருக்கிறது. அதை இந்த ஆளுக் குக் கொடுத்துவிடு" என்றாள். சௌந்தரி அம்மாள் கூட்ட மாய் இருந்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தவர் களை விலகச் சொல்லி மயக்கமாய் விழுந்து கிடந்த நொண்டிப் பிச்சைக்காரனுக்குச் சோடா வாங்கிக் கொடுத்தாள். சோடா குடித்ததும் நொண்டி மூர்ச்சை தெளிந்து எழுந்தான். சாரதா தன் கையிலிருந்த அரை ரூபா அந்நொண்டியினிடம் கொடுத்து ஏதாவது வாங்கிச் சாப்பிடச் சொன்னாள். அவனும் மனமகிழ்ச்சி யுடன் அதை வாங்கிக்கொண்டு நன்றி கூறினான்.

அன்று சாரதா பட்டாஸ் வாங்காமலே வீடு திரும்பி னாள். சௌந்தரி அம்மாளுக்கு மார்பின் மேலிருந்த கருங்கல் ஒன்றை கீழே இறக்கிவைக்கப்பட்டதுபோ லிருந்ததாம். இருவரும் கோயிலுக்குச் சென்றபின் வீடு திரும்பினார்கள்.

பயிற்சி

I. கீழ்வரும் குறிப்புக்களை வைத்துக் கதைகள் எழுதுக:—

1. ஒரு சிறுவன் பக்கத்து வீட்டுக்காரனுடைய கைக்கடிகாரத் தைத் திருடித் தமக்கையிடம் கொடுக்கிறான்—இருவருக்கும் இதைப் பற்றிப் பேச்சு நடக்கிறது—தமக்கையின் புத்திமதி—சிறுவன் திரும்பக் கொண்டுபோக அஞ்சுகிறான்—தமக்கை அதைக் கொண்டுபோகி றாள்—அகப்பட்டுக்கொள்கிறாள்—நீதிபதியிடம் முறையீடு—தம்பி வந்து குற்றத்தை ஒப்புக்கொள்கிறான்—நீதிபதி தம்பியை மன்னித்து தமக்கையைப் பாராட்டுகிறார்.

2. ஆங்கிலக் கப்பல் மாலுமி—பகைவரால் பிடிபட்டான்—சில ஆண்டுகள் வரை கைதியாயிருந்தான்—விடுதலை யடைந்தான்—லண் டனில் இருந்தான்—பறவைகளைக் கூட்டில் அடைத்து விற்பவன் ஒருநாள் தெருவில் விற்றுக்கொண்டு சென்றான்—மாலுமி அவ்வளவு பறவைகளையும் வாங்கினான்—அவைகளை கூட்டிலிருந்து விட்டுவிட் டான்—ஏன்?

3. ஒரு வியாபாரி சந்தைக்குப் போதல்—விற்றுவிட்டு வரும் பொழுது குதிரையின் கால் லாடத்தில் ஓர் ஆணி கழலுதல்—கவலைப்

படவில்லை—அற்பமாக நினைத்தல்—வண்டிக்காரனுக்கும் வியாபாரிக்கும் பேச்சு—வழியில் காடு—லாடம் விழுதல்—குதிரை ஓடமுடியா திருத்தல்—இரவு—கள்ளர் கொள்ளை யடித்தல்—வியாபாரி நடந்து வருதல்—அறிவு வருதல்.

4. அரபியர் தலைவன் பகைவனால் பிடிபடல்—கொலைக்களம் கொண்டுபோதல்—கைதி தண்ணீர் கேட்டல்—நீர் கொடுத்தல்—நீர் முழுதும் குடிக்கலாமா என்று கைதி கேட்டல்—பகை மன்னன் நீர் முழுதும் குடிக்கும்வரை கொல்வதில்லை என வாக்குறுதி யளித்தல்—கைதியின் தந்திரம்—விடுதலை.

II. முடிவில்லாத கதைகளை முடிக்க:—

1. அரபி நாடு—குற்றம் செய்பவர்களைத் தண்டிக்கும் விதம் வேடிக்கையானது—பந்தயச் சாலையில் பெருங்கூட்டம் கூடும். அங்கே எதிர் எதிராக ஒரே மாதிரியான இரண்டு அறைகள்—ஒன்றில் சிங்கம், மற்றொன்றில் பெண்—குற்றவாளி அதிர்ஷ்டமிருந்து பெண் இருக்கும் கதவைத் திறந்தால் திருமணம்; சிங்கமிருக்கும் அறையைத் திறந்தால் சாவு—ஓர் இளைஞன் அரசன் மகளைக் காதலித்த குற்றத்தால் குறிப்பிட்ட நாளில் தண்டனை ஏற்கப் பந்தயச்சாலை வருதல்—அரசன், அரசன் மகள், பொது மக்கள் வந்திருந்தார்கள்—காதலி இளைஞனுக்குச் சைகை காட்டினாள்—பெண் மணக்க விடுவாளா?—[கதையை முடித்துவிடுக.]

2. இருவர் பிரயாணம் செய்தல்—ஒருவன் வழியில் பணப்பை கண்டெடுத்தல்—கண்டெடுத்தவன், "பார், நான் கண்டெடுத்ததை" என்று கூறல்—மற்றவன், "நாம் கண்டது" என்று சொல்ல வற்புறுத்தல்—பணப்பைக்கு உரியவன் வருதல்—எடுத்ததற்கு வைதல்—என்ன நடந்திருக்கும்? [முடித்துவிடுக.]

3. கழுதை ஒன்று உப்புப்பொதியைச் சுமந்து ஆற்றைக் கடத்தல்—தற்செயலாய் உப்புப்பொதியுடன் தவறி விழுதல்—பாரம் குறைதல்—மறுநாள் உப்புப்பொதியுடன்—கழுதையின் தந்திரம்.......... (முடித்துவிடுக).

4. பகையரசன் மதுரையில் படையெடுப்பு—முன்னாள் தந்தை போரில் இறந்தான்.—. மறுநாள் தலைவன் போரில் இறந்தான்.—மூன்றாம் நாள் போர் முழக்கம்—தாய்க்கு ஒரே மகன்—தாயோ வீரமகள்—[என்ன செய்திருப்பாள்? முடித்துவிடுக.]

III. கீழ்வரும் விஷயங்களை வைத்துத் தலைப்புக்கள் கொடுத்துச் சிறு சிறு கதைகள் எழுதுக.

1. நாட்டுப்பற்று.
2. பேராசை.
3. உண்மை நட்பு.
4. வீண் டம்பம்.

செய்யுட் கதை எழுதல் (Story poems)

செய்யுள் வடிவமாக இருக்கும் கதையைப் படித்து உரைநடையில் எழுதுவது ஆங்கிலத்தில் வழக்கமாயிருக்கிறது. நாமும் தமிழில் அப்படிச் செய்யலாமே. சில கதைச் செய்யுட்கள் இங்கே தரப்பட்டுள்ளன. அவைகளைப் படித்து உரைநடையில் எழுதலாம். முயன்று பார்க்க.

பயிற்சி

[கதையை உரைநடையில் எழுதித் தக்க தலைப்பும் தருக.]

1

(அறுசீர் விருத்தம்)

1. வேடுவ னொருவன் காட்டில் வேட்டைகள் கிடையாமற்போய்
வாடியே அநேக நாளாய் வனத்திலே திரிய ஓர்நாள்
ஓடிய மானின் பின்னே உலைந்ததை எய்து கொண்டு
நாடினன் சேரி ஆங்கோர் நற்பெரும் பன்றி கண்டான்.

2. இத்தைநாம் எய்தோ மாகில் இரண்டுநாள் தீனி யுண்டென்
றத்தையும் எய்தான்; பன்றி அவனையும் கொன்று சாத
லுற்றது; நரியும் கண்டு மூன்றுநாள் இரையுண் டென்று
கொத்துவில் நாண்க டிப்பக் குத்திடச் செத்த தன்றே.

[உலைந்து—வருந்தி. அத்தை—அதனை. நாண்—கயிறு.]

(பஞ்சதந்திரம்)

2

(அகவற்பா)

அழகு மிகுந்த அடவி யதனில்
செருக்கொடு திரிந்த சிறியஈ ஒருநாள்
சிங்கத் திடத்தில் திடமுடன் சென்று,
"மிருக வேந்தே, மிருக வேந்தே,
மிகுந்த பலமுடன் விளங்கு கின்றாய்.
வன்மை யற்ற என்னுடன் போர்செய்.
வெற்றி நானே பெற்றிடு வேனே"
என்று சொல்லி நன்றாய்க் கடித்துத்
துன்பந் தந்தே இன்பங் கொண்டு
சிங்க மதனைப் பங்கம் செய்தது.

பொறுத்த தரிமா சிறியசு செய்ததை.
வெற்றியை மிகவும் பெற்ற தாகவே
கருதிக் கொண்டு செருக்கொடு பறந்தசு
சிலந்தி வலையில் சிக்கிக் கொண்டதன்
இனிய உயிரை இழந்த தம்மா!
அதனால்,
'பெருமை என்றும் பெருமை எய்தும்
சிறுமை என்றும் சிறுமையே அடையும்'
என்னும் உண்மை என்றும்
பொய்ப்ப துண்டோ புகல்வீர் நன்றே!

(S. R. கண்ணன்.)

3

(அறுசீர் விருத்தம்)

1. கோடுறு சினையில் காகம் கூடுவைத் தநேக காலம்
பேடொடு கூடி வாழும் பெருமரப் பொந்தில் வந்தே
ஆடிய கரும்பாம் பொன்றங் கதுபெறும் முட்டையெல்லாம்
நாடியே குடித்துப் போட நலிந்துளம் மெலிந்து வாடி,

2. தன்னுயிர்ப் பாங்க னை சம்புகன் அருகு போய் "இங்
கென்னசெய் குவன்கான்?" என்ன, "இதைக் கொலல் அரிதோ? நீ
மன்னவன் தேவி ஆடும் மஞ்சனச் சாலை புக்குப் [போய்
பொன்னணி கொண்டு வந்து போடுக பொந்தில்" என்ன,

3. கீாகமப் படியே செய்யக் காவலன் ஏவலாளர்
ஏகிமா மரத்தின் பொந்தை ஈர்த்தனர்; ஈரும் போதில்
நாகமங் கிருந்து சீற நறுக்கினர் இருதுண் டாக;
ஆகையால் உபாயம் தன்னால் ஆகுமே கார்ய மெல்லாம்.

[பேடு—பெண். சம்புகன்—நரி. மஞ்சனச்சாலை—குளிக்குமிடம்.]

(பஞ்சதந்திரம்)

4

1. சொல்வி ளங்குசீர்த் தொண்டைநன் னாட்டிடை
மல்லல் நீடிய வாய்மை வளம்பதி
பல்பெ ருங்குடி நீடு பரம்பரைச்
செல்வ மல்கு திருமயி லாபுரி..

2. மன்னு சீர்மயி லைத்திரு மாநகர்த்
தொன்மை நீடிய சூத்திரத் தொல்குலம்
நன்மை சான்ற நலம்பெறத் தோன்றினார்
தன்மை வாயிலார் என்னும் தபோதனர்.

3. மறவாமையால் அமைத்த மனக்கோயி லுள்ளிருத்தி
உறவாதி தனை உணரும் ஒளிவிளக்குச் சுடரேற்றி
இறவாத ஆநந்தம் எனுந்திருமஞ் சனமாட்டி
அறவாணர்க் கன்பென்னும் அமுதமைத் தர்ச்சனை செய்வார்.

4. அகமலர்ந்த அர்ச்சனையில் அண்ணலார் தமைநாளும்
நிகழவரும் அன்பினால் நிறைவழிபா டொழியாமே
திகழநெடு நாள்செய்து சிவபெருமான் அடிநிழற்கீழ்ப்
புகலமைத்துத் தொழுதிருந்தார் புண்ணியமெய்த் தொண்டனார்.

[சொல்—புகழ். ஆதிதனை உற—கடவுளை நன்றாக.]

(பெரியபுராணம்)

5

1. என்னவக் கதைஎ தென்றார் எழில்பெறு கௌட தேச
மன்னவன் தனக்கு நித்தம் வந்துபஞ் சாங்கம் சொல்வோன்
தன்னுடைத் தேவி கர்ப்பந் தரித்திலள் அதனால் பிள்ளை
என்னஓர் கீரி தன்னை எடுத்தனன் வளர்த்தான் மன்னோ.

2. காதலால் இரண்டு பேருங் கருத்தொத் திலங்கு நாளில்
ஓதிய யாக சேனை உத்தமப் பார்ப்ப னிக்குத்
தீதிலா முகூர்த்தந் தன்னில் சேயனும் பிறந்தான்; அந்தச்
சூதகங் கழிக்கு நாள்ஓர் சுனையினில் மூழ்கப் போனாள்.

3. ஆயிழை போகை யாலே ஆரணம் முழுதும் வல்லோன்
சேயினைக் காத்தி ருந்தான்; சிரார்த்த மென்றரசன் தூதர்
"நீயவண் வருக" என்றார்; "நெடுநேரஞ் சென்று போனால்
போயதை எல்லாம் வேறு புரோகிதர் கொண்டு போவார்,"

4. என்றுதான் மனத்தில் எண்ணி இன்பமாய் வளர்த்தகீரி
தன்துணை யாக அந்தத் தனயனை வைத்து நீங்கிச்
சென்றனன்; அரசன் வீட்டிற் சிரார்த்தமும் முடித்துப் பெற்ற
பொன்துகில் அரிசி யெல்லாம் பொதிகளில் ஏற்றி வந்தான்.

5. வருமுனே சேயைக் கிட்டி வந்ததோர் நாகம்; அந்தக்
கரியநா கத்தைக் கீரி கடித்திரு துண்டமாக்கிக்
குருதிவாய் எங்கு மாகக் கொண்டுசெந் தோடங் காட்ட
அருமறை யோன்முன் சென்ற(து) "ஆ! கெடுத் தாயோ!" என்றே,

6. தண்டினுல் அடித்துக் கொன்றான்; தளர்வொடு வீட்டில் வந்தான்;
கண்டனன் பிள்ளை தன்னை; கரியபாம் பொன்றி ரண்டு
துண்டமாக் கடிக்கப் பட்டுத் தூரத்திற் கிடக்கக் கண்டான்;
மண்டிய துயர முற்று வயிற்றினில் அடித்துக் கொண்டான்.

7. வாயிலும் அடித்துக் கொண்டான்; மண்ணையும் போட்டுக் கொண்டான்;
"சேயினும் அதிகமான சேயைநான் கொன்றேன்" என்றான்;
"நீயெனக் கெதிரே வந்து நின்றெனைக் கெடுத்தாய்!" என்று
போயதன் மேல்விழுந்து புரண்டுருண் டரற்றி னானே.

8. தேவியும் மூழ்கி வந்தாள்; தேவசன் மாவை நோக்கிப்
"பாவியிங் கேது கீரிப் பாலகன் இறந்த" தென்றே
ஓவென அலறி நின்றாள். உற்றவா றவனுஞ் சொன்னான்.
காவியங் கண்ணி தானும் கனலிடு மெழுகொத் தாளே.

[சூதகம்—தீட்டு. ஆயிழை—பார்ப்பனி. அவண்—அங்கு.]

(பஞ்சதந்திரம்)

6

1. பிறவியிலே குருடெனினும் பேரறிவு மிகவுடையன்;
மறந்தெவர்க்கும் தீங்குசெய மனத்தினிலே நினைந்தறியான்;
பிறரெவரும் இன்புறப் பிறங்கிடவே எண்ணிடுவான்;
அறமிகுந்த அவன்குணத்தை யாவருமே போற்றிடுவர்.

2. இரவினிலே நடந்திடுங்கால் எழில்விளக்கொன் றெடுத்தேந்திப்
பரபரப்பாய்ச் சென்றிடுவன்; பார்ப்பவர்கள் வியந்திடுவர்;
மரமெனவும் மாடெனவும் பார்த்திடவல் ஒளியிழந்தும்
இரவினிலே விளக்கெடுக்க வேண்டியதேன் எனநினைந்தார்.

3. பலர்நினைந்தும் என்னபயன்? பார்த்தெவரும் கேட்கவில்லை;
மலர்ந்தவெண்ணம் உலர்ந்ததுகாண் மக்களிடை நாட்செலவே;
அலகிடுதல் முடியாத ஆவலெழுந் தொருசிறுவன்
இலமடைந்து குருடரைக்கண் டிதைஎடுத்துக் கேட்டனனே.

4. கண்ணிலேயே உமக்கெதற்கோர் கைவிளக்காம் சொல்லெனவே
"மண்ணுலகில் எனக்கெதற்கு? மற்றவர்க்கே பிடித்திடுவேன்.
கண்மணியே உணர்ந்தி"டெனக் கண்ணில்லான் உரைத்தனன்
காண்.
எண்ணருமிவ் வண்ணலைப்போல் யாமிருப்பின் நன்றன்றோ?"

(அ. கி. பரந்தாமனார்)

7

1. ஒருபெருஞ் செல்வன் பீதாம் பரவுடை உடுத்தி வாழுந்
திருவினன் இராச போகஞ் சிறிதெனச் செருக்கும் போகி
அருவிலை பெறுபல் பண்டத் தறுசுவை அமைந்த உண்டி
பெருவயி றாரத் துய்த்துப் பேணுவான் மறுமை பேணான்.

2. அங்கவண் அணிகொள் மாடத் தலர்கடை துச்சிலாகத்
தங்கினா னொரு மாங்குத் தணந்தெறி மிச்சில் நச்சிச்
சங்கட நுகரு மேழைத் தரித்திர னங்க முற்றும்
வெங்கொடும் பருக்கள் மிக்கு வேதனை உழக்கு நீரான்.

3. இன்பெலாந் தூர மாக இரங்கலும் தவிப்பு நீங்காத்
துன்பமுஞ் சொரிகண் ணீருந் தொடர்பறுத் துணை நட்பாக
முன்புறு நாய்கள் நக்கி முறைப்பணி புரிவோ ராக
என்பக ருதுமவ் வேழை இலாசரு இடுக்கண் பாட்டை!

4. வறுமையும் பிணியும் யாண்டும் வருத்துபே ரஞரைப் போக்கும்
பொறுமையும் சகிப்புஞ் சிந்தை பூத்தினி தமைய அத்தைத்
தெறுமருந் தாகக் கொண்டு செகத்துநாட் கழித்த பின்றை
மறுமையி லிராச போக மலிந்தசந் நிதிபுக் குய்ந்தான்.

5. பெருமித வாழ்க்கை யுள்ள பேதையச் செல்வன் பொன்றி
எரிமலி கும்பி வாழ்க்கை எய்தினன் கண்ணே றிட்டுத்
திருமலி இராச போகந் தெவிட்டு லாசருவைக் கண்டான்:
பொருவிறன் மதியீனத்தை நினைந்திவை புகல லுற்றான்.

[செருக்கும்—கர்வங்கொள்ளும். போகி—இன்பமனுபவிப்பவன். அலர்கடை—விளங்கிய வாயில்பக்கம். துச்சில்—ஒதுக்கிடம். தணந்து—நீக்கி. அஞர்—துன்பம். தெறு—நீக்கும். கும்பி—நரகம். பொருவு இறல்—ஒப்பில்லாத.]

(இரட்சணிய யாத்திரிகம்)

8

நரம்(பு)எழுந்(து) உலறிய நிரம்பா மென்தோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறினன் என்றுபலர் கூற
மண்டமர்க்(கு) உடைந்தனன் ஆயின் உண்டஎன்
முலை அறுத் திடுவென் யான்எனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்துவே றாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரி(து)உவந் தனளே.
[முளரி—தாமரைக் கொடி. செங்களம்—போர்க்களம்.]

(புறநானூறு)

9

1. வெய்ய கானத் திடையே வேட்டை வேட்கை மிகவே
ஐய சென்று கரியோ(டு) அரிகள் துருவித் திரிவேன்
கையார் சிலையும் கணையும் கொடுகான் மிருகம் வரும்ஓர்
செய்ய நதியின் கரைவாய்ச் சென்றே மறைய நின்றேன்.
[ஐய—வியக்கத்தக்க. கரி—யானை. அரி—சிங்கம்.]

2. ஒருமா முனிவன் மனையோ(டு) ஒளியொன்(று) இலவாய் நயனம்
திருமா மகனே துணையாய்த் தவமே புரிபோழ் தினில்வாய்
அருமா மகனே புனல்கொண் டகல்வான் வருமா(று) அறியேன்
பொருமா கணைவிட் டிடலும் புவிமீ(து) அலறிப் புரள,
[நயனம்—கண். புனல்—நீர். கணை—அம்பு.]

3. புக்குப் பெருநீர் நுகரும் பொருபோ தகம்என் றொலிமேல்
கைக்கட் கணைசென் ற(து)அலால் கண்ணில் தெரியக் காணேன்
அக்கைக் கரியின் குரலே யன்றீ தென்ன வெருவா
மக்கட் குரல்என் றயர்வேன் மனநொந் தவண்வந் தனனால்.
[போதகம்—யானைக்கன்று. வெருவா—பயந்து.]

4. கையும் கடமும் நெகிழக் கணையோ(டு) உருள்வோன் காணா
மெய்யும் தனுவும் மனனும் வெறிதே கிடமேல் வீழா
"ஐயன் நீதான் யாவன்? அந்தோ! அருள்க" என் றயரப்
பொய்ஒன் றறியா மைந்தன் கேள்நீ என்னப் புகல்வான்:
[கடமும்—கமண்டலமும். காணா—கண்டு. வீழா—வீழ்ந்து.]

5. "இருக்கண் களும்இன் றியதாய் தந்தைக் கும்ஈங் கிவர்கள்
பருகும் புனல்கொண் டகல்வான் படர்ந்தேன் பழுதாயின தால்.
இருகுன் றனைய புயத்தாய், இபம்என் றுணரா தெய்தாய்.
உருகும் துயரம் தவிர்நீ. ஊழின் செயல்ஈ தெ"ன்றான்.
[புயத்தாய்—புஜத்தை உடைய அரசனே (தசரதன்)]

6. "உண்ணீர் வேட்கை மிகவே உயங்கும் எந்தைக் கொருநீ
தண்ணீர் கொடுபோ யளித்தென் சாவும் உரைத்தும் புதல்வன்
விண்மீ தடைவான் தொழுதான் எனவும் அவர்பால்
விளம்"பென் (று)
எண்ணீர்மையினன் விண்ணோர் எதிர்கொண் டிடவேகினனால்.
[எண் நீர்மையினன்...ஏகினன்—முனிமகன் இறந்தான்.]

7. மைந்தன் வரவே நோக்கும் வளமாதவன்பால் மகவோ(டு)
அந்தண் புனல்கொண் டணுகா, "ஐயா இதுபோ தளவாய்
வந்திங் கணுகா தென்னோ வந்த தென்றேநொந்தோம்;
சந்தம் கமழும் தோளாய், தழுவிக் கொளவா!" எனவே,
[அணுகா—அணுகி. சந்தம்...தோளாய்—மகனே.]

8. "ஐயா யான்ஓர் அரசன்; அயோத்தி நகரத் துள்ளேன்;
மையார் களபம் துருவி மறைந்தே வதிந்தேன் இருள்வாய்;
பொய்யா வாய்மைப் புதல்வன் புனல்மொண் டிடுமோதையின்மேல்
கையார் கணைசென் றதலால் கண்ணில் தெரியக் காணேன்.
[களபம்—யானைக்கன்று. ஓதை—ஓசை.]

["உம் மகன் இறந்தான். அறியாது செய்தேன்.
பொறுத்தருள வேண்டும்" என்றான் தசரதன்.
அதைக் கேட்டதும்,]

9. வீழ்ந்தார்; அயர்ந்தார்; புரண்டார்; விழிபோயிற்றின்றென்றார்;
ஆழ்ந்தார் துன்பக் கடலுள்; "ஐயா! ஐயா!" என்றார்;
"போழ்ந்தாய் நெஞ்சை" என்றார்; "பொன்னு டதனிற் போய்நீ
வாழ்ந்தே இருப்பத் தரியேம், வந்தேம்! வந்தேம் இனியே!"

10. என்றென் றயருந் தவரை இருதாள் வணங்கி யானே
"இன்(று)உம் புதல்வன். இனிநீர் ஏவும் பணிசெய்திடுவேன்.
ஒன்றும் தளர்வுற்(று) அயரீர்! ஒழிமின் இடர்" என்றிடலும்
"வண்திண் சிலையாய், கேண்மோ" எனவே ஒருசொல் வகுத்தார்.
[தவரை—முனிவரை. அயரீர்—துன்பப்படாதீர்.]

11. "தாவா(து) ஒளிருங்குடையாய், தவ(று) இங்கிதுநின்சரணம்
காவாய் என்றாய் அதனால் கடிய சாபம் கருதேம்.
ஏவா மகவைப் பிரிந்தின் றெம்போல் இடருற் றனைநீ
போவாய் அகல்வாய்" என்னாப் பொன்னாட் டிடைபோயினரால்.

[குடையாய்—அரசனே. சரணம்—அடைக்கலம்.]

(கம்ப ராமாயணம்)

10

1. பண்டையோர் ஆண்டினில் பார்முழுதும் வாட்டும்
பஞ்சம்வர ஜனம்நொந் தனரே;
மண்டலமே புகழ்மாட் சிசேர் மாளிகை
மந்தையாய் வந்தார் சிறுவரெலாம்.

2. அண்டின வர்களை ஆங்குள வள்ளலும்
அன்புட னேற்றே அவரவர்க்கும்
உண்டிட ரொட்டியை ஒவ்வொன்று தந்தே
உதவினன் ஒவ்வொரு நாளினிலும்.

3. தந்தமக் குப்பெரி தாயதோர் துண்டினைத்
தாம்பெற வேண்டும் என்றே முயன்றே
அந்தக் குழந்தைகள் ஒன்றின்மே லொன்றாய்
அடித்து விழுந்தொன் றெடுத்துச் சென்றார்.

4. அங்கோர் சிறுமி அமரிக்கை யாகவே
அப்பாலே நின்றாள் அவள் தனக்குத்
தங்கிய தேசிறு துண்டாய் இருந்தது;
தானதைக் கொண்டவள் வீடு சென்றாள்.

5. அடுத்ததோர் நாளும் அவள்தங்கி நின்றே
அடைந்தனள் ஓர்சிறு துண்டினையே;
எடுத்தவள் மூன்றாநாள் ஏகினள் வீட்டிற்(கு)
இருந்தது துண்டில்—ஒரு பவுனே!

6. அன்னதைக் கண்டவள் அன்னை பயந்தே
அனுப்ப அதனை அவ் வள்ளலுக்கே—
இன்னதைக் கொண்டே சிறுமிசெல ஆங்கே
என்னதென்றான் வாயிற்காப்பவனே.

7. "உன்னிடம் ஒன்றிலை" என்றுள்ளே சென்றே
உரைத்திட வள்ளல் உரைத்தனனே:—
"இன்னதில் ஏதும் தவறிலை, உன்றன
தேற்ற பொறுமைக் கிதுபரிசே!"

(N. S. அருணசல அய்யர், B.A., L.T.)

பயிற்சி

குளக்கரைக் காட்சி

இப்படத்தைப் பார்த்து வருணனைக் கட்டுரை ஒன்று வரைக.

செய்யுளுக்கு உரை எழுதல்
(Hints on explaining meaning for poetry)

ஆங்கிலச் செய்யுளுக்கு உரை எழுதும் வகை வேறு; தமிழ்ச் செய்யுளுக்கு உரை எழுதும் வகை வேறு. தமிழில் சாதாரணமாகப் பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, விசேடவுரை என உரைகள் நான்கு உண்டு.

பதவுரை—பதம் பதமாகப் பிரித்து உரை கூறல். பதவுரை எழுதும்போது முதலாவது செய்யுளை அந்வயப் படுத்தி அஃதாவது பொருள் கொள்ளும் முறையில் சொற்களை அமைத்துப் பின்பு பதங்களுக்குப் பொருள் எழுதுதல் வேண்டும்.

பொழிப்புரை—பதம் பதமாகப் பிரித்துப் பொருள் கூறாமல் மொத்தமாகப் பொருள் கூறுதல். ஒரு சொல்லையும் விடாமல் பொருள் கூறுதல் வேண்டும்.

கருத்துரை—செய்யுளின் முக்கிய கருத்தைமட்டும் மிகச் சுருக்கமாக எழுதுதல். கருத்து ஒரே வாக்கியமாய் இருத்தல் நல்லது.

விசேடவுரை—செய்யுளுக்கு உரை கூறிய பின்பு அச் செய்யுளில் உள்ள சொற்களை எடுத்து நயம், இலக்கணம் முதலிய விசேடங்களைக் கூறுதல். இதில் பதங்களைத் தனித்தனியாக எடுத்து ஒவ்வொன்றின் சிறப்பையும் எடுத்துக் காட்டுவதுமுண்டு. இப்படிச் செய்வதைப் பதசாரம் என்பர்.

பதவுரை (Word for word meaning)

செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும். (குறள்)

உ–ம். (1) பதவுரை

செவிக்கு	= காதுக்கு
உணவு	= சாப்பாடாகிய கேள்வி
இல்லாதபோழ்து	= இல்லாத காலத்தில்
வயிற்றிற்கும்	= வயிற்றினுக்கும்
சிறிது	= சிறிது உணவு
ஈயுப்படும்	= இடப்படும்.

(2) பொழிப்புரை

காதுக்குச் சாப்பாடாகிய கேள்வி இல்லாத காலத்தில் வயிற்றினுக்கும் சிறிது உணவு இடப்படும்.

(3) கருத்துரை

கேள்வியுணவு, வயிற்றுணவிலும் சிறந்தது.

(4) விசேடவுரை

மிகுந்த சுவையும் பின்னே இன்பமும் தருதலையுடைய கேள்வியுள்ளபோது வயிற்றுணவு வெறுக்கப்படுதலால் இல்லாதபோழ்து என்றார். உணவு அதிகமானால் அவ்வுணவைச் சம்பாதிக்கும் துன்பமே அல்லாமல் அவ்வுணவால் நோயும் இன்பவுணர்ச்சியும் அதிகரித்தலால் சிறிது என்றார். அச்சிறிது கொடுத்தலும் பின்னே பிழைத்திருந்து நூற்பொருளைத் தக்கவர்களிடத்தில் கேட்டற்பொருட்டாகும்; ஆதலால் ஈயப்படும் என்றார். ஈயப்படும் என்பது வயிற்றினது இழிவு தோன்ற நின்றது. ஈ என்பது யாசகர் கேட்கவேண்டிய சொல். 'ஈ என இரத்தல் இழிந்தன்று' என்னும் புறநானூற்றடியில் ஈ என்பது இப்பொருளில் வருவதை அறிக. வயிற்றுக்கும் என்பதில் 'உம்' இழிவைக் காட்டுகிறதால் இழிவு சிறப்பும்மை. இதனால், படிக்காவிட்டாலும் படித்தவர்கள் சொல்லும் நூற்பொருளை உணவு கருதாமல் கேட்டல்வேண்டும் என்பது விளங்குகின்றது.

விடைத்தாள் எழுதும் விதம்

(How to answer question papers in the Examination)

பரீட்சையில் தேறுவதே கல்விக்கு அளவுகோலாக இருக்கும் இக்காலத்தில் விடைத்தாள் எழுதும் விதம் தெரிவது விழுப்பயன் தரும் என்று சொல்லவேண்டியதில்லை. விழுவதும் எழுவதும் விடைத்தாளில் இருக்கின்றன. திருத்துவோர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வகையில் விடைத்தாள் இருத்தல்வேண்டும். எவ்வளவு தான் ஒருவர் விஷயத்தை மனப்பாடம் செய்திருந்தாலும் படித்திருந்தாலும் அவ்வளவும் திறம்பட விடைத்

தாளில் எழுதாவிட்டால், பரீட்சை தேவதை வரங்கொடுக்காது.

வினாத்தாளில் கொடுக்கப்படும் கேள்விகள், பாராமல் எழுதும் திறனையும், விரிந்துள்ளதைச் சுருக்குந்திறனையும், சுருங்கியுள்ளதை விரித்தெழுதுந்திறனையும், கேட்கும் கேள்விக்கு நேரான விடை எழுதும் வழியையும், பொது அறிவு பெற்றிருப்பதையும், வகுப்பில் ஆசிரியர் சொன்னதைக்கேட்டு மனத்தில் இறுத்திய கவன சக்தியையும், உரை எழுதும் வன்மையையும், குறிப்பிட்ட நேரத்திற்குள் விடைகளை முடித்துவிடும் போராற்றலையும், எல்லாவற்றிலும் மேலாக மொழித்தேர்ச்சியையும் சோதிக்கும் என்பதை மாணவர்கள் மறத்தலாகாது.

வினாத்தாளின் நோக்கங்களை அறிந்துகொண்டு விடைத்தாளை எழுதினால் பரீட்சை தேவதை கட்டாயம் வரம் கொடுக்கும். சில வழிகள் கீழே தரப்பட்டுள்ளன. அவைகளைப் பாருங்கள்.

பொதுவாக அறியவேண்டியவை

(1) மொழித்தேர்ச்சியே மிகவும் முக்கியம்.

(2) கையெழுத்தைத் திருத்தமாக இடம்விட்டு எழுதுதல்வேண்டும். சொற்களுக்கு இடையில் இடம் விடவேண்டுமே தவிர எழுத்துக்களுக்கு இடம் விடுதல் கூடாது. 'அவன் வந்தான்' என்று சொற்களுக்கு நடுவில் இடம் விடுக. அ வ ன் வ ந் தா ன் என்று எழுதுதல்கூடாது. நல்ல மையில் விடை எழுதுதல்வேண்டும். இரவிலே திருத்தினாலும் குருட்டு விளக்கை வைத்துக்கொண்டு திருத்தினாலும் தெரியும் வகையில் கையெழுத்தும் மையும் தெளிவாக இருப்பது இன்றியமையாதது.

(3) விடைத்தாள் அழுக்கின்றிப் பார்ப்பதற்கு நேர்த்தியாக இருப்பது அவசியம்.

(4) விடை, கேட்டகேள்விக்கு நேரானதாகவும் சொற்சுருக்கமுடையதாகவும் இருத்தல்வேண்டும். பெரும்பாலும் விடை வாக்கியமாக இருப்பது நல்லது.

(5) இக்கேள்விக்கு இவ்வளவு நேரம் என்று நேரத்தை வகுத்துவைத்துக்கொண்டு விடை எழுத முற்படல் வேண்டும்.

(6) திரும்பப் படித்துப் பிழைகளை நீக்க முயல்வது அதிகமாய்க் கவனிக்கவேண்டியது.

செய்யுள் எழுதும்போது

(1) வெண்பா, விருத்தம், அகவற்பா முதலிய செய்யுள்களை எழுதும்பொழுது அடி பிறழாமல் எழுதுக.

(2) அறுசீர் விருத்தங்களையும் எட்டுச்சீர் விருத்தங்களையும், பன்னிரண்டுசீர் விருத்தங்களையும் மடித்து எழுதும்பொழுது இரண்டாவது வரி முதல் வரிக்குச் சிறிது உள் தள்ளி வரல் வேண்டும்.

உதாரணம்

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவ
தெங்கும் காணோம்
பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும் இகழ்ச்சி சொலப்
பான்மை கெட்டு
நாமமது தமிழர்எனக் கொண்டிங்கு வாழ்ந்திடுதல்
நன்றோ? சொல்லீர்.
தேமதுரத் தமிழோசை உலகெல்லாம் பரவும்வகை
செய்தல் வேண்டும்.

(3) செய்யுளை எழுதும்போது குற்றியலுகரங்களைப் பிரித்தெழுத வேண்டா. "கொண்டு இங்கு" என்று எழுதுதல் பிழையாகும். குற்றியல் உகரத்தை வேண்டுமானால் நகவளைவுக்குள் இட்டெழுதலாம். உ-ம். 'கொண்(டு) இங்கு'.

பதவுரை

பதங்களைப் பிரித்தெழுதி அப்பதங்களுக்கு நேராகப் பொருள் எழுதுதல்வேண்டும்.

பொழிப்புரை

பதங்களை எழுதாமல் தொகுத்துப் பொருள் கூறுக.

கருத்துரை

செய்யுளின் கருத்தைமட்டும் ஒரு சிறு வாக்கியமாக எழுதுக.

பதசாரம்

குறிப்பிடும் பதங்களுக்கு நயம் கூறுதல் பதசாரம். உ-ம். 'கண்டேன் கற்பினுக் கணியை'—கண்டேன் என்று அநுமான், ஆவலாய் எதிர்பார்த்திருந்த இராமபிரானுக்கு முதலிலே கூறியது இனிமையானது. கம்பர் மனநிலை அறிந்து பாடிய அழகே அழகாகும்.

சொற்பொருள்

சொற்களுக்குப் பொருள் எழுதும்பொழுது சொல்லை எழுதிப் பொருளை எழுதுக. உ-ம். சிதமணி—பாலை மணி. சொல்லை எழுதாமல் பொருளை எழுதுதல் கூடாது. அப்படி எழுதுவது திருத்துபவர்களுக்கு மயக்கமளிக்கும்.

இலக்கணம்

(1) இலக்கணம் எழுதும்பொழுதும் சொல்லை எழுதி அதைப்பற்றிய இலக்கணக் குறிப்பை எழுதுக.

உ-ம். தொழிற்பெயர்—ஓட்டம்
அளபெடை —உடுப்பதூஉம்

(2) ஆகுபெயர்க்கு உதாரணம் எழுதினால் வாக்கியத்தில் ஆகுபெய்யரை அமைத்தெழுதி அதில் உள்ள ஆகுபெயரில் கீழ்க்கோடு இடுக.

உ-ம். <u>ஊர்</u> ஒன்று கூடிற்று.—ஊர்—ஆகுபெயர்.

(3) தொடரிலக்கணம் எழுதும்போது இக்காரணத்தால் இது இத்தொடராகும் என்க.

உ-ம். அலைக்கடல்—அலையையுடைய கடல் என்று பொருள் தருவதால் இது வினைத்தொகை.

கட்டுரை

(1) குறிப்பு (outline) எழுதுக.

(2) முன்னுரை, பொருள், முடிவுரை என்று பிரித்துப் பத்தி பத்தியாக எழுதுக.

(3) தொடக்கமும் முடிவும் இனியனவாக இருக்கட்டும்.

குறிப்பு: மொழிப்பரீட்சையில் மொழித்தேர்ச்சியே எல்லாவற்றையும்விட மிகவும் முக்கியம். பிழைபட விடைகளை எழுதிப் பரீட்சையில் தேறிவிட எண்ணுவது வீண். மொழித்தேர்ச்சி சிறிது சிறிதாக நாளடைவில் வருமேயன்றிப் பத்து நாளிலோ மூன்று நாளிலோ ஏற்படாது. ஆகையால், நீங்கள் என்ன செய்தல்வேண்டும் என்று சொல்லவேண்டுமோ? உங்களுக்கு அதுதான் தெரியுமே!

அகராதி பார்த்தல்

(Hints to refer Tamil dictionaries)

அகராதி என்பது அகரவரிசையில் சொற்களுக்குப் பொருள் கூறும் நூல். இப்பொழுது தமிழில் நல்ல அகராதிகள் மிகக் குறைந்த விலைக்கும் கிடைக்கும்.

பலவகை அகராதிகள்

1. சொல்லுக்குப் பொருள் கூறும் அகராதி. பல்கலைக் கழகத்தார் வெளியிட்டுள்ள பெரிய அகராதியே சிறந்தது.

2. அபிதான சிந்தாமணி—இது தமிழ் நூல்களில் வரும் பெயர்களைப்பற்றிய கதைகளைக் கூறும். உதாரணமாகத் ததீசு முனிவர் என்று பார்த்தால் அம்முனிவர் வரலாற்றைச் சுருங்கிய அளவில் இதில் காணலாம்.

3. இலக்கியச் சொல்லகராதி—இலக்கியத்தில் வரும் சொற்களுக்கு மட்டும் இது பொருள் கூறும்.

4. வைத்திய பரிபாஷை அகராதி—இது வைத்திய அரும் பதங்களுக்குப் பொருள் கூறும்.

5. கலைச்சொல் அகராதி—இந்நூல் ஆங்கிலக் கலைச் சொற்களுக்கு நேரான மொழிபெயர்ப்புக் கூறும் (Tamil words for scientific terms).

6. ஆங்கிலத் தமிழகராதி — இவ்வகராதி ஆங்கிலச் சொற்களுக்கு நேரான பொருளைத் தமிழில் கூறும்.

7. தமிழ் ஆங்கில அகராதி — இது சில தமிழ்ச் சொற்களுக்கு ஆங்கிலச் சொற்களைக் கூறும்.

அகராதி பார்ப்பதற்கு உரிய வழிகள்

1. செய்யுளில் உள்ள சொல்லுக்குப் பொருள் பார்க்க வேண்டுமெனில் முதலாவது சரியாகச் சந்தி பிரித்துப் பிழையின்றிச் சொல்லின் வடிவத்தைக் காணுதல் வேண்டும். உதாரணமாக அரிய வலவன் என்றிருந்தால் இடம் நோக்கி அலவன் என்பது சொல்லா வலவன் என்பது சொல்லா என்று கண்டு பிடித்தல் வேண்டும். அலவன் என்னுஞ்சொல்லுக்கு நண்டு என்பது பொருள். வலவன் என்னும் சொல்லுக்குத் தேர்ப்பாகன் என்பது பொருள்.

2. தமிழ் நெடுங்கணக்கு வரிசையைத் (Tamil alphabet order) தெரிந்துகொள்ளுதல் இன்றியமையாதது.

3. சொற்களில் உள்ள முதல் இரண்டு அல்லது மூன்று எழுத்துக்களைக் கவனித்துத் தேடல்வேண்டும். ஒவ்வொரு பக்கத்திலும் தலைப்பிலே இரண்டு இரண்டு அல்லது மும்மூன்று எழுத்துக்கள் இருக்கும். மேல் கொடுத்திருப்பதை அவ்வரிசையின் அடியில் காணலாம்.

அருண	வெளவி
அருகல்—குறைதல், சாதல்	வெள—ஓர் எழுத்து
அருகில்—கிட்டே	வெளவம்—தாமரை
அருட் குறி—சிவலிங்கம்	வெளவால்— ஒருவகைப் பறவை
அருணன்—சூரியன், சூரியனுடைய தேர்ப் பாகன்	வெளவி—மான்
	வெளவுதல்—கவர்தல்

4. ஓரெழுத்துச் சொற்களுக்கும் இரண்டெழுத்துச் சொற்களுக்கும் பொருள் பார்க்கும்பொழுது அவைகளுக்கு மூன்றெழுத்துக்களைப் பார்க்கவேண்டியதில்லை.

5. அகராதிச் சொற்கள் பெரும்பாலும் பெயர்ச் சொற்களாக இருக்கும். தேய் என்று பார்த்தால் அச் சொல் கிடைக்காது. தேய்த்தல் என்பதைப் பார்த்துப் பொருள் கொள்ளல்வேண்டும்.

6. சுவர்க்கம் என்னும் வடசொல் சொர்க்கம் என்று இருக்கும். 'சு' வின் பக்கம், 'சொ' என்பதின் பக்கம் ஆகிய இரண்டு இடங்களில் எங்காவது தேடினாற்றான் அச்சொல்லுக்குப் பொருள் கிடைக்கும்.

7. பெரும்பாலும் சாதாரண தமிழ் அகராதிகளில் கொச்சைச் சொற்களுக்குப் பொருள் கிடையாது.

8. அகராதியில் கொடுக்கப்பட்டிருக்கும் சுருக்கக் குறிப்புக்களை முன்னமே படித்துத் தெரிந்துகொள்க.

உ-ம். பெ.—பெயர்; வி.—வினை; தொ. பெ.—தொழிற் பெயர்; வ. சொ.—வடசொல்; உ.—உருது; தெ.—தெலுங்கு.

சோல்லுக்குப் பொருள் கண்டுபிடிக்கும் விதம்

அலவன்—இச்சொல்லுக்கு எப்படிப் பொருள் கண்டு பிடிப்பது? முதலில் அலவ என்று குறிக்கப்பட்டுள்ளதைக் கண்டுபிடியுங்கள். அந்த வரிசையில் சொல்லைத் தேடினால் பொருள் கிடைக்கும். அலவன்—நண்டு.

இக்குறிப்புக்களை வைத்துக்கொண்டு தமிழகராதியைப்புரட்டினால் சொல்லுக்குப் பொருள் கண்டுபிடிப்பது எளிது. மாணவர்களும் பெரியவர்களும் தமிழகராதி பார்க்கத் தெரியவில்லையே என்று கூறுவது வெட்கப்படுவதற்கு உரியது. ஆகையால், முயன்று பாருங்கள்.

'முயன்றால் முடியாதது உளதோ?'

PRINTED AT THE DIOCESAN PRESS, MADRAS—1943. B 107